2981

T.N.L.A. Debates

Official Report

VOL 20 NO 5

5th April 1986

211,31 N86
N86.20.5
136462

வெளியீடு 11-11-1986 Issued 11-11-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 5, 1986-தொகுதி 20 எண். 5

Saturday the April 5, 1986-Volume 20 No. 5

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras-600009**

விலை ரூ. 3] [Price Rs. 3

136461
600 008

உள்ளடக்கம்

5-4-1986 பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 895—933

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 933—963

2. கவன ஈர்ப்புகள் :

(அ) பெரியார் மாவட்டத்தின் பல பகுதிகளில் தொழு நோய் பரவி வருவதாகக் கூறப்படுவது. 964—968

(ஆ) நெல்லை மாவட்டத்திலுள்ள 'எபனேசர் கருணை இல்லம்' மூலம் குழந்தைகள் வெளிநாடுகளில் விற்கப்படுவது. 968—971

3. அறிக்கைகள் அளித்தல்:

(அ) பொது நிறுவனங்கள் குழு 971

(ஆ) மதிப்பீட்டுக் குழு 971

4. வரவு—செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) கோரிக்கை எண். 4— பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும்; தீர்வைகளும்—நிர்வாகம் 971—1047

மாண்புமிகு திரு. தா. வீராசாமி 971-973,1021-1047

திரு. என். எஸ். வி. சித்தன் 973—982

திரு. த. பழனி 982-985

திரு. அ. மலர்மன்னன் 986—994

திரு. க. பாலசுப்பிரமணியன் 993-998

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 998—1004

திரு. க. சோலைராசு 1004—1008

திரு. எ. தெய்வநாயகம் 1008-1010

திரு. பொ. உத்திராபதி 1010-1013

திரு. டி. ஆர். வேங்கடரமணன் 1013-1021

5 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 1048

[1986 ஏப்ரல் 5

உத்திரமேரூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

185—(*வினா எண் 5110) திரு. க. நரசிம்ம பல்லவன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கொண்டுவரப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. நரசிம்ம பல்லவன்: தலைவரவர்களே, ஆரம்ப வகுப்பாகிய ஒன்றாவது வகுப்பிலிருந்து இந்த உயர்நிலைப் பள்ளியில் பெண் பிள்ளைகள் படித்துவருகிறார்கள். இந்தப் பள்ளிக் கட்டிடம் ஒரு பெரிய கல்லூரி நடத்தக்கூடிய அளவுக்கு வசதிகள் எல்லாம் பெற்றிருக்கிறது. ஒரு மினி தியேட்டர்கூட அமைக்கப்பட்டிருக்கிறது. நல்ல குழாய் தண்ணீர் வசதி, மின்சார வசதி இருக்கிறது. விஞ்ஞானக் கூடம் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. விரிவாக்கத்திற்கு வேண்டிய இடவசதி இருக்கிறது. நிதி வசதியும் இருக்கிறது. ஆகவே, இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அந்தப் பள்ளி அமைத்திருக்கிற பகுதியிலிருக்கிற முதன்மை கல்வி அலுவலரிடமிருந்து கருத்துரு வரவேண்டும். இந்தப் பள்ளிக்கு அவருடைய கருத்துரு வரவில்லை. கருத்துரு வந்த பிறகு மற்ற பள்ளிகளோடு சேர்த்து இதையும் நாம் பரிசீலனை செய்யலாம்.

திரு. க. நரசிம்ம பல்லவன்: தலைவரவர்களே, இந்தப் பள்ளியில் படிக்கின்ற பெண் பிள்ளைகள் எல்லாம் 3 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்றுதான் மேல்நிலைப் பள்ளியில் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை விட்டால் 30 கிலோ மீட்டர் 40 கிலோமீட்டர் தூரத்திற்கு வெளியே சென்று காஞ்சிபுரம் போன்ற இடங்களில் படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு, இந்தப் பள்ளியை விரைந்து மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, கருத்துரு பெறப்பட்ட பிறகு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துக்களைப் பரிசீலனை செய்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன இந்த செய்திகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.



1986 ஏப்ரல் 5]

கலசபாக்கம் தொகுதி மங்கலம் கிராம உயர்நிலைப் பள்ளி.

186—(*வினா எண் 5657) திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி மங்கலம் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு என்ன நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது அனுமதி அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1985-86-ம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்காக அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழுவினால் இப்பள்ளி தேர்ந்தெடுக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தனியார் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சிக் கட்டணம்.

187—(*வினா எண் 3884) திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்வி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சிக் கட்டணம் வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தெரியாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மதுரையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள்.

384—(*வினா எண் 4270) திரு க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் செயல்படாமல் இருக்கும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை மீண்டும் செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மதுரை மாவட்டத்தில் டிசம்பர் 1985 திங்கள் வரை செயல்படாமல் உள்ள 550 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை செயல்படுத்த மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும், இதர தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும், விளிம்புத் தொகை செலுத்திய சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாட்டுக் கடன் வழங்க சம்மதம் தெரிவித்துள்ளன. ஆனால் இச்சங்கங்களின் உறுப்பினர்கள் அனைவரும் விவசாயக் கூலிகளாகவும், ஆதி திராவிடர்களாகவும் இருப்பதால் விளிம்புத் தொகை உடவடியாக செலுததும் சூழ்நிலையில்லை. மேலும் விளிம்புத்தொகை செலுத்த தகுதியுடைய உறுப்பினர்களடங்கிய செயல்படாத பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை தேர்வு செய்து சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு விளிம்புத் தொகை செலுத்தி கறவை மாட்டுக் கடன் வழங்க நடவடிக்கை எடுத்து, இச்சங்கங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கிராமங்களில் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கம் என்ற பெயராலே பதிவு செய்யப்பட்டு கடன் பெறப்பட்டு அதிலே கையாடல் செய்யப்பட்ட காரணத்தாலே அந்தச் சங்கங்கள் இயங்காத காரணத்தால் கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் கடன் பெறமுடியாத சூழ்நிலை இருப்பதோடு வேறு சங்கங்களும் உருவாக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சங்கங்களை ரத்து செய்தோ அல்லது நடவடிக்கை எடுத்தோ விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையில்தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிங்காநெல்லூர் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை.

*385—(*வினா எண் 6286)* திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, சிங்காநெல்லூரில் உள்ள ஈ.எஸ்.ஐ. பெரிய மருத்துவமனைக்கு 1984 ஆம் ஆண்டுக்கு மருந்து வாங்குவதற்கு கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு?

(ஆ) அத்தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டதா?

(இ) பணம் போதாததால் பல மருந்துகள் வாங்கிவைக்காமலிருப்பது உண்மையா?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ரூ. 11,50,000.

(ஆ) இல்லை. செலவழிக்கப்பட்ட பணம் ரூ. 9,73,000.

(இ) தேவைப்படும் மருந்துகள் வாங்குவதற்கு போதிய பணம் மீதம் இருந்ததால், பணம் போதாமல் மருந்துகள் வாங்கி வைக்கவில்லை என்ற கூற்றுக்கே இடமில்லை.

திரு.கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்ளே, 11,50,000 ரூபாய் மருந்து வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டும் அந்தப் பணம் செலவழுககப்படாமல் மீதமாக நின்றுவிட்டது. இதிலே இருந்தே ஒரு விஷயத்தை தெரிந்து கொள்ளவேண்டி இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டியது ரொம்ப அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா மருந்துகளும் அங்கே இருப்பதன் காரணத்தால் பணத்திற்கு தேவையில்லை என்பது உண்மையல்ல. அந்த ஆஸ்பததிரிக்கு நானே விசிட் பண்ணிப் பார்த்து இருக்கிறேன. ப்ளட் பிரஷருக்கு மருந்தே இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. கேன்சர் ட்ரீட்மெண்டுக்கான பல தேவையான நல்ல மருந்துகள் இல்லாமல் இருக்கிறது. இதுபற்றி அந்த வியாதியஸ்தர்களே எங்களிடம் சொன்னார்கள். எங்களை வாங்கித்தரச் சொல்லுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த மாதிரி முறைகேடுகள் நடப்பதைத் தடுக்க ஏதாவது விசேஷ கண்காணிப்பு நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய தினம் மாநில அளவில் ஈ.எஸ்.ஐ. கூட்டம் நடைபெற இருக்கிறது. இதுபோன்ற பிரச்சினைகள் அந்த அவைக்குக் கொண்டுவந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சபையின் கூட்டம் நடக்கட்டும், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு நிரந்தரமான ஏற்பாடு அந்த ஆஸ்பத்திரியில் ஏற்படுத்தப்படவில்லை. இப்போது ஈ.எஸ்.ஐ. பற்றி மட்டும் போட்டிருக்கிறார்கள். மெடிக்கல் கிராண்ட் வருகிறபோது மற்றதைப்பற்றிச் சொல்கிறேன. இந்த ஈ.எஸ்.ஐ. என்பதைப் பொறுத்தவரையில் தொடர்ச்சியாக மருந்துகள் கிடைக்காமல் அந்தத் தொழிலாளர்கள் மருந்துகளை வெளியே வாங்கச் சொல்கிறார்கள், வேண்டுமானால் அதற்கான ஆதாரத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நிரந்தரமான ஒரு ஏற்பாடுசெய்யப்பட வேண்டும். எனவே, அதற்குரிய முன் முயற்சியைச் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.ரமணி அவர்கள் சொன்னதுபோல் ஆங்காங்கு பணம் கொடுக்கப்பட்டும் மருந்துகள் வாங்காமல் இருந்தால் அந்தக் குறைபாடுகளை எல்லாம் சிங்கா

நல்லூரில் மட்டுமல்ல; மாநில அளவில் உள்ள நிலைமை பற்றியும் நாளைய தினம் நடைபெற இருக்கின்ற அந்தக் கூட்டத்தின் போது கவனித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எங்கெங்கு பணம் ஒதுக்கப்பட்டும் அவை செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்பதை கண்டுபிடித்து அதற்கு காரணமானவர்களிடத்திலே மீண்டும் வலியுறுத்தி எதிர்காலத்தில் அப்படிப்பட்ட குறைகள் வராமல் தடுக்கின்ற வகையில் அரசு கவனமாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ரெங்கசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே இப்படி ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி, ஹாஸ்பிடல்ஸ் போன்றவற்றில் அதாவது எல்லா இடங்களிலும் மருந்துகள் சரியாக வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதுபற்றி அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடஆற்காட்டில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

386—(*வினா எண். 7524)—திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-10)

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டிலே பால் உற்பத்தித் திட்டத்தின் கீழ் சேலத்திற்கு அடுத்த, வடஆற்காடு மாவட்டம் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அந்த வகையிலே மேலும் தீவிரப் படுத்துவதற்காக இந்தத் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிலையை உருவாக்கித்தர அமைச்சர் அவர்கள் முற்பட்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, வடஆற்காடு மாவட்டம் பால்வளத்தில் சிறந்த மாவட்டம்; ஆகவே, அப்பகுதிக்கு ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கித் தருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.



2924



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இதுவரையிலே 11 இடங்களில் இந்தத் திட்டம் செயல்படுகிறது. வடஆற்காடு மாவட்டத்திலும் அடுத்தடுத்து இந்தத் திட்டம் செயல்படுத்தப் படும்.

திரு. கோ. இரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1986–87-லே இந்தத் திட்டத்தை உருவாக்கித்தர அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 ஆம் தேதி மானியக் கோரிக்கை வரவிருக்கிறது. இருந்தால் அப்பொழுது அறிவிக்கப்படும்.

தேக்கம்பட்டி வனப் பத்ரகாளியம்மன் கோயில்.

F 387—(*வினா எண் 3576)—திரு.கே. உச்சி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி கிராமம், வனப்பத்ரகாளியம்மன் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கும், நீராடுவதற்கும் போதிய வசதிகள் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறைகளை தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், தேக்கம்பட்டி கிராமம் அருள்மிகு வனபத்ரகாளியம்மன் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் பகலில் தங்குவதற்கு புதிதாக மண்டபம் கட்டப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் தங்குவதற்கும், குளிப்பதற்கும் அறைகள் இல்லை. எனவே, இக்குறைகளை தீர்க்க இவ்வாலயத்திற்கு தயாரிப்பில் இருக்கும் Master Plan-ல் தனி அறைகள், குளியல் அறைகள், கழிப்பிடங்கள் ஆகியவை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொதுவாக, இருக்கக்கூடிய திருக்கோவில்களுக்கு வருகின்ற பக்தர்கள் தங்குவதற்குப் போதிய வசதிகள் இல்லையென்பது குறிப்பிடும்படியாக உள்ளது. ஆகவே, அக்குறையைப் போக்க பொதுவான திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கோவில்களுக்குமே வருகிற பக்தர்கள் அங்கே தங்குகின்ற சூழ்நிலை ஏற்படுவதில்லை. சில ஆலயங்களிலேதான் வேண்டுதல் காரணமாக அங்கே தங்குகின்ற சூழ்நிலைகள் பழக்கத்திலே இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட

சில ஆலயங்களிலே பணவசதி இல்லாத காரணத்தாலே, அந்த வசதிகளைச் செய்ய முடியவில்லை. பெரும்பாலான வருவாய் இருக்கிற ஆலயங்களில், மக்கள் அதிகமாக வருகிற ஆலயங்களில், அந்த வசதிகள் செய்யவேண்டுமென்று திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சில முக்கிய ஆலயங்களில் குறைகள் இருக்குமானால், வசதிகள் இல்லாமல் இருக்குமானால், அவற்றைத் தீர்க்க வேண்டுமென்று அரசு வலியுறுத்தி இருக்கிறது.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாஸ்டர் பிளானில் சேர்க்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதனுடைய மதிப்பு என்ன? எப்பொழுது நிறைவேற்றப்படும் என அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஆலயங்களுடைய வருமானத்தை ஒட்டி, நிதிநிலைமையை ஒட்டி, பல்வேறு வசதிகளை அங்கே உருவாக்க வேண்டுமென்று தெரிவித்து, இந்தத் திட்டத்தைத் தயாரிக்கச் சொல்லியிருக்கிறோம். இந்தத் திட்டம் அறநிலையத் துறைக்கு இன்னும் வந்து சேரவில்லை. வந்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான கோவில்களில் நெல்லை நம்பியிருக்கிற காரணத்தினால் பல இடங்களில் வறட்சியும் புயலும் வெள்ளமும் ஏற்பட்ட காரணத்தினால், கோவில்களுக்கு நெல் சரியாக வர முடியவில்லை. அப்படி வராத காரணத்தினால், கோவில் நிர்வாகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பரிகாரம் செய்ய அரசு ஏதேனும் தனி உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி கிராமம், வனப்பத்ரகாளியம்மன் கோயிலைப் பற்றியது மூலக் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள ஆலயங்களுடைய நிலையைப் பற்றித் தெரிவிக்கிறார்கள். அதிலும், குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலேதான் ஆலயங்களுக்கு அதிகமான நிலங்கள் உடைமையாக உள்ளன. அங்கேதான் நெல் விளைச்சல் இல்லை, அல்லது சேதாரம் ஏற்பட்டுவிட்டது என்கிற காரணங்களினாலே குத்தகை கொடுக்கப்படாத சூழ்நிலைகளும் வளர்ந்து கொண்டு வருகின்றன. ஆகவே, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினருக்கு அந்த ஆலயங்களுடைய நிலைமை மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதற்கு என்ன செய்யலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் யோசனை சொன்னால், அதையொட்டி அரசு நடவடிக்கை எடுக்கும்.



டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோயிலில் பக்தர்கள் தங்குவதற்காக 100 அறைகள் கட்டுவதாகச் சென்ற ஆண்டு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொடைக்கானல் வந்திருந்தபொழுது சொன்னார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது? அது நடக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயம் என்று தொடங்கினாலே தமிழகம் முழுவதிலும் உள்ள கோவில்களைக் குறித்து கேள்விகளைக் கேட்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த குறிஞ்சி ஆண்டவர் ஆலயத்தின் சார்பில் பக்தர்கள் தங்குகிற விடுதி ஒன்று கொடைக்கானலில் கட்டினால், அங்கு வருகின்ற பயணிகளுக்கும் வசதியாக இருக்கும் என்று கருதித்தான் அதனுடைய பொறுப்பிலே இருக்கிற பழனி ஆலயத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் விரைவிலே, ஏற்கெனவே எடுத்த முடிவின்படி நிறைவேற்றப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் பணி புரிகின்ற அர்ச்சகர்களுக்கு நெல் கூட சரியாகக் கொடுக்கப்படுவதில்லை என்று ஆலய அர்ச்சகர்கள் மாநாட்டைச் சேர்ந்தவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்படுகிற சம்பளமே குறைவு. நெல் கூட கொடுக்கவில்லை என்று சொன்னால், அது அவர்கள் வாழ்வதற்கே மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கும் என்பதை அரசு அறியுமா? ஆம் எனில் என்ன நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அர்ச்சகர்களுக்கென்று கொடுத்திருக்கிற நிலங்களிலே உழுகின்றவர்கள் அந்தக் குத்தகையைக் கூட கொடுப்பதில்லை என்ற கருத்து, அந்த நிலைமை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரிந்திருக்கிறது. எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் அர்ச்சகர்களுக்காக உள்ள நிலங்களில் இருந்து குத்தகையை பெற முடியாத நிலையில், ஆலயத்தின் வருமானத்தில் இருந்து தான் அவர்களுக்குப் பணம் தரவேண்டும். ஆனால் ஆலயத்திற்கு நிலங்களிலிருந்து வருகிற வருமானமும் வருவதில்லை. ஆகவே எப்படி நிர்வாகத்தை நடத்துவது என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்களே எல்லோரும் சேர்ந்து ஒரு யோசனையை அதற்குத் தெரிவிக்க வேண்டும்.

ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்று தான், அதை மனதில் வைத்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 5 கோடி ரூபாய் திட்டம் ஒன்றையும், ஒரு கோடி ரூபாய் என்று 2 திட்டங்களையும், ஆக 7 கோடி ரூபாய்க்கு வைப்பு நிதியை வைத்து, அதிலிருந்து வருகிற வட்டியிலிருந்து, இப்படிப்பட்ட ஆபத்தான சமயங்களில் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று, திட்டங்களைப் போட்டு இருக்கிறார்கள். அவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து ஆலயத்திற்கு வர வேண்டிய குத்தகை நெல் வருவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன் வருவதில்லை? அத்தோடு அந்தச் சிக்கல்களைப் போக்கி, அவற்றை வசூல் செய்வதற்கு ஏற்றவகையில் ஏதேனும் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆலயங்களின் சொத்தாக இருக்கின்ற நிலங்களிலிருந்து நெல் குத்தகை ஏன் வரவில்லை என்பதற்கு காரணத்தை முன்னாலே கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்களே தெரிவித்தார்கள். ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு இன்னொரு உறுப்பினரே பதில் அளித்தபிறகு அமைச்சர் பதில் தரவேண்டிய சூழ்நிலை இல்லை. ''கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை'';

அதற்குப் பல காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. வெள்ளம் வந்தது விளைச்சல் இல்லை, அல்லது விளைச்சல் குறைந்து விட்டது அல்லது வறட்சி வந்து விட்டது அதனால் விளைச்சல் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். வெள்ளம் வருகிறது, வறட்சி ஏற்பட்டது என்றெல்லாம் நமக்குத் தெரிந்துக் கொண்டு தான் இருக்கிறது, ஆனாலும் விளைந்தாலும் கொடுப்பதற்கு மனம் இல்லை என்பதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. ஆகவே நீங்கள் அனைவரும் சேர்ந்து ஆராய்ந்து ஆலயத்திற்கு சொந்தமான நிலங்களிலிருந்து எந்த அளவுக்கு கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு கிடைக்கவும், அல்லது எந்த அளவுக்கு விளைச்சலோ அதிலே ஒரு பகுதியையாவது அவர்கள் கொடுக்கச் செய்யும் வகையில் முன் வந்தால், இந்தப் பிரச்னைகள் தீர்ந்துவிடும். ஏனென்றால் இது ஒரு சமுதாயப் பிரச்னை. வெறும் சட்டத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு இதை தீர்க்க முடியாது.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவில் நிலத்தை குத்தகைக்கு எடுத்திருப்பவர்கள் உரிய நேரத்திலே விளைச்சலை கொடுக்காமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறபோது அவர்களிடத்திலே இருக்கிற நிலங்களை அரசு எடுத்து அதை மற்றவர்களுக்கு கொடுக்கின்ற திருத்தம் ஏதேனும் அரசின் ஆலோசனையில் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் பல இடங்களிலே நிலங்களை வைத்திருக்கிறார்கள். ஏழை எளியவர்கள் என்ற பெயரால் பல பேர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே அதிலே உண்மையான ஏழை யார் எளியவர் யார் என்று கண்டுபிடிப்பதிலே சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. காரணம் சட்டத்தின் பார்வையிலே அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பது பிரச்னை. பல நேரங்களில் நாம் நடவடிக்கை எடுக்கிறபோது அதிலே ஏழைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே அரசு அக்கறை கொண்டிருக்கிறது. ஏழை மக்கள் என்ற பெயரிலே ஒளிந்துக் கொண்டிருப்பவர்கள் சில மிராஸ் தாரர்கள் என்று கூட சொல்லுகிற அளவுக்கு பல பேர்கள் அதிலே ஒளிந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சட்டத்தின் கண்களில் இருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நடவடிக்கை எடுப்பதிலே சிக்கல்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை கையகப்படுத்துவதற்கோ அல்லது அவர்கள் குத்தகைய தரவில்லை என்ற காரணத்தைக் காட்டி, நிலத்தை எடுக்க வேண்டும் என்பதற்கோ பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் தடையாக இருக்கின்றன.

(முற்பகல் 9-20)

ஆகவே ஏழை எளிய மக்கள் இதிலே பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்று எண்ணுகிறபோது நடவடிக்கை எடுப்பதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நிதானமாகப் பார்த்து ஏழை எளியவர்களுக்கு துன்பம் வராமல் நடவடிக்கை யெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிற நேரத்தில் நீதிமன்றங்களுக்குச் சென்று விடுகிறார்கள். நீதிமன்றங்களுக்குச் சென்று விட்டால் அதற்கு தீர்வே இல்லையென்பது தான் இப்போது சமீபகாலங்களில் நாம் தெரிந்து கொண்டிருக்கிற நிலைமை. அங்கே போய் தடையுத்தரவை வாங்கிவிடுவார் களானால் பல ஆண்டுகளுக்கு, தங்கள் ஆயுட்காலம் முழுவதற்கும் கூட தடை வாங்கிவிடுகிற நிகழ்ச்சியாக பல வழக்குகளில் அமைந்துவிடுகிறது. ஆகவே எத்தனையோ சங்கடங்களைத் தாண்டி இந்தப் பிரச்னையை தீர்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே தான் பல தொல்லைகளும் ஏற்பட்டு வருகின்றன.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, குத்தகை வசூலிப்பதில் இருக்கும் சிக்கலைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். சிறுநில விவசாயிகளுக்கு இந்த நிலத்தை வழங்கி அரசு நேரிடையாக நிலவரி வசூலிக்கலாமே? அமைச்சரவர்கள், சட்ட சிக்கலைப் பற்றி குறிப்பிட்டார்கள், அந்தச் சட்ட சிக்கலை தீர்க்கிற முறையில் சட்டத்தை இந்தப் பேரவையில் நிறைவேற்றி அதனை ஜனாதிபதியினுடைய அனுமதிக்கு அனுப்பிவைத்து நடைமுறைக்குக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா? இதுபற்றி அமைச்சர் அவர்களின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இதுபற்றி கருத்துக்கள் சென்ற ஆண்டிலே இந்த மன்றத்திலே விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் இதிலே தீவிரமாக கருத்துக்கள் எல்லாம் கூட சொன்னார்கள். அன்றைக்கும் சொன்னோம், இன்றைக்கும் சொல்கிறோம். அவர்களுக்கே உரிமைப்படுத்துகிற பொழுது அவர்கள் அந்த நிலத்திற்குள்ள கிரயத்தைத் தருவதற்கு யார் உத்தரவாதம் தருவது என்பது தான் இன்றைக்கு இருக்கிற பிரச்னை. அப்படி உரிமையாக எடுத்துக்கொள்வது பற்றி அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்றால் இப்போது நாம் குத்தகையே கொடுக்காமல் அனுபவித்துக் கொண்டிருக்கிறோமே, உரிமைப் படுத்திக் கொள்ளவேண்டுமென்ற முறையில் வந்தால் பணம் கொடுப்பதற்கு நாம் ஏன் மாட்டிக்கொள்ள வேண்டுமென்ற உணர்வு நம்முடைய விவசாயிகளிடத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட உணர்வை போக்குவதற்கு நாமெல்லாம் முயற்சித்து அவர்களுக்கே உரிமையாக்கினால் அதற்குரிய கிரயத்தை அவர்கள் நீண்டகால தவணையில் கொடுக்க உத்தரவாதம் தந்தால் கூட அரசு அதுபற்றி பரிசீலிக்குமென்று முன்னாலேயே இந்த மாமன்றத்தில் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது நடைமுறையில் மிகுந்த சிக்கலை அவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் ஒரு கருத்து. ஆலயத்திற்கு உடைமையாக நிலமாக இருப்பதால் என்றைக்கும் அழியாமல் இருக்கிறது. மக்கள் தருகிறார்கள், தரவில்லையென்ற பிரச்னை அவ்வப்போது தோன்றினாலும் கூட என்றைக்காவது மனம் திருந்தி அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையில் அந்த ஆலயத்திற்கு சொத்தாகவாவது அது இருக்கிறது. அவைகளையும் அழித்துவிட்டால் ஆலயத்திற்குச் சொத்தே இல்லாத நிலைமை ஏற்பட்டு, ஒரு பாதுகாப்பற்ற நிலைமை வந்துவிடுமென்ற கருத்தும் மிகப்பெரிய அளவில் இன்னொருபுறத்தில் சொல்லப்படுகிறது. ஆகவே சர்க்கஸ்காரன் கம்பியில் நடக்கிற வித்தையைப் போல இதிலே ஈடுபட வேண்டிய நிலைமையில் அரசாங்கம் இருக்கிறது. ஆகவே நாம் எச்சரிக்கையோடு இதிலே ஈடுபடுவோம்.

திரு கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, ஆண்டவனின் பிள்ளைகள் தான் மக்கள் என்ற முறையில் நீண்டகாலமாக கோவில் நிலங்களில் உழுது கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக்குவதற்குரிய வழிமுறைகளைப் பற்றி முடிவெடுப்பதற்கு விவசாயச் சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, எந்த அடிப்படையில் அவர்களுக்கு அவற்றை உரிமையாக்குவதென்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி இறுதி முடிவெடுக்க அரசுமுன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை என்பது இந்த மாமன்றத்தில் நடைபெறுகிற விரிவான விவாதங்களையும் கூட அவைகள் தொடர்பாக எண்ணிக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் ஈடுபட்டிருக்கிற விவசாய சங்கங்களிடமிருந்து கருத்துக்களை அரசுக்குத் தந்தால் அவற்றை அரசு பரிசீலிக்கும்.





திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிலங்களை குத்தகை செய்பவர்களுக்கு உடைமையாக்குவதில் சிக்கல்கள் இருப்பதாகச் சொன்னார்கள். இன்று பல ஆலயங்களுக்கு குத்தகை வருவதே கிடையாது. 200 ஏக்கர்கள் உள்ள கோவில்களுக்குக் கூட, தினசரி பூஜை செய்வதற்குக்கூட வருமானம் வருவதில்லை. அதைக் கருதி அவற்றையெல்லாம் வீட்டுமனைகளாக ஆக்கி அல்லது அவர்களுக்கு உரிமை கொடுக்கிற நேரத்தில் நீண்டகாலத் தவணைகளில் வாங்கிக் கொள்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து செயல்படுத்த ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து இந்த விவசாய நிலங்களையெல்லாம் அந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி அந்த அனுபவம் மிகுந்த கசப்பான அனுபவமாக அறநிலையத் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது. தனியார் அதை விட மேல் என்று சொல்கின்ற அளவிற்கு தனியார்தான் ஏதோ கஷ்டத்தில் தவறு செய்கிறார்கள் என்றால் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயரால் பல பேர்கள் சேர்ந்து கொண்டு, இன்னும் அரசை, அறநிலையத் துறையை மிரட்டுகிற சூழ்நிலைக்குத்தான் அது ஆக்கமளித்திருக்கிறது என்பது கடந்த கால கசப்பான அனுபவம். ஆகவே விளைநிலங்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுவதைவிட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதையெல்லாம் கட்டிடம் கட்டுகிற மனைகளாக உருவாக்கலாமா என்று சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படியெல்லாம் நிலங்களை மாற்றி விட்டால் பிறகு உணவுக்கு வேறு வெளி மாநிலங்கள் அல்லது வெளிநாட்டை நாடவேண்டிய அவசியமும் நமக்கு வந்துவிடும்.

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்களை ஏழை மக்கள் மட்டும் வைத்திருக்கவில்லை. வசதியானவர்களும் வைத்திருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு பூ-விலும் இந்தக கட்டுக் குத்தகை ய வசூல் செய்வதற்கு அறநிலையத் துறை மூலம ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழு போட்டு அதை வசூல் செய்ய முடியாதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த குத்தகை பாக்கியை வசூல் செய்வதற்கு இப்போது ரெவின்யூ கோர்ட்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. முன்னாலே அமைக்கப் பெற்ற ரெவின்யூ கோர்ட்டுக்களின் எண்ணிக்கை போதவில்லை என்ற காரணத்தால் சமீபத்தில் அரசாங்கம் ஏழு அதிகமான ரெவன்யூ கோர்ட்களை இப்போது அமைத்திருக்கிறது, ஆகவே இயற்கையாக உண்மையில் விளைந்தும் கொடுக்காமல் இருக்கிறவர்களிடம் இருந்து

வசூலிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அப்படி அவர்கள் தரவில்லையானால் வெளியேற்றுவதற்கும் கூட அந்தந்த கோர்ட்டு களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் களைப் போன்றவர்கள், ஆலயங்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் ஆங்காங்கே அந்தக் கோர்ட்டுகளுக்கு உதவி செய்கிற வகையில் தங்களுடைய பணிகளை அமைத்துக் கொண்டால் நம்முடைய இலட்சியம் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடுமலைப் பேட்டை திருமூர்த்தி மலையை சுற்றுலா மையமாக்கல்

388—(* வினா எண். 3913) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாவட்டம், உடுமலைப் பேட்டையைச் சேர்ந்த திருமூர்த்தி மலையை சுற்றுலா மையமாக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் :** (அ) மற்றும் (ஆ) திருமூர்த்தி மலையை கோவை மாவட்ட உலாத்தல மேம்பாட்டின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு அடிப்படை வசதிகள் செய்ய ரூ. 5.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அபிவிருத்திக்கென தேவைப்பட்ட நிலம் வனத்துறையின் உரிமையில் உள்ளது. வனத்துறையின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகள் தொடங்கப் படும்.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருமூர்த்தி மலையைச் சுற்றிலும் உள்ள இடங்கள் உல்லாசப் பயணிகள் வந்து போவதற்கு மிகுந்த இரம்மியமான நல்ல இடங் களாகும். அங்கே ஒரு பெரிய அணைக்கட்டு இருக்கிறது. மலை இருக்கிறது. நீர் வீழ்ச்சியும் இருக்கிறது. அரசாங்கத்திற்கு இதை நான்முன்கூட்டியே தெரிவித்திருக்கிறேன். சில ஆண்டு களுக்கு முன்பே கோவை மாவட்டத்தில் எங்கெல்லாம் சுற்றுலாத் தலங்களை ஏற்படுத்தலாம் என்ற யோசனையை நான் சொன்ன துண்டு. இதையெல்லாம் நான் ஏற்கனவே எடுத்துச் சொல்லிய துண்டு. எனவே இனி மேலும் காலதாமதம் செய்யாமல் இப் போது அங்கே பஸ் போக்குவரத்து வசதி இருக்கிறது. டவுனி லிருந்து பஸ் போக்குவரத்து இருக்கிறது. ஏராளமான ஜனங்கள் இன்றும் அங்கு போய் தங்கி உல்லாசமாக வந்து போய்க் கொண் டிருக்கிறார்கள். எனவே நாம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் துரிதமாக இந்த இடத்தை சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களா என அறிய விரும்பு கிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் தெரிவித்ததைப் போல் இந்த திருமூர்த்தி மலையில் நீர்வீழ்ச்சிப் பகுதி என்பது ஒரு அருமையான பகுதியாகும். இயற்கைச் சூழலில் ஒரு காட்டுப் பகுதிக்குள்ளே அற்புதமாக அமைந்திருக்கிற பகுதி, ஆகவேதான் நாம் இதை அபிவிருத்தி செய்து மாவட்ட மக்கள் எல்லாம் விடுமுறை நாட்களில் அங்கு போய் அவர்கள் மகிழ்ச்சி யாக கழிக்க வேண்டும் என்ற முறையில் தான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. பல்வேறு திட்டங்கள் போடப்பட வேண்டும், நிறைவேற்றப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டு, நடைபாதை செப்பனிடுதல், அருவிப் பகுதியை மேம்பாடு செய்தல், பயணிகள் தங்குவதற்கு வசதிகள் அமைத்தல், உணவு வசதி ஏற்படுத்துதல், உடை மாற்றுவதற்கு இடவசதி அமைத்தல், விளக்குகள் அமைத்தல், பூங்கா அமைத்தல், குழந்தைகளுக்கு விளையாட்டு வசதிகள் செய்தல், கழிப்பிட வசதிகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் எல்லாம் அங்கே நிறைவேற்றப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்படுத்தியிருக்கிற குழுவின் மூலம் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் இதில் ஒரு சங்கடம் என்னவென்றால் இந்தப் பகுதி ரிசர்வ் பாரஸ்ட், ஒதுக்கப்பட்ட காட்டுக்குள்ளே அமைந்திருக்கிறது, காடுகளுக்குள்ளே எந்தச் சீர்திருத்தம் செய்வதானாலும் அதில் மிகவும் கடினமான சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்தத் தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. விரைவிலே மத்திய அரசினுடைய அனுமதி பெற்று இந்தப் பணிகள் நிறைவேற்றப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏலகிரி மலையில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம்.

389—(*வினா எண் 4523) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வட ஆற்காடு மாவட்டம் ஏலகிரி மலையில் டெலிவிஷன் அஞ்சல் நிலையம் அமைக்க மைய அரசுக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இல்லை.

(முற்பகல் 9-30)

**திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியும், தர்மபுரி மாவட்டத்தின் ஒரு பகுதியும் ஏலகிரி, ஜவ்வாது மலைப்பகுதிகளில் 1 இலட்சத்திற்கும் அதிகமாக வாழ்கின்ற மலைவாழ் மக்கள் பயன் பெறுகின்ற வகையிலே ஏலகிரி மலையிலே ஒரு தொலைக்காட்சி நிலையத்தை அமைத்துக் கொடுக்க மைய அரசிற்கு பரிந்துரை

செய்தால், நாங்களும் அதற்கான முயற்சியை எடுத்து, அங்கு தொலைக்காட்சி நிலையம் வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். அதற்கு மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த அளவு ஒளிபரப்புகின்ற இந்த வசதிகளை ஏற்கெனவே 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்திலே நாங்கள் 10 இடங்களில் கேட்போம். மத்திய அரசு 6 இடங்களிலே அமைத்திருக்கிறது. அப்படி அமைக்கப் பெற்ற ஒரு நிலையம் தான் வேலூரில் இருக்கிறது. வேலூரில்இருக்கின்ற காரணத்தினால், வடஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி மலையில் அவர்கள் இன்னொன்றை அமைப்பதற்கு மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது 7-வது திட்டத்தில் கேட்டு, மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர் அவர்கள் தர்மபுரி, நாகர்கோயில், கடலூர் ஆகிய இடங்களில் குறைந்த சக்தி வாய்ந்த தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களையும், இராமேஸ்வரத்தில் அதிக சக்தி கொண்ட ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தையும், சென்னையில் இரண்டாவது அலை வரிசையும் தொடங்குவதற்கான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். நாம் இன்னும் அதிகமான இடங்களில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாநில அரசு தெரிவித்ததற்குப் பிற்கு, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் மணவாளன் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்பதில்லை. உங்களுக்கே இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த முயற்சிகளை மேற்கொள்ளலாம். அப்போது நாங்கள் உங்களுக்கு மிகுந்த துணையாக இருந்து, இதை வற்புறுத்துவதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் அமைந்துள்ள அஞ்சல் நிலையம் குறைந்த சக்தி கொண்டதாக இருக்கிறது. அது 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒளிபரப்பு செய்து கொண்டிருக்கிறது. அதே போல், தர்மபுரியில் அமைக்கப்பட இருக்கும் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் ஒரு கிலோ மீட்டர் தூரம் ஒளிப்பரப்பும் சக்தியைக் கொண்டது. ஆகவே, ஏலகிரி மலையில் 4,000 அடி உயரத்தில் அதிக சக்தி வாய்ந்த தொலைக்காட்சி நிலையத்தை அமைத்தால், பல்வேறு மாவட்டங்கள் அதனால் பயன் பெறும். சென்னைக்கும், கொடைக்கானலுக்கும் இடையே உள்ள இந்த ஏலகிரி மலையில் அமைத்தால் தமிழகம் முழுவதும் வசதி பெறும் என்று எண்ணுகிறேன். இதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் மத்திய அரசிற்கு தமிழக அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணவாளன் அவர்கள் கருத்தில் எங்களுக்கு எந்த விதமான வேறுபாடும் இல்லை. எத்தனை இடங்களிலே இந்த தொலைக்காட்சி நிலையம் அல்லது ஒளிபரப்புகின்ற நிலையத்தை அமைத்தாலும் நாங்கள் அதை





வரவேற்கத் தயாராக இருக்கிறோம். தமிழகத்திலே இப்போது கொடைக்கானலிலே அமைந்திருக்கிற இந்த 10 கிலோ வாட் ஒளிபரப்பு நிலையம் இன்னும் முழுமையாக செயல்பட முடியாத நிலை இருக்கிறது. சென்னைத் தொலைக்காட்சி நிலையத்திலே ஒளிபரப்புகின்ற அந்த நிகழ்ச்சிகளை அது ரிலே செய்ய முடியாத அளவில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே ஏலகிரி மலை போன்ற உயர்ந்த மலைச் சிகரத்தில் ரிலே ஸ்டேஷன் அல்லது ஒளிபரப்புகின்ற நிலையம் அமைப்பது என்பது வரவேற்கக் கூடிய ஒன்று. ஆனால் இது மிகப் பெரிய செலவினை உருவாக்கு கிற திட்டங்கள், அது நம்முடைய கையில் இல்லை. மத்திய அரசு அதற்கு முன் வந்தாக வேண்டும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொடைக்கானலிலே இருந்து ஒளிபரப்புகின்ற இந்த தொலைக்காட்சிப் படங்கள் திருநெல்வேலி, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் சரியாக தெரியாத காரணத்தினால், குற்றாலம் மலையில் ஒரு ஒளிபரப்பு நிலையத்தை வைக்க வேண்டுமென்று நாங்கள் ஏற்கெனவே அந்தப் பகுதியிலிருந்து கோரிக்கை அனுப்பியிருக்கிறோம். குறிப்பாக, இன்றைக்கு இலங்கையிலிருந்து ஒளிபரப்புகின்ற ரூபவாணி இந்தியாவிற்கு எதிர்ப்புப் பிரசாரம் செய்கின்ற செய்திகளை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலே நடக்கின்றமிகச் சிறிய சம்பவங்களை எல்லாம்கூட அங்கே படம் போட்டுமிகப்பெரியதாக காட்டப்பட்டு மக்களிடையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகிற முயற்சியை நடத்திக் கொண்டு இருக்கிற காரணத்தாலே, குற்றாலத்திலே இந்த ஒளிபரப்பு நிலையத்தை அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

அதுமட்டுமல்லாமல் ராமேஸ்வரத்திலே வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற அந்த சக்தி வாய்ந்த ஒளிபரப்பை, அங்கே ராமேஸ்வரத்திலே வைத்தால், கடலிலே ஒரு பகுதி சென்று வீணாவதன் காரணமாக, அதை இந்தியாவினுடைய உட்பகுதிக்குள், அதாவது திருநெல்வேலி அல்லது குற்றாலத்திலே அந்த சக்தி வாய்ந்த ஒளி பரப்பு நிலையத்தை வைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடைக்கானலிலே இருக்கின்ற அந்த ரிலே ஸ்டேசன், திருநெல்வேலி பகுதிக்கு அல்லது குற்றாலம் பகுதியில் சரியாகத் தெரிவது இல்லை. ஆகவே குற்றாலத்திலே ஒன்று வைக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். தெரியாத இடத்திற்கு எல்லாம் ஒவ்வொரு ஸ்டேசன் வைப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. நம்முடைய வேண்டுகோள் கூட திருநெல்வேலி மாவட்டத்

திற்கு ஒன்று வேண்டும் என்று நாம் மத்திய அரசை கேட்டிருக்கிறோம். திருநெல்வேலி மாவட்டத்திற்கு அவர்கள் ஒதுக்குகிறபோது அதை எந்த இடத்திலே வைப்பது என்கிற பிரச்சனையை பின்னாலே நாம் பார்த்துக் கொள்ளலாம். முதலிலே அனுமதி கிடைத்துவிட்டால், அதற்குப் பிறகு அதற்குள்ளே நுழையலாம்.

இராமேஸ்வரத்திலே சக்தி வாய்ந்த ஒரு தொலைக் காட்சி அஞ்சல் நிலையம் வைப்பது என்பது, பாதிப் பகுதி கடல் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் ஏன் அங்கே வைக்கிறார்கள் என்றால். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போன்று, எப்படி இலங்கையில் உள்ள அந்த தொலைக் காட்சி நிலையம் நம்முடைய பகுதி மக்களை அடிக்கடி கவர்ந்து கொண்டு இருக்கிறதோ. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை நம்முடைய தொலைக்காட்சி நிலையம் அங்கே உருவாக்க வேண்டும். நம்முடைய செய்திகள் அங்கே சென்றாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல் இலங்கையினுடைய அந்த தொலைக் காட்சி, ரூபவாணி, நமக்கு எதிரான பிரச்சாரத்தை மட்டுமல்ல, விஷமத்தனமான பிரச்சாரத்தையும் அவர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். சமீபத்தில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு கூட ஒரு செய்தி எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. நம்முடைய தமிழகத்திற்கு வருகை தந்த, அந்த இலங்கையிலேயிருந்து வந்த நம்முடைய மக்கள். திரும்பவும் வரவேண்டும் என்று அவர்களை அழைத்து அவர்கள் போன நேரத்தில், அவர்களில் பலரை அங்கே வைத்துக் கொண்டு, அந்த தொலைக்காட்சி நிலையத்தில், தமிழகத்திலே எப்படி எல்லாம் நடத்தினார்கள் என்பதை, உண்மைக்கு மாறாக, இங்கே எவ்வளவு வசதிகள் செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை எல்லாம் மறைத்து, இந்தியாவிற்கு விரோதமாக தமிழகத்திற்கு விரோதமாக, மக்களிடத்திலே பிரச்சாரம் செய்கின்ற ஒரு உத்தியை அவர்கள் தொலைக்காட்சியிலே படம் பிடித்துக்காட்டினார்கள் என்று நமக்கு செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவேதான் மத்திய அரசை நாம் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். தமிழகத்திலே சக்தி வாய்ந்த ஒளிபரப்புகின்ற அந்த சாதனங்கள் அமைக்கப்பட்டாக வேண்டும் எல்லைப் பகுதியிலே இருக்கின்ற நாடுகள் விஷமத்தனமாக பிரச்சாரத்தை, இந்தியாவிற்கு விரோதமாக பிரச்சாரத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள், அதை தடுக்க வேண்டும் என்று.

ஆகவே இராமேஸ்வரத்திலே, அங்கே அமைப்பது என்பது நமக்கு பயன்படுத்துவதற்கு மாத்திரம் அல்ல, எதிரிகளுடைய விஷமப் பிரச்சாரத்தை தடுப்பதற்கும் அந்த நிலையங்கள் பயன்படும்.



தஞ்சையில் வானொலி நிலையம்.

390—(*வினா எண். 5584) திருவாளர்கள் மு. இராமநாதன் பரிதி இளம்வழுதி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தஞ்சையில் வானொலி நிலையம் ஏற்படுத்திட மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சை மாவட்டத்தில் பெரும்பகுதி கீழ் பகுதியாகவும், கடற்கரைப் பகுதியாகவும் உள்ளதால், இங்கேயிருந்து ஒலிபரப்பும்போது, மழைக் காலங்களில் சரியாக கேட்க முடியாமல் போகிறது. எனவே தஞ்சைக்கு நடுநாயகமாக விளங்குகின்ற திருவாரூரிலே தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் இப்போது 50 கிலோ வாட் சக்தி வாய்ந்த நிலையம் செயல்பட்டு வருகிறது. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலே 100 கிலோ வாட் சக்தி கொண்டதாக அதை மாற்றி அமைக்க இருக்கிறார்கள். அப்படி மாற்றி அமைக்கிறபோது, தஞ்சை மாவட்டம் முழுவதும் மிகச் சிறந்த முறையிலே அந்த வானொலி நிலையத்தினாலே பயன்படும். ஆகவேதான் பக்கத்திலே ஒரு மாவட்டத்தில் நம்முடைய வானொலி நிலையம் தேவை இல்லை என்று மத்திய அரசு கருதுகிறது.

வலிவலம் கனகா மருத்துவ மனை

391—(*வினா எண். 1436) திருவாளர்கள் எம். செல்லமுத்து கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பார —

கீவளூர் ஊராட்சி ஒன்றியம் வலிவலகத்தில் உள்ள கனகா ஆஸ்பத்திரியை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கீவளூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வலிவலம் கனகா மருத்துவமனையை சில நிபந்தனைகளின் பேரில் அரசு ஏற்றுக்கொள்ள ஆணையிடப்பட்டு அந்நிபந்தனைகளை அம்மருத்துவமனை நிர்வாகிகள் பூர்த்தி செய்யாததினால் தனியே அரசின் ஆய்வில் உள்ளது.

[1986 ஏப்ரல் 5

செட்டிபாளையம் மருத்துவமனைக்கு புதிய கட்டிடம்.

3.92—(*வினா எண். 3984) திரு. வே. கு. சின்னசாமி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் நம்பியூர் ஊராட்சி ஒன்றியம் எலத்தூர் செட்டிப்பாளையம், அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) (ஆ) மற்றும் (இ) நிதி நெருக்கடியின் காரணமாக இத்திட்டம் பரிசீலிக்கப்பட வில்லை.

(முற்பகல் 9.40)

திரு வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, இந்த அரசு மருந்தகமாகச் செயல்பட்டுக்கொண்டு வருவதை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு பதில் சொல்கின்ற நேரத்திலே, இது நிதிநிலையின் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சனை என்று சொன்னேன். ஆனால் அண்மையிலே இந்த அரசாங்கத்தினுடைய மருந்தகங்களை ஆரம்பச் சுகாதார நிலையங்களாக, ஆரம்பச் சுகாதார மருத்துவமனைகளாக மாற்ற வேண்டுமென்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தத் திட்டத்தினுடைய எல்லைக்குள்ளே இதனைக்கொண்டு வந்து இதை ஆரம்பச் சுகாதார மருத்துவமனையாக ஆக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பச் சுகாதார மருத்துவமனையாக மாற்றம் செய்யப்படும் என்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அது எப்போது நிறைவேற்றப்படும், அதற்கு எவ்வளவு நிதி ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் 1986–87 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும். இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் சராசரியாக 3 லட்ச ரூபாய் செலவழிக்கப் படும்.



1986 ஏப்ரல் 5]

மாவட்ட தலைநகரங்களில் நடமாடும் மருந்தகங்கள்

393—(*வினா எண் 6101) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்—கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் நடமாடும் மருந்தகங்கள் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டார்கள். சென்னை நகரத்தில் தற்போது எத்தனை நடமாடும் மருந்தகங்கள் செயல் படுகின்றன? இந்த நடமாடும் மருந்தகங்களை இரவு நேரங்களில் அமல்படுத்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னையைப் பொறுத்த வரையிலே சைதாப்பேட்டை மருத்துவமனையிலே ஒரு நடமாடும் மருத்துவமனை செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல். பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக் மற்றும் இராயப்பேட்டை மருத்துவ மனைகளிலே வேன்கள் இருக்கின்றன. அந்த வேன்கள் ஏதாவது ஒரு இடத்திலே ஆபத்து ஏற்பட்டால் உடனடியாக அங்கே சென்று நோயாளிகளைக் கொண்டு வருவதற்காக பயன் படுத்தப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், அண்மையிலே ஒரு புதிய திட்டத்தை நாம் தயாரித்து இருக்கிறோம். அந்தத் திட்டம் சென்னை மாநகரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு தனித் திட்டம். Accident emergency என்பது—அவசர சிகிச்சை. அதே நேரத்தில் விபத்துக்காக, சிகிச்சைக்காக இந்தத் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை மற்றும் இராயப்பேட்டை மருத்துவமனை' அதே மாதிரியாக Three Peripheral Hospit l at K.K. Nagar, Tondi pet nd Ann Hospit l இப்போது பெரம்பூரிலே இன்னொரு மருத்துவமனை. பெரம்பூர் மருத்துவமனை செயல் படுவதற்கு இன்னும் 2 மாதங்கள் ஆகும். அதனையும் எடுத்துக் கொண்டு மற்றும் V.H.S. என்கிற 10 மருத்துவமனைகளையும் ஒன்றாக இணைத்து அதற்காக ஒரு திட்டத்தை தயார் செய்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் எந்த இடத்தில் ஆக்ஸிடெண்ட் ஏற்படுகிறதோ. அதை உடனடியாக தொலைபேசி மூலமாக தகவல் கொடுத்துவிட்டால் அந்த இடத்திற்கு இந்த வண்டிபோய் உடனடியாக பேஷண்டை அழைத்துக்கொண்டு வருவதற்காக இந்தத் திட்டத்தின்கீழ் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை போன்ற பெரிய நகரங்களில் தனியார்கள், இரத்தம், சிறுநீர் போன்றவற்றை சோதனை செய்து வருகிறார்கள். நடமாடும் மருந்தகங்கள் மூலமாக இது போன்ற சோதனைகளை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரத்தப் பரிசோதனையைப் பொறுத்தவரையில் இப்போது ஏற்கனவே மருத்துவமனைகளிலே எல்லாவற்றையும் ஒரே வகையிலே ஒரு மணித்துளிக்குள்ளேயே எல்லா Test-ம் பார்க்கக்கூடிய அளவுக்கு இராயப்பேட்டை மருத்துவமனை, பொது மருத்துவமனை மற்றும் ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவைகளிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. Auto Analyser என்று அதற்குப் பெயர். ஒரு Auto Analyser அமைக்க செலவழிக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை 4 லட்ச ரூபாயாகும். அதுமட்டுமல்லாமல், இந்த Accident Emergency-ஐப் பொறுத்தவரையிலே இவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்று நான் சொல்லவில்லை. அதற்காக 2 கோடி ரூபாய் சென்னை மாநகரத்திற்கு மட்டும் நாம் ஒதுக்கி இருக்கிறோம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதை மருத்துவமனையை விரிவுபடுத்தி நடமாடும் மருந்தகம் அமைக்கப்படவிருக்கின்ற திட்டத்திலும், விரிவுபடுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் X-Ray Plant இன்னும் பல புதிய நவீனமான கருவிகளைக் கொண்டு வந்தும் அவைகளுக்கு உண்டான பணியாளர்களை நியமிக்கப்படாதது அரசினுடைய கவனத்திற்கு வந்துள்ளதா? அப்படி நியமிக்கப்படாத பணியாளர்களை விரைந்து நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக உடனடியாக நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். இந்த சைதாப்பேட்டை மருத்துவமனையையும் நான் சொல்லியிருக்கக்கூடிய Comprehensive Metropolitan Accident Emergency Programme என்ற திட்டத்திற்குள் இந்த மருத்துவமனையையும் நாம் கொண்டுவர இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### நவீன அரிசி ஆலைகள்

394—(*வினா எண் 5267) திரு க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழிக்கு அருகிலுள்ள எருக்கூர் என்றகிராமத்தில் நிறுவ இருக்கும் நவீன அரிசி ஆலை எப்போது உற்பத்தியைத் துவங்கும்?





மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு: சீர்காழிக்கு அருகில் எருக்கூர் கிராமத்தில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வரும் நவீன அரிசி ஆலை 1986-ஆம் ஆண்டு சூன் மாத வாக்கில் செயல்பட தயாராகும்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலை 2 கோடி ரூபாய்க்கு அனுமதிக்கப்பட்ட அரிசி ஆலை. அதனுடைய கட்டுமான பணிகளை தாமதமாக ஆரம்பித்து இருக்கிறார்கள். இப்படி நீண்ட தாமதத்திற்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானப் பணிகள் டெண்டர் மூலம் ஏற்கனவே முடிந்து பணிகள் துவங்கியிருக்கின்றன. நான் ஏற்கனவே சொன்னது போல் வருகிற சூன் மாதத்தில் இந்த ஆலை தொடங்க இருக்கிறது. இதிலே மாண்புமிகு உறுப்பினர் கட்டுமானப் பணியில் காலதாமதம் என்று சொன்னார்கள். அப்படி ஏதாவது சுணக்கம் இருக்குமானால் அதை வேகப்படுத்தி ஏற்கனவே அறிவித்தது போல ஜூன் மாதத்தில் உற்பத்தியை தொடங்கும். அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலையிலே என்ன என்ன வேலை செய்ய இருக்கிறார்கள். தவிட்டில் இருந்து எண்ணெயை எடுப்பதற்காக உள்ள அந்த ஆலையும் அதில் இணைக்கப்பட்டு இருப்பதாக அறிகிறேன். ஆகவே அதில் என்ன என்ன உற்பத்தியை செய்ய இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 2 கோடி ரூபாயிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியிலே அமைக்கப்பட்டு இருக்கிறது, இந்த நவீன அரிசி ஆலையில் 100 டன் நெல்லை அறவை செய்ய இருக்கிறது, 15 டன் தவிட்டை பயன்படுத்தி சமையல் எண்ணெய் தயாரிக்கக்கூடிய அமைப்பும் அதோடு சேர்ந்து இணைக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் இந்த ஆலை சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

395—(*வினா எண் 6756)—திரு. ரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிதாக எத்தனை இடங்களில் நவீன அரிசி ஆலைகளை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது?

(ஆ) எவ்வளவு முதலீட்டில் இவை நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) தமிழ்நாட்டில் புதிதாக 8 இடங்களில் நவீன அரிசி ஆலைகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நவீன அரிசி ஆலையையும் நிறுவுவதற்கு சுமார் ரூ. 125 லட்சத்திலிருந்து ரூ. 150 லட்சம் வரை செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**உணவுப் பொருள் வழங்கு கடைகளுக்கான கண்காணிப்புக் குழுக்கள்**

396—(*வினா எண். 5425) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவுப் பொருட்களை விற்பனைக் கடைகளில் கண்காணிக்கும் கண்காணிப்புக்குழு செயற்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் இயங்கிக்கொண்டு வருகிற சி. ஆர். சி. மற்றும் டி. யூ. சி. எஸ். நிறுவனங்களில் முறையான வினியோகம் நடைபெறாமல் அங்கே அளவை குறைத்தும், பொது மக்கள் கேட்கும்போது கேட்கின்ற பொருட்கள் வழங்கப் படாமல் அப்படி குறைவாக கொடுக்கப்படுவதை சுட்டிக்காட்டும் போது எங்களுக்கு குறைவாக குடோனில் வழங்குகிறார்கள். ஆகவே நாங்கள் குறைவாக கொடுக்கிறோம் என்ற முறையில் சொல்லி அங்கே இருக்கின்ற பணியாளர்கள் பொது மக்களிடம் நல்ல தொடர்புகளை வைத்துக்கொள்ளாமல் அரசு எந்த நல்ல நோக்கத்தோடு இந்த பணிகளை மேற்கொண்டு இருக்கிறதோ அதற்கு குந்தகம் விளையும் வகையில் நடந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதை தடுக்க இந்த கண்காணிப்பு கமிட்டி அமைக்கப்பட்டால் ஒழுங்காக இருக்கும் என்பதை உத்தேசித்து அந்தப் பணியை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களாக இருந்தால் 5 உறுப்பினர் களைக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவும், நகரங்களாக இருந்தால் 9 உறுப்பினர்களைக் கொண்ட குழுவும், கிராமங்களில் கண்டிப்பாக ஒரு மகளிரும், நகரங்களில் 2 அல்லது 3 பெண் உறுப்பினர்களும், அதிலே ஒருவர் அரசு அலுவலராகவும், மற்றவர்கள் பொதுமக்கள் பிரதிநிதிகளும் கொண்ட குழுக்கள்

இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஏற்கனவே அமைக்கப்பட்டு கூட்டுறவுத் துறை சுமார், 20,723 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே சொன்னது வருகிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் புகார் பெட்டிகள் போல் ஒவ்வொரு நியாய விலைக் கடையிலேயும் வைக்கப்பட்டிருக்கின்றன,

நுகர்பொருள் வாணிபக் சென்னையைப் பொறுத்தவரையில், என்றால்மாவட்ட கழகத்தினுடைய ஆணையாளர், மாவட்டங்கள் பெட்டிகளில் வரப் ஆட்சித் தலைவர் ஆகியோர் இந்தப் புகார் கண்காணிப்புக் குழு தருகிற படுகிற மனுக்களை பரிசீலித்தும், நடவடிக்கைகளை விவரங்களை அறிந்து கொண்டு அதற்குரிய பணியாளர் எடுத்து வருகிறோம். எடை குறைவு அல்லது ஒட்டுமொத்த சரியாக நடந்து கொள்ளவில்லை என்பது போன்ற எனக்குத் மான ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். பொது தெரிந்தவரையில் சென்னையைப் பொறுத்தவரை, விநியோகம் சிறப்பாகத்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இது போன்று எங்காவது ஒன்றிரண்டு இடங்களிலே குறிப்பிட்டு தவறு இருக்கிறது என்று சுட்டிக் காட்டினால் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். சுமார் 110 அரசு அதிகாரிகள் கைப்பற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இல்லாத அளவிற்கு 5 பேர் பாதுகாப்புச் சட்டத்திலே பெரிய தனவந்தர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள், பொதுமக்களுக்குக் கொண்டுவரப் படுகின்ற தான்யங்கள் முதலியவற்றைப் பதுக்கி வைப்பவர்கள், கலப்படம் செய்பவர்கள், இப்படி 5 பேர் இந்த ஓராண்டுக்காலத் தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 110 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பிட்டு எந்தக் கடையில், அவர் தொகுதியில் எந்தப் பகுதியில் என்று சொன்னால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சைதை சா. துரைசாமி: இயங்கிக் அவர்களே, என்னுடைய தொகுதியில் முழுமையாக விநியோகம் கொண்டிருக்கிற டி.யு.சி.எஸ், அதிலே முறையாக டி.யு.சி.எஸ். நடைபெறவில்லை. நான் இதுபற்றி பலமுறை தெரிவித்து, அதிகாரியிடமும், லேபர் ஆணையாளர் அவரிடமும் குறைபாடு எடை குறைவு, வழங்கப்படாத பொருட்கள் போன்ற இருந்தாலும் கள் உள்ளதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அங்கே பணி அவர்கள் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும், காரணத்தால் புரியும் சிப்பந்திகள் முறையாக செயல்படாத தலைநகரங் தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சென்னை போன்ற பணிகள் களில் இந்தக் கமிட்டியை ஏற்பாடு செய்தால் அந்தப் கொண்டு, சிறப்பாக முடியும். ஆகவே அதைக் கவனத்தில் வழங்கப்படுகின்ற இந்தக் கமிட்டி அமைக்கப்பட வேண்டும்.

பொருட்களை, உதாரணமாக பாம் ஆயில், சர்க்கரை, பருப்பு போன்ற பொருட்களை, எப்படி காயதேனு அங்காடிகளில் கவர்களில், பாலிதின் பைகளில் போட்டு வழங்குகிறார்களோ, அந்த முறையில் வழங்கினால், இந்தக் குறைபாடு இருக்காது என்று நினைக்கிறேன். 5 கிலோ சர்க்கரை வாங்கினால் எப்படியும் 100 கிராம் குறைந்துவிடுகிறது. அது எப்படிக் குறைகிறது என்று தெரியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு—புரட்சித் தலைவர் அரசு 100 கோடி இழப்பை ஏற்று, பொது விநியோக முறையில், பொதுமக்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று செய்யப்படுகின்ற நல்ல பணிகளில் ஒரு சில சிப்பந்திகளால் இப்படிப்பட்ட குறைகள், தவறுகள் ஏற்படுகின்றன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியம் முடிந்து மூன்று நாட்களாகிவிட்டது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு சைதை சா. துரைசாமி: ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு பொதுநலப் பிரச்சினையாக மாத்திரம் கருதாமல், இது புரட்சி தலைவர் அரசுக்கு புகழ் சேர்க்கின்ற காரணத்தால் இதில் அதிக தீவிரம் காட்டி தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறை தமிழகத்திலே தான் சீராக இருப்பதாக வருகின்ற குழுக்கள் எல்லாம் மத்திய அரசினால் அனுப்பப்படுகிற குழுவாக இருந்தாலும், அல்லது மத்திய அமைச்சரவையாக இருந்தாலும், இப்படிப்பட்ட பொது விநியோக முறை தமிழகத்தில் தான் சீராக இருப்பதைப் பாராட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதி முழுமையுமே சரியில்லை என்று சொல்லுகிறார்கள். நிச்சயமாக இப்படிப்பட்ட ஒரு நிலையில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது தவறாகும். குறிப்பிட்டு எந்தக் கடையில் இப்படி நடக்கிறது என்று சொன்னால், நடவடிக்கை எடுக்க முடியும். அதை விட்டுவிட்டு, அவருடைய தொகுதி முழுவதிலும் சரியாக இயங்கவில்லை, கடைகள் இயங்கவில்லை என்று சொல்லுவது தவறாகும். ஆகவே அப்படி நடப்பதற்கான வாய்ப்பில்லை என்று மீண்டும் ஒரு முறை அவரிடம் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பார்த்த கடைகளில், இப்படி ஒரு தகவல் கிடைத்து, குற்றச்சாட்டு இருக்குமானால், அதைச் சொன்னால் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அந்தக் கடைகளில் தவறு இருந்தால், மாற்றி அமைத்தும் சீர்செய்யப்படும்.

சில வகையான பொருட்களை பாக்கெட்டுகளில் தான் கொடுக்க வேண்டுமென்று கொடுக்கிறார்கள். பருப்பு போன்ற பொருட்களை பாக்கெட்டுகளில் தான் கொடுக்கிறார்கள். பாம் ஆயில் பொறுத்தவரை லூஸ்—ஆகத்தான் கொடுக்கமுடியும். பாலிதின் பைகளில் போட்டுக்கொடுப்பது என்றால், ரூ.2, ரூ.3 என்று



அதிகம் செலவாகும். அரிசி போன்றவைகள் அளந்து தரப்படுகின்றன. அதிலே எடை குறைவு என்று சொல்கிறார்கள்— நான் நேற்று சொன்னதைப் போல், இப்போதும் சொல்வது—அடிக்கடி ஃப்புட் செல் அதிகாரிகள் உடனுக்குடன் சென்று சோதனையிடுகிறார்கள். அதுபோல, பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் அப்போதைக்கப்போது, திடீரென்று அங்கே போய் சோதனையிட்டும், முறையாக வழக்கப்படி சோதனையிட்டும், பல்வேறு விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். என்ன கஷ்டம், எந்தக் கடையிலே கஷ்டம் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒட்டுமொத்தமாகச் சொன்னால் அது நல்லதல்ல.

மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கான செலவு.

397—(*வினா எண். 751) திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக அரசு கடந்த ஆண்டு (1984) செலவிட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இதற்கென்று கூடுதலாக நிதி ஒதுக்கி பிரச்சாரத்தை தீவிரப்படுத்த திட்டம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (அ) மதுவிலக்கு பிரச்சாரத்திற்காக கடந்த ஆண்டு (1984) அரசு செலவு எதுவும் செய்யவில்லை.

(ஆ) ஆம்.

(இ) மதுவினால் ஏற்படும் தீமைகளைக் குறித்து மக்களிடையே பல்வேறு வகையான பிரச்சாரங்களின் மூலம் தெளிவுபடுத்தி மதுவிலக்குக் கொள்கையை மக்கள் பூரணமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விளம்பரம் செய்ய ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அரசின் பரிசீலனையிலுள்ள அந்த ஒரு கோடி ரூபாய்க்கான திட்டம் என்ன என்பதையும், எந்தெந்த வகையில் பிரச்சாரங்கள் செய்வதற்காக அரசு பரிசீலித்து வருகிறது என்ற அந்த விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கிராமங்கள் அளவிலும் மதுவிலக்கு குழுக்களை ஏற்படுத்தியும், பொதுமக்கள் உதவியுடன் பிரச்சாரம் செய்தும், பள்ளி, கல்லூரி களில் மாணவர்களிடையே போதை தரும் மருந்துகளுடைய தீமை களை விளக்கியும் பிரச்சாரம் செய்ய பல்வேறு வகையிலான திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சாரத்தை மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கிற டி.வி., ரேடியோ, திரைப்படம், நாடகம் போன்ற சாதனங்கள் மூலம் செய்வதற்கும், அதே போல நலிந்த நிலையிலே உள்ள நாடகக் கலைஞர்களைப் பயன் படுத்தி மதுவினுடைய தீமைகளை எடுத்துச் சொல்கிற வகையில் அந்தப் பிரச்சாரத்தை அமைப்பதற்கும், அரசு பரிசீலிக்குமா என்று அறிந்து கொள்ள விரும்புவதோடு, இப்போதைய நிலைமையில் மதுவினைப் பற்றிய பிரச்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் மதுவிலக்கினை முழுமையாக அமல்படுத்துகிற நிலைமை யில், அந்தப் பிரச்சாரத்தை நிறுத்திவிடாமல், மதுவினுடைய தீமைகளை எடுத்துச் சொல்கிற வகையில், மதுவிலக்கு அமுல் படுத்தப்பட்டபிறகும் அந்தப் பிரச்சாரத் திட்டம் நீடிக்கப் படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு அமலிலுள்ள குஜ்ராத் மாநிலத் திற்கு நமது அதிகாரிகள் சென்று பார்த்து வந்து, திட்டங் களைத் தயாரித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று திரைப்படம், நாடகம், டி.வி., ரேடியோ போன்ற எல்லாவிதமான சாதனங்களின் மூலமாகவும் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதற்கு தற்போதும் மதுவிலக்கு அமலுக்கு வந்தபிறகு 1-1-1987-க்குப் பிறகும் அது தீவிரமாக நடத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி; தலைவர் அவர்களே, மதுவிலக்கைக் கொண்டு வந்து, மதுவின் தீமையை அகற்றவேண்டும் என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளதாக நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நான் அறிய விரும்புவது என்னவென்றால், மக்கள் அதிகப்படியாக மது அருந்தி ஏற்படுகிற கெடுதல்களைத் தடுப்பதற்கான பிரச் சாரம்; ஒரு கூர்மையான சிறந்த ஆயுதம் ஆக்கப்படவேண்டும். டி.வி. அல்லது சினிமா படங்கள் மட்டும் அல்லாமல்; அரசியல் தலைவர்கள் உட்பட பிரச்சாரத்திற்கான ஒரு நல்ல உயர்மட்டக் குழுவை உருவாக்கி, அதனுடைய தீமைகளைப் பற்றி கிராமங்கள் முழுவதும் பிரச்சாரம் செய்வதோடு அதைக் குடிப்பவர்களுக்கு, காப்பிக் கடைகளில் எப்படி ஒரு கட்டுத்திட்டத்தோடு செய்கிறார் களோ அந்த மாதிரிக் கடைகளை உருவாக்கி, அரசாங்கமே



அளவு தான் அந்தர் கடைகளை உருவாக்கி, அதில் குறிப்பிட்ட கீழ்ப் அவர்களுக்கு மது கொடுக்கப்படும் என்றும், 18 வயதுக்கு என்றும் பட்டவர்களுக்கு அங்கே மது கொடுக்கப்படமாட்டாது அந்தக் அப்படிப்பட்ட முறையில் அரசு அதைக் கட்டுப்படுத்தி, என்றும், குறிப்பிட்ட அளவுக்கு மேல் கொடுக்கப்படமாட்டாது பண்ணப்பட போதை வந்து தலை சுற்றி விழுகிற அளவுக்கு சப்ளை கொண்டு மாட்டாது என்றும், இந்த விஷயத்தை நடைமுறையில் காரியத்திற்கு, வருவதுமான பிரச்சாரத்தைச் செய்வதற்கான என்று ஒதுக்கியிருக்கிற பணத்தை உபயோகப்படுத்துவார்களா அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. மதுவிலக்குப் பிரச்சாரம் செய்கின்றபொழுது, மதுவைக் குறைந்த அளவுக்குக் குடிக்கலாம் என்று தனியாகக் கடை வைக்கலாம் என்று சொல்வது நல்ல யோசனை அல்ல: மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவதைப் போல, பிரச்சார ஆயுதத்தைக் கூர்மையாக்கித் தீவிரப் படுத்தலாம்.

திருமதி டி. மனோகரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கை இந்த அரசாங்கம் ஒத்தி வைத்ததும் அன்றைக்குப் பிரச்சாரத்திற்காக ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியது. ஆண்டு பல ஆகியும் அந்தத் தொகை அதிகரிக்கப் படவில்லை. அதுமட்டுமல்லாமல், இங்கே நாடகங்கள், மது விலக்குப் பிரச்சாரத்தை முன்னிட்டு நடத்தப்படுகின்றன. கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவைகளுக்கு என்று தேர்ந் தெடுக்கப்படும் அந்தக் குழுக்கள் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களைத்தான் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கும், தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத் திற்காகவும், சிறு சேமிப்புத் திட்டப் பிரச்சாரத்திற்காகவும் பயன்படுத்துகிறார்கள். அந்தக் கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்படு வதிலே தவறுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே, பெண்களும் இந்த நாடகங்களிலேயும், கலை நிகழ்ச்சிகளிலேயும் பங்கேற்றிருப்பதால் பெண் உறுப்பினர்களையும் இந்தக் கமிட்டியிலே பங்கேற்கச் செய்து, பல கட்சிகளையும் அதிலே ஈடு படுத்துகின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மெக்டோவல், அரிஸ்டோகிரேட் போன்ற மது பானங்களைத் தயாரிக்கின்றவர்கள் கூட மறைமுகமாக—மது பானம் என்று போடாமல் பல்வேறு விளம்பரங்களைச் செய்து கவனத்தை ஈர்ப்பதற்காகப் கொண்டிருக்கிறார்கள்.

பெண்களையும் சேர்த்துக் கொண்டு விளம்பரம் செய்கிறார்கள். பாராளுமன்றத்திலேயும் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதற்கு எந்த விதமான முறைகள் கையாளப்பட்டாலும் பெண்களுக்குச் சம பங்கு அளிக்கப்படும்,

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்த அரசு மது ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறார்கள். ஆகவே, அதை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில், ஏன் மீண்டும் மது விலக்கைக் கொண்டு வருகிறார்கள் என்பதை ஏழை எளிய மக்கள், குடிசை வாழ் மக்கள் தெரிந்துகொண்டு திருந்துவதற்காக இப்பொழுதே இந்த அரசு குடிசைப் பகுதிகளில் டி.வி. மூலம் பிரச்சாரம் செய்வார்களா? அப்படி டி.வி. மூலம், குடிப்பதால் என்ன கேடு என்பதை விளக்குவதற்காக செய்தித் துறை மூலம் படம் போட்டுக் காட்டி விளம்பரப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவின் தீமையைப் பற்றி திரைப்படம் மூலம் காட்டப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப் போன்று குடிசைப் பகுதிகளில் டி.வி. மூலம் பார்க்க வசதி ஏற்பட்டால் நிச்சயமாகச் செய்யப்படும்.

**திரு. டி. என். முருகானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுகின்றபொழுது இந்த மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக நல்ல கதைகளை உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே, சிவசங்கரி போன்ற எழுத்தாளர்கள் மது மற்றும் போதைப் பொருட்களின் கொடுமைகளைப்பற்றி, அவற்றின் தீமைகளைப்பற்றி மக்களுக்கு விளக்கும் வகையில் நல்ல கதைகளை எழுதி வருகிறார்கள். இக்கதைகளைப் பயன்படுத்தி அரசு சினிமாப்படம் மூலமாகப் பிரச்சாரம் செய்வதற்கு முன் வருமா? இதுபோன்ற எழுத்தாளர்களை ஊக்குவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு இதைப்பற்றி நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான கொள்கை விளக்கமாக இருப்பதால், இதற்கு மைய அரசு ஏதாவது நிதி உதவி வழங்குகிறதா? அப்படியென்றால் எவ்வளவு? இல்லையென்றால் நிதி உதவி வழங்குமாறு மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசிடம் இதுபற்றி நிதி உதவி கேட்க நமது அரசு முயற்சி செய்யும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துவதற்கு பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், ஒரு பல்கலைக் கழகத்திலே ஒரு பாடல் தொகுப்பு, பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. அது மதுவை ஆதரித்துச் சொல்லப்பட்ட கருத்தாக இருக்கிறது. மதுவே, ராஜ திரவமே, சிற்பிகள் குடித்தால் தாஜ்மகால் உருவாகலாம், சைத்திரியர்கள் குடித்தால் சில ரவிவர்மாக்கள் பிறக்கலாம், குடிகாரன் குடித்தால் மதுக் கோப்பை காலியாகும்; நீ ஏன் அந்தச் சாராய சீசாக்களை வீசி எறிகிறாய்? அதில் கிராமங்களின் செப்பேடுகள் அல்லவா அடைபட்டுக் கிடக்கிறது, இந்தியாவில் கங்கை வற்றிப் போனாலும் மதுவெள்ளம் பாய்ந்து கொண்டுதான் இருக்கும் என்று ஒருவர் எழுதிய பாடல் பல்கலைக்கழகத்திலே பாடப் பகுதியிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நான் கேட்க விரும்புகிறேன், அந்தப் பாடப்பகுதி எடுக்கப்பட்டு, மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு நல்லமுறையில் வழி செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சொல்லப்பட்ட அந்தப் பாடப்புத்தகம் எந்தப் பல்கலைக் கழகத்தில், எந்தக் கல்லூரியில் இருக்கிறது என்று சொன்னால் அதை அப்புறப்படுத்துவதுடன் மது விலக்கினுடைய நன்மையைப்பற்றிப் பாடப் புத்தகங்களில் புகுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாடல் மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிறது என்று தெரிகிறது. (பலத்த சிரிப்பு.)

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அது உங்களால் போற்றப்பெற்ற, நமது அமைச்சர் காளிமுத்துவுக்கும் எனக்கும் பொதுவான நண்பராக விளங்குகிற கவிஞர் காமராசர் எழுதி, மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஏற்கனவே. இந்த சபையிலே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். தொடர் நடவடிக்கை என்ன என்று விவரத்திற்காகக் கேட்டேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலை நாயகர் அவர்களே, வள்ளுவர் வழியில் இலங்குகின்றது நம்முடைய தமிழக அரசு. ''உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான் எண்ணப் படவேண்டா தார்'' என்று வள்ளுவன் குறிப்பிடுவான். சான்றோர் வரிசையிலே நம்முடைய தமிழக அரசு பீடு நடை போட இருக்கிறது. குஜராத்திலே, காந்தி பிறந்த மண்ணிலே, மதுவை ஒழித்ததைப் போல, இங்கே காலக் காந்தி காமராசரும், தென்னாட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணாவும் பிறந்த இந்தப் பகுதியில், மதுவை ஒழிப்பதற்கு வள்ளுவர் காட்டுகின்ற வழிமுறைகளைப் பின்பற்றி, அரசு மது விலக்குப் பிரச்சாரத்தை, தமிழ் இலக்கிய எடுத்துக்காட்டுகளோடும் இலக்கிய வடிவில் எல்லா மக்கள் மத்தியிலே கூறுவதற்கும், மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் அது நல்வழி வகுக்கும் என்ற முறையிலே அரசு பின்பற்றி, மது ஒழிப்புப் பிரச்சாரத்தை இலக்கியம் மூலமாகப் பரப்புமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இலக்கியப் புத்தகங்களை, நல்ல எழுத்தாளர்கள் எழுதினால் அதை ஆதரிப்பதன் மூலமும் அரசு நன்மை புரியும்.

திரு. செ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே மது குடிக்கின்றவர்கள் எவ்வளவு பேர்கள்? குடிக்காதவர்கள் எவ்வளவு பேர்கள் என்பதை அரசு அறிவிக்குமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தனி வினா போடும்படி மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுவினை ஒழிப்பதற்காக பிரச்சாரத்திற்காக அரசாங்கம் ரூ. 1கோடி ஒதுக்கியிருக்கிறது என்று அறிவித்தார்கள். இவ்வளவு தொகை ஒதுக்கினாலும் கூட, இந்த மதுவினைத் தீவிரமாக நாம் குறைக்க வேண்டும் என்றால், எங்கெங்கெல்லாம் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்கிறார்களோ, அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் வகையில் குறைந்தது 5 ஆண்டுகளாவது அவர்களைச் சிறையிலே வைக்கவேண்டுமென்ற நிலைமை உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களையே தளர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் பேசியிருக்கிறார்கள். சிறையில் தள்ளுவதன் மூலம் மாத்திரம் இந்த மதுவிலக்குப் பிரச்சாரத்தைத் தீவிரமாக்க முடியாது. மக்கள் சிந்தனையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும்.



THIRU T. VENKATA REDDY: Hon. Mr. Speaker, Sir, the Government have opened liquor shops and wine shops. It has also invested an amount of one crore to do the propaganda work. After opening the shops, why do you ask the people not to drink? It is just like placing a sweet before the child and asking it not to take it. I want to know whether prohibition will be introduced immediately so that not only the amount will be saved but the health of the people will also be saved. Therefore, I request the Hon Minister to announce that prohibition will be introduced immediately.

THE HON. THIRU V. V. SWAMINATHAN: Hon. Mr. Speaker Sir, This is what we do in the case of cigarettes. Cigarettes are not banned. But the cigarettes carry a propaganda that 'smoking is dangerous to health'.

தனியார்களிடம் பணிபுரியும் நெசவாளர்களுக்கு நலத்திட்டங்கள்

398—(*வினா எண். 4070) திரு. எல்ல. இராசமாணிக்கம்? மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி அனகாபுத்தூரில் தனியார் களிடம் பணிபுரியும் நெசவாளர்களுக்கும், வைப்புநிதி மற்றும் ஆயுள் காப்பீட்டு நிதித்திட்டம் போன்றவை விஸ்தரிக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழக அரசு ஆணை எண் 2084,
தொழிலாளர் துறை, நாள் 25-9-1985-ன்படி, ஓய்வுக் காப்பீட்டு
நலத் திட்டத்தினை, கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் துறை
நெசவாளர்களுக்கும் விஸ்தரித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம், நெசவாளர்கள் தனியார் துறையில் இருந்
தாலும், கூட்டுறவுத் துறையில் இருந்தாலும், மாதம் ஒன்றுக்கு
ரூ. 10 வீதம் அவர்கள் கட்டவேண்டும், வயது 58 ஆகி, ஓய்வு
பெறுகிற நேரத்தில், அவர்கள் ரூ. 33,500 பெறுவார்கள். 18
வயதிலிருந்து தனியார் துறை நெசவாளர்கள் கட்டலாம்.
அப்படி இடையிலே அவர்கள் இறந்துவிட்டால், ஆயுள் காப்பீட்டுக்
கழகம் கட்டப்பட்ட தொகையான ரூ. 5,000-த்துடன் இறக்கும்
வரை அவர் செலுத்தியுள்ள சந்தாத் தொகை, மற்றும் அதன்
மீதான வட்டியையும் சேர்த்து அளிக்கும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே,
எனது தொகுதியான அனகாபுத்தூரில் பல தனியார்களிடம்
நெசவாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அவர்களில் சிலர்
குறைந்த அளவே தொழிலாளர்களை வைத்து, வேலை வாங்கு
வதாகக் கூறி, அரசாங்கம் இட்ட ஆணைக்குப் புறம்பாக,

செயல்படுவதை அரசு அறியுமா? 80 சதவீதம் மக்கள் அங்கே அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுடைய நிலையைக் கருதி, ஏதேனும் சிறப்பு நடவடிக்கையின் மூலமாக, அரசு இட்ட ஆணையை மீறுகின்ற அந்த முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தற்போது தனியார் துறையில் உள்ள மாஸ்டர் வீவர்ஸ் வைத்திருக்கிற தொழில் கூடங்களை பதிவு செய்கின்ற நிலைமை இல்லை. அதனால் தனியார் துறையிலே யார், யார் நெசவாளர்களை வைத்து வேலை செய்கிறார்கள் என்ற விவரமும் எந்த எந்த நெசவாளர்கள் அவர்களிடம் வேலை செய்கிறார்கள் என்ற விவரமும் இல்லை. ஆகையால்தான் 1981 ஆம் ஆண்டு 'ஹாண்ட்லூம் ஒர்க்கர்ஸ் ஆக்ட்' என்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இதுபற்றி விரைவில் நடவடிக்கையை அமுல்படுத்துவதுடன் தனியாரிடம் பணி செய்கின்ற நெசவாளர்கள், அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற மாஸ்டர் வீவர்ஸ் ஆகியோரை கொண்ட தனியார் கைத்தறி தொழிலை ஏன் பதிவு செய்யக்கூடாது, சட்டத்தில் அதற்கு இடமளித்தால் என்ன என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அனகாபுத்தூரில் கடந்த 40 ஆண்டுகளாக கோவில் நிலங்களிலே இந்த நெசவாளர் பெருமக்கள் வீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். அந்தப் பகுதி பெரும்பாலும் நெசவாளர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. ஆகையால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு, அந்த மனைகளை அறநிலையத் துறையுடன் கலந்தாலோசித்து நீண்டகால 'லீசு'க்கு எடுத்து, வீடு கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் அந்த மாதிரியான முயற்சியில் ஈடுபட வேண்டும். அவர்கள் கோவில் நிர்வாக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அந்த நிலத்தை நீண்ட கால குத்தகைக்கோ அல்லது விலைக்கோ வாங்கிக் கொடுத்தால் அதிலே எத்தனை பேர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க முடியும் என்பதை அரசு பரிசீலனை செய்து, ஆவன செய்யும்.

திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற நெசவாளர்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லாத காரணத்தால் அவர்கள் கொத்தடிமைகள் போல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையைப் போக்குவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள ஒரு குறுகிய கால வரையறையை நிர்ணயித்து, நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தனிப்பட்ட ஏகபோக முதலாளிகளிடம் வேலை செய்யும் தனியார் துறையில் இருக்கிற நெசவாளர்களை விடுவிப்பதற்காக ஒவ்வோராண்டும் நிதி செலவிடப்படுகிறது. அவர்களுக்கு கடனும் கொடுக்கப்படுகிறது. ஒரு கூட்டுறவுச் சங்கம் புதிதாக ஆரம்பிக்க தேவையான பங்குத் தொகையைக்கூட கொடுக்கிறோம். இப்படிப்பட்ட வகைகளில் ஓராண்டு காலத்திற்குள்ளாக அல்லது வெகு விரைவில் அவர்களுடைய பிடியிலிருந்து விடுவிக்க அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

திருமதி டி. யசோதா : தலைவரவர்களே, அனகாபுத்தூரில் தனியாரிடம் பணிபுரியும் நெசவாளர்களைப்போல் என்னுடைய தொகுதியில் குன்றத்தூரிலும் 90 சதவீதம் மக்கள் இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்று பாதுகாப்பு நிதி, ஆயுள் காப்பீட்டுத் திட்டம் போன்றவை இருப்பதைப்போல அவர்கள் மறைந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நேற்றைய தினம் விவாதத்தின்போது சொன்னதைப்போல 17—9—1985—ல் தொழில் துறையில் வெளியிடப்பட்ட அரசு ஆணை எண் 1916—ன்படி வேலை செய்கிற போது இறந்துவிட்டால் அந்த நெசவாளர், தனியாரிடம் பணி செய்தாலும் அவர்களுடைய குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கிற திட்டம் அரசிடம் இருக்கிறது.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : தலைவரவர்களே, நெசவாளர் குடியிருப்புக்காக இந்த நிர்வாகத்திலிருந்து அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு கடன் வழங்குகிறார்கள். ஆனால் வீடு கட்டும் நிலம் இருந்தால்தான் கடன் வழங்குகிறார்கள். அவர்கள் நலிந்த நிலையில் இருப்பதால் வீட்டு மனை வாங்கிக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால் அரசாங்க உதவியைப் பெற முடியவில்லை. ஆகவே, அந்த நிலத்திற்கும் சேர்த்து பணம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும்.

திருமதி டி. யசோதா : தலைவரவர்களே, இறக்கின்ற நெசவாளர் குடும்பங்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா என்று நான் கேட்டேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இறந்துவிட்டவர்களுடைய வாரிசுக்கு 10,000 ரூபாய் அவர்களுக்கு ஒரு பைசா செலவு இல்லாமல் ஒரு பைசா கூட கட்டாமல், கொடுக்கப்படுகிறது. இது தவிர தனியாக பென்ஷன் கொடுக்கும் திட்டம் இல்லை.

## ஆதிதிராவிட விவசாயிகளுக்கு கூட்டுறவுத் திட்டம்.

399—(*வினா எண். 3012) திருவாளர்கள் க. சோலைராசு மற்றும் கே.பி.கே. சேகர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவந்து உதவுகிற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திருச்சி, செங்கை மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு.கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ): ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களின் பயன்களைப் பெற அவர்கள் உறுப்பினர் களாவதற்கான பங்குத்தொகையை அரசே மானியமாகவும் கடனாகவும் வழங்குகிறது. இத்திட்டம் திருச்சி மாவட்டத்தில் 341 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 337 விவசாய சேவைக் கூட்டுறவுக் சங்கங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர் களாகச் சேர்வதற்கு பங்குத் தொகை மானியமாக அரசு எவ்வளவு ரூபாய் வழங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் 6-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எவ்வளவு தொகை வழங்கப்பட்டு எவ்வளவு ஆதிதிராவிட மக்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் பங்குத்தொகையாக நபர் ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்கிக்கொண்டிருக்கிறது. 6-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 90,000 ஆதிதிராவிட மக்களை இதிலே உறுப்பினர்களாக நாம் சேர்த்திருக்கிறோம். 31-12-85 வரையில் சேர்க்கப்பட்ட அங்கத்தினர்களைப் பொறுத்தவரையில் 594.39 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.





திரு. கே. பி. கே. சேகர் : பேரவைத் தலைவர் அவர்களே,
கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்கெனவே அங்கத்தினர்களாகச் சேர்ந்
துள்ள ஆதிதிராவிட மக்கள் உறுப்பினர்களுக்குரிய தேவையான
உச்ச கடன் அளவைப் பெற உதவி செய்ய அரசிடம் திட்டம்
இருக்கிறதா? அப்படி என்றால் அதன் விவரம் என்ன என்பதை
நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன விவசாயப் பெருங்குடி
மக்கள் உச்ச அளவுக் கடனைப் பெற வசதியாக அவர்களுக்கு
வட்டியில்லாக் கடனாக ரூபாய் 250 நாம் வழங்கிக்கொண்டு
இருக்கிறோம். இந்தக் கடனை 5 ஆண்டுக்காலத்தில் வருடத்
திற்கு 50 ரூபாய் வீதம் அவர்கள் திருப்பிச் செலுத்தவேண்டும்
என்ற நிபந்தனையின் மூலமாக இப்போது நடப்பாண்டில்
1985-86-ல் சுமார் ஆயிரம் நபர்களுக்கு நாம் கொடுப்பதற்காக
இரண்டரை இலட்சம் ரூபாய்க்கு அரசாங்கம் அனுமதி வழங்கி
யுள்ளது.

திரு. க. மாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே,
தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விவசாயிகளைப் பொறுத்த
வரையில் ஒவ்வொருவருக்கும் பங்குத்தொகை மானியமாக 100
ரூபாய் கொடுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். ஆனால் 3,000 ரூபாய் கடன் வாங்கவேண்டு
மென்றால் கூட்டுறவு விதிகளின்படி ஏறக்குறைய 300 ரூபாய்
அவர்கள் பங்குத்தொகையாகக் கொடுத்துத்தான் பெற வேண்டி
இருக்கிறது. எனவே எவ்வளவு தொகை அவர்கள் கடனாகப்
பெற்றாலும் அவர்கள் செலுத்தவேண்டிய பங்குத் தொகையைப்
பொறுத்தவரையில் அனைத்தையும் அரசே ஏற்று அவர்களுக்காகச்
செலுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பைலா அடிப்படையில்தான் நாம்
100 ரூபாய் மானியமாகக் கொடுக்கப்
கடன் வழங்க முடியும். பைலாவைப் பொறுத்தவரையில் எவ்வளவு கடன்
படுகிறது. நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த
கொடுக்கவேண்டும் என்று முடியும். அதிகப்படியாகக் கடன்
அளவுக்குத்தான் கொடுக்க உச்சக்கட்ட கடன் பெற
வழங்குவதற்காகத்தான் அதாவது என்பதற்காகத்தான், அரசு கொடுக்
கின்ற 100 ரூபாயோடு சேர்ந்து அவர்கள் 250 ரூபாய் கொடுத்
தால், ஆக மொத்தம் 350 ரூபாய் பங்குத் தொகையாகக்
கொடுக்கப்பட்டால் அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கூறுகின்ற அளவுக்கு அந்தக் கடனை அவர்கள் பெற
முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 ஏப்ரல் 5

திரு. க. சோலைராசு : பேரவைத் தலைவர் அவர்களே, கிராம கூட்டுறவுச் சங்கங்களில் இணைய முடியாத அளவில் இருக்கிற நகரத்தில் வாழ்கின்ற, அல்லல்படுகின்ற ஆதிதிராவிட மக்களுக்கு நகர கூட்டுறவு வங்கிகளின் மூலம் அவர்கள் தொழில் புரிய வசதி செய்து கொடுக்கின்ற வகையில் உதவிக்கடன் தர அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து நல்ல கருத்து. அரசு அதை ஆய்ந்து பார்த்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவர் அவர்களே, short term loanஎன்ற அடிப்படையில் ஆதிதிராவிட மக்களுக்கு 200 ரூபாயிலிருந்து 500 வரையில் கொடுக்கப்பட்ட கடனை அவர்களால் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் அவர்கள் கடன்பெறத் தகுதியில்லாமல் இருக்கிறார்கள். அதைத் தவிர்க்கின்ற வகையில் அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளுபடி என்ற வார்த்தையை எல்லோரும் தான் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதைத் தள்ளுபடி செய்ய முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. கு. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கிராம கூட்டுறவுச் சங்கங்களில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாகச் சேர்வதற்குக் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கிறது. அப்படி என்றால் அதைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டணம் என்பது எல்லோருக்கும் ஒன்றுதான். அதைக் குறைக்க முடியுமா என்பதைப் பொறுத்த வரையில் நடைமுறையில் பார்த்துத்தான் செய்ய முடியும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருந்தகையார் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உச்ச அளவாக 3,000 ரூபாய் பெற வசதி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை மேலும் அதிகப்படுத்துகிற வகையில் அரசு ஆணை பிறப்பிக்கிற வாய்ப்பு உருவாகுமா என்பதை அமைச்சர் பெருந்தகையார் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 5]

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3,000 அல்ல, 5,000 அல்ல 7,000 வரையில் அவர்கள் வாங்கலாம். வாங்குகின்ற அந்த தகுதி இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். பயிர் கடன் தான் கொடுத்திருக்கிறோம். நிலத்தைப் பொறுத்து, பயிர் செய்கிற அந்தப் பயிரைப் பொறுத்தும் தான் கூட்டுறவு விவசாயச் சங்கங்களில் கடனை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு சம்பந்தப்பட்ட கேள்வியாக இருப்பதால், துணை கேள்வி கேட்க என்னை அனுமதித்திருக்கிறீர்கள். நன்றி. மிக அதிகமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட என்னுடைய மதுராந்தகம் தொகுதியில், இந்தக் கூட்டுறவுக் கடனுக்காக வீடு வீடாகச் சென்று ஜப்தி செய்கிறார்கள். ஜப்தி செய்கிற அளவுக்கு இப்போது நல்ல நேரம் இல்லை. ஆகவே அந்த ஜப்தியை நிறுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜப்தி சம்பந்தமாக தனியாகக் கேள்வி கேட்டால் அதிலே பதில் சொல்வதற்கு சுலபமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### தாதன்குளத்தில் தேசிய நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுதல்.

1—

வினா 799—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் தாதன்குளத்தில் தேசிய நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் நாற்பது பேருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டிக் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

## சரபங்கா ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

2—

வினா 1064—திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் காடையாம் பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சரபங்கா ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

விடை —

தற்போது சரபங்கா ஆற்றின் குறுக்கே காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அணை கட்டும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.

## நவீன அரிசி ஆலைகள்.

3—

வினா 2101—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் தற்போது எங்கெங்கு நவீன அரிசி ஆலைகள் உள்ளன ?

(ஆ) மேலும் சென்னையில் புதிய நவீன அரிசி ஆலை ஒன்று துவங்கப்பட வேண்டும் என்று அரசு கருதியுள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?



விடை—

(அ) தனியார், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மற்றும் இந்திய உணவுக் கழகம் மூலம் கீழ்க்கண்ட ம்ாவட்டங் களில் தற்போது நவீனப்படுத்தப்பட்ட அரிசி ஆலைகள் செயல் படுகின்றன :—

| வரிசை எண் மற்றும் மாவட்டம். | தனியார் அரிசி ஆலைகளின் எண்ணிக்கை. | தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலம் செயல்படுகின்ற நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை. | இந்திய உணவுக் கழகம் மூலம் செயல்படுகின்ற நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. செங்கல்பட்டு | 278 | 1 | .. |
| 2. வட ஆற்காடு | 41 | 1 | .. |
| 3. தென் ஆற்காடு | 200 | 1 | 1 |
| 4. தர்மபுரி | 24 | .. | .. |
| 5. சேலம் | 434 | .. | .. |
| 6. பெரியார் | 213 | .. | .. |
| 7. கோயம்புத்தூர் | 169 | 1 | .. |
| 8. நீலகிரி | 2 | .. | .. |
| 9. திருச்சி | 256 | 1 | .. |
| 10. புதுக்கோட்டை | 132 | .. | .. |
| 11. தஞ்சாவூர் | 139 | 6 | 3 |
| 12. மதுரை | 290 | 1 | .. |
| 13. இராமநாதபுரம் | 69 | .. | .. |
| 14. திருநெல்வேலி | 120 | 1 | .. |
| 15. கன்னியாகுமரி | 10 | .. | .. |
| 16. சென்னை | 23 | .. | .. |
| மொத்தம் .. | 2,400 | 13 | 4 |
| ஆக மொத்தம் .. | 2,417 | | |

(ஆ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்துத் தீவுகள் கட்டுதல்.

4— வினா 2117—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விமான நிலையத்திலிருந்து அண்ணா சாலை வரை சாலையின் நடுவில் போக்குவரத்துத் தீவுகள் (டிராபிக் அய்லாண்டு) கட்ட வேண்டுமென்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

விடை--

(அ) மேற்கூறிய செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

தஞ்சை மாவட்டத்தில் கயிறு தொழிற்சாலை பயிற்சி நிலையம்.

5— வினா 2422—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், கீழ கபிஸ்தலம் ஊராட்சி மன்றத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கயிறு தொழிற்சாலை பயிற்சி நிலையம் துவங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திருவில்லிப்புத்தூரில் நீதிமன்றக் கட்டிடங்கள் மற்றும் அலுவலர் குடியிருப்புகள்.

6— வினா 2548—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூரில் நீதிமன்றக் கட்டிடங்கள், நீதித் துறை அலுவலர் குடியிருப்பு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?



விடை —

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிப்புத்தூரில் நீதிமன்றக் கட்டிடங்கள் மற்றும் நீதித் துறை அலுவலர் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்காக திருவில்லிப்புத்தூர் வட்டம், படிக்காசுவைத்தான்பட்டி கிராமத்திலுள்ள புல எண் 45–ல் நிலம் கையகப்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது. நிலம் கையகப்படுத்திய பின்னர் நீதிமன்றக் கட்டிடங்கள் மற்றும் நீதித்துறை அலுவலர் குடியிருப்புகள் அங்கு கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

கீழ்பவானி பாசன வாய்க்கால் கரைகளுக்கு சிமெண்ட் போடும் திட்டம்.

7— வினா 2743—திரு. பொ. உத்திராபதி மற்றும் திரு. கு.சுப்பராயன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் பவானிக்கு தண்ணீர் பாசன வாய்க்காலின் இரு கரைகளிலும் சிமெண்ட் போடுகிற திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

பிற்பட்டோர் நலனுக்கென ஒதுக்கப்பட்ட தொகை.

8— வினா 2951—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1983–84, 1984–85 ஆண்டுகளுக்காக மாவட்ட வாரியாக பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென ஒதுக்கப் பெற்றத் தொகை எவ்வளவு ?

(ஆ) அவை என்னென்ன வகைகளில் செலவழிக்கப்பட்டன?

விடை—

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளுக்காக மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண்ணும் மாவட்டமும். | 1983–84-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை. | 1984–85-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்ககம். | 1,39.28 | 1,33.91 |
| 2. சென்னை மாவட்டம் | 16.88 | 16.31 |
| 3. செங்கல்பட்டு மாவட்டம் | 25.99 | 30.00 |
| 4. வட ஆற்காடு மாவட்டம் | 42.89 | 41.51 |
| 5. தென்னாற்காடு மாவட்டம் | 43.57 | 48.83 |
| 6. தஞ்சாவூர் மாவட்டம் | 55.41 | 62.06 |
| 7. திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 52.80 | 60.34 |
| 8. புதுக்கோட்டை மாவட்டம் | 23.68 | 28.75 |
| 9. மதுரை மாவட்டம் | 89.80 | 95.55 |
| 10. தனித்துணை ஆட்சியாளர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை. | 2,32.15 | 2,46.90 |
| 11. இராமநாதபுரம் மாவட்டம் | 78.07 | 82.31 |
| 12. திருநெல்வேலி மாவட்டம் | 59.70 | 64.33 |
| 13. கன்னியாகுமரி மாவட்டம் | 20.76 | 23.90 |
| 14. நீலகிரி மாவட்டம் | 8.91 | 11.71 |
| 15. கோயம்புத்தூர் மாவட்டம் | 50.64 | 55.40 |
| 16. பெரியார் மாவட்டம் | 23.06 | 27.55 |
| 17. சேலம் மாவட்டம் | 39.39 | 44.48 |
| 18. தர்மபுரி மாவட்டம் | 19.23 | 24.81 |
| | 10,22.27 | 10,98.65 |



(ஆ) மேற்கண்டவாறு ஒதுக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட வகைகளில் செலவிடப்பட்டது :

1. உதவித்தொகை
2. பள்ளிகள் பராமரிப்பு
3. மதிய உணவு
4. புத்தகம் மற்றும் உடை
5. உணவு மானியம்
6. விடுதிகள் பராமரிப்பு
7. பல்கலைக் கழகத்திற்கு மானியம்
8. ஆசிரியர்களுக்கு வீடுகள்
9. விவசாயம்
10. தொழிற் பயிற்சி
11. இலவசக் கருவிகள்
12. குடிநீர்
13. சலவைத் துறை
14. ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். தனிப்பயிற்சி நிலையம்
15. சர்மரபினர் இனத்தவருக்கு வீடுகள்
16. வீட்டு மனைப் பட்டா வழங்க நில ஆர்ஜிதம்
17. சிறப்புப் பயிற்சி
18. பட்டயர் கணக்கர் படிப்பு
19. சிறந்த மாணவர்களுக்குப் பரிசு
20. விடுதிகள் கட்டுதல் (சில்லறை வேலைகள்)
21. பயிற்சியாளர்களுக்கு விடுதிகள்
22. சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி
23. நெறிப் படுத்துதல் மற்றும் நிர்வாகம்

### திண்டுக்கல் நகராட்சிக்குட்பட்ட சாலைகளில் உள்ள பாலங்கள்;

9— வினா 3088—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகராட்சிக்குட்பட்ட சாலைகளில் உள்ள மோசமான பாலங்களை பழுது பார்க்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

ஆம். குடிசைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 11 பாலங்களும், முழுக் கடன் திட்டத்தின்கீழ் 11 பாலங்களும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 17 பாலங்களும், நகராட்சி நிதியிலிருந்து இரண்டு பாலங்களும், ஆக மொத்தம் 41 பாலங்கள் திண்டுக்கல் நகரில் 1983–84 முதல் 1985–86 வரை கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. மேலும், குடிசைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 7 பாலங்கள் கட்டும் பணிகள் நடைமுறையில் உள்ளன.

## செருப்பு தைக்கும் தொழிலாளர் மேம்பாட்டிற்கான தனித் திட்டம்.

10— வினா 3090—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செருப்பு தைக்கும் தொழிலாளர்கள் வாழ்வை மேம்படுத்த அரசு தனித் திட்டம் ஏதும் வகுக்க உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இந்து ஆதி திராவிடர்களான செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்தின் மூலம் பெட்டிக் கடைகள் (Cobbler Bunks) வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 1982-83 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது. இது தவிர, முற்றிலும் அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ) தமிழ்நாட்டில் காலணிகள் தயாரிக்கும் தொழிலாளர்களின் வாழ்வு மேம்பாட்டுக்காக கீழ்க்கண்ட திட்டங்களை வகுத்துள்ளது :—

(1) கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் காலணிகளை நியாயமான விலைக்கு வாங்கி டால்கோ விற்பனை செய்யும் டால்கோவின் தேவைக்கு வேண்டிய அளவு வாங்குவதற்காக கைவினைஞர்கள் இந்த நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளப்படுவர்.

(2) மூலப் பொருட்கள் வங்கி ஏற்படுத்தி கைவினைஞர்களுக்கு நியாயமான விலையில் தரமான மூலப் பொருட்கள் வழங்கப்படும்.



(3) பெண்களுக்காக தொழில் பயிற்சி நிலையம் நிறுவப்படும். இந்நிறுவனத்தில் ஆதி திராவிடர் பெண்களுக்கு பலவித தோல் பொருட்கள் உற்பத்தி செய்வதில் 9 மாத காலத்திற்கு பயிற்சி கொடுக்கப்படும். மாதம் ரூ. 150 உதவித் தொகையும் பயிற்சி காலத்தில் அளிக்கப்படும்.

(4) பொது நோக்கு சேவை மையங்கள் அமைத்து இவற்றின் மூலம் காலணி உற்பத்தி செய்யும் கைவினைஞர்கள் நூதன இயந்திரங்களை உபயோகித்து உற்பத்தியைப் பெருக்கி அதிக ஊதியம் பெற வழி வகை செய்யப்படும்.

## மேற்குத் தொடர்ச்சி மலை அடிவார காடுகளிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்.

11— வினா 3093— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், வத்திராயிருப்பு, கான்சாபுரம், தேவதானம் காடுகளில் உள்ள மரங்களை கள்ளத்தனமாக வெட்டுவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

1984-ம் வருடத்தில் திருட்டு வெட்டுகளும், சைக்கிள், தலைச் சுமைகள் மூலமாக மரங்கள் திருட்டுத்தனமாக கடத்தப்படுவதாகவும் புகார் மனுக்கள் கிடைக்கப்பெற்றதன் பேரில் புகார் மனுக்களை மதுரை வனப் பாதுகாப்புக் குழு உதவி வனப் பாதுகாவலருக்கும், இராமநாதபுரம் மாவட்ட வன அலுவலருக்கும் விசாரணைக்கும், தணிக்கைக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. புகார் மனுக்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதுடன், கொடைக்கானல் உதவி வனப் பாதுகாவலர் தலைமையில் தனிக் குழு அமைத்து, சரகர் மற்றும் வனச் சிப்பந்திகள் உதவியுடன் விரிவாக தணிக்கை செய்து காட்டில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களுக்கு பட்டியல் எடுக்குமாறு மதுரை மண்டல வனப் பாதுகாவலரால் அறிவுறுத்தப்பட்டது. மேலும், இது சம்பந்தமாக மதுரை வனப் பாதுகாப்புக் குழு உதவி வனப் பாதுகாவலர், இராமநாதபுரம் மாவட்ட வன அலுவலர், கொடைக்கானல் உதவி வனப்பாதுகாவலர் ஆகியோர் தனித்தனியே வனச் சிப்பந்திகளுடன் சென்று,

இடங்களைத் தணிக்கை செய்து, வெட்டுமோட்டுகள் பற்றிய விபரம் கணக்கெடுத்துள்ளனர். இக்கள்ள மரவெட்டிற்கு நான்கு சரக அலுவலர்கள், ஆறு வனவர்கள், ஆறு வனக்காப்பாளர்கள், ஏழு வனக்காவலாளிகள் காரணமானவர்கள். இவர்களில் ஒரு வனக் காப்பாளர், ஒரு வனக்காவலாளி, தற்காலிக பணிநீக்கத்தில் வைக்கப்பட்டு குற்றத்தாள் பிறப்பித்து, அரசு பணியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனர். மற்ற சரகர்கள், சிப்பந்திகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து குற்றத்தாள்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வெட்டு மோட்டுகள் 4 பீட்டுகளில் பல இடங்களில் கணக்கிடப் பட்டுள்ளது. மேலும், இப்பகுதிகளில் வனக் குற்றங்கள் நிகழா வண்ணம் தடுக்கவும், வனப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தவும் மதுரை வனப் பாதுகாப்பு உதவி வனப் பாதுகாவலரை 15 தினங்களுக்கு ஒரு முறை மேற் குறித்த பகுதிகளைத் தணிக்கை செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு மாதமும் இராமநாதபுரம் மாவட்ட வன அலுவலரால் தணிக்குழு அமைக்கப்பட்டு இராஜபாளையம் சரக காப்புக் காடுகளில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மேட்டுப்பட்டி புத்தூர் சாலையில் பாலங்கள் கட்டும் பணி.

12— வினா 3327—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் மேட்டுப்பட்டியிலிருந்து புத்தூர் செல்லும் பாதையில் இரண்டு பாலங்கள் கட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டும் பணி தொடங்க காலதாமதம் ஆவது ஏன்?

(ஆ) பணி எப்போது தொடங்கப்பெறும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிட்டுள்ள மேட்டுப் பட்டியிலிருந்து புத்தூர் செல்லும் சாலையானது, கொல்லம்பட்டி. புத்தூர் சாலை கி. மீ. 0/0—6/4 எனப்படும் ஒன்றிய சாலையாகும். இச்சாலையில் பாலம் கட்டவேண்டிய இடங்கள் அனைத்துக்கும், கடந்த தன்னிறைவு திட்டத்தின் கீழ் பாலங்கள் கட்டி முடிக்கப் பட்டு விட்டன. மதிப்பீடுகள் தயாரிக்கும் வேலை துவக்கப்படாத நிலையில் இச்சாலையில் தற்போது எந்தவித வேலையும் இல்லை.



13—

நீதிமன்ற அதிகார வரம்பு தொடர்புடைய சட்டங்கள் திருத்தப்படல்

வினா 3331—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிவில் நீதிமன்றங்களின் பணமதிப்பு அதிகார வரம்பு உயர்த்தப்பட்டதன் காரணமாக நீதிமன்ற அதிகார வரம்பு தொடர்புடைய மற்றைய சட்டங்கள் திருத்தப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திருத்தப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் திருத்தப் படும்.

பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மைய அரசு உதவி.

14—வினா 3339—மாண்புமிகு திரு.வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் (Command Area Development Programme) மைய அரசு 1974-ம் ஆண்டு முதல் கொடுத்த உதவித் தொகை எவ்வளவு? (ஆண்டு வாரியாக).

(ஆ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் மைய அரசு அந்த திட்டத்திற்கு தொகை வழங்காததன் காரணம் என்ன?

விடை—

பாசன பகுதி மேம்பாட்டுத் திட்டமானது 1974-75 முதல் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1974-75 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்ட பணிகளுக்கான செலவினத்திற்கு மைய அரசு 1980-81-ல் மைய அரசு நிதி அதில் மானியமாக ரூ. 38.34 லட்சம் வழங்க ஒப்பளித்தது. இக்காரணத்தினால், ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் பாசனப் பகுதி மேம்பாடு திட்டத்திற்கு மைய அரசு நிதியுதவி அளிக்கவில்லை என்று பிரச்சினை எழவில்லை.

பாசனப்பகுதி மேம்பாடு திட்டத்திற்கான 1974-75 ஆம் ஆண்டு முதல் 1984-85 வரை மைய அரசு வழங்கிய நிதி உதவியும் செய்த செலவினமும் பற்றிய விவரங்கள் கீழே தரப் பட்டுள்ளன:—

மைய அரசின் நிதியுதவியும் செலவினமும்—

| | | 1974–75 நிதியுதவி செலவு. | 1975–76 நிதியுதவி செலவு. | 1976–7. நிதியுதவி செலவு. |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| மானியம் | .. | 1.813 | 1.817 | 1.954 |
| கடன் | .. | 10.704 | 7.152 | 9.045 |
| மொத்தம் | .. | 12.517 | 8.969 | 10.999 |

| | | 1977–78 நிதியுதவி செலவு. | 1978–79 நிதியுதவி செலவு. | 1979–80 நிதியுதவி செலவு. |
|---|---|---|---|---|
| மானியம் | .. | 2.503 | 4.106 | 7.671 |
| கடன் | .. | 7.828 | 11.371 | 2.929 |
| மொத்தம் | .. | 10.331 | 15.477 | 10.600 |

1980–81

| | | | நிதியுதவி. | செலவு. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சக் கணக்கில்.) | |
| மானியம் | .. | .. | 38.34 | 29.593 |
| கடன் | .. | .. | 55.32 | 53.239 |
| மொத்தம் | .. | .. | 93.66 | 82.832 |



1981–82.

| | | | நிதியுதவி. | செலவு. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சக்கணக்கில்.) | |
| மானியம் | .. | .. | 10.63 | 19.74 |
| கடன் | .. | .. | 6.79 | 5.64 |
| | | | | 30.40 |
| மொத்தம் | .. | .. | 17.42 | 25.38 |
| | | | | 30.40 |

1982–83

| | | | நிதியுதவி | செலவு |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சக்கணக்கில்.) | |
| மானியம் | — | — | 81.45 | 49.70 |
| கடன் | — | .. | 24.83 | 18.67 |
| | | — | 47.17 | 16.79 |
| மொத்தம் | — | — | 106.26 | 68.37 |
| | | | 47.17 | 16.79 |

1983–84

| | | | நிதியுதவி. | செலவு. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சக்கணக்கில்.) | |
| மானியம் | .. | .. | 84.56 | 116.45 |
| கடன் | .. | .. | 49.39 | 63.00 |
| மொத்தம் | .. | .. | 133.95 | 179.45 |

1984–85

| | | | நிதியுதவி. | செலவு. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சக்கணக்கில்.) | |
| மானியம் | .. | .. | 271.56 | 182.70 |
| கடன் | .. | .. | 29.67 | 117.09 |
| மொத்தம் | .. | .. | 301.23 | 299.79 |

## சென்னையிலுள்ள ஆதி ஆந்திரர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்கள்

15—வினா 3531 : திரு.சோ. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஆணை எண் 2160 (வருவாய்) யின்படி சென்னை நகரத்தில் உள்ள ஆதி ஆந்திரர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனை பட்டாக்களின் எண்ணிக்கை

(ஆ) வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள பட்டாக்களின் எண்ணிக்கை மற்றும் தாமதத்திற்கான காரணம்

(இ) புல்லாரெட்டிபுரத்தில் உள்ள ஆதி ஆந்திரர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை

(ஈ) வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள பட்டாக்களின் எண்ணிக்கை மற்றும் தாமதத்திற்கான காரணம்?

விடை—

(அ) அரசு ஆணை நிலை எண் 2160 வருவாய் நாள் 21–10–76 இன்படி சென்னை நகரில் இதுவரை 1267 ஆதி ஆந்திரர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) சென்னை மாவட்டத்திலுள்ள 2237 ஆக்கிரமணவ தாரர்களில் 970 நபர்களுக்கு பட்டா வழங்காமல் நிலுவையில் உள்ளது. அவர்கள் நிலக்கிரயத்தில் 25 விழுக்காடு முன்னதாக செலுத்தாததும், 83 நபர்கள் வசிக்கும் இடம், இன்னமும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினரால் உரிமை துறக்கப்படாமல் உள்ளதும் காரணங்களாகும்.

(இ) புல்லாரெட்டிபுரத்தில் ஆக்கிரமணம் செய்துள்ள 279 ஆதி ஆந்திர குடும்பங்களில், 98 ஆதி ஆந்திரர்களுக்கு இது வரை பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) நிலக்கிரயத்தில் 25 விழுக்காடு முதலில் செலுத்த யாரும் முன்வராத காரணத்தால், மீதமுள்ள 181 நபர்களுக்கு இன்னமும் பட்டா வழங்கப்படவில்லை. இவர்களில் 64 ஆதி ஆந்திரர்கள் தற்போது முன்பணத்தை செலுத்திவிட்டதால், இவர்களுக்கு விரைவில் மனைப்பட்டா வழங்கப்படும்.





## கருங்கல் பகுதியில் புதிய நீதிமன்றங்கள்.

16—வினா 3643 டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகாவில் உள்ள கருங்கல் பகுதியில் மாவட்ட முன்சீப் நீதிமன்றமும் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றமும் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

இல்லை.

## கும்பகோணம் தாலுக்காவில் பட்டு கைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கான நிலுவை

17—வினா 3703 திரு.கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஆயத் தீர்வை கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தாலுக்காவில் உள்ள பட்டு, கைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு செலுத்தவேண்டிய தள்ளுபடித் தொகை எவ்வளவு?

(ஆ) துணி வாங்கிய வகையில் அரசால் செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வளவு?

விடை—

(அ) கும்பகோணம் தாலுக்காவிலுள்ள பட்டு கைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கு அக்டோபர் 1985 முடிய கொடுக்க வேண்டிய தள்ளுபடி தொகை ரூ. 122.68 இலட்சமாகும்.

(ஆ) துணிகள் வாங்கிய வகையில் மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கத்தால் செப்டம்பர் 1985 முடிய செலுத்தப்பட வேண்டிய தொகை பாக்கி ரூ. 49.76 இலட்சமாகும்.

வீரகனூர் அரசு மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டிடம்

வினா 3968 திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வீரகனூர் அரசினர் மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டிடம் இல்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

நெல்லிக்குப்பம் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம்.

19—வினா 4018 திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு போதிய இடவசதியும், கழிப்பிட வசதியும் இல்லையென்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) அண்மையில் இப்பொருள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) இப்பள்ளிக்கு இவ்வாண்டின் (1985–86) நிதியொதுக்கத்தில் ரூ. 1.50 லட்சம் செலவில் இரு வகுப்பறைகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கழிவறை வசதிகள் குறித்து பள்ளிக் கல்வி இயக்குனர் அளவில் அடுத்த நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



சமூகநலக் காடுகள் திட்டம்

20—வினா 4050 திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

''சமூகநலக் காடுகள் திட்டம்'' எத்தனை ஏக்கர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது?

விடை—

சமூகநலக் காடுகள் திட்டம் 1981–82 முதல் 1984-85 வரை சமநிலை புறம்போக்கு மரத்தோட்டங்களில் (Blockplanting) 2,98,210 ஏக்கர் பரப்பிலும் தொடர் தோட்டங்களில் (Strip planting) 18,159 ஏக்கர் பரப்பிலும் செயல்பட்டதுடன் தனியார் நிலங்களில் 1,24,683 ஏக்கர் பரப்பிலும் நடுவதற்கு மரக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மேலூரில் விரைவுப் பேருந்து பயணச் சீட்டு பதிவு அலுவலகம்.

21—வினா 4271 திரு. க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூர் மற்றும் கொட்டாம்பட்டியில் இருந்து சென்னைக்குச் செல்லத் திருவள்ளுவர் கழகப் பேருந்துக்கு ரிசர்வேஷன் செய்ய அலுவலகம் ஒன்றை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

செல்லங்குப்பம்-திருவண்ணாமலைக்கு நகரப் பேருந்துப் பணி

22—வினா 4293 திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செல்லங்குப்பம்—திருவண்ணாமலை நகரப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) செல்லங்குப்பத்திலிருந்து திருவண்ணாமலைக்கு நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திருவண்ணாமலை நீலாந்தாங்கலுக்கு நகரப் பேருந்துப் பணி.

23—வினா 4294 திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை தாலுக்காவில் திருவண்ணாமலை—நீலாந்தாங்கல் நகரப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) திருவண்ணாமலை வட்டத்தில் திருவண்ணாமலையிலிருந்து நீலாந்தாங்கல் நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

பிள்ளையார்புரத்தில் வீட்டு மனைகள் பட்டா ஒப்படை.

24—வினா 4319 திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி குறிச்சி பேரூராட்சி பிள்ளையார் புரத்தில் (க.ச. எண் 4/1) குடியிருந்து வரும் ஏழை மக்களுக்கு அந்த இடங்களுக்கு பட்டா வழங்க அரசு செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?



விடை—

(அ) மற்றும் (ஆ): ஆம். கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம், பேரூர் உள்வட்டம், குறிச்சி கிராமம், பிள்ளையார்புரம், புல. எண் 4/1-ல் உள்ள 133.86 ஏக்கர் பரப்பளவுள்ள ''கரடு புறம்போக்கு'' நிலத்தில், ஆக்கிரமித்து குடியிருந்துவரும் 106 குடும்பங்களில் தகுதி பெற்ற ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு ஏதுவாக நிலமாற்ற முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை பெறப்பட்டவுடன் நிலமாற்றம் செய்து பட்டாக்கள் வழங்கப்படும்.

மதுரை மருத்துவக் கல்லூரி சிறப்புப் பிரிவுகளுக்கு தனி கட்டிடங்கள்.

25—வினா 4395—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு பிரிவுகளுக்கு என தனிக்கட்டிடங்கள் ஏற்படுத்த அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கடையநல்லூரில் தண்ணிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டப் பணிகள்.

26—வினா 4415—திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கடையநல்லூர் நகராட்சிக்கு இரண்டாவது கட்டப்பணிகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது?

விடை—

ரூ. 16.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள்.

27—வினா 4476—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் எத்தனை வீடுகள் புதிதாக கட்டப்பட்டுள்ளன?

(ஆ) நடப்பு ஆண்டில் (1985-86) புதிதாக எத்தனை வீடுகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் 1984-85-ம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இரண்டு கட்டங்களாக 480 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதில் 440 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு அதில் ஆதிதிராவிடர்களும், பழங்குடியினரும் குடியேறியுள்ளனர். இனி 40 வீடுகள் கட்டி முடிக்கப்பட உள்ளன.

(ஆ) நடப்பு ஆண்டில் (1985–86ல்) நீலகிரி மாவட்டத்திற்கு பழங்குடியினருக்கு 145 வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூடலூர் வட்டத்திலுள்ள நெடுஞ்சாலைகள்.

28—வினா 4480—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் வட்டத்திலுள்ள நெடுஞ்சாலைகளின் நீளம் எத்தனை?

(ஆ) அவைகளை செப்பனிட நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?



விடை—

(அ) கூடலூர் வட்டத்திலுள்ள நெடுஞ்சாலைகளின் நீளம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| மாநில சாலைகள் | .. .. | 82.50 கி.மீ. |
| மாவட்ட சாலைகள் | .. .. | 27.40 கி.மீ. |
| இதர மாவட்ட சாலைகள் | .. | 111.00 கி.மீ. |

(ஆ) சாலைகளைச் செப்பனிட 1985-86-ம் ஆண்டிற்கான வருட நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:—

(ரூ. லட்சத்தில்)

| | | |
|---|---|---|
| மாநில சாலைகள் | .. .. | 14.145 |
| மாவட்ட சாலைகள் | .. .. | 7.15 |
| இதர மாவட்ட சாலைகள் | .. .. | 15 15 |

மாவட்டச் சாலைகளை இருவழிப் பாதைகளாக்கல்.

29—வினா 4489—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாவட்டங்களில் நீளமான (MDR) சாலைகளில் ஒரு வழிப் பாதையாக உள்ளவைகளை இருவழிப் பாதையாக மாற்றும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

விடை—

அரசின் நிதிநிலைக்கேற்ப ஒருதடப் பாதையாக உள்ள சாலைகள், இருதடப் பாதையாக சிறுகச் சிறுக விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

எழும்பூர் மருத்துவ மேல்படிப்பு மாணவர் விடுதி

30—வினா 4494—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனை, மருத்துவ மேல்படிப்பு மாணவர் விடுதியில் எத்தனை அறைகள் உள்ளன?

[1986 ஏப்ரல் 5

(ஆ) புதிதாக விடுதிக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

விடை—

(அ) எட்டு அறைகள் உள்ளன.

(ஆ) இல்லை.

## தமிழ்நாட்டில் நெல் உற்பத்திக்காகும் செலவு.

31—வினா 4535—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நெல்லிற்கு உற்பத்திச் செலவு ஏக்கருக்கு எவ்வளவு என்று கணக்கிடப்பட்டுள்ளதா?

(ஆ) தஞ்சையில் செலவு வேறுபாடு உண்டா?

விடை—

(அ) ஆம். குளம் மற்றும் ஆற்றுப் பாசனத்தில் ஏக்கருக்கு ரூ. 1,500 என்றும், இறைவைப் பாசனத்தில் ஏக்கருக்கு ரூ. 1,800 என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) ரூ. 1,723.00 ஏக்கருக்கு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## பட்டுக்கோட்டையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் விடுதி.

32—வினா 4760—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் விடுதி ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1986 ஏப்ரல் 5]

விடை—

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் விடுதி திறப்பதற்கு 1985 ஆகஸ்டு திங்களில் அரசால் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் அவர்களால் தகுந்த இடம் தேடப்பட்டு வருகிறது. தகுந்த இடம் கிடைக்கப் பெற்றதும், விடுதி உடனடியாக திறக்கப்படும்.

## அரசு மானியம் பெறும் குருடர், செவிடர்களுக்கான பள்ளிகள்.

33—வினா 4942—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மானியம் பெறும் குருடர், செவிடர்களுக்கான பள்ளிகள் மாநிலத்தில் எத்தனை உள்ளன? மாவட்ட வாரியாக

விடை—

அரசு மானியம் பெறும் பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோர்களுக்காக இருபது பள்ளிகள் இம்மாநிலத்தில் உள்ளன. இவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அரசு மானியம் பெறும் பார்வையற்றோர்/காது கேளாதோர் பள்ளிகள்:—

| மாவட்டம். | பார்வையற்றோர் பள்ளிகள். | காது கேளாதோர் பள்ளிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சென்னை மாவட்டம் | 2 | 3 |
| 2. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் | 1 | 1 |
| 3. திருநெல்வேலி மாவட்டம் | 1 | 3 |
| 4. கன்னியாகுமரி மாவட்டம் | 1 | 1 |
| 5. வடாற்காடு மாவட்டம் | 2 | 1 |
| 6. தர்மபுரி மாவட்டம் | 1 | — |
| 7. மதுரை மாவட்டம் | 1 | 1 |
| 8. திருச்சிராப்பள்ளி மாவட்டம் | — | 1 |
| மொத்தம் .. | 9 | 11 |

மேலூர் தொகுதி பால் உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்து பால் எடுத்துச் செல்ல வாகன வசதி.

34—வினா 5006—திரு. க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய கிராமங்களில் உள்ள பால் உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்து மதுரை பால் திட்டத்திற்கு பால் எடுத்துச் செல்ல வாகன வசதிகள் நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் வாகன வசதிகள் (லாரிகள்) செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) உண்மையல்ல, வாகன வசதிகள் மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

கடையநல்லூர் பகுதியில் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலை.

35—வினா 5039—திரு. தெ.பெருமாள்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கடையநல்லூர் பகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம்.

குண்டவெளி பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக்கல்.

36—வினா 5068—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்கா, குண்டவெளி பஞ்சாயத்தின் வருவாய் எவ்வளவு?



(ஆ) அதை நகரப் பஞ்சாயத்தாக மாற்றும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

விடை—

(அ) குண்டவெளி ஊராட்சியின் ஆண்டு சராசரி வருமானம் ரூ. 33,000 ஆகும்.

(ஆ) இதனை நகரப் பஞ்சாயத்தாக மாற்றினால் உத்தேச ஆண்டு நிர்வாக செலவினம் மட்டும் ரூ. 50,000 ஆகும். அதனால் இப்பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக உயர்த்த இயலாது எனவும், எனவே இதனை அரசுக்குப் பரிந்துரை செய்ய இயலாது எனவும், 20-8 1985 இல் நடைபெற்ற திருச்சி வடக்கு மாவட்ட வளர்ச்சி மன்றம் முடிவு எடுத்துள்ளது.

மேச்சேரி—மரக்கோட்டை சாலைத் திட்டம்.

37—வினா 5166—திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி மரக்கோட்டை சாலைத் திட்டத்தை ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதற்கான மொத்த மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி—மரக் கோட்டை சாலை கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் (ஊரக வேலை வாய்ப்பு உறுதி யளிப்புத் திட்டம்) 1985-86-ம் ஆண்டில் எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு.வி.க. சாலையிலுள்ள சிறு பாலம்.

38—வினா 5206—திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்குன்றம் வழியாக நெல்லூர் செல்லும் திரு.வி.க. சாலையில் உள்ள கல்வெர்ட் உடைந்து இருபக்கத்திலும் சாக்கடை தண்ணீர் தேங்கி துர்நாற்றம் வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த கல்வெர்ட்டுகளை சரிசெய்து சாக்கடை தண்ணீரை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சிறுபாலம் பழுதடைந்ததால் தண்ணீர் வேகமாக போகாத நிலை ஏற்பட்டது. இந்த இடத்தில் தண்ணீர் வடிகுழாய்கள் பொருத்தப்பட்டு தற்பொழுது தண்ணீர் தேங்காமல் பாலம் சீராக செயல் படுகிறது.

விருத்தாசலத்தில் நீதிமன்றக் கட்டிடங்கள்.

39—வினா 5212—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்தில் சப்–ஜட்ஜ் முன்சீப் கோர்ட்டு ஆகியவைகள் வாடகை கட்டிடத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): ஆம்.

(இ) விருத்தாசலம் சார்பு நீதிமன்றம் மற்றும் முன்சீப் நீதிமன்றம் உள்பட விருத்தாசலத்திலுள்ள எல்லா நீதிமன்றங்களையும் ஒரே கட்டிடத்தில் இயங்குவதற்கு புதியதாகக் கட்டிடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கொள்ளிடம் சோதனைச் சாவடிக்கு நிரந்தரக் கட்டிடம்.

40—வினா 5265—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தின் வடக்கு எல்லையாகிய கொள்ளிடத்தில் சோதனைச் சாவடிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?



விடை—

(அ) இல்லை.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தின் வடக்கு எல்லையாகிய கொள்ளிடத்தில், கொள்ளிடம் (வணிகவரி) சோதனைச் சாவடி, ஆணைக்காரன் சத்திரம் கிராமம் (சீர்காழி தாலுக்கா) என்ற இடத்தில் இயங்கி வந்தது. இது ஒரு சிறு சோதனைச் சாவடி (Minor check post) ஆகும். அரசாணை பல்வகை எண் 818, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள்: 20–7–1981-ன் படி, நீக்கம் செய்யப்பட உத்திரவு வழங்கப்பட்ட 15 சிறு (வணிகவரி) சோதனைச் சாவடிகளில் கொள்ளிடம் (வணிகவரி) சோதனைச் சாவடியும் ஒன்றாகும். அதன்படி, கொள்ளிடம் (வணிகவரி) சோதனைச் சாவடி நீக்கம் செய்யப்பட்டு விட்டது என்றும், எனவே, நிரந்தரக் கட்டிடம் கட்டவேண்டும் என்ற நிலை எழாது.

திருவண்ணாமலை மாவட்டக் கல்வி அலுவலகக் கட்டிடம்.

41—வினா 5656—திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் அமைந்துள்ள டி.இ.ஓ. அலுவலகத்தை அரசு கட்டிடத்திற்கு மாற்றும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை—

திருவண்ணாமலையில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலகத்தை அரசு கட்டிடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால் இம்மாவட்டக் கல்வி அலுவலகத்தை தற்போது நடைபெற்று வரும் கட்டிடத்திலிருந்து புதிதாக வேறொரு தனியார் கட்டிடத்திற்கு மாற்றம் செய்வது சம்பந்தப்பட்ட கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

குடந்தை அரசினர் பெண்கள் கல்லூரிப் பெயர் மாற்றம்.

42-வினா 5690—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடந்தை இந்திராகாந்தி சாலையில் உள்ள அரசினர் பெண்கள் கல்லூரியின் பெயரை ''பாரத தேவி இந்திராகாந்தி அரசினர் பெண்கள் கல்லூரி'' என்று மாற்றிடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரிப் பெயர் மாற்றம்.

43-வினா 5691—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரியின் பெயரை காமராஜர் அரசினர் ஆடவர் கல்லூரி என்று மாற்றிடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

புள்ளியியல் துறையில் உதவி இயக்குநர் பதவிகளை நிரப்புதல்.

44—வினா 5729—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) புள்ளி இயல் துறையில் பல உதவி இயக்குநர் பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இதனால் புள்ளி விவரங்கள் கிடைக்க தாமதம் அடைவது அரசுக்குத் தெரியுமா?

விடை—

(அ) புள்ளி இயல் துறையில் புள்ளி இயல் ஆய்வாளர் பதவியில் முதுநிலை நிர்ணயிக்கப்பட்டிருந்ததை எதிர்த்து சில அலுவலர்கள் உயர்நீதி மன்றத்தில் தடை உத்திரவு பெற்றிருந்தமையால் உதவி இயக்குநர் பதவிக்கான குழு பட்டியல் 1977 ஆம் ஆண்டு முதல் 1983 வரை தயாரிக்க இயலவில்லை. தடை உத்திரவு பெற்றிருந்த வழக்குகளில், வழக்குத் தொடுத்துள்ள அலுவலர்களின் தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்கலாம் என்ற அடிப்படையில் உதவி இயக்குநர் குழுப் பட்டியல் வெளியிடலாம் என்ற உயர்நீதி மன்றத் தீர்ப்பினைச் சார்ந்து உதவி இயர்குநர் பதவிக்குத் தகுதி வாய்ந்த 69 புள்ளி இயல் அலுவலர்கள் அடங்கிய குழுப் பட்டியல் அரசால் அங்கீகரிக்கப்பட்டு அரசாணை நிலை எண். 1170, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்: 16–12–1985-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசு ஆணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள குழுப் பட்டியலின் அடிப்படையில் காலியாக உள்ள உதவி இயக்குநர் பதவிகள் புள்ளி இயல் ஆணையரால் நிரப்பப்பட்டு வருகின்றன.



(ஆ) மேற்காணும் உதவி இயக்குநர் பதவிகள் காலியாக இருந்ததால், அப்பதவிகளின் பணி வேறு அலுவலர்களுக்கு கூடுதல் பொறுப்பாக பகிர்ந்தளிக்கப்பட்டு, அவர்கள் மூலம் அப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் புள்ளி விவரங்கள் சேகரிப்பதில் கூடுமானவரை தாமதம் தவிர்க்கப்பட்டு வந்தன.

சென்னைப் பட்டினப்பாக்கம் பேருந்து நிலையம்.

45—வினா 5733—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

(இ) ஒதுக்கீடு செய்துள்ள தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 18—5—1983 தேதி முதல் செயல்பட்டு வருகின்றது.

(இ) இதுவரை ரூ. 2,36,000 செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூ. 3 லட்சம் இந்நிதி ஆண்டில் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருச்சி—மாவட்டத்தில் புதிய கசிவு நீர் குட்டைகள்.

46—வினா 5781 டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் 1984-85-ல் எத்தனை கசிவு நீர் குட்டைகள் வெட்டப்பட்டன?

விடை—

திருச்சி மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் 162 கசிவு நீர் குட்டைகள் 1984-85-ல் கட்டப்பட்டன.

[1986 ஏப்ரல் 5

திருப்பூர் நகருக்கு தொழிலாளர் அலுவலர்.

வினா 5842—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் ஒரு தொழிலாளர் துறை அலுவலரை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

திருப்பூர் நகரில் ஒரு தொழிலாளர் அலுவலரை நியமிக்கும் அளவுக்கு வேலைப்பளு இல்லை. மேலும், நிலுவையில் வழக்குகள் ஏதும் இல்லை. எனவே, திருப்பூர் நகருக்கென்று தனியாக ஒரு தொழிலாளர் அலுவலரை நியமிக்கும் பிரச்சினை தற்போது எழவில்லை.

நம்பியாம்பாளையம் நீரேற்று நிலையத்திற்கு மின்சாரம் வழங்கல்

48—வினா 5863 திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி, நம்பியம்பாளையத்திலுள்ள நீரேற்று நிலையத்திற்கு மின் சப்ளை அடிக்கடி தடைபடுவது அரசுக்குத் தெரியுமா?

விடை—

அவினாசி தாலுகா, நம்பியாம்பாளையம் நீரேற்று நிலையத்தில் மின் பற்றாக்குறையின் காரணமாக தவிர்க்க இயலாத சூழ்நிலையில் 110 கி.வோ. மின்னூட்டில் மின்னோட்டம் தடை ஏற்பட்டதால் மேற்படி நீரேற்று நிலையத்தில் மின் தடை பட்டது. தற்போது அரசாங்க செலவில் தனி மின்னூட்டியின் மூலம், 1980 மே மாதத்திலிருந்து நம்பியாம்பாளையம் நீரேற்று நிலையத்திற்கு இடையூறு இல்லாமல் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

மோகனூர் சர்க்கரை ஆலைக்கு வரும் கரும்பின் அளவு.

49—வினா 6028—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மோகனூர் சர்க்கரை ஆலைக்கு வருடத்திற்கு எத்தனை டன் கரும்பு அரவைக்கு வருகிறது?

(ஆ) எந்தெந்த பகுதிகளிலிருந்து வருகிறது?



1986 ஏப்ரல் 5]

விடை—

(அ) மோகனூர் சர்க்கரை ஆலைக்கு ஆண்டொன்றுக்கு 4.30 இலட்சம் டன்கள் தேவைப்படும் கரும்பு அரவைக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் வந்த கரும்பின் அளவு:—

| | |
|---|---|
| 1983-84 | 3,61,665 டன்கள். |
| 1984-85 | 3,31,287 டன்கள். |

(ஆ) சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல், ராசிபுரம், சேலம், ஓமலூர், ஆத்தூர் வட்டங்களிலிருந்தும், மற்றும் திருச்சி மாவட்டத்தில் உள்ள முசிறி, துறையூர் வட்டங்களிலிருந்தும் கரும்பு வருகிறது.

வால்பாறை தொகுதியில் மலைவாழ் மாணவர்களுக்கென அரசு பாலிடெக்னிக்.

50—வினா 6031—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் மலைவாழ் மாணவர்களுக்கென அரசு பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

* * * * * *

MR. SPEAKER: I expunge everybody's point of order.

**2. கவன ஈர்ப்புகள்.**

**(அ) பெரியார் மாவட்டத்தில் பல பகுதிகளில் தொழுநோய் பரவி வருவதாகக் கூறப்படுவது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் ஈ.வே.கி.ச. இளங்கோவன், கு. சுப்பராயன், ப.ந. இராமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, "பெரியார் மாவட்டம், பவானி வட்டம், குப்பானபாளையம் கிராமத்திலும், மற்றும் பட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள தனிக்கோட்டை கிராமத்திலும் வேகமாகப் பரவி வரும் தொழு நோயினால் அப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

பவானி வட்டம் குப்பானைபாளையம் கிராமத்திலும் மற்றும் பட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள தனிக்கோட்டை கிராமத்திலும் தொழுநோய் வேகமாக பரவவில்லை. தொழு நோய் எளிதில் பரவக்கூடிய நோயல்ல. பொதுமக்கள் அச்சங் கொள்ள வேண்டியதில்லை.

2. மத்திய அரசின் தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் தொழுநோய் தடுப்புத் திட்டம் அதாவது தொழுநோயாளிகளைக் கண்டுபிடித்தல், சிகிச்சை அளித்தல், மற்றும் இதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிச் சுகாதாரக் கல்வி மூலம் விளக்குதல் ஆகிய வகைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழுநோயாளிகளில் விடுவிக்கப் படும் நிலையில் உள்ள தொழுநோயாளிகளை முதலில் கண்டு பிடித்து அவர்களை விடுவிக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



3. இம்மாநிலத்தில் வருடந்தோறும் 100 இலட்சத்திற்கும் மேலான மக்கள் தொழுநோய் உள்ளதா என அறியும் பொருட்டு பரிசீலிக்கப்படுகிறார்கள். மக்கள் கணக்கெடுப்பும், நோயுள்ளவர் களைக் கண்டுபிடித்தல், அவர்களின் விகித விவரங்கள் 1980 ஆம் ஆண்டிலிருந்து கீழே தரப்பட்டுள்ளது:—

| வருடம் | மக்கள் கணக்கெடுப்பு (இலட்சத்தில்). | நோய் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 1,000-க்கு புதிய நோயாளிகளின் சதவிகிதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1980 | 97.6 | 29,968 | 3.0 |
| 1981 | 105.3 | 25,475 | 2.4 |
| 1982 | 132.38 | 32,866 | 2.4 |
| 1983 | 131.07 | 25,797 | 1.96 |
| 1984 | 139.13 | 24,605 | 1.8 |
| 1985 | 145.51 | 28,821 | 2.0 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து புதிய நோய்கள் குறைந்து வருகிறது என்று புலனாகின்றது.

4. குப்பானை பாளையம் கிராமத்தில் நூறு தொழு நோயாளிகள் உள்ளனர். ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அத்தாணி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பவானி தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்தினரால் மருந்து அளிக்கப்படுகிறது. தனிக் கோட்டை கிராமத்திற்கு, பட்டுக்கோட்டை தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்தினரால் மருந்து அளிக்கப்படுகிறது. இப் பகுதிகளில் தொழுநோய் வேகமாகப் பரவுகிறது என்றோ அல்லது மக்களிடையே அச்சம் நிலவுகிறது என்றோ அரசுக்கு எவ்வித முறையீடும் இதுவரை வரப்பெறவில்லை.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளில் தொழு நோய் வேகமாக பரவவில்லை என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ரெயில் நிலையங்களிலும், பஸ் நிலையங்களிலும், தெருக்களிலும் நூற்றுக்கணக்கான தொழு நோயாளிகள் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் கட்டாயமாக மருத்துவ இல்லங்களுக்கு கொண்டு வந்து தொடர்ச்சி யாக, தீவிரமாக மருத்துவ உதவி அளிப்பதோடு மக்களிடமிருந்து அவர்களைப் பிரித்து வைக்க நடைமுறையை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30).

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பி
இருக்கக்கூடிய பிரச்சனை ஒரு நியாயமான பிரச்சனை. பல்வேறு
இடங்களில் தொழு நோயைப் பயன்படுத்திக் கொண்டு பிச்சைக்
காரர்களாக வந்து, இந்த நோயை ஒரு மூலப் பொருளாக வைத்துக்
கொண்டு, ரயில்வே ஸ்டேசன், இன்னும் பெரிய் பொது இடங்
களிலே எல்லாம் இப்படிப்பட்ட செயல்களில் எல்லாம் சிலர்
ஈடுபடுவதாக—எல்லோரும் இல்லை சிலர் ஈடுபடுவதாக—நமக்குத்
தெரியும். இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, இதற்காக ஒரு
குழுவை ஏற்படுத்தி, பிறகு அந்தப் பொறுப்பை யாரிடத்திலே
ஒப்படைக்கவேண்டும், சோசியல் வெல்பேர் டிபார்ட்மெண்டா,
நல்வாழ்வுத்துறையிடமா, அல்லது உள்துறை இடமா என்று
முடிவு செய்து, பிறகு Director General of Prisons ஆக இருக்கக்
கூடிய அவரிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைத்து இந்த
நோய் பிடித்தவர்கள் எல்லாம் எங்கேயிருக்கிறார்கள் என்று
கண்டுபிடித்து, அவர்களை அழைத்துக்கொண்டு, தொழு
நோயாளிகளுக்காக இருக்கின்ற அந்த மறுவாழ்வு இல்லங்
களுக்கு அழைத்துப் போய், அந்த இடங்களிலே அவர்களை
வைத்து, அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து
கொடுக்கவேண்டும் என்ற ஒரு ஆணையை பிறப்பித்து இருக்
கிறார்கள். இந்த அடிப்படையிலே அண்மையிலேகூட, 15
நாட்களுக்கு முன்பாக எல்லா டிபார்ட்மெண்டிலும் இருக்கக்
கூடிய பொறுப்பான அதிகாரிகளை எல்லாம் அழைத்து இதைப்
பற்றி பேசி முடிவு எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டைத்
தொகுதியில் உள்ள தனிக்கோட்டை கிராமத்தில் இருக்கிற
நோயாளிகளுக்கு மருத்துவ வசதியைச் செய்து தருவதாகச்
சொன்னார்கள். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது
தொகுதியான பட்டுக்கோட்டையில் உள்ள தனிக்கோட்டையில்
மத்திய அரசின் தேசிய நோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ்
நடந்த ஆய்விலே 22 பேர்களுக்கு தொழு நோய் இருப்பதாக
கண்டுபிடித்து இருக்கிறார்கள். எனவே இதற்குத் தகுந்த சிகிச்சை
அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தொழு
நோய் என்பது மக்களை அருவறுப்புகொள்ளச் செய்கின்ற ஒரு
நோயாக கருதப்படுகின்றது. பொதுவாகப் பேசுகிறவர்கள் கூட
குஷ்டரோகி கையில் இருக்கிற வெண்ணேய் என்றுதான் சொல்
கிறார்களே தவிர, கேன்சர் பிடித்தவன் கையிலே இருக்கிற
வெண்ணெய் என்று சொல்வதில்லை. கேன்சர் சீரியசான சிக்காக



இருந்தாலும் கூட, இந்த நோய் பிடித்த நோயாளிகள் மருத்துவ
மனைக்கு வந்து சிகிச்சை பெறுவதற்கு அச்சப்படுகிறார்கள் அல்லது
வெட்கப்படுகிறார்கள். ஆகவே இதைப் போக்குகின்ற வகை
யிலே அரசு ஒரு நல்ல விரிவான திட்டத்தைத் தீட்டி, மொபைல்
யூனிட் இயங்குகின்ற ஒரு மருத்துவ நிலையத்தை அமைத்து,
அதிலே ஒரு சோதனைக் குழு அடங்கிய மருத்துவர்களை
வைத்து, தமிழக அரசு எங்கெங்கே கிராமங்களில் தொழு
நோயாளிகள் இருக்கிறார்கள் என்று கருதுகிறார்களோ, அல்லது
நோயாளிகள் இருக்கிறார்கள் என்று ஆய்வில் கண்டுபிடிக்கிறார்
களோ அந்தப் பகுதிக்கு இந்த மொபைல் யூனிட்டை அனுப்பி,
அவர்களுக்கு சிகிச்சை அளித்தால் அவர்கள் வெட்கப்படாமல் அந்த
சிகிச்சையை ஏற்றுக்கொள்வார்கள்.

குறிப்பாக தமிழகத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில்
பரனூர் என்ற இடத்திலேயும், திருச்சி மாவட்டத்தில் துவாக்குடி
அருகில் ஒரு கிராமத்திலும் தொழு நோயாளிகள் மறுவாழ்வு
இல்லங்கள் இருக்கின்றன. அந்த இல்லங்கள் வீணாகத்தான்
இருக்கின்றன. அங்கே எந்த நோயாளியும் தங்குவது இல்லை.
எனவே தகுந்த நடவடிக்கை எடுத்து, அங்கே நோயாளிகளைக்
கொண்டு வந்து, அவர்களுக்கு மருத்துவ வசதிகளை அளிக்க
வேண்டும். எனவே இப்படிப்பட்ட ஒரு மொபைல் யூனிட்டை
ஆரம்பிக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூன்று கேள்வி
களை எழுப்பி இருக்கிறார்கள். முதலாவதாக அவர்களுக்கு
நல்ல தரமான சிகிச்சை அளிக்கவேண்டும் என்று கேட்டிருக்
கிறார்கள். நல்ல மருந்துகள் கொடுக்கவேண்டும் என்று இந்தக்
கேள்வி மூலமாக ஒரு கருத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.
இதற்கு நான் விடையளிக்கவேண்டும் என்றால், இப்போது நாம்
D psone என்ற ஒரு மாத்திரையைக் கொடுத்துக் கொண்டு இருக்
கிறோம், வெகு விரைவிலே இந்த ஏப்ரல் மாதம் முடிந்த பிறகு,
மே மாதம் 1 ஆம் தேதியிலிருந்து Rifamp cin, L mprenel nd
Dapsone என்ற மூன்று மருந்துகளைக் கலந்து கொடுப்பதாக நாம்
திட்டமிட்டு இருக்கிறோம். Multi Drug The:apy என்று அதற்குப்
பெயர்.

அடுத்தபடியாக மொபைல் யூனிட் தேவை என்று சொல்லி
இருக்கிறார்கள். அதையும் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக இங்கே
தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக மறுவாழ்வு இல்லங்கள்
இருக்கின்றன, அந்த இல்லங்களுக்கு நாம் கொடுத்துக் கொண்
டிருக்கிற, அதற்காக ஒதுக்கி இருக்கக்கூடிய தொகை போதாது
என்ற வகையில், அதை தொகையாக ஒதுக்காமல், எவ்வளவு
பொருட்கள் கொடுக்கவேண்டுமோ, அந்த பொருட்களுக்கு என்ன

விலை இருந்தாலும் — எவ்வளவு சாப்பாடு என்பதை எல்லாம் நாம் கொடுக்கவேண்டும் என்று நினைக்கிறோமோ — அதைத் தொகையாக இல்லாமல், பொருட்களினுடைய அடிப்படையிலே கொடுத்தால், விலைவாசி ஏற்றத்தாலே கொடுக்கக்கூடிய பொருட்களினுடைய அளவு பாதிக்காது என்ற அந்த வகையில் அண்மையில் நடந்த அந்த ஆய்வுக் கூட்டத்திலே இந்த முடிவு எடுத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) நெல்லை மாவட்டத்திலுள்ள 'எபனேசர் கருணை இல்லம்' மூலம் குழந்தைகள் வெளிநாடுகளில் விற்கப்படுவது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ''நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த மாவடி என்னும் சிற்றூரில் நடத்தப்பட்டு வரும் 'எபனேசர் கருணை இல்லம்' மூலம் தமிழ்நாட்டுக் குழந்தைகள் வெளிநாடுகளில் விற்கப்படுவதன் பொருட்டு பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், மாவடி என்னும் சிற்றூரில் கருணைவேல் என்பவரால் நடத்தப்படும் கருணை இல்லம், 1983—84-ம் ஆண்டுகளில், பெங்களூரிலுள்ள 'சினேகாலயா இல்லம்' மூலம் பதினான்கு குழந்தைகளை ஜெர்மனிக்கும், புது டில்லியிலுள்ள 'வட இந்திய திருச்சபை' மூலம் இரண்டு குழந்தைகளை ஹாலந்துக்கும் அனுப்பியுள்ளது. மேற்கண்ட இல்லத்தில் அனுமதிக்கப்படும் குழந்தைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் குழந்தைகள் பற்றிய விவரங்கள் பற்றிய குறிப்பேடுகள் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்றும், இல்ல நிர்வாகியின் வசதிக்கேற்ப வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் குழந்தைகளின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன என்றும் அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வில்லத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ள குழந்தைகளின் தற்போதைய நிலை குறித்து தகவல் ஏதும் இல்லை. 13-9-84 அன்று ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ள சீதாலெக்ஷ்மி, மற்றும் ராமலக்ஷ்மி ஆகிய குழந்தைகளின் முகவரிகள் மட்டுமே தெரியவந்துள்ளன. அவர்கள் தற்போது சிஸ்டர் 'பார்பெல் லைபென்' என்பவரின் பராமரிப்பில் மேற்கு ஜெர்மனியில் உள்ளனர். சேரன்மகாதேவியைச் சேர்ந்த பரமசிவன் ஆசாரியின் மனைவி சீதாலெக்ஷ்மி, இக்குழந்தைகளின் மாற்றாந்தாயார் ஆவார். அவர் இக்குழந்தைகளை வெளிநாடுகளில் தத்தெடுத்து வளர்ப்பதற்கு ஆட்சேபிக்கவில்லை.

மற்ற குழந்தைகள் குறித்து விரிவான விசாரணைகள் பெங்களூரிலும், புதுடில்லியிலும் நடைபெற்று வருகின்றன. விசாரணைக்குப்பின், தேவை ஏற்பட்டால், இவ்வில்லப் பொறுப்பாளர் மீது வழக்கு ஒன்று பதியவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.





திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, பரமசிவன், சீதாலட்சுமியினுடைய 3 குழந்தைகள்—
லதா, பூதத்தான், பட்டமுத்து ஆகியோர் வெளிநாடுகளுக்கு
பெற்றோரின் உரிமையைப் பெறாமல் அனுப்பப்பட்டதன் காரண
மாகத்தான் இந்தப் பெரிய ஸ்கேண்டல் வெளியே வந்தது.
ஆனால் இன்றைக்கும்கூட அந்தக் காப்பகத்திலே குழந்தைகள்
சேர்க்கப்படுகிறார்கள். இந்தியாவிலுள்ள அடாப்சன் லா என்று
சொல்லி, இந்து அடாப்சன் லாவில தெளிவான விதிமுறைகள்
இருந்தும்கூட இந்த விதிமுறைகளில் ஒன்றையும் கருத்தில்
கொள்ளாமல் இந்தக் குழந்தைகள் வெளிமாநிலங்களுக்கு
கொண்டு செல்லப்பட்டு பெயர்கள் மாற்றப்பட்டு, அங்கே இருக்கிற
பத்திரிக்கைகளிலே விளம்பரம் செய்யப்பட்டு அங்கிருந்து வெளி
நாடுகளுக்கு விற்கப்படுகின்றனர். ஏற்கனவே 15 குழந்தைகளை
வெளிநாடுகளுககு ஏற்றுமதி செய்தார்கள். காரல் வாலீஸ்
என்பவர் வள்ளியூர் போலீஸ் நிலையத்திலே இதை ஒப்புக்
கொண்டிருக்கிறார். அப்படி இருந்தும், கடந்த ஓராண்டு கால
மாக என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால்
அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுகுறித்து
ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைப்பற்றி நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன்: மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, பரமசிவ ஆசாரியின் மனைவி சீதாலட்சுமியே
அந்தக் குழந்தைகளுடைய மாற்றாந்தாயாவார். அந்த
அம்மையாரே இந்தக் குழந்தைகளை வெளிநாடுகளில் தத்தெடுத்து
வளர்ப்பவர்களுக்குக் கொடுக்க விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.
எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பேட்டின் அடிப்படையில்
தான் நான் இங்கே சொல்கின்றேன். அவர்கள் ஆட்சேபிக்க
வில்லை என்பதால்தான் அந்தக் குழந்தைகள் வெளிநாடுகளுக்கு
அனுப்பப்பட்டிருக்கின்றனர். அதோடு மட்டுமல்லாமல் அந்தக்
குழந்தைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு இதுவரையில்
தமிழக அரசு எந்த நிறுவனத்துக்கும் அனுமதி கொடுக்கவில்லை.
நீங்கள் சொன்னமாதிரி, தனியார் நிறுவனங்களில் இப்படிப்பட்ட
அனுமதியின்றி குழந்தைகளை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்
என்றால், அனுப்பக் கூடாது என்பதற்கு இங்கேறக்கு சுப்ரீம்
கோர்ட் தடை விதித்து உள்ளது. எந்த நிறுவனமும் ஸ்டேட்
கவர்ண்மெண்ட் உத்தரவுடன், மத்திய அரசாங்கத்தினுடைய
ரெகக்னிஷனுக்கு அனுப்பவேண்டும். அவர்கள் அனுமதித்த பிறகு
தான் குழந்தைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும்.
அதோடு மட்டுமல்லாமல் ஃபாரின் கன்ட்ரியில் உள்ள தத்து எடுக்கும்
பெற்றோர்களும், இங்குள்ள குழந்தைகளை தத்து கொடுக்கும்
பெற்றோர்களும் ஒப்புதல் அளித்தல், Local M gistr te's Court-
என்பதன் அடிப்படையில் அப்ளை செய்யவேண்டும்.
மாஜிஸ்ட்ரேட் அந்த குழந்தைகளைப் பற்றிய விவரங்களை Iudian
Council of Child Welfare -க்கு அனுப்பி அவர்களுடைய

ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,99,20,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

THIRU N.S.V. CHITHAN : Sir, to discusst about the need to set up a consumer resistance movement to check tax evasion, I move—

"That the amount of Rs. 16,99,20,000/—under Demand No. 4 General Sales Tax and other Taxes and Duties—Administration be reduced by Rs. 100.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பலமுனை வரிகளை ஒருமுனை வரிகளாக்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,99,20,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கு. ரமணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பத்து பொருள்களுக்கு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டதற்கேற்ப அப்பொருட்களின் விலை குறைக்கப்பட்டு மக்களுக்கு விநியோகமாவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,99,20,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு சு. பாலன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏழைகள் உபயோகிக்கும் சைக்கிள், அதன் உறுப்புகளுக்கு பொது விற்பனை வரியில் இருந்து விலக்கு அளிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,99,20,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.





மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் உள்ள கொள்கை குறிப்பு, @ மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அவையின் முன் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களுடைய விவாதங்களுக்குப் பிறகு நான் என்னுடைய பதில் உரையை சொல்லுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழே இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திற்கு அளித்துள்ள புத்தகத்திலே தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டமும், ஏனைய வணிக வரிகளும், 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்குரிய வருவாயில், 66 சதவீதத்திற்கும் அதிகமான வருவாயைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியை தெரிவித்திருக்கிறார்கள். 1983—84-ல் வணிக வரிகள் வாயிலாக ரூ. 751.18 கோடி கிட்டியது என்றும், 1984—85-ல் ரூ. 905.32 கோடி கிட்டியிருக்கிறது என்றும், இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 21 சதவீதம் கூடுதலாகும் என்று சொல்லி புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதே புத்தகத்தில், 2-வது பக்கத்திலே 1983-84 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரத்தையும், 1984-85 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரத்தையும் கொடுத்திருக்கிறார்கள், 1985—86 ஆம் ஆண்டுக்கான வருவாயைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்திலே 1986 பிப்ரவரி வரையில், ஏறக்குறைய ரூ. 929.82 கோடி என்ற கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அப்படியென்றால் எஞ்சியிருக்கின்ற மாதம் ஒரு மாதம் தான். அந்த ஒரு மாதத்தில், 1983-84, 1984-85 வரி உயர்வினை கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, ஏறக்குறைய ரூ. 1100 கோடிக்கும் அதிகமான வீதத்தில் வரவேண்டும் ஆனால் அந்த அளவிற்கு வருமா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. பொதுவாகவே நம்முடைய வணிக வரியைப் பொறுத்தவரையில் ஆண்டுக்காண்டு வருவாய் கூடிவருகின்றது. பொதுவாக விலைவாசி உயர்கின்ற காரணம் ஒன்று, வாணிகம் பெருகி வருகின்ற காரணம் ஒன்று மக்கட்தொகை பெருகி வருகின்றது என்பதாக ஆண்டுக்காண்டு கூடிவருகிறது. என்ன காரணத்தினாலோ மார்ச் மாதத்தில் அதிகாரிகள் முடுக்கிவிடப்பட்டு, அட்வான்ஸ் டாக்சஸ் கொண்டு வந்தார்களோ? இது முன்பு வாங்கி வந்த முறையில் கடந்த ஆண்டு வரை இருந்தது. ஆனால் நல்லவேளை இந்த ஆண்டு இல்லை. அந்த முறை தொடரக்கூடாது என்று நான்

@ 1049 ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கின்றபோது, ஒரு வேளை நாம் எதிர் பார்க்கின்ற அளவிற்கு இந்தத் துறையிலும் வருவாய் வரவில்லையோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது.

அடுத்தபடியாக கடந்த ஆண்டு பேசுகின்றபோது நான் சொன்னேன். இந்தப் புத்தகத்திலே 30 ஆம் பக்கத்திலே குதிரைப் பந்தய வரிச் சட்டத்திலே ஆண்டுக்காண்டு கிடைக்கின்ற வருவாயைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே 1980-81 ஆம் ஆண்டு ரூ. 408.39 இலட்சம், 1981-82-ல் ரூ. 454.63 இலட்சம், 1982-83-ல் ரூ. 450.88 இலட்சம் என்று வந்து, அந்த வருவாய் படிப்படியாக 1983-84-ல் ரூ. 378 இலட்சமாகக் குறைந்து, 1984-85-ல் ரூ. 392 இலட்சமாக உயர்ந்து, இந்த ஆண்டு 1985-86 பிப்ரவரி திங்கள் வரை ரூ. 401.00 இலட்சம் வரையில்தான் உயர்ந்திருக்கிறது. 1981-82, 1982-83ஆம் ஆண்டு கணக்குகளைப் பார்க்கின்ற நேரத்தில், நிச்சயமாக அதிகமான வருவாய் நமக்கு வந்திருக்கவேண்டும். வராததற்கான காரணங்கள் ஒருவேளை இந்த மாமன்றத்திலே, பல்வேறு சோணங்களில் சொல்லப்பட்டிருப்பதுபோன்று. தவறுகள், முறைகேடுகளின் காரணத்தால், அரசுக்குச் சேரவேண்டிய வருவாய் வரவில்லையே என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் 31-வது பக்கத்தில், ஓட்டல்களில் தங்குவதற்கு ஆடம்பர வசதிகள் செய்து கொடுப்பதற்கான வரி வருவாய் 1984-85-ல் 181 இலட்சமாக இருந்தது, 1985-86-ல் ரூ. 248 இலட்சமாக உயர்ந்திருப்பதுபற்றி நான் பாராட்டுகிறேன். இன்னும் அதிகமாக இந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

வணிகத் துறையைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே, நம்முடைய வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்திலே பேசுகின்ற நேரத்திலே, நான் சொன்னேன். எலக்ட்ரானிக் போன்ற மின் அணு பொருட்களுக்கான வரி மாற்றங்களை அன்றைய தினம் நான் சொன்னேன். விஞ்ஞானத்தில் பல சாதனைகளை புரிந்து, அதில் மின் அணு பொருட்கள், அன்றாடம் உபயோகிக்கப்படும் கருவிகளாக நம்முடைய முன்னேற்றத்திற்கு பயன் படும் கருவிகளாக, நேரத்தை மிச்சப்படுத்துவதன் காரணமாக வளர்ந்தும், பெருகியும் வருகின்றன.

(முற்பகல் 10-50)

எனவே, இந்தத் துறையிலே தயாரிக்கப்படுகிற பொருட்களுக்கு உரிய ஊக்கத்தினை கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இங்கே தமிழகத்திலே விற்பனை வரி அதிகமாக இருக்கிறது என்று அந்தத் துறையிலே இருக்கிற பலரை நான் சந்தித்தபோது, பேசிய நேரத்தில் ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள். பக்கத்திலே இருக்கிற மாநிலங்களிலே எல்லாம் 4 சதவிகிதம் வரி தான் இருந்து கொண்டு இருக்கிறது. தமிழகத்திலே தான் மிக அதிகமாக இருக்கிறது என்றும், கர்நாடக, ஆந்திரா போன்ற மாநிலங்களிலே 4 சதவிகிதம் தான் இருக்கிறது என்றும் கருத்தினைத் தெரிவித்தார்கள். எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இந்தத் தொழிலுக்கு இன்னும் கொஞ்சம் உத்வேகம் கொடுக்கின்ற முறையில், அந்தப் பொருள்கள் உற்பத்தி பெருகி, தமிழகத்திற்கு, தமிழக அரசிற்கு வருவாய் அதிகமாக வருவதற்கான வகையில், அந்தத் துறையிலே இருக்கிறவர்களை அழைத்துப் பேசி, நல்ல முடிவினை எடுத்தால், வருவாய் பெருகும், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுடைய சங்கடங்கள் குறையும் என்ற யோசனையை இந்த அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தற்போது எலக்ட்ரானிக் பொருட்கள் தமிழகத்திலே தயாரிக்கப்படுவதற்கு 6 சதவிகிதம் என்றும், பிற மாநிலங்களிலே இருந்து இங்கே இறக்குமதி செய்தால், 10 சதவிகிதம் என்றும் வரி மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நான் சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம், தமிழகத்திற்குத் தேவையான மின்னணு எலக்ட்ரானிக் பொருட்களுக்கு சற்றேறக்குறைய 90 சதமானப் பொருட்கள் வெளி மாநிலங்களிலே இருந்து பெறப்படுகின்றன. அதனால் தொழில் அதிபர்கள் பிற மாநிலங்களிலே போய் மின்னணுப் பொருட்களைத் தருவித்து வணிகம் செய்யும் நிலை தமிழகத்தில் இருக்கிறது. நான் சான்றாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னையிலே இருக்கின்ற ஒரு மின்னணு தொழிற்சாலை நடத்துகின்ற ஒருவர் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் 50 ஆயிரம் ரூபாய் மாதம் ஒன்றுக்கு வரி செலுத்தினார் என்றால், அது பின்னர் நலிந்து, தேய்ந்து போய் 10 ஆயிரம் ரூபாய் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வரி குறைந்து இருக்கிறது.

வரியை மறைத்துவிட்டார்களா என்று பார்ப்பது ஒரு புறம் இருக்க, அந்தத் தொழில் கொஞ்சம், கொஞ்சமாக நசித்துக் கொண்டே இருக்கிறது என்பதால், அரசாங்கம் இதில் உடனடி கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, 4 சதவிகிதம் வரியை அரசாங்கம் விதிக்குமானால், அதன் மூலமாக தமிழகத்திலே இருக்கிற அந்தத் தொழில்கள் பெருகி, அதன்மூலம் வருவாய் அதிகமாகப் பெருகுகின்ற வாய்ப்பு இருப்பதால், 4 சதவிகிதம் அதற்கான வரியாக போடவேண்டும். அந்த வரி போடுகின்ற நேரத்தில், "Tax only at the last point of the sales" என்ற முறையில், ஒரு விற்பனையிலே கடைசி முனையிலே வரி போடுவார்களானால், இன்னும் கொஞ்சம் பொருத்தமானதாக இருக்கும்.

[திரு. என். எஸ். வி, சித்தன்] [1986 ஏப்ரல் 5

அடுத்தபடியாக, சிறிய வியாபாரிகளுக்கு, வணிகர்களுக்கு பதிவுக் கட்டணம் ரூ. 10—லிருந்து, ரூ. 100—ஆக உயர்த்தப்பட் டிருக்கிறது. அதாவது, 10 மடங்கு அதிகமாகி இருக்கிறது. 10 ரூபாய் என்று இருப்பதை, சிறிய வியாபாரிகளிடம் 100 என்று சொல்லாமல், 20 ரூபாய், 30 ரூபாய் அல்லது ரூ. 40 என்று ஆக்கலாம். ஆனால் 10 மடங்கு என்பது நமக்கு சாதாரணத் தொகையாக இருக்கலாம். ஆனால் அது சிறிய வியாபாரிகளைப் பாதிக்கின்ற காரணத்தாலும், அப்படிப் பதிவு செய்யும்போது 500 ரூபாய் முன் பணம், வைப்புத் தொகை யாக வைக்கவேண்டும் என்று விதி இருக்கிற காரணத்தினாலும் இதுபோன்ற வேறு செலவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது. சாதாரண தொழிலாளி தொழில் தொடங்க பதிவு செய்யும் போது ஆயிரம் ரூபாய் செலவாகும் சூழ்நிலை இருப்பதால், அரசாங்கம் அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த வரி மாற்றங்களைப் பொறுத்த வரையில் ஒரு குளறுபடி தமிழகம் முழுவதும் இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த வரி மாற்றங்களை அறிவித்தாலும், அது வரிச் சலுகையாக இருந்தாலும், பல முனை வரியை ஒரு முனை வரியாக ஆக்கி இருந்தாலும், அல்லது தள்ளுபடி செய்து இருந்தாலும், அது எந்தத் தேதியி லிருந்து அமலாகிறது என்ற அந்த அறிவிப்பு தெளிவாக இருந் திருக்க வேண்டுமா, இல்லையா? என்பதை நான் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக் கையை கொடுக்கின்ற நேரத்திலே, அது ஏப்ரல் 1ஆம் தேதி யிலிருந்து அமலுக்கு வரவேண்டும் என்றால், அதில் அப்படி இருக்கவேண்டும். அல்லது இன்றைக்கு அறிவித்து, அடுத்த வினாடியே வருகிறது என்று சொன்னால், உடனடியாக வரு கிறது என்று போட்டிருக்க வேண்டும். அப்படி தெளிவாக தெரிவிக்கப்படாததால், பல இடங்களில் பல குழப்பங்கள் ஏற் படுகின்றன.

சில பேர் என்ன சொல்கிறார்கள் என்றால், 17ஆம் தேதி அறிவித்தவுடன், 17ஆம் தேதி மாலையே அறிவிப்பை அமல் படுத்தி விடுகிறார்கள். நிதிநிலை அறிக்கை என்பது ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தான் அமுலுக்கு வரும் என்கிறபோது, அறிவிப்பும் முதல் தேதியிலிருந்து வரும் என்றுதான் கருத வேண்டி இருக்கிறது. எனவே, வரிகளுக்கான மாறுதல்களை அறிவிக்கும்போது, எந்தத் தேதியிலிருந்து வரி என்று தெளிவாக இருக்கவேண்டும். ஏனென்றால், 30, 35 பக்கம் போகிற இந்த அறிக்கையில்

.. .. .. .. .. .. .. ..



1986 ஏப்ரல் 5]

**மாண்புகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தற் காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அறிவிப்பு இன்னும் தெளிவாக இருக்குமேயானால், அறிவிப்பது கூட நல்லது. பொதுவாக என்ன முறை கையாளப் படுகிறது என்றால், ஏற்கனவே இருக்கிற வரியை உயர்த்தி னாலும், அல்லது குறைத்தாலும் அது உடனடியாகவே அறி வித்தபோதே அமலுக்கு வருகிறது ஆனால், சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, அதன் மூலமாகத்தான் போட வேண்டுமென்று இருந்தால் எப்பொழுது சட்டத்தைக் கொண்டு வருகின்றோமோ அப்படி அதைக் கொண்டு வந்து நிறைவேற்றி யதற்குப் பிறகுதான் அமலுக்கு வரும். இதை நான் பொதுப் படையான விளக்கமாக மட்டும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று குழப்பம் ஏற்படாமல் இருக்க, இப்படிப்பட்ட விளக்கங்கள், நிலைமைகள் ஆகியவை அவர்களுக்குப் புரியாது என்பதால் தெளிவாகப் போட்டு விடுவது நல்லது என்று குறிப்பிடுகின்ற கருத்தை மறுக்கவில்லை. இருந் தாலும், இந்த அடிப்படையிலே இன்றைக்குக் கணக்கிடப்படுகிறது என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, எது எது உடனடியாக அமலுக்கு வருகிறது எது எது சட்டம் போட்ட பிறகு அமலுக்கு வருகிறது என்பது நமக்கே தெரியவில்லை. எனவே, சாதாரணமானவர்களுக்கு; விவசாயிகளுக்கு, வரி செலுத்துகின்றவர்களுக்கு இதுபற்றி நிச் சயமாகத் தெரியாது. ஆகவே, வருங்காலத்தில் இப்படித் தெளிவாகக் குறிப்பிட்டு விடுவதால் அரசாங்கத்திற்குப் பெரிய இழப்பு ஒன்றும் வரப்போவதில்லை. எனவே இதுபற்றி மிகத் தெளிவாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்ட பிரின்டெட் காப்பி-கெஜட் பிரதிகள் 40 பிரதிகள்தான் தமிழ்நாடு முழுவதும் வெளியிடப் படுவதாகச் சொல்கிறார்கள். அவ்வளவு குறைவாக வெளியிடப் படும் என்று நான் கருதவில்லை. ஆனால் இந்த கெஜட் பிரதிகளை இன்னும் சற்று அதிகமாக வெளியிட்டால் அரசுக்கும் இலாபம் கிடைக்கும், உரிய துறைகளில் இருப்பவர்களுக்கும், பொது மக்களுக்கும் துணையாக இருக்கும். ஆகவே, இந்தப் பிரதிகளை அதிகமாக அச்சிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடிஷனல் டாக்ஸ் பற்றிச் சொல்லியாக வேண்டும். இந்த முறையானது, ஒழுங்காக வரி செலுத்துகின்ற வியாபாரிகள் மத்தியிலே சுமையாக இருக்கிறது. என்ன காரணமோ தெரிய வில்லை, வணிக வரித் துறை அமைச்சர்களாக வருகின்றவர்கள், அவரவர்கள் பங்கிற்குக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக் கொண்டே போகிறார்கள். இந்த மேல் வரி என்று சொல்லப்

படுகின்ற, அடிஷனல் டாக்ஸ் பற்றி இந்த நிலைமைதான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் இந்த அமைச்சரவையில் வணிக வரித்துறை அமைச்சராக இருந்த நேரத்தில் ''ஸ்டீப் ரைஸ்'' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்களே அந்த மாதிரி இந்தக் கூடுதல் வரியை ஏற்றினார்கள். அன்றைக்கும் நான் அதை எதிர்த்திருக்கிறேன். அவர்களுடைய காலத்தில் 1.25 சதவீதம் என்று உயர்த்தியதை, 1.50 சதவீதம் என்று உயர்த்தி தன்னுடைய பெயரை நிலைநாட்டி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது ஒழுங்காக வணிகம் செய்கின்ற வியாபாரிகளுக்குக் கூடுதல் பளு இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். வியாபாரிகள் அத்தனை பேர்களும் மோசமானவர்கள், தவறு செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. இன்றைக்கு நேர்மையான வியாபாரிகளும் இருக்கிறார்கள். அவர்கள் உற்சாகம் இழக்கின்ற வகையில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுத்தப்படுகிறது. இப்படிப் போடுவதால் எவ்வளவு வருகிறது என்று தெரியவில்லை. இது அவர்களுக்குப் பளுவாகத்தான் இருக்கும். 10 இலட்சத்துக்கு மேல் 40 இலட்சம் ரூபாய் வரையில் உள்ள ஆண்டு விற்பனையின் மீது 1.25 சதவிகிதம் என்றும், 40 இலட்சம் ரூபாய்க்கு மேல் நடைபெறும் ஆண்டு விற்பனையின் மீது 1.5 சதவிகித கூடுதல் விற்பனை வரியும் விதிக்கப்படும் என்றும் போட்டிருப்பதால் அது கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. 10 இலட்சம் ரூபாய் வரை வரிச் சலுகை உண்டு என்றால், இந்த 40 இலட்சம் 45 இலட்சம் ரூபாய் விற்பனை என்று சொல்லும்பொழுது கணக்குப்படி அந்த 10 இலட்சம் ரூபாய்க்கும் சேர்த்து வரி போடப்படுவதாகக் கருதுகிறேன். அந்த 10 இலட்சம் ரூபாயைக் கழித்துவிட்டு, 11 இலட்சம் ரூபாயிலிருந்து கணக்கிட்டு பார்த்து எத்தனை இலட்சம் வருகிறதோ அதற்கு தகுந்தாற்போல் போடுவது மாதிரி மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். இப்பொழுது இன்கம் டாக்ஸ் கணக்கிடுவதில் அந்த முறை இருக்கிறது. அந்த மாதிரி வணிக வரித் துறையிலும் கொண்டு வந்து, அந்த பத்து இலட்சம் ரூபாயைக் கழித்துவிட்டு அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்குப் பதில் சொல்வார்கள், விளக்கம் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்னொரு குழப்பமும் இருக்கிறது. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்-எவர்சில்வர் பொருட்களுக்கு வரிவிதிப்பு செய்கின்ற நேரத்தில், துருப்பிடிக்காத ஸ்டீல் என்று சொல்லி, ''துருப்பிடிக்கா எஃகுப் (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்) பொருள்கள்மீது தற்போது 10 சதவிகித விற்பனை வரி இருந்து வருகிறது. தற்பொழுது உள்ள நடைமுறையில் உள்ள வரி ஏய்ப்பு வழி வகைகளை அடைக்கும் வண்ணம் இனி இவ்வரியை இரண்டாகப் பிரித்து, முதல் விற்பனையின் போது 6 சதவிகித வரியாகவும், இறுதி விற்பனையின்போது 4 சதவிகித வரியாகவும் விதிக்கக் கருதப்பட்டுள்ளது'' என்று



சொல்கிறார்கள். நாம் தமிழகத்திலே பார்க்கிறோம் ஒன்று ஒருமுனை வரியாக இருக்கும், இல்லையென்றால் பலமுனை வரியாக இருக்கும். இப்படி சிங்கிள் பாயின்ட் அல்லது மல்டி பாயின்ட் என்றுதான் இருக்கும். இது என்னவென்றால் டைபாயின்ட் — அதாவது இரண்டு முனை வரியாக இருப்பதாகத் தெரிகிறது. இது சிக்கலை இன்னும் அதிகம் ஆக்காதா? மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய விதத்தில் வரி விதித்து வருவாயைப் பெருக்க வேண்டும். முதல் விற்பனையின்போது 6 சதவிகிதமாம்; இறுதி விற்பனையின்போது 4 சதவிகிதமாம். எனக்கு ஒரு ஐயப்பாடு தோன்றுகிறது. இந்தப் பொருட்களைத் தயாரிக்கிறவர்கள் நேரடியாகவே உபயோகிப்பாளருக்கு விற்பனை செய்வதாக வைத்துக்கொள்வோம்; முதல் விற்பனையின் போது 6 சதவிகித வரி; இறுதி விற்பனையின்போது 4 சதவிகித வரி என்றால், இடையிலே வணிகர்கள் வந்துவிட்டால் சரி, ஆனால் முதலிலே உற்பத்தி செய்கின்றவர்களே விற்றால் எத்தனை சதவிகித வரி? இது அதிகாரிகளுக்குச் சிரமத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் அல்லவா? சாதாரண கணக்கு வைத்திருப்பவர்கள் குழப்பத்திற்கு உள்ளாக மாட்டார்களா? எனவே, இதை வேறு வகையில், ஒரு முனை வரி என்ற முறையில் ஒரு கட்டத்தில் 4 சதவிகிதம் அல்லது 6 சதவிகிதம் என்றும் செய்தால் எளிதாக இருக்கும். எனவே, இதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–00)

அடுத்தபடியாக, உருக்காலைக்கு விற்கப்படும் பழைய இரும்புகளுக்கு மட்டுமே வரி விலக்கு அளித்து, வணிக வரித் துறையின் மூலமாக அமுல்படுத்த இருப்பது ஒருதலைபட்சமாக இருக்கும் என்று அந்தத் துறையிலே இருக்கின்றவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். சிறு வணிகர்களுக்கும் பெரிதும் பாதிப்பு ஏற்படுத்தும் என்ற கருத்தும் தெரிவிக்கிறார்கள். இதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெல்லம், சர்க்கரை, சம்பந்தமாக ஒவ்வொரு ஆண்டும் இந்த மாமன்றத்திலே நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் 8% ஒருமுனை கொள்முதல் வரி என்று நம்முடைய அரசு அறிவித்து இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே 8% என்று அறிவித்து இருப்பதாலே, வெல்லத்திற்கு மத்திய விற்பனைவரிச் சட்டத்தின் பிரகாரம், சி.எஸ்.டி.யிலிருந்து விலக்கு அளிக்கப்படப் போவதில்லை. ஆகவே, வெளி மாநில விற்பனைக்கு 8% கொள்முதல் வரியும், 4% மைய வரியும் சேர்ந்து, கொள்முதல் வரிக்கு 1/2% சர்ச்சார்ஜ் வரி என்று பொருள் ஆகிறது. அதனால் வெளி மாநில விற்பனைக்கு சுமார் 12 1/2% வரி ஆகிறது என்று

அவர்கள் கணக்குச் சொல்கிறார்கள். விவசாய விளைபொருளான வெல்லத்திற்கு 8% கொள்முதல் ஒருமுனை வரியும், சி.எஸ்.டி. வரி 4%-மும் ஆக, 12% வரி, ஒரு பொருளுக்கு இரண்டு தடவை விதிப்பது நியாயமாக இருக்க முடியாது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். அதிலும் குறிப்பாக தமிழகத்திலே உற்பத்தியாகிற வெல்லத்திலே 80% வெளி மாநிலங்களுக்குச் செல்கிற காரணத்தினாலே, ஒரு குடிசைத் தொழிலாக இருக்கிற காரணத்தாலே, அரசாங்கம் அதிலே தாராளமாக இருந்து, முன்பு வெல்லத்திற்குக் கொள்முதல் வரி இருந்த சமயத்தில் வெளி மாநில விற்பனைக்கு வரி இல்லை என்று இருந்தது போல், இப்பொழுதும் மத்திய வணிக வரிக்கு விலக்குக் கொடுத்து, 8% கொள்முதல் விற்பனை வரியாக இருக்கும் பட்சத்தில், தற்போது கிடைக்கும் வருமானத்தைவிட அதிகமாகக் கிடைக்கும் என்று அந்தத் துறையிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள், அல்லது தற்போது இருக்கும் கொள்முதல் வரியை 5 சதவீதமாகக் குறைத்து, ஏற்கனவே வெளி மாநில விற்பனைக்கு சி.எஸ்.டி. என்று சொல்லக்கூடிய மத்திய வரி இல்லை என்று சொன்னால், தற்போது இருப்பதைவிட இரண்டு பங்கு வருமானம் உறுதியாக, கூடுதலாகக் கிடைக்கும் என்று அந்தத் துறையிலே உள்ளவர்கள் சொல்கிறார்கள். அருள் கூர்ந்து அதனைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாவர எண்ணெய்களைப் பொறுத்தவரையில் 3% பலமுனை வரி, இப்பொழுது 4% ஒரு முனை வரியாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் மூன்று இடங்களிலே 9% வருவதைப் போலவும் அதை 4% ஆகக் குறைத்திருப்பதாகவும் நாம் எண்ணிப் பார்ப்பதற்கு இடம் இருக்கிறது. ஆனால், கணக்குப்போட்டுப் பார்ப்போமானால், அதனால் எந்த விதமான சலுகையும் இல்லையென்று தெரிகின்ற காரணத்தினாலே, வரியை மறைக்கின்ற ஒரு நிலையிருக்கின்ற காரணத்தாலே, 2% ஒருமுனை வரியாக இதைப் போடலாம். அப்படி விதிக்கின்ற நேரத்திலே, வரிக்காக மறைக்கின்ற நிலைகள் மறைந்து பெரும்பாலான வணிகர்களும், ஏன் எல்லா வணிகர்களும் கணக்குகளைத் தரத் தயாராக இருப்பார்கள். அதனால் வரி வருமானம் உயரும் என்று சொல்லப்படுகிறது. அதனையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தாவர எண்ணெய்க்கு 4% ஒருமுனை வரி போட்டிருக்கிற அதே நேரத்திலே, தாவர எண்ணெயிலிருந்து கிடைக்கிற பிண்ணாக்கு, இன்னும் பலமுனை வரியாக இருக்கிறது. இந்த அரசாங்கம் கோழித் தீவனத்திற்கு 5% பலமுனை வரியை 2% ஒரு முனை வரியாக விதித்திருக்கிறது. கோழித் தீவனத்தைப் போலவே, பிண்ணாக்கு மாட்டுத் தீவனமாக இருக்கிற காரணத்தினாலே, விவசாயப் பொருள்களுக்கு அது இடுபொருள் உரமாக இருக்கிற காரணத்தினாலே, இன்னும் பலமுனை வரியாக இருப்பது பொருத்தமாக இருக்காது. ஒருமுனை வரியாக





அறிவிக்க வேண்டும். இது சம்பந்தமாக, வியாபாரிகளும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதனை ஒருமுனை வரியாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, புதிய தொழில்கள் தொடங்குகின்ற நேரத்திலே, அண்டையிலே இருக்கிற பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களிலே 5 ஆண்டுகளுக்கு டாக்ஸ் ஹாலிடே கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு வழிமுறையைத் தமிழகத்திலே நாம் கொண்டு வருவோமானால், அதன் மூலம் நாம் எதிர்பார்க்கின்ற பலவித தொழில்களைத் தமிழகத்தில் துவங்க வாய்ப்பிருக்கிற காரணத்தாலே, அரசாங்கம் டாக்ஸ் ஹாலிடே கொடுப்பது பற்றி எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே மாநில ஆலோசனைக் குழு பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறவில்லையென்று எனக்குத் தெரிகிறது. இடம் பெற்றிருந்தால் இன்னும் கொஞ்சம் பொருத்தமாக இருக்கும். ஆகவே அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே, வணிகர் நல ஆலோசனைக் குழு 6-12-1985 ஆம் தேதி அன்று உருவாக்கப்படுகிறது என்று என்னாலே அறிய முடிகிறது. இந்த வணிகர் நல ஆலோசனைக் குழு எத்தனை முறை கூட்டப்பட்டது? என்ன, என்ன முக்கியமான பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு, அதன் மூலமாக அரசாங்கம் வருவாயைப் பெருக்குவதற்கான வழிவகை செய்திருக்கிறது அல்லது வணிகர்களுக்கு இருக்கிற மிகப் பெரிய சிக்கல்களைக் குறைத்திருக்கிறது என்பன போன்றவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு பல்வேறு சலுகைகளை அளித்திருப்பதைப் போல சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற சைக்கிள் வாகனம், அதற்குரிய உதிரிப் பாகங்களுக்கு வரி விலக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6 சதவீதமாக இருந்த வரி இப்போது இந்த வாகனப் பொருள்களுக்கு 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அண்டை மாநிலங்களில் முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஏழை எளிய மக்கள்தான் இந்த சைக்கிள் வாகனத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பயனடையும் வகையிலே, இப்போது விதித்திருக்கிற இந்த 3 சதவீத வரியையும் எடுத்துவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் புதிய சலுகைகளைப் பொறுத்தவரையில், பனியன், ஜட்டி போன்றவை தயாரிக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்படும் நூலைப் பொறுத்து 2 சதவீதம், 3 சதவீதம், 5 சதவீதம் என்று வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி ஒரே மாதிரியாக எல்லாவற்றிற்கும் 3 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் ஏற்கெனவே பனியன், ஜட்டி போன்றவைகளுக்கு 2 சதவீதமாக இருந்த வரி இப்போது 3 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழை எளிய மக்கள் தான் ஆகவே, பனியன், ஜட்டிகளுக்கு ஏற்கெனவே இருந்ததைப்போல 2 சதவீதம் வரியே இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூண்டு காய்கறி இனத்தில் அடங்கியிருக்கிறது. காய்கறிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பூண்டும் அழுகும் பொருள் என்பதால், காய்கறி வகையில் அடங்குவதால் பூண்டுக்கும் பூரண வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயிர் காக்கும் மருந்துகளைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு 41 மருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்று வேறு பல உயிர் காக்கும் மருந்துகளும் இருப்பதாக தெரிகின்றது அவை இந்தப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படி இருந்தால் அந்த உயிர் காக்கும் மருந்துகளுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

திரு. த. பழனி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் வணிகவரித் துறையின் மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

1986–87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி துத்தநாகம் பூசிய இரும்புவாளிகள், வீடுகளில் பயன்படுத்தப்படும் கரி மற்றும் நிலக்கரி, மரக்கரி, உமி போன்ற பொருள்கள், பூரா சர்க்கரை மற்றும் கற்கண்டு, நுரை ரப்பரால் தயாரிக்கப்படாத பஞ்சு, இலவம்பஞ்சு மெத்தை, தலையணை, மெழுகுவர்த்தி, வெள்ளிமெட்டி, குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்கள், இசைக்கருவிகள் ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரிகளை அறவே தள்ளுபடி செய்திருக்கிற இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் இந்த மன்றத்தின் வாயிலாக நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.





இன்னொரு அரிய சாதனையாக அறிவிக்கப்பட்டிருப்பது உயிர் காக்கும் பல்வேறு மருந்து பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 8 சதவீத வரி இப்போது 4 சதவீத வரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசுக்கு இப்படிப்பட்ட பெருமையைச் சேர்த்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்கள் அன்றாடம் பயன் படுத்தும் பொருள்கள்மீது எப்படி எல்லாம் வரிச்சுமையை குறைக்க முடியுமோ அதை குறைக்கின்ற நடவடிக்கையை மனதிலே வைத்து, தக்கமுறையிலே அதைச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த உயிர் காக்கும் மருந்துகளைப் பற்றிக் குறிப்பிடும்போது எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பேரன்பிற்குரிய திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பல்வேறு உயிர் காக்கும் மருந்துகள் இந்தப் பட்டியலில் விடுபட்டிருக்கின்றன. அந்த மருந்துகளையும் இந்தப் பட்டியலிலே சேர்த்து ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையிலே இந்த சலுகைப் பட்டியலை மேலும் நீட்டிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று பால் குடிக்கின்ற குழந்தைகளுக்கு உபயோகப் படுத்துகின்ற பொருள்களுக்கு 10 சதவீதம் வரியிலிருந்து 4 சதவீதமாகக் குறைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இந்த 4 சதவீதம் வரியையும் எடுத்துவிட்டு, குழந்தைகளுக்கு சலுகை அளிக்க வேண்டுகிறேன். குழந்தைகளின் நன்மையைக் கருதி சத்துணவு வழங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு குழந்தைகளின் வளர்ச்சியைக் கருதி பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, அந்த குழந்தைகளுக்கு அளிக்கின்ற உணவுப் பொருள்மீது இருக்கின்ற வரியை அறவே நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று தினந்தோறும் கூலி வேலை கிடைக்காமல் பரிசுச் சீட்டுகளை விற்றுக்கொண்டிருக்கிற ஏழை எளிய மக்கள் நலனைக் கருதி, பரிசுச் சீட்டுகளையே விற்று வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற ஏழை எளிய மக்கள் நன்மையைக் கருதி, 20 சதவீதம் பரிசுச் சீட்டுக்கு இருந்த வரியை 10 சதவீதமாகக் குறைத்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பாராட்டுகிறேன். இந்த வரிக்குறைப்பை வாழ்த்தி வரவேற்கின்ற அதேநேரத்தில் மேலும் அதை 5 சதவீதமாகக் குறைத்து, தினந்தோறும் வேலையில்லாமல், பரிசுச் சீட்டுகளை விற்றுக்கொண்டிருக்கிற அந்த தொழிலாளர்கள் பயன் பெறுகின்ற வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–10)

கோழித் தீவனத்தைப் பொறுத்தவரையில் 5 சதவீத வரியிலிருந்து 2 சதவீத வரியாகக் குறைத்து இருக்கிறார்கள். அந்த இரண்டு சதவீதத்தையும் அறவே நீக்கியிருந்தால் நல்லது. ஏழை எளிய விவசாயிகளைப் பொறுத்தவரையில் விவசாயக் காலங்கள் போக மற்ற காலங்களில் வேலையில்லாத நிலைமை இருப்பதன் காரணத்தால் கோழி வளர்க்கிறார்கள். எனவே அந்த வரியை நீக்கவேண்டும். மேலும் மாடுகளும் வளர்க்கிறார்கள். அந்த மாடுகளுக்கு அடிப்படைத் தேவை பிண்ணாக்கு. அந்தப் பிண்ணாக்கைப் பொறுத்தவரையில் அதற்குப் பலமுனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தொழில் துறையில் பல்வேறு அரிய சாதனைகள் செய்திருந்தாலும் மின்னணுத் தொழிலில் நாம் வேகமான வளர்ச்சியைப் பெறவில்லை. மின்னணுத் தொழில்களைப் பொறுத்தவரையில் பல்வேறு பொருட்களை நாம் வெளி மாநிலங்களிலிருந்துதான் பெறவேண்டிய நிலைமை இருக்கிறது. அந்தப் பொருட்களைப் பொறுத்தவரையில் 8 சதவீத வரியாகக் குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படக்கூடிய மின் அணுப் பொருட்கள் மற்றும் பாகங்களைப் பொறுத்தவரையில் 6 சதவீதம் என்று குறைத் திருக்கிறார்கள் அதை மேலும், மற்ற மாநிலங்களில் இருப்பது போல் குறைத்தால் மின்னணுத் தொழிலில் உற்பத்தி பெருகும். அந்த வகையில் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நாம் தினந்தோறும் பயன்படுத்தும் தாவர எண்ணெய்களைப் பொறுத்தவரையில் ஒருமுனை வரியாக ஆக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அடுத்து, நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கடலையைப் பொறுத்த வரையில் இதுவரையில் விவசாயிகளிடத்திலிருந்து வாங்கப்பட்ட விற்பனை வரி என்பது மாற்றப்பட்டு வியாபாரிகளிடத்திலிருந்து வாங்குகின்ற வரியாக மாற்றப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். வெளி மாநிலங்களிலிருந்து வரும் நிலக்கடலையின் மீதான வரி முதல்முனை விற்பனை வரியாக மாற்றியமைக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

கழிப்பு இரும்பிற்கு விற்பனை வரியிலிருந்து அறவே விலக்களித்து இருப்பதை நான் வரவேற்று வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து, துருப்பிடிக்கா எஃகு அதாவது ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் என்பதைப் பொறுத்தவரையில் ஒருமுனை வரியாக இருக்கவேண்டும். அதற்கு முதல் விற்பனை வரி, இரண்டாவது விற்பனைவரி என்று பிரித்துக் கூறியிருப்பதற்குப் பதில், ஒருமுனை வரியாக இருக்கவேண்டும்.

வியாபாரிகளைப் பொறுத்தவரையில் 50,000 ரூபாய் வரை மதிப்புள்ள வியாபாரத்திற்கு விற்பனை வரி நீக்கம் என்று இருந்தது, 75,000 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதை ஒரு இலட்சமாக உயர்த்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஆண்டு விற்பனையைப் பொறுத்தவரையில், இதுவரையில் ரூ. 3 இலட்சமாக இருந்த வரி விலக்கு வரையறை இனி ரூ. 10 இலட்சமாக ஆக்கி வரி விலக்கு அளித்திருப்பதை நான் பாராட்டி, வாழ்த்தி நன்றியுடையவனாக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 10 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் ரூபாய் வரையில் உள்ள ஆண்டு விற்பனையின் மீது 1.25 சதவீத கூடுதல் விற்பனை வரியும், 40 இலட்சத்திற்கு மேல் நடைபெறும் ஆண்டு விற்பனையின் மீது 1.5 சதவீதக் கூடுதல் விற்பனை வரியும் விதிக்கப்பட்டு இருக்கிறது. 40 இலட்சமாக இருந்தாலும், 50 இலட்சமாக இருந்தாலும் 1.25 என்ற வீதத்திலேயே அதாவது ஒரே சீராக வரிவிதிப்பு இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டி கேளிக்கை வரி மீதான கூட்டுக் கட்டணம் தற்போதுள்ள கட்டணத்தின் மேல் 10 சதவிகிதம் அளவில் அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின்படியும், 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் படியும் 1980–81 ஆம் ஆண்டு ரூபாய் 2892.91 இலட்சமும், 1981–82 ஆம் ஆண்டு ரூபாய் 3146.11 இலட்சமும், 1982–83 ஆம் ஆண்டு 3642.02 இலட்சம் ரூபாயும், 1983–84 ஆம் ஆண்டு 3926 இலட்சம் ரூபாயும், 1984–85 ஆம் ஆண்டு 4488 இலட்சம் ரூபாயும், 1985–86 ஆம் ஆண்டு 4817 இலட்சம் ரூபாயும் வருமானமாக வந்திருக்கிறது. உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் கேளிக்கை வரி என்பது மிகப்பெரிய பகுதியாக இருக்கிறது. கேளிக்கை வரியிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து உள்ளாட்சி மன்றங்கள் சிறப்பாக நடைபெறக்கூடிய அளவுக்கு பல்வேறு சதவீதங்கள் பிரித்து அந்தந்த மன்றங்களுக்கு அளிக்கப்படுகின்றன. அப்படி அளிக்கப்படுகிற போது, அந்த உள்ளாட்சி மன்றங்களுடைய நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கிற நிலையில், அந்த உள்ளாட்சிகள், நகராட்சிகளுடைய வசதிகளை அதிகமாக்க . காம்பவுண்ட்

டாக்ஸ்ஸை மாற்றி அமைத்து கொண்டு வரவேண்டும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லுகிற அதே நேரத்தில் 3-வது நிலையாக இருக்கிற நகராட்சிகள் 40லிருந்து 60 சதவீதம் என்ற நிலையை மாற்றி அங்கே 50, 50 என்ற நிலையில் உருவாக்கி தந்திடவேண்டும் என்ற கருத்தைச் சொல்லி, அதே போல தேர்வு நிலை நகராட்சிகளைப் பொறுத்த வரையில், அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இருக்கிற விகிதங்களில் 35, 65 என்று இருப்பதை மாற்றி 40, 60 என்ற நிலையில் ஒதுக்கிட வேண்டும் என்ற கோரிக்கைகளைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல பல்வேறு நிலைகளிலே தமிழ்நாடு முழுவதும் இருக்கிற, ஓட்டல்களுக்கு, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்களில் தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகளின் மேல் போடப்பட்ட வரிகளின் காரணமாக 1980-81-ல் 32 லட்சம் என்றும், 1981-82ல் 107 லட்சம் என்றும், 1983-84-ல் 150 லட்சம் என்றும், 1984-85-ல் 181 லட்சம் என்றும், 1985-86 பிப்ரவரி வரை 248 லட்சமாகவும் மொத்த வருவாய் வந்திருப்பதாக இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் அறிவித்திருக்கிறார்கள்.

இந்த அறிவிப்புகளின் ஊடே பல்வேறு இடங்களில் ஓட்டல்களில் சரியாக கணக்கிடப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதேபோல ஓட்டல்களில் இருக்கிற தங்கும் விடுதிகளில் சரியாக கணக்கு எடுக்கப்படவில்லை என்ற நிலையிலே இருக்கிறது. சரியாக முறையாக கணக்கிடப்பட்டால் இன்னும் அதிலே அதிக வருமானம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதேப்போல இந்த நிலைமைகளில் கூட உள்ளாட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கி, வரி வசூலை பெறும் உரிமையை மாநில அரசு அவர்களுக்கு அளிக்குமே யானால் அந்த உள்ளாட்சி மன்றங்கள் தன்னிறைவு பெற்று, மிகச் சிறப்பாக நிர்வாகத்தை நடத்தமுடியும் என்று என்னுடைய கோரிக்கைகளை பணிந்து, இந்த மானியக் கோரிக்கையின் வாயிலாக கொண்டு வந்திருக்கிற பல்வேறு அரிய திட்டங்களை வரவேற்று, அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகமும் என்ற 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களில் சிலவற்றை கூற விரும்புகிறேன்.

1939 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்திய நாட்டிலேயே, முதன் முதலாக தமிழகத்திலே விற்பனை வரியை கொண்டு வந்து ரூபாய்க்கு ஒரு பைசா என்று வசூலிக்கும் நிலையை உருவாக்கித் தந்தார்கள். அதன் காரணமாக





இன்றையதினம் பல்வேறு மாநிலங்களிலேயும் இந்த விற்பனை வரி காமதேனுவாகவும், கற்பக விருட்சமாகவும் இருந்துக் கொண்டிருக்கிறது. எனவே மூதறிஞர் இராஜாஜி அவர்களுடைய தொலை நோக்கு பார்வைக்கு நான் சார்ந்து இருக்கிற பேரியக்கத்தின் சார்பாக பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் 1979–80 ஆம் ஆண்டிலேயே வணிக வரிகள் மூலம் அரசு பெற்ற மொத்த வருமானம் 388.28 கோடியாகும். அது 1985–86 ஆம் ஆண்டிலே கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு மாநிலத்தில் உள்ள எல்லா வரிகளின் மூலமும் அரசுக்கு கிடைக்கின்ற மொத்த வருமானம் 1500 கோடியாகும். அதிலே மூன்றிலே 2 பங்கு அதாவது 66 சதவீதம் வணிக வரிகளின் மூலமாக அரசுக்குக் கிடைக்கிறது. 1986–87 ஆம் நிதி ஆண்டிலே விற்பனை வரி மூலமாக 1500 கோடிக்கு மேல் வருமானம் வரும் என்ற மதிப்பீட்டை இந்த அரசு செய்திருக்கிறது. தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றி, வரிகளின் மூலமாக கிடைக்கிற இந்த வரி வருவாய் மூலமாக பல்வேறு பணிகள் நடத்தப்படுகிறது என்றாலும், இந்த வரிகளின் நிலையில் இருக்கிற ஒரு சில குறைகளை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

1939 ஆம் ஆண்டு இராஜாஜி அவர்கள் விற்பனை வரியைப் புகுத்தும் போது வணிகர்கள் மத்தியிலே கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. அப்போது இராஜாஜி அவர்கள் கூறிய அதே மொழியில் கூறவேண்டுமென்றால், ''நான் கேட்பதெல்லாம் ரூபாய்க்கு ஒரு பைசா தான், அதை மகிமை போல நினைத்து வியாபாரிகள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்'' இராஜாஜி அவர்கள் அன்றையதினம் இப்படிச் சொன்னார்கள். அப்போது மது விலக்கு தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால் ஏற்படும் வருவாய் இழப்பை சரிக்கட்ட விற்பனை வரி அறிமுகப் படுத்தப்பட்டது. ஆனால் தற்போது கள் சாராய கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. விற்பனை வரி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. you are the best Judge என்று இன்றையதினம் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் கள் சாராயக் கடைகளை மூடுவோமென்று அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் தருணத்தில் இந்த அரசை கேட்டுக் கொள்வதெல்லாம், மதுவிலக்கை தீவிரமாக அமல்படுத்துகிற நேரத்தில் தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அதனை மிகவும் வரவேற்கும். 1987 ஆம் ஆண்டு மது விலக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டால் அதனைக் காரணம்

காட்டி இப்போது இருக்கிற விற்பனை வரிகளை உயர்த்தி விடாதீர்கள். அது வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்குக் வேதனையையும் கஷ்டத்தையும் விளைவிக்குமென்று தெரிவித்தும் கொள்கிறேன்.

1977 ஆம் ஆண்டு எல்.கே.ஜா. அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மறைமுக வரிக் குழு தன்னுடைய அறிக்கையில் கூறியிருப்பதை இங்கே தெரிவிக்கிறேன். ''மறைமுக வரிகள் வசூலிக்கப்படுவது அரசுக்கு குறைந்த செலவிலும், வணிகர்களை துன்புறுத்தாமலும், நீதிமன்றங்களுக்கு வழக்குகள் செல்லாமலும் வசூலிக்கப்பட வேண்டுமென்று, சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய நிலை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்கு வரி செலுத்துகிற வியாபாரிகள் எவ்வளவு கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். வணிக வரி அலுவலகங்களில் வணிகர்கள் அமர்வதற்குக் கூட நாற்காலிகள் கிடையாது. விசிட்டர்ஸ் ரூம்ஸ் கிடையாது. அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு இருக்கிறது. 1977 ஆம் ஆண்டு உங்கள் அரசினால் நியமிக்கப்பட்ட கெய்வார் கமிட்டியில் தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் ஒருவர் உறுப்பினராக இருந்தார். அவர்கள் இந்தக் குழுவிற்கு அளித்த அறிக்கையில் இந்தத் துறையில் இரண்டு கட்டமாக இலஞ்சம் நிலவிக்கொண்டிருக்கிறது என்று உண்மையை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்திருக்கிறார்கள். இன்றைய தினம் வியாபாரிகள் படுகிற கஷ்டங்களை ஓரளவிற்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் ஏ—1 ரிட்டன், ஏ—6 ரிட்டன், ஏ—7 ரிட்டன், ஏ—9 ரிட்டன், என்று நான்கு ரிட்டன்களை வைத்திருக்கிறார்கள். ஏ—6 ரிட்டன் என்பது உபரி வரியைச் செலுத்துவதற்கு இருக்கிறது. ஏ—7 ரிட்டன் என்பது அடிஷனல் டாக்சை கட்டுவதற்குரியது. ஏ—9 ரிட்டன் என்பது வரி விலக்கு கோருகிற ரிட்டன் ஆகும். நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதெல்லாம் இந்த ஏ—1, ஏ—6 ஏ—7 ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைத்து ஒரே ரிட்டனாகவும், ஏ—9 ரிட்டனை ஒரு ரிட்டனாகவும் செய்து, இரண்டு ரிட்டன்களாக செய்து வியாபாரிகள் இந்த வரிகளைச் செலுத்தச் செய்யலாம். இதனால் அரசுக்கும் எளிதாக இருக்கும். அதிகாரிகளுக்கும், வணிகர்களுக்கும் வேலை பளு குறையும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு 50 ஆயிரத்திலிருந்து 75 ஆயிரமாக வரி விலக்கு அளித்திருப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். இன்றைய நிலையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 10 ஆயிரம் ரூபாய் வரி விலக்கு இருந்த போது 10 படி கொண்ட கடலை எண்ணெய் டின் 5 ரூபாய்தான் விற்றது. ஆனால் இன்றைய தினம் 16 கே.ஜி. கடலை எண்ணெய் டின் ஒன்று 250 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்த விலை உயர்வு 50 சதவீதம் இருக்கிறது.





ஆனால் நீங்களோ 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வரி விலக்கு அளித்திருக்கிறீர்கள். ஏறியிருக்கிற விலைவாசியைப் பார்த்தால் 5 லட்சம் கொடுக்க வேண்டாம் 2 லட்சம் ரூபாயாவது வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எவர்சில்வர் பாத்திரங்களுக்கு 10 சதவீதம் இருந்ததை இன்றையதினம் முதலில் 6 சதவீதமாகவும், கடைசியில் 4 சதவீதமாகவும் ஆக்கியிருக்கிறீர்கள். இதிலே ஏற்படுகிற சங்கடங்களையெல்லாம் நான் நிதிநிலை அறிக்கை விவாதத்தில் சொல்லியிருக்கிறேன். 6 சதவீதம் முதல் நிலை என்று போடுகிற பொது இறுதி நிலை என்று எதைக் கணக்கிடப் போகிறீர்கள்? நடுநிலையில் விற்பதையெல்லாம் வரி எய்ப்பு செய்கிற அளவிற்கு இந்த வரித் திட்டம் அமையுமென்பதால் எவர்சில்வர் பாத்திரங்களுக்கு முன்பு இருந்ததைப் போல 10 சதவீதமாக்குங்கள் அல்லது ஒருமுனை வரியில் 8 சதவீதமாக்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மேல் முறையீடு சலுகை என்ற நேரத்திலே அப்பலட் அசிஸ்டென்ட் கமிஷனர்களை நியமிக்கின்றபோது இந்தத் துறையிலே இருப்பவர்களை நியமிக்கின்ற காரணத்தாலே கீழே செய்கின்ற அந்த ஜட்ஜ்மென்டை ஒட்டியே அவர்கள் செய்கின்ற நிலைமை இன்றைக்கு இருந்துகொண்டு இருக்கிறது. எனவே இந்த டிரிபியூனலில் உள்ளது போன்று ஹைகோர்ட் நீதிபதிகளை நியமிப்பதைப் போன்று, இந்த அப்பலட் அசிஸ்டென்ட் கமிஷனருக்கான மேல் முறையீட்டுக்கு நீங்கள் டிஸ்ரிக்ட் ஜட்ஜ்களை நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மோட்டார் வாகனங்கள், எலக்ட்ரானிக் சாமான்கள் தமிழகத்திலே இன்றையதினம் அதிகமான விற்பனை செய்வதில்லை. காரணம் இந்தத் துறையில் இருக்கின்ற வியாபாரிகள் நசிந்து கொண்டு போகிறார்கள். அதற்குக் காரணம் உங்களுடைய வரிக்கொள்கை தான். பக்கத்திலே அண்டை மாநிலத்திலே இருக்கக்கூடிய வியாபாரிகள் எல்லாம் இன்றைக்கு செழித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே இந்த மோட்டார் வாகனங்கள், மற்றும் எலக்ட்ரானிக் சாமான்கள் செய்கின்ற இந்த வியாபாரிகள் நசித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே வெளி மாநிலத்திலே இருக்கின்ற அந்த வரிக் கொள்கையைப் போன்று, தமிழகத்திலேயும் நீங்கள் வரிக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்போர்ஸ்மென்ட் விங் என்று ஒரு விங் இருக்கிறது. இதனால் ஏதாவது பலன் ஏற்பட்டு இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றையதினம், டி.சி.டி.ஓ.,

[திரு. அ. மலர்மன்னன்] [1986 ஏப்ரல் 5

ஜே.சி.டி.ஓ. போன்று உள்ள என்போர்ஸ்மென்ட் அதிகாரிகள் ஒரு கணக்கைப் பிடிக்கிறார்கள். அவர்கள் பின்னால், அந்தக் கணக்கைச் சரிபார்த்து பிடித்ததற்குப் நேரத்திலே அவர்களுக்கு டெப்பிஸ்ட், கிளார்க் அனுப்புகின்ற நேரத்திலே அவர்கள் டி-3 போடாத காரணத்தாலே இல்லாத கணக்குகளும் இன்றைக்குத் தேங்கிக் கொண்டு இருக்கின்றன. அத்தனை எனவே இந்த என்போர்ஸ்மென்ட் விங்கினால் நமக்கு வருகின்ற வருவாயைவிட அதனால் இழப்பு தான் அதிகமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே இந்த என்போர்ஸ்மென்ட் விங் தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் விற்பனை அலுவலகங்கள் பிரிக்கப்படாமல் ஒரே அலுவலமாக இருக்கின்ற காரணத்தால், வேலைப் பளு இன்றைக்கு அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. இன்றையதினம் நீங்கள் விற்பனை வரி அலுவலகங்களை புதிய சர்க்கிள் ஆபிஸ்களை அமைக்கப் போவதாகச் சொல்லுகிறீர்கள். ஆனால் அமைக்கப் பட்டிருக்கின்ற அந்த சர்க்கிள் ஆபிஸ்களில் போனால், அங்கே குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது. சைக்கிள் நிறுத்துவதற்குப், ஸ்கூட்டர் நிறுத்துவதற்கும் போதிய இடம் இல்லாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. எனவே இதையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கலெக்சன் இன்ஸ்பெக்டர்கள் தற்போது பாது காப்பாற்ற நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கலெக்சன் செய்துகொண்டு வருகிற நேரத்திலே அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. இன்ஸ் பெக்டர்கள் வெளியே செல்ல வேண்டும் என்று சட்டத்திலே இல்லை என்றாலும், நமக்கு வரிய வசூலித்துக் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால், அவர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் வசூல் செய்கின்ற வரியை அங்கேயே கட்டுவதற்கு ஒரு கூட்டுறவு வங்கியை இதுபோன்ற நகரங்களில் அமைத்துத்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஆயிரம் கோடி ரூபாயை இந்த அரசுக்கு அளித்து தருகின்ற அந்த அலுவலகங்கள் பராமரிக்கப்படாமலும், போகின்ற வியாபாரிகளிடம் ஸ்டேசனரி வாங்குகின்ற நிலைமைதான் இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அந்த அலுவலகங்களை விஸ்தரிக்கும் பொழுது, பராமரிப் புக்கு என்று ஒரு தொகையை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் சிறு வியாபாரிகளைப் பொறுத்தவரையிலும் 5 ரூபாய்க்குக் கீழே விற்கின்ற பொருட்களுக்கு பில் போட வேண்டாம் என்று உங்களுடைய சட்டம் கூறிக்கொண்டி



1986 ஏப்ரல் 5] [திரு. அ. மலர்மன்னன்]

இருக்கிறது ஆனால் காலையிலே 8 மணிக்கு ஒரு பலசரக்கு கடையிலே. வியாபாரி தன்னுடைய வியாபாரத்தை ஆரம்பித்தால் காலை 11 மணி அல்லது 12 மணிக்குள் 500 ரூபாய முதல் 1000 ரூபாய் வரை வியாபாரம் செய்திருப்பார்களானால், டி.சி.டி.ஓ அல்லது ஏ.சி.டி.ஓ. அவர்கள் செல்லுகின்ற நேரத்திலே அங்கே இருக்கின்ற கணக்குகளை சரிபார்க்கின்ற நேரத்திலே, நேற்றைக்கு இருப்புகளையும் இன்றைக்கு விற்றிருக்கிற கணக்குகளையும் கூட்டிக் கழித்து, போடப்பட்டு இருக்கிற பில்களுக்கு உரிய தொகை இருக்கிறதா? என்று பார்த்து, அதிகமாக இருக்கின்ற 250 ரூபாய் அல்லது 300 ரூபாய்த் தொகைக்கு உத்தேச வரி விதிப்பு பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மென்ட் என்ற முறையில் இன்றைக்கு 500 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரையில் விதிக்கின்ற கொடுமை நிலவிக் கொண்டு இருக்கிறது. இந்த பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மென்ட் காரணமாக ஏழை சிறிய வியாபாரிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து உத்தேச வரி விதிப்பை அறவே நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் உள்ள வரி விதிப்புக் கொள்கையால் சீர் குலைந்து இருக்கிற வியாபாரிகளுச்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. நலிந்த வியாபாரிகளுக்கு மறுமலர்ச்சி அளிப்பதற்காக 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே திருநெல்வேலியிலே வணிகர்களுடைய சங்கத்தின் மாநாட்டிலே அன்றைய தமிழக முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த மாநாட்டிலே ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டம் 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி வணிக நல வாரியம் என்று அமைக்கின்ற திட்டமாகும். ஆனால் அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்று, அந்தக் கோப்புகள் இன்றைக்கு நம்முடைய அலுவலகத்திலே தூங்கிக் கொண்டு இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். 1975 ஆம் ஆண்டிலே இந்த வணிக நல வாரியத்தை அமைத்திருந் தால் 1 கோடி ரூபாயில் முடிந்து இருக்கும். தற்போது ஆரம் பிக்க வேண்டும் என்றால், குறைந்தபட்சம் 10 கோடி ரூபாயாவது ஆகும். எனவே அரசு இந்தத் தொகையை ஒதுக்கி இந்த வணிக நல வாரியத்தை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அன்றையதினம் வருவாய்த்துறை அமைச்சராக இருந்த சாதிக் பாட்சா அவர்கள் ஒரே நேரத்திலே 59 பொருட் களுக்கு ஒருமுனை வரியாக விதித்தார்கள்.

(முற்பகல் 11.30)

ஒரு முனை வரியாக விதிக்கின்ற நேரத்திலே வரி விகிதங்களை ஏற்றவில்லை என்பதையும் இந்த அரசுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அத்தியாவசியப் பண்டங்களான மிளகாய், புளி, எண்ணெய் ஆகியவைகளுக்கும் பருப்பு வகைகளுக்கும் அரசே வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே

நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் சென்ற ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மல்லி, மிளகாய் போன்ற ஐந்து பொருட்களுக்கு பல முனை வரி 8 சதவீதத்தை ஒரு முனை வரியாக அறிவித்து, இந்த அரசு விற்பனை வரியை (Sales point) நிலையிலே இருந்தது. ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்டபோது 5 பொருட்களுக்கு வெல்லத்தைத் தவிர மற்ற நான்கு பொருட்களின் விற்பனை மீது (Sales point)-ல் ஒரு முனை வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே வெல்லத்திற்கும் (Sales point) ஒருமுனை வரி விதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் 10 ரூபாயாக இருந்த லைசென்ஸ் விகிதத்தை 100 ரூபாயாக உயர்த்தி இருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதைப் போல 2 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் 10 லிருந்து 100 ரூபாயாக உயர்த்தும்போது 10 மடங்கு அதிகமாக கட்ட வேண்டிய நிலைக்கு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை குறைக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆர்னால்ட் டயாம்பி என்ற பொருளாதார மேதை அன்றையதினம் ஒன்றைக் கூறினார்கள். அதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். வரி விகிதம் குறையும்போது தான் வரி ஏய்ப்பு குறையும். வரி விகிதம் உயரும்போது வரி ஏய்ப்பு பெருகும் என்ற உண்மையை நீங்கள் உணர்ந்து இன்றைய தினம் பல்வேறு நாடுகளிலே உள்ளதைப்போல டர்ன்ஓவர் டாக்ஸ் என்ற முறையிலே (Ditress turnover tax) என்ற முமறயிலே 2 சதவீதம் வரியாக இன்றையதினம் நீங்கள் ஆக்குவீர்களே யானால் இன்றைக்கு இருக்கிற 1,500 கோடியிலிருந்து 2,000, 3,000 கோடி வரையில் இந்த வருவாய் பெருகிட வசதிகள் ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போல ஒசக்கிள் சாமான்களுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல துத்தநாகம் போன்ற இரும்பு வாளிகளுக்கு நீங்கள் இன்றைய தினம் வரி விதிப்பு அளித்திருக்கிறீர்கள். ஆனால் ஏழை எளிய மக்கள் அந்த வாளிகளை உபயோகிப்பதைவிட இன்றைக்கு பிளாஸ்டிக் வாளிகளைத்தான் அதிகமாக உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, வரிகளைக் குறைக்கின்றபோது ஏற்கெனவே ஒட்டுமொத்தமாக வியாபாரிகள் கேட்டுக்கொண்டிருக்கிற ஒரு முனை வரியை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி வணிகவரி ஆலோசனைக் குழு இன்றையதினம் 1985 ஆம் ஆண்டு அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அந்த குழு ஒருமுறை கூட கூடவில்லை.



எனவே குழுவைக் கூட்டுகின்ற நேரத்திலே அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக் கொண்டு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற மானிய கோரிக்கையின் மீது ஒருசில கருத்துக்களை சொல்வதற்கு என்னை பணித்த உங்களுக்கு நன்றி சொல்லி இங்கே வணிக வரி துறையின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற மானியத்தை வரவேற்று நான் பேச விழைகிறேன். எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எல்லாம் வணிகவரி துறையிலே அதிகமாக அனுபவமிக்கவர்களும் இன்னும் சொல்லப்போனால் நேரடியாகவே ஈடுபாடு உடையவர்களும் அதிகம் பேர் இதிலே கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் மலர்மன்னன் அவர்கள் ஒரு பொருளாதார நிபுணர் சொன்ன கருத்து ஒன்றை தெரிவித்தார்கள், வரி விகிதம் குறையும் போது வரி ஏய்ப்பு அதிகமாகும் என்றும் வரி விகிதம் பெருகும்போதும் வரி ஏய்ப்பு குறையுமென்றும் சொன்னதாகச் சொன்னார்கள். அவர் சொன்னாரோ இல்லையோ ஆனால் இவர் தன்னுடைய அனுபவத்தை சொன்னார் என்பதில் இங்கே உள்ளவர்களுக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்று கருதுகிறேன். ஏனென்றால் மக்களுக்கு வரியை அதிகமாகப் போடுவதன் மூலமாக ஆட்சியை நடத்தியவர்கள், அன்று அதிகமான வரியைப் போட்டு ஆட்சியை நடத்திவிட்டு எவ்வளவு தூரம் இந்தத் துறையை ஏமாற்றினார்கள் என்பது இங்கே தமிழகம் கண்டு கொண்ட ஒன்றுதான்.

அதேபோல் இன்னும்ஒரு கருத்தைச் சொன்னார்கள். அண்டைய மாநிலங்களில் எல்லாம் வர்த்தகர்கள் கொழுக்கிறார்கள்.

திரு. சு. சிவராஜ்: பாய்ன்ட் ஆப் ஆர்டர் சார், சபையில் கோரம் இல்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): கோரம் இருக்கிறது. உட்காருங்கள்.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இப்போது பேசிக் கொண்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்லிய மேற்கோளை சுட்டிக்காட்டி அது என்னுடைய சொந்த அனுபவம் என்று

சொல்லுகிறார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், சொந்த அனுபவம் யார் யாருக்கு இருக்கிறது. என்பதை நான் நன்கு அறிவேன். வரி இழப்பு இங்கே ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறபோது இன்றைக்கு இருக்கின்ற நிலைமையைத் தான் எடுத்துச் சொன்னேனே தவிர வரி இழப்பு உங்களால் ஏற்படுகிறது என்பதையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) அவர் என் மேல் குற்றம் சாட்டுகிறார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.செ. செம்மலை): உங்கள் மேல் குற்றம் சாட்டவில்லை.

திரு. அ. மலர்மன்னன்:: மாற்றுத் தலைவர் அவர்களே. ஆகவே ஒட்டுமொத்தமாக வியாபார பெருமக்கள் உங்களுடைய வரிக்கொள்கையால் இன்றைக்கு இந்த நிலைமைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்களே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இப்போது வியாபாரம் செய்யவில்லை. நான் வியாபாரி இல்லை என்பதையும் அவரிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.செ. செம்மலை): ஒருவருடைய அனுபவம்தான் மற்றொருவருக்குப் பாடமாக அமையும்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: தற்காலிகத் தலைவர் அவர்களே, அவர்கள் பேசும்போது இன்னும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அண்டை மாநிலத்தில் இருக்கிற வியாபாரிகள் எல்லாம் கொழித்து இருக்கிறார்கள். வரி விதிப்பின் மூலம் இங்கே இருப்பவர்கள் மிகவும் வாடிப் போய் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு காரணம் அங்கே வரி விதிப்பு அதிகமாக இருந்தால் அந்த வரியை சுமப்பவர்கள் சாதாரண மக்களே தவிர வியாபாரிகள் அல்ல. ஆகவே, எங்கே வரி அதிகமாக இருக்கிறதோ அங்கே வியாபாரிகள் கொழிப்பார்கள். அங்கே இருக்கின்ற சில அதிகாரிகள் கூட தவறு செய்ய தூண்டுவார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வரியை குறைப்பதன் மூலம் எந்தவிதமான வரி வசூலும் செய்ய வேண்டிய அவசியம் இல்லாததால் அதிகாரிகள் தவறு செய்ய வாய்ப்பு இருக்காது, அவருக்கு அந்த எண்ணம் ஏற்படாது. ஆகவே நான் பேசியது அவரை சுட்டிக்காட்டினேன் என்று வருத்தப்பட்டுக் கொண்டார்கள். அவரும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையை பின்பற்றி வருகிறவர், நாங்களும் அந்த கொள்கையில் கொஞ்சம்கூட மாறுபடாமல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பின்னாலே நடந்து கொண்டு இருக்கிறவர்கள் என்பதை அறிவோம். ஆகவே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். "Tap the rich and pat the poor" என்று வசதி படைத்தவர்கள் இடத்திலே தட்டி எடு, வசதி இல்லாதவர்கள் இடத்திலே தட்டிக் கொடு. அதைகூட சில பேர் காலப்போக்கில் அதற்கு விளக்கம் எப்படி சொல்வார்கள் என்றால், வசதி படைத்தவர்கள் கயில் இருப்பதை தட்டிவிட்டு பறித்துக் கொண்டுவா,



வசதி இல்லாதவர்கள், தூங்கிக்கொண்டு இருப்பவர்கள் முதுகில் அறைந்து அவர்களிடத்திலே கொடு என்று கூட விளக்கம் சொல்லக்கூடும். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்படி சொல்லவில்லை. வசதி படைத்தவர்கள் இடத்திலேயே சென்று அவர்களுடைய கதவுகளை தட்டி, பக்கத்தில் இருக்கின்ற, தூங்கிக் கொண்டு இருக்கின்ற ஏழையை பாருங்கள். அந்த ஏழை விழித்துக் கொண்டு நம்மை அடித்து பிடுங்குவதற்கு முன்னதாக கொடுத்துவிட வேண்டும் என்று அந்த வசதி படைத்தவர்கள் இடத்தில் அவருடைய முதுகில் தட்டி, அவரிடத்திலிருந்து வாங்கி, ஏழைகளுடைய கையில் கொண்டு போய் தூங்கிக் கொண்டு இருக்கிறாயே இது உன் தலை விதி அல்ல, அதை காப்பாற்றுவதற்கு நான் இருக்கிறேன் என்று அவனை தட்டி எழுப்பி கொடு என்று தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். இதை எதற்கு சொல்லுகிறேன் என்றால், தமிழகத்தினுடைய மக்களுடைய எண்ணத்திலே அண்ணா அவர்கள் தோன்றுவதற்கு முன்னதாக இருந்த எண்ணம் இது. அவரவர்கள் தலை எழுத்து. வசதி இல்லாதவர்களுக்கு வசதி ஏற்படவில்லை என்றால் அது என்னுடைய தலை எழுத்து. வசதி படைத்தவர்கள் நிறைய சம்பாதிக்கிறார்கள் என்றால் அது அவனுடைய தலை எழுத்து என்று இருந்த எண்ணத்தை ஸ்வாமி விவேகானந்தர் அவர்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் சொல்லியது.

"It is the coward and the fool who say 'this is my fate,' but it is the strong man who stands up and says' "I will make my fate."" என்று சொன்னார்கள். என்னுடைய தலை எழுத்து என்று யார் சொல்லுவார்கள் என்றால் கோழைகளும், முட்டாள்களும் தான். ஆனால் தைரியசாலிகள், உழைக்கும் எண்ணம் உடையவர்கள், திறமை உடையவர்கள், என்னுடைய தலை விதியை நானே நிர்ணயிப்பேன் என்று சொல்ல வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த எண்ணத்தை உருவாக்கத் தான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்

'Tap the rich and pat the poor.'

என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே தமிழகத்திலே வரி இல்லாமலே, சாதாரண சாமானிய மக்கள் வாங்குகின்ற பொருட்களுக்கு வரி இல்லாமல், ஏழை எளிய மக்கள் அன்றாடம் வாங்குகின்ற அத்தியாவசியமான பொருட்களுக்கு வரி இல்லாமல், இன்றைக்கு ஆட்சி நடக்கிறது.

(முற்பகல் 11-40.)

இதிலே வள்ளுவனைக் கேட்டால் அவர் சொல்வார். ஆட்சியா இருந்தாலும் சரி, வீடாக இருந்தாலும் சரி அல்லது ஓ- அமைப்பாக இருந்தாலும், எப்படி நடக்கவேண்டுமென்

வள்ளுவப் பெருந்தகையைக் கேட்டால் அவர்கள் வருமானத்தைப் பெருக்குவதைவிட, செலவைக் குறைக்க வேண்டுமென்று சொல்வார்கள்.

''ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை
போகாறு அகலாக் கடை''

என்று சொல்லியிருக்கிறார். ஆகவே வருமானம் அதிகமாக இல்லையென்றாலும், வருவாயில் போக்கிய செலவு மிகையாக இருந்தாலும், நிச்சயமாக அந்த வீடு அல்லது அந்த நாடு சிறப்பாக இருக்குமென்பதுதான் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. அந்த வகையில்தான் இன்று புரட்சித் தலைவர் அரசு வரி போடுகின்ற விதத்தில், பொது மக்களுக்கு, வசதி படைத்தவர்களுக்குக் கூட அதிகமாக வரி போடாமல், ஓரளவிற்கு வரி போட்டு, அதை முறையாக நிர்வகித்து, இன்றைக்கு நல்ல பல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று இங்கே பல்வேறுபட்ட பொருள்களுக்கு ஆயத் தீர்வை போட்டிருப்பதை, 1985-லே நம்முடைய புரட்சித் தலைவர் அரசு எதிர்த்திருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2—11—1983-லே நடந்த மாநாட்டில் திரிபாதிக் குழு என்ற குழுவிலே சாதாரண பொருட்களுக்கு வனஸ்பதி, மருந்துப் பொருட்கள், மருந்து, சிமெண்ட், காகித அட்டை, பெட்ரோலியம் ஆகிய பொருட்களுக்கு வணிக வரிக்கு பதிலாகக் கூடுதல் ஆயத்தீர்வையைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அதில் பெரும்பாலான பொருட்கள் சாதாரண மக்களுக்குக் கிடைக்க வேண்டியிருப்பதால். புரட்சித் தலைவர் அதை எதிர்த்தார்கள். இந்தியாவிலே பல்வேறு மாநிலங்கள் எதிர்த்தார்கள். அது இன்றைக்கு மத்திய அரசின் ஆய்விலே இருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை ஏழை எளிய மக்களுக்கு, அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற பொருள்களுக்கு வரி இல்லாமல், அதிலும் கூட வியாபாரிகள் சொன்னார்கள். பலமுனை வரி எங்களுக்குப் பல விதத்திலும் பாதிக்கிறது. ஆகவே அதை ஒரு முனை வரியாக மாற்றவேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதுபோல் வியாபாரிகளும், வர்த்தகர்களும் எந்தவிதமான பாதிப்பையும் சொல்லவில்லை. இங்கே அவர்களுக்குத்தான் பாதிப்பு என்று சொல்கிறார்களே, அவர்களுக்கு பாதிப்பு அவ்வளவாக இல்லை. ஏன் இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், ஏற்கனவே, வரி விதிப்பிலே தமிழகத்திலுள்ள வியாபாரிகள் அத்தனை பேரும் போராட்டம் நடத்தினார்கள். இதை தமிழகம் நன்கு அறியும். ஆனால் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையானாலும் சரி, அல்லது இந்த மானியக் கோரிக்கையாக இருந்தாலும் சரி, தமிழகத்திலுள்ள எந்தத் தரப்பு மக்களும்



அவ்வளவாக எதிர்க்கவில்லை. அதற்குக் காரணம் புரட்சித் தலைவர் அரசு நிதானமாக, போட வேண்டியவர்களுக்கு மட்டும் வரியைப் போட்டிருக்கிறது. பொது வரியை ஒட்டுமொத்தமாகப் போட்டு, இருந்த கூடுதல் வரியைக் குறைத்திருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமையிலே வரிகளைக் குறைத்து பொதுமக்களுக்கு எவ்வளவு பொருட்கள் தேவைப்படுகிறதோ அந்தப் பொருட்களுக்கெல்லாம் வரி விலக்கு அளித்து செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை என்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வணிக வரித்துறையின் மூலமாக பல்வேறு இடங்களில் கட்டிடங்கள் சரியில்லை,, அங்கே பல விதமான தளவாடச் சாமான்கள் கூட இல்லை என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, ஒரு 'மாஸ்டர் ப்ளான்' என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றாலும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அந்தந்த மாவட்டங் களில், மாவட்டத் தலைநகரங்களில், கோட்டத் தலைநகரங் களில் இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் கட்டாயம் அலுவலகம் இருக்க வேண்டுமென்ற வகையில் அவைகளைச் செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக மிகப் பெரிய சுங்கச் சாவடிகள் இருக் கின்றன. என்னுடைய தொகுதியில், கொள்ளிடத்தில் ஒரு பெரிய சுங்கச் சாவடி இருக்கிறது. அது மிகப் பெயர் போன சுங்கச் சாவடி. அதை நான் உணவுத் துறையிலும் கூட சொன்னேன். ஒரு கீற்றுக் கொட்டகையில் தான் இருக்கிறது. அதற்கு ஒரு பாதுகாப்பான இடம் இருந்தால், அங்கே இருப் பவர்களுக்கு வசதியாக இருக்கும், பொருட்கள் கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்க முடியும்.

யாருக்குத்தான் வரி போட வேண்டுமென்று இங்கே கேட்டார்கள். குதிரைப் பந்தயத்திற்கு வரி அதிகமாக ஏற்றியிருக் கிறார்கள். ஓட்டல்களில் வரியை அதிகம் செய்திருக்கிறார்கள். அதன் மூலமாக குதிரைப் பந்தயத்தில் சென்ற ஆண்டு 15 சதவீத வருமானம் கூடுதலாக அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அதே போல், ஓட்டலில் தங்குகிறவர்களுக்கு போட்ட வரியின் மூலம் சென்ற ஆண்டு 86 இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இது ஏறக்குறைய 53 சதவிகிதம் அதிகமாக கிடைத்திருக்கிறது. இப்படி சாதாரண மக்களுக்கு வரி இல்லாமல், வசதி படைத் தவர்களுக்கு வரியைப் போட்டும், அந்த வரி கூட அவர்களைப் பாதிக்காத அளவுக்குப் போட்டதன் விளைவாக, இன்றைக்கு தமிழகத்திலே ஒரு நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இங்கே நான் கடைசியாகக் கூறிக் கொள்ள விரும்புவது, எண்ணெய்க்கு ஒரு முனை வரியை விதித்து இருக்கிறார்கள். அதனுடைய உப பொருளாகிய புண்ணாக்கிற்கு பல முனை வரி இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் அதைத் தெரிவித்து, அதையும் ஒரு முனை வரியாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல சில

பொருட்களுக்கு வரி விதிப்பு குறைவாக இருப்பதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். நான் அதிகமாகப் பேசிக் கொண்டே போனால், அடுத்தப்படியாக மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்கள் மணி அடித்து விடுவார்கள் என்ற காரணத்தினால் இதோடு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, விற்பனை வரி, அதே போன்று கேளிக்கை வரி போன்ற வரிகளை இன்று கண்காணித்துக் கொண்டிருக்கின்ற இலாக்காக்கள் சம்பந்தமாக இங்கே சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே நிதிநிலை அறிக்கையின் மீது நிதி அமைச்சர் அவர்களால் விற்பனை வரியிலிருந்து-சில பொருட்களுடைய விற்பனை வரியை எடுத்து விடுவதாகவும், சிலவற்றை மல்ட்டி பாயிண்ட்டிலிருந்து சிங்கிள் பாயின்ட்டாக மாற்றுவதாக எல்லாம் அறிவிக்கப்பட்டது.

இதிலே நாம் ஒட்டு மொத்தமாக, கூட்டியதையும், குறைத்ததையும், மாற்றியதையும் எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சில பொருட்களைப் பொறுத்தவரையில், விற்பனை வரி, மல்ட்டி பாயிண்ட்டிலிருந்து சிங்கிள் பாயின்ட்டாக கன்வர்ட் பண்ணியதன் காரணமாக இன்று அந்தத் தொழில்களைப் பாதிக்கக்கூடிய முறையில் சில நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள்.

குறிப்பாக, வெஜிடபிள் ஆயில்—இந்தப் பொருளைப் பொறுத்தவரையில், மல்ட்டி பாயின்டிலிருந்து சிங்கிள் பாயின்ட்டாக கன்வர்ட் செய்யப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக வரி உண்மையிலேயே அதிகப்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அரசுக்கு அதிகமான வருவாய் ஏற்படக்கூடிய நிலை தான் இன்று ஏற்படும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே போல, யார்ன், ஜேகரி போன்ற பொருட்களுக்கு இருந்த மல்ட்டி பாயின்ட் டாக்ஸ், சிங்கிள் பாயின்ட் டாக்ஸாக கன்வர்ட் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த மல்ட்டி பாயின்ட்டிலிருந்து சிங்கிள் பாயின்ட்டாக கன்வர்ட் செய்ததன் காரணமாக அந்தத் தொழில்கள் மேலும் பாதிக்கப்படாத அளவுக்கு அரசு பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது போல, மத்திய அரசு, அடிஷனல் எக்சைஸ் டியூட்டி, ஹேண்ட்லூம் குட்ஸ் உட்பட டெக்ஸ்டைல் குட்ஸுக்கு விற்பனை வரிக்குப் பதிலாகப் போட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில், சேல்ஸ் டாக்சை எடுத்து விட்டு, அடிஷனல் எக்சைஸ் டியூட்டி அதிகமாகப்



பொருள்கள் மீது போட வேண்டும் என்ற எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது என்பதும், அதைப் பல மாநிலங்கள் இன்று ஒத்துக் கொள்ளவில்லை என்பதை எல்லாம் இங்கே குறிப்பிடப் பட்டிருக்கிறது.

ஆனால், நான் என்ன சுட்டிக் காட்ட விரும்புகிறேன் என்றால், இந்த ஹேண்ட்லூம் குட்ஸைப் பொறுத்தவரையில் மாநில அரசு சேல்ஸ் டாக்ஸ் போட முடியாது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இன்னும் சில மாநிலங்களிலே இந்த மாநிலத்திலிருந்து செல்லக்கூடிய கைத்தறித் துணிகளைப் பொறுத்தவரையில், 'ப்ரைஸ்டு அவுட்' என்ற நிலை ஏற்பட்டிருப் பதன் காரணமாக, அப்படிப்பட்ட டெக்ஸ்டைல் அரங் கத்திலே இன்றைக்கு பயன்படுத்தக் கூடிய யார்ன், டை போன்ற வற்றைப் பயன்படுத்தக் கூடிய பொருட்களுக்கு எல்லாம் ஒரு கட்டத்திலே சேல்ஸ் டாக்ஸ் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதிலேயிருந்து விதிவிலக்கு அளிக்கின்ற முறையில் ஒரு நிலை ஏற்பட வேண்டும். ஏற்கனவே, ஹேண்ட் லூம் அரங்கம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு சூழலிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாடறியும். ஆகவே, அப்படிப்பட்ட அந்தத் தொழிலைச் சார்ந்த பொருட்களுக்கு இதிலேயிருந்து ஒரு பாதுகாப்பு ஏற்படும் முறையில் விஷயங்களை அமைக்க வேண்டும்.

(முற்பகல் 11-50)

யார்ன், ஹோசைரி ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்றைக்கு அவசியம் தேவை.

மக்கள் அதிகமாக வாங்கிப் பயன்படுத்துகின்ற ஒரு பொருள் சைக்கிள்கள், டூ வீலர்ஸ் என்பதை நாடு அறியும். எனவே, சைக்கிள்களுக்கும், அது போன்றே டூ வீலர்ஸ்-க்கும் போடப் பட்டுள்ள விற்பனை வரியைக் குறைக்கவோ அல்லது முழுமை யாக எடுத்து விடவோ முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, எலக்ட்ரிக் குட்ஸைப் பொறுத்தவரையில் பாண்டிச்சேரி, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலேயெல்லாம் வரியைப் பொறுத்தவரையில், பல சலுகைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்தத் தொழில் களின் வளர்ச்சிக்காக அப்படிப்பட்ட தொரு நடவடிக்கையை இந்த அரசு எடுக்க முடியுமா என்பதைப் பற்றி பரிசீலிக்க வேண்டு மென்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

128/54—14

இன்றைக்கு ஊறுகாயைப் பொறுத்தவரையில், பெரிய பாட்டில்களிலேயும் அல்லது டின்களிலேயும் தயாரித்து விற்கப் படும் ஊறுகாய் அல்லாமல் ஐந்து காசிலேயிருந்து 25 காசு வரையிலேயும் விலை உள்ள 50 கிராம் எடை உள்ள சிறிய ஊறுகாய்ப் பொட்டலங்களும் இன்றைக்கு விற்கப்படுகின்றன. இப்படி 50 கிராம் வரை உள்ள சிறு பொட்டலங்களாக ஊறுகாயைத் தயாரித்து விற்கின்ற வியாபாரிகளுக்குப் பல முனை விற்பனை வரி விதிக்கப்படுவதாக அறிகிறேன். இப்படிச் சிறிய பொட்டலங்களாகத் தயாரித்து விற்கின்ற அந்தப் பொருட்களுக்கு பல முனை விற்பனை வரியிலிருந்து முழுக்க வரி விலக்கு கொடுப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று பணிவன் போடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இப்படிப்பட்ட ஊறுகாய்களைப் பொறுத்தவரையில், பெரிய பாட்டில்களிலோ அல்லது டின்களிலோ தயாரித்து விற்கும் முறையிலே உள்ளவர்களுக்கு இருக்கின்ற வசதிகள் கூட இவர்களுக்குக் கிடையாது; அந்த முறையிலே இவர்களாலே செய்ய முடியாது. ஏறத்தாழ சிறு தொழில் என்ற முறையில் ஈடுபட்டு, வீடுகளிலே உள்ள பெண்களை வைத்து இப்படிப்பட்ட வேலையைச் செய்து, ஒரு சின்ன இலாபத்திலே அந்தத் தொழிலை நடத்தி வருகிறார்கள். இதற்கு உள்ள இடையூறு என்னவென்றால், அதிகமாக இதைப் பாதுகாத்து வைத்துக் கொள்ள முடியாது, சீக்கிரத்தில் கெட்டுப் போகும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஊறுகாய்களுக்கு விதி விலக்கு அளிப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக அமைச்சரவர்களுக்கு அவர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன்.

அதே போன்று இன்னொரு விஷயம் என்ன சொல்ல வேண்டும் என்றால், இந்த லோகல் டாக்ஸைப் பொறுத்த வரையில் இன்றைக்கு கடைக்குக் கடை, இடத்திற்கு இடம், நேரத்திற்கு நேரம் மாறிக் கொண்டு இருக்கிறது. ஏன் இப்படிப் பட்ட ஒரு நிலை ஏற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. ஒரே நகரத்திலே நாம் போய்ப் பார்க்கின்ற நேரத்தில், ஒரு பகுதியில் ஒரு பொருளுக்கு ஒரு விலையைச் சொல்கிறார்கள்; இன்னொரு பக்கத்தில் அதே பொருளுக்கு இன்னொரு விலையைச் சொல்கிறார்கள்; ஆகவே, இப்படிப்பட்ட நிலையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

செக் போஸ்டுகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த செக் போஸ்டுகளைப் பொறுத்தவரையில் போதுமான அளவிற்குப் பாதுகாப்பும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாததன் காரணமாக லாரிகள் அங்கே கட்டப்பட்டிருக்கும் அந்தக் கம்பங்களை இடித்து நொறுக்கி விட்டுச் செல்லும் நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட பல நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் அரசினுடைய கவனத்திற்குச் சென்றிருக்கிறது. ஆனால், இந்த செக் போஸ்டுகளைப் பொறுத்தவரையில் அங்கே வேலை செய்யும் ஊழியர்களுக்கு, இப்படி லாரிகளிலே பொருட்



களைக் கடத்திக் கொண்டு செல்லும் நேரத்தில் அதைத் தடுத்து நிறுத்துவதற்குப் போதுமான வசதிகள் இன்றைக்கு இல்லை. அதை நிச்சயமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இந்தத் துறையிலே இன்னும் பீரோகிராஸி கடுமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையை நாம் பார்க்க முடிகிறது. இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்கள் இருக்கிற பியூராக்ரஸி காரணமாக, பல விஷயங்களை, நல்ல முறையிலே, அமைத்துக் கொள்ள முடியவில்லை, மக்களுக்கு நன்மை ஏற்படுத்த முடிய வில்லையென்று சுட்டிக்காட்டினார். இன்று அது ஏறத்தாழ இந்தத் துறையிலே இருந்து கொண்டிருக்கிறது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, 1959 ஆம் ஆண்டிலே இயற்றப்பட்ட தமிழ்நாடு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸில் குறிப்பிட்டுள்ள பல பொருட்களைப் பொறுத்தவரையில், காலாகாலத்திலே, அசெஸ் செய்து, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படாததன் காரணமாக, இன்று துறைக்கு எப்படி கஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது? அரசுக்கு வருவாய் ஏற்படுவதிலே எப்படிப்பட்ட சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி யெல்லாம் காம்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா, 1983-84-வது ஆண்டினுடைய ரெவின்யூ ரிசீட்ஸ் சம்பந்தப்பட்ட ரிப்போர்ட்டிலே 8-வது பாராவிலேயிருந்து 32-வது பாரா வரை விரிவாகச் சொல்லி இருக்கிறார். நான் ஒரு எக்சாம்பில் சொல்கிறேன், 11-வது பக்கத்திலே சொல்லப் பட்டிருக்கிறது.

'On sale of formic acid, sodium bi-sulphate, sodium sulphite, sodium sulphate and other chemicals, amounting to Rs. 7,15,041 made by a dealer of Thuckalay, Kanyakumari district, during the years 1977-78 to 1980-81, tax was levied at the general rate of four per cent instead of at eight per cent. The mistake resulted in tax being levied short by Rs. 28,878 (inclusive of surcharge). On the mistake being pointed out in audit, (in June 1981 and September 1982) the assessments were revised and additional demand for Rs. 28,878 was raised. The appeal filed by the dealer was dismissed by the Appellate Assistant Commissioner.

நான் என்ன சுட்டிக் காட்ட விரும்புகிறேன் என்றால், 1977-78-லே ஏற்பட்ட வியாபாரத்திற்கு 1984-வது ஆண்டிலே வரி கட்ட வேண்டிய நிர்பந்தம், சிறு வியாபாரிகளைப் பொறுத்த அளவிலே ஏற்படுகிறது, நிர்பந்தம் ஏற்படுகின்றது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்று இதே சட்டத்திலே முதல் ஷெட்யூலில், ஐட்டம் 74-லே ரா ரப்பர் லாட்டக்ஸ் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்

அடிப்படையிலே இன்று ரப்பர் லாக்டர்ன் அல்லது ரப்பர் லாக்டக்ஸ் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிறு வியாபாரிகள் உட்பட உள்ளவர்கள், பெரிய வியாபாரிகள் உட்பட உள்ளவர்கள், பெரிய பிசினஸ் கம்பெனிகள் உட்பட உள்ளவர்கள் அந்த அடிப்படையிலே அசெஸ்மெண்ட் கட்டிக் கொண்டு வந்தார்கள். ஆனால், தற்போது வட மாநிலத்திலே செயலாற்றிக் கொண்டு வந்த ஒரு கம்பெனி, உயர்நீதி மன்றத்தில் ஒரு கேஸைப் போட்டு தீர்ப்பு வாங்கியிருக்கிறார்கள். raw rubber, namely latex என்று போடப்பட்டிருப்பதனால், லாக்டர்ஸ்தான் அவர்கள் வாங்க முடியுமே தவிர, மற்ற ரப்பர் பொருட்களை அவர்கள் வாங்க முடியாது. அதன் காரணமாக, பல ஆண்டுகளாக, மீடியம் அண்ட் ஸ்மால் ஸ்கேல் வியாபாரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் கொடுக்காத ரிட்டர்ன்ஸ் பேரில் என்ன வரி கொடுக்கப்பட வேண்டுமென்று இன்று தெளிவாகக் குறிக்கப்படாத காரணத்தால், இன்று அந்தக் காலத்திலேயிருந்து அவர்களுக்கு வரி போடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது சிறு வியாபாரிகளைப் பொறுத்த அளவிலும், நடுத்தர வியாபாரிகளைப் பொறுத்த அளவிலும் கடுமையாகப் பாதிக்கக் கூடிய அளவுக்கு இருக்கிறது. பண வசதி உள்ளவர்கள் உயர் நீதி மன்றத்திலே, உச்ச நீதிமன்றத்திலே இப்படிப்பட்ட விஷயங்களிலே கேஸ்களைப் போட்டு, இந்த வரியிலேயிருந்து தப்பித்துச் கொள்ளும் வகையில் மிகப் பெரிய பாதகங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த வரியைப் பொறுத்த அளவிலே, உள் அசெஸ்மெண்ட், அந்த லெவி, இரண்டு வருஷ காலத்திற் குள்ளே முடிக்கப்படுமானால், இன்று சிறு வியாபாரிகளைப் பொறுத்தமட்டில், எப்படிப்பட்ட சிரமமும் ஏற்படாது. சில சமயங்களில், வியாபாரத்தை முடித்து விட்டு வேறு வேலைக்குப் போனால் கூட அப்படிப்பட்ட காலத்தில் அவர்கள் செய்த வியாபாரத்திற்காகச் சொத்துக்களைப் பெறக்கூடிய துரதிருஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இன்று இந்தத் துறையில் ஏற்பட்டிருக்கக்கூடிய கால தாமதத்தை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ, அந்த அளவுக்குக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால், அது சிறு வியாபாரிகளையும் நடுத்தர வியாபாரிகளையும் பாதிக்கக்கூடிய நிலை ஏற்படும்.

(நண்பகல் 12-00)

அதைப்போன்று இன்றைக்கு இந்தத் துறையைப் பொறுத்த வரையில் சிறு வியாபாரிகளும் நடுத்தர வியாபாரிகளும், சிறு தொழில் நடத்துகிறவர்களும் 'ஹராஸ்' பண்ணக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. தொழில் நடத்து கின்றவர்களுக்கு இது நிச்சயமாகத் தெரியும். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் கணக்குகளை 'அப் டு டேட்' வைத்துக்கொள்ள முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். இதைப் பயன்படுத்திக் கொண்டு என்ஃபோர்ஸ்மெண்டி'ல் இருப்பவர்கள். போய் பணம் பெறு



வதற்காக பல நிர்ப்பந்தங்களைச் செய்கிறார்கள் சிறு வியாபாரி களையும் நடுத்தர வியாபாரிகளையும் மிரட்டி, பணத்தைப் பிடுங்குகிற நிலைமை ஏற்படுகிறது. 'பிளிம்சி ரீசன்ஸை' வைத்துக் கொண்டு, ஏதாவது சின்ன சின்ன காரணங்களைச் சொல்லி, சிறு வியாபாரிகளை மிரட்டக்கூடிய நிலைமை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். இல்லை என்றால் பல சிறு வியாபாரிகள் இந்தத் தொழிலை விட்டே ஓடவேண்டிய அபாயம் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று இன்றைக்கு 'டிஸ்டிரிபியூஷன் ரெஜிஸ்டர்' என்று ஒரு ரெஜிஸ்டர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. காலாகாலத்தில் கொடுக்க வேண்டியதைக் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அது மாவட்டத்திலிருந்து வரவேண்டும். மாவட்டத்தில் இருந்து காலாகாலத்தில் வராத காரணத்தால் கடைசி நேரத்தில் அவசர அவசரமாக நம்பர் போடக்கூடிய நிலைமை ஏற்படுவதால் பல சிறு தவறுகள் ஏற்படுகின்றன. அதை வைத்துக்கொண்டு சி.டி.ஓ. போன்றவர்கள் 17(பி) என்ற செக்ஷனைப் பயன்படுத்தி வேலை செய்யக்கூடிய கிளார்க்குகளை கண்டித்து தண்டிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. மாவட்டத் திலிருந்து காலாகாலத்தில் வராத காரணத்தால் ஏற்படுகின்ற இப்படிப்பட்ட சிறு சிறு தவறுகளுக்கு கிளார்க்குகள் தண்டிக்கப் படுவது நியாயமல்ல. இன்றைக்கு கிளார்க்குகளுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. அவர்களுடைய வேலைப்பளுவைக் குறைக்க தேவையான கிளார்க்குகள் நியமிக்கப்பட வேண்டும்.

அதைப்போன்று ஒவ்வொரு மாதமும் 20-ந் தேதிக்குப் முன்னால் வியாபாரிகள் 'மந்லி ரிட்டர்ன்' கொடுக்க வேண்டும், ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது? ஒருசில அதிகாரிகள் சேர்ந்துகொண்டு 20-ந் தேதிக்குள் கொடுக்க வேண்டிய அந்த 'மந்த்லி ரிட்டர்னை' கொடுக்காமல் 25-ந்தேதி அல்லது 26-ந்தேதி கொடுக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதனால் 5 இலட்சம் ரூபாய் அசெஸ்மெண்ட் இருக்கிற இடத்தில் சுமார் 10,000 ரூபாய் இலாபம் வருகிறது. இதை அந்த அதிகாரிகளும் மற்றவர்களும் வாங்கிக்கொண்டு, 25-ந் தேதி வரை மந்த்லி ரிட்டர்னை அனுப்பாமல், பின்னால் 'ஆன்டி டேட்' போட்டு அனுப்பக்கூடிய நிலைமை இருக்கிறது. 'டேட் சீல்' உரிய நாளில் போடாததால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாயில் இழப்பு ஏற்படுகிறது. அந்த வருவாயை இவர்கள் ஏப்பமிடுகின்ற நிலைமை இருக்கிறது. இதை எல்லாம் மனதிலே வைத்து, இந்தத் தவறுகளைத் தடுக்க என்ன முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த முறையில் கடுமையான நடவடிக்கை எடுத்து, அரசுக்கு வரவேண்டிய வருவாயில் இழப்பு ஏற்படாமல் இருக்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கிற ஏ.சி.டி.ஓ-வுக்குக் கூட இது தெரியும். ஏ.சி.டி.ஓ., சி.டி.ஓ. போன்றவர்கள் சேர்ந்துதான் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன.

கடைசியாக, இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு 'என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ்' என்பதைப் பொறுத்தவரையில் சினிமாவுக்கு அதிகமான வரி போட்டுவிட்டார்கள் என்று சொல்லி, வருகிற 9-ந் தேதி சினிமாத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு 'பந்த்' நடத்த முடிவு செய்திருக்கிறார்கள். நியாயமான வரியைப் போடுவதை நாம் ஆட்சேபிக்க முடியாது. என்றாலும் இன்றைக்கு சினிமா என்பது இந்த நாட்டைப் பொறுத்தமட்டில் ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு இருக்கிற ஓரே ஒரு பொழுதுபோக்கு என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆகவே, சினிமாவுக்கு வரியை உயர்த்துவதினால் பாதிக்கப்படுகிறவர்கள் இந்த சாதாரண மக்கள்தான். மக்களிடமிருந்துதான் இந்த வரிப்பணத்தை வசூல் செய்யப்போகிறார்கள். ஆகையால் இந்தத் தொழிலைப் பாதுகாக்கின்ற முறையில், இதிலே ஒரு நெருக்கடியை ஏற்படுத்தாமல், மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாமல் இந்த விஷயத்தை எப்படி சரிகட்ட வேண்டுமோ அப்படி சரிகட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். துரதிர்ஷ்டவசமாக இதற்கு என்ன காரணம் சொல்லியிருக்கிறார்கள் என்றால் 'லோக்கல் பாடீஸ்' வருவாயை உயர்த்துவதற்குத்தான் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸைப் பொறுத்தவரையில் அதிகமான சதவீதம் லோக்கல் பாடீஸ்-க்கு செல்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. லோக்கல் பாடீஸ்-க்கு வருவாய் ஏற்படுத்தி கொடுப்பதற்காக இப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்வது அவ்வளவு சரியாக இருக்குமா? மக்களுக்கும் சிரமம் இல்லாத முறையில் இந்த விஷயத்தைப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சினிமா கொட்டகைகளைப் பொறுத்தவரையில் ஏர் கண்டிஷன் சார்ஜ் என்று வாங்குகிறார்கள். ஆனால் பல நேரங்களில் ஏர் கண்டிஷன் போடுவதில்லை. மெஷின் ரிப்பேர். ஆகவே ஏர் கண்டிஷன் போடப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் ஏர் கண்டிஷன் சார்ஜை வாங்கிவிட்டு இப்படி ஒரு நிலைமையை ஏற்படுத்துவது சரியில்லை. சினிமா கொட்டகைகளைப் பொறுத்த வரையில் சேனிட்டேஷன் கண்டிஷனும் மிக மோசமாக இருக்கிறது. அதையும் நல்லமுறையில் பயன்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. க. சோலைராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் நிர்வாகம் என்ற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று சில கருத்துக்களை இந்த மன்றத்தில் எடுத்துரைக்க நான் விரும்புகிறேன்.



இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கிற மாநிலங்களில் தமிழகம்தான் மத்தியப் பேரரசின் சமூகநலத் திட்டங்களைச் சிறப் பாகச் செயல்படுத்துகிறது என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. இந்த மாநிலம்தான் மத்தியப் பேரரசின் குடும்பநலத் திட்டத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறது என்று சொல்லி, பாராட்டும், பரிசும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் மற்றொரு புறத்தில் சிந்தித்துப் பார்க்கிற சூழ்நிலையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் வருமானமான கஸ்டம்ஸ் வரி, கார்ப்பரேட் வரி, இன்கம்டாக்ஸ் வரி, எக்ஸைஸ் ட்யூட்டி போன்றவற்றில் இருந்து வருகிற நிதியாதாரங்களைப் பிரித்துக் கொடுக்கிற சூழ்நிலையில்நபர்வாரி என்ற அடிப்படையில் அவர்கள் பிரித்துக் கொடுக்கிற காரணத்தால் நம்முடைய வருமானம் குறை கிறது. இப்படி ஒரு புறம் மத்திய அரசினுடைய பாராட்டும், பரிசும் கிடைக்கின்ற நிலைமை இருந்தாலும் மறுபுறம் சிந்தித்துப் பார்க்கிற சூழ்நிலையில் மத்திய அரசின் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துகின்ற தமிழக அரசின் வருமானம் குறைகிறது என்ற அவல நிலைமை இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் இன்றைக்கு புரட்சித்தலைவர் அவர்களின் புனித அரசு கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையில் மக்கள் அன்றாடம் உபயோகித்துக்கொண்டிருக்கிற பொருட்களாக இருக்கின்ற—நான் கூட ஏற்கெனவே இந்த மன்றத்தில் இரண்டுமுறை கேட்டிருக்கிறேன்—வெல்லம், சீரகம், ஈயக்காய் போன்ற பொருட்களுக்கு இருந்த பலமுனை வரியான 5 சதவீதம் என்பது 8 சதவீதம் ஒருமுனை வரியாகவும், தாவர எண்ணெயைப் பொறுத்தவரையில் 3 சதவீதம் பலமுனை வரி என்று இருந்தது 4 சதவீதம் ஒருமுனை வரியாகவும், மாநிலங் களுக்கிடையே நிகழ்கிற தாவர எண்ணெய் விற்பனையின் மீதான வரியை 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகவும் மாற்றியமைத்த தற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து 10 இலட்சம் ரூபாய் வரையில் வரி விலக்குக் கொடுத்து இலட்சக் கணக்கான சிறு கடை வியாபாரிகளுக்கு உதவு கின்ற வகையில் ஒரு உன்னதமான திட்டத்தை ஏற்படுத்தி இருப்பதை உள்ளபடியே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். இன்றைக்கு நாட்டினுடைய நிதிநிலைமைக்கு ஆதாரமாக நிதிநிலை அறிக்கையின் இதயமாக இருப்பது இந்த பொது விற்பனை வரி என்ற துறைதான். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்று சொல்வார்கள். நாட்டினுடைய பல்வேறு மானியங்களுக்கு சுவராக இருக்கக்கூடிய இந்தத் துறை இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற மாநிலங்களில் எல்லாம் 20 முதல் 25 சதவீதம் வரையில் வரி நிலுவையில் இருக்கின்ற சூழ்நிலையில் தமிழகத்தில் மட்டும் 1984—85-ல் 9.5 கோடி ரூபாய் வருமானமும், 1985—86-ல் 10.35 கோடி ரூபாய் வருமானமும் வரியாகக் கிடைத்திருக்கிறது. ஆக

24 சதவீத வருமானத்தைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் என்ஃபோர்ஸ்மென்ட் என்று சொல்லப்படுகிற செயல்படுத்துகிற திட்டம்தான். தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலேயும் வரி பாக்கி என்பது நிலுவையாக இருந்திருக்கின்றது. பிற மாநிலங்களில் இன்றைக்கும் வரி பாக்கி மற்றும் எத்தனையோ சிக்கல்கள் இருந்துகொண்டிருக்கிற சூழ்நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் 20 கோடி ரூபாய் வரி ஒரே ஆண்டில் பல்வேறு சோதனை மூலமும் அதிகப்படியாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மூலமும் வசூலிக்கப்பட்டு இருக்கிறது, அந்த வகையில் ஒரு அசுர சாதனையைப் புரிந்திருக்கிறது நமது அரசு என்கிற நிலைமையில் மேலும் அந்தத் துறையை விரிவுபடுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல இன்றைக்கு தமிழகத்தில் 1967 வரை சில பொருள்களுக்கு வரி போடுகின்ற அதிகாரம் தமிழக அரசுக்கு இருந்தது. பிறகு மத்திய அரசு எடுத்த ஒரு முடிவின் காரணமாக போட்ட ஒரு சட்டத்தின் விளைவாக, நம்மால் துணி, சர்க்கரை, புகையிலை போன்ற பொருள்களுக்கு வரி போட இயலவில்லை. அதன் காரணமாக பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல இடமாற்றம் செய்யப்படுகின்ற பொருள்களை ஒப்படை செய்வதற்கும், அதாவது தமிழகத்திலிருந்து வேறு மாநிலங்களுக்கு பொருள்களை விற்பனை செய்வதற்காக எடுத்துச் செல்லுகிற நேரத்தில் அதற்கு நாம் வரி போட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. அப்படி கன்செண்மெண்ட் டாக்ஸ் போட முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே வெளி மாநிலங்களுக்குச் செல்லுகிற அந்தப் பொருள்களுக்கு, அந்த மாநிலங்கள் வரி விதிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால் பொருள்களை உற்பத்தி செய்து அனுப்புகிறவர்களுக்கு, எந்த வருமானமும் கிடைப்பது இல்லை. அப்படிப்பட்ட வரி விதிப்பு உரிமையைத் தர வேண்டும் என்று சொல்லி பலமுறை நாம் மைய அரசுக்கு கடிதங்கள் அனுப்பியிருக்கிறோம். ஆனாலும் மைய அரசு மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே இதுபோன்ற பொருள்களுக்கு வரி விதிக்கும் உரிமையைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தங்கும் விடுதிகளில் கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே 20 ரூபாயிலிருந்து 49 ரூபாய் வரை வாடகையாக இருக்கிற, அறைகளுக்கு 50 சதவீதம் வரி போடப்படுகிறது. 50 ரூபாய்க்கு மேல் வாடகை உள்ள அறைகளுக்கு மேலும் 10 சதவீதம் கூடுதலாக வரிவிதிக்கப்படுகிறது. ஆனால் அந்த வரிவிதிப்பு ஒரு தலைக்கு, என்று குறிப்பிட்டுக்



கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது ஒரு அறைக்கு 35 ரூபாய் என்று அவர்கள் வாடகையை நிர்ணயித்து இருந்தாலும், அதில் இரண்டு நபர்கள் தங்கினால் வரியை வசூலிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படி அந்த உரிமையாளர்கள் அரசை ஏமாற்றக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படியே இந்த இனத்தில், தலைக்கு என்று பார்த்தாலும், 20 ரூபாய்க்குக் குறைவாகவே போய்விடுவதால் வரி வசூலிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. எனவே இந்தச் சட்டத்திலே ஒரு தலைக்கு என்று இருப்பதை ஒரு அறைக்கு என்று திருத்தி அமைத்தால் வரி வசூலிக்க வசதியாக இருக்கும்.

அதேபோல கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் திரை அரங்குகளில் கொடுக்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுகளில் எப்படி வரி விதிப்பு அலுவலர்களின் முத்திரை குத்தப்பட்டுக் கொடுக்கப்படுகிறதோ அதைப்போலவே, இந்த தங்கும் விடுதிகளில் வாடகை வசூலிப்பதற்கான சீட்டுகளிலும், இந்த விற்பனை வரிச் சட்டத்தின் விதி 26-ன் கீழ் வணிக வரி அதிகாரிகளின் முத்திரை இருக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தால், வரி ஏய்ப்பவர்களைத் தடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னதைப் போல, நானும் சொல்லவிரும்புகிறேன். ஏழை எளிய மக்களின் ஒரே பொழுதுபோககுத் துறையாக இருக்கக்கூடிய அந்த சினிமாத் துறைக்கு காம்பவுண்ட் டாக்ஸ் 10 சதவீதத்தையாவது குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்னொரு பிரச்னையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னதைப் போல துணி, சர்க்கரை, புகையிலை போன்ற பொருள்களுக்கு, மாநில அரசுக்கு கிடைக்கின்ற வருமானம் இப்போது குறைந்திருக்கிறது.

1957–58-ல் 289.95 கோடி கிடைத்திருக்கிறது. ஆனால் 40 சதவீதம் மற்ற பொருள்களுக்கெல்லாம் வரி ஏறிய சமயத்திலே இந்த துணி, புகையிலை, சர்க்கரை போன்ற பொருள்களில் மட்டும், மத்திய அரசின் கொள்கை காரணமாக, 10 சதவீத வரி இழப்பு ஏற்பட்டு, 1982–83இல் அது 102 கோடியாகிவிடுகிறது. அதில் நமக்கு கிடைத்தது 32·17 கோடி தான். அதிலே இழப்பு 94·85 கோடி என்று வருகிறது. எனவே இப்படி 94.85 கோடி ரூபாய்க்கு வரி குறைப்பு ஏற்பட்டதை ஈடு செய்ய, அதற்கான வரிவிதிப்பு உரிமங்களை மாநில அரசுக்கு மைய அரசு வழங்க முன் வருவதோடு, அண்டை மாநிலங்களுக்கு பொருள்களை அனுப்புகிறபோது, அதிலே வரி விதிப்பு உரிமை இல்லாததால், அதிலேயும் 15 கோடி ரூபாய்க்கு நட்டம் ஏற்படுகிறது. ஆக 104 கோடி ரூபாய்க்கு மேல் நமக்கு நட்டம் ஏற்பட்டாலும் கூட இன்றைக்கு பல பொருள்களுக்கு விற்பனை வரியைக் குறைத்திருக்கிறோம். உதாரண

மாக சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய வெல்லம் சீரகம், சீயக்காய், கோழி தீவனம் போன்ற பொருள்களுக்கு பலமுனை வரியை ஒரு முனைவரியாக கொண்டு வந்த சாதனை பாராட்டக் கூடிய ஒன்றாகும். இப்படிப்பட்ட நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கிற இந்தத் துறையின் மானியத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி.

திரு. எ.தெய்வநாயகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும். ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு பல இயக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் இந்த மானியக் கோரிக்கையில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் விற்பனை வரி என்பது பொது மக்களுக்கும், அரசுத் துறைகளுக்கும் பாலமாக அமைக்கப்பட்டுள்ளது. வியாபாரப் பெருங்குடி மக்கள் எதிர்பார்ப்பது எல்லாம் சலுகைகள் என்ற பெயரால் செய்யும்போது மக்களுக்கு இடையூறு இல்லாமல் செய்ய வேண்டுமென்பது தான். இன்றைக்கு தமிழக அரசு 10 பொருள்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். அதை மக்கள் வரவேற்கிறார்கள். சில பொருள்கள் மீது பலமுனை வரியாக இருந்ததை ஒரு முனை வரியாக்கியிருப்பது மக்களுக்கு ஓரளவிற்கு ஆறுதலாக இருக்கிறது. ஆனால் இது எதிர்காலத்தில் எப்படி இருக்குமென்று அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு தாவர எண்ணெய்க்கு ஒருமுனை வரியென்று குறைக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் தாவர எண்ணெயிலிருந்து உற்பத்தியாகும் பிண்ணாக்குக்கு பலமுனை வரி என்று சொல்லப்படுகிறது. அதனை ஒருமுனை வரியாக்க வேண்டுமென்று வியாபாரிகளும், உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து கோரிக்கைக்கு ஆதரவான பதிலை இன்றைய தினமே மன்றத்தில் அறிவிப்பார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

அதைப்போல வெல்லத்திற்கு பலமுனை வரியென்று இருந்ததை ஒருமுனை வரியாக மாற்றியிருக்கிறார்கள். பல மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிற குடிசைப் பொருளான வெல்லம் ஜி. எஸ். டி. என்ற வரிவிதிப்பிற்கு ஆளாகி வியாபாரிகளுக்கு இடையூறுகளை விளைவிக்குமென்று அவர்கள் மத்தியில் பீதி எழுந்துள்ளது. அதைப் போக்குமளவிற்கு செய்து ஜி.எஸ்.டி விதிக்கலாமா, வேண்டாமா என்பதைக் குறித்து இந்த மாமன்றத்தில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சலுகைகள் அளிக்கும் போது வியாபாரிகளுக்கு மட்டும்தான் என்று எண்ணி விடக் கூடாது. அப்படி அளிக்கப்படுவது பொது மக்களுக்கும் தான். காரணம் சமுதாயத்தில் வியாபாரிகளை எப்படி பாவிக்கிறார்கள் என்றால் சமுதாயத்தின் விரோதிகளை



போன்றும், அரசியல்வாதிகளுடைய விரோதிகளைப் போன்றும் பாவிக்கிறார்கள். வியாபாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே நல்ல எண்ணம் வளர வேண்டுமென்றால் அதிகாரிகளுக்கும் வணிகர்களுக்கும் இடையே நல்ல உறவு முறைகள் இருக்க வேண்டும். ஒரு முனை வரியாக விதித்து அதன் மூலம் வருமானத்தைப் பெருக்கி எந்தவிதமான சங்கடங்களும் இல்லாமல் செய்ய வேண்டும். அப்படி செய்தால் வியாபாரிகள் வருகிற வருமானத்திற்கு ஒழுங்காக வரி களைக் கட்டுகிற நிலைமை ஏற்படும். வியாபாரிகள் இப்போது வரிகளை ஒழுங்காக கட்டுகிற தன்மைக்கு சூழ்நிலைக்கு, வந்து விட்டார்கள். கூட்டுறவுத்துறை வளர, வளர சிறு வியாபாரிகள் அவர்களிடத்தில் செல்கிறார்கள். மொத்த வியாபாரிகளும், பெரிய வியாபாரிகளும் தான் இப்போது மீதம் இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணமும் கூட வியாபாரத்தை நல்ல முறையில் செய்து நாட்டு மக்களுக்கு உதவிகரமாக இருக்கவேண்டுமென்ற எண்ணம் வந்து விட்டது. ஆகவே எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லாமல் வியாபாரிகளுக்கு வரிகளை விதித்தால் அரசு எண்ணிய எண்ணம் ஈடேறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பட விநியோகத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போன்று காம்பவுண்டிங் டாக்ஸ் 10 சதவீதம் கூட்டியிருக்கிறார்கள். அது மிகவும் கூடுதலாக இருக்குமென்று கருதுகிறேன். காரணம் கிராமப்புற மக்களை இது மிகவும் பாதிக்கும். இந்தத் துறையில் வரி விதித்தால் அது படத் தொழிலை நடத்துபவர்களை பாதிக்காது. படம் பார்க்கும் மக்களுக்குத் தான் அது சுமையாக இருக்கும். எப்போதும் ஆற்றிலே தண்ணீர் போனால் தோணி தான் மிதக்கும். ஆகவே வரியை உயர்த்தினால் டிக்கட் விலையை உயர்த்தி விடுவார்கள். மக்கள் தான் அந்த உயர்வை சந்திக்க வேண்டியிருக்கும். டிக்கட் விலை கூடிவிட்டதென்று மக்கள் மத்தியிலே சிலர் சொல்வதற்கு ஆவலாக இருப்பார்கள். மாற்றுக் கட்சி நண்பர்கள் இதை எல்லாம் மனதிலே கொண்டு நீங்கள் ஒரு தகுந்த வரி விகிதத்தை செயல்படுத்த வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.20.)

அடுத்தபடியாக சினிமா படத்திற்கு 3 சதவீதம் பல முனை வரியாக விதிப்பதாக இந்த கெசட்டிலே பிரசுரம் ஆகியிருக்கிறது. இதை உங்கள் கவனத்திற்கு தான் கொண்டு வருகிறேன். அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று, அவர்கள் ஒரு முனை வரியாக 3%—ஐ அமுல்படுத்த வேண்டும் என்று, அவர்கள் தலைமையில் இங்கே அறிவிக்கப்பட்டது. இன்று இதை பலமுனை வரியாக ஆக்குவதற்கு திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அது அந்தத் தொழில் மூலம் நமக்கு அதிகமானதாகவும் தவறு.

வருவாய் வருகிற ஒரு தொழில் அது. எனவே அந்தத் தொழிலில் பலமுனை வரியாக ஆக்கினால் பல சிக்கல்கள் வரும். அதிகாரிகளுக்கும், பட வினியோகஸ்தர்களுக்கும் பல சிக்கல்களை இதனால் ஏற்படுத்திக் கொடுத்த பெயர் நமக்கு வரும். எனவே இதை நிவர்த்தி செய்வதற்கு ஒரு முனை வரியாக செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற நல்ல பல திட்டங்களை செயலாக்கும் இந்த தமிழக அரசுக்கு இப்படிப்பட்ட நல்ல ஒரு யோசனையை சொல்லும் போது, நாங்கள் பல குறைகளை சுட்டிக்காட்டினாலும், அதை நிவர்த்தி செய்வதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன், காரணம் என்னவென்றால், இன்றைக்கு வியாபாரப் பெருங்குடி மக்கள், எங்களுக்கு கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்று சொல்லி வருத்தப்படுகிறார்கள். எனவே அவர்கள் குறையை நிவர்த்தி செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்க கூடிய மானியக் கோரிக்கை மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பில் பொருட்களை குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல் முதலியவற்றின் மீது தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3-ஏ பிரிவின் கீழ் வரி விதிப்பு பற்றி பரிசீலித்து வரி வீதத்தைப் பரிந்துரைக்க 1984 ஆம் ஆண்டில் வணிகவரி—அறநிலையத் துறையின் 26-9-1984 ஆம் நாளிட்ட 1078 ஆம் அரசாணையின்படி அரசு இரு குழுக்களை அமைத்தது. முதல் குழு திரைப்படச் சுருள், திரைப்படக் கருவி, நிழற்படச் சாதனங்கள் போன்றவற்றை குத்தகைக்கு விடுதல் மீது விதிக்கத்தக்க வரி வீதம் பற்றி கருத்து தெரிவிக்க வேண்டும் என்று ஒரு பத்தி அமைக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல், ''தளவாடங்கள், இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள், கட்டிடங்கள், கட்டுமானப் பொருள்கள் போன்றவற்றைக் குத்தகைக்கு விடுதல் மீது விதிக்கத்தக்க வரி வீதத்தை தெரிவிப்பதற்காக'' இரண்டாவது குழு அமைக்கப்பட்டது. மேலும் ''இந்த இரு குழுக்களும் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியுள்ளன, அதன் மீது அரசு ஆணைகளை வெளியிட்டுள்ளது'' என்று இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த இரு குழுக்களும் என்னென்ன சிபாரிசுகளை செய்திருக்கின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு பல்வேறு பொருட்களுக்கு பலமுனை வரியாக இருந்ததை ஒரு முனை வரியாக மாற்றியிருக்கிறார்கள். இப்படி ஒரு முனை வரியாக ஆக்கியதை இந்திய கம்யூனிஸ்ட்



கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். காரணம் நாங்கள் பல முனை வரியாக இருப்பதை மாற்றி, ஒருமுனை வரியாக மாற்ற வேண்டும் என்று நீண்டகாலமாகச் சொல்லி வந்தோம். எனவே அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதேபோல் இன்னும் மக்கள் வாங்கக்கூடிய சாதாரண புண்ணாக்கு மற்றும் சில பொருட்களுக்கு எல்லாம் பலமுனை வரியாக இருந்து கொண்டு இருக்கிறது. அதையும் எதிர்காலத்திலே ஒருமுனை வரியாக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு இந்த வரி வீதத்தைப் பற்றி வியாபாரிகள் பல்வேறு கோரிக்கைகளை கொடுத்து இருக்கிறார்கள். குறிப்பாக திருத்துறைப்பூண்டியிலே இருக்கக்கூடிய வர்த்தகர்கள் சங்கம் இன்றைக்கு அரசாங்கம் கொடுத்திருக்கிற சில சலுகைகளுக்கு பாராட்டு தெரிவித்து இருக்கிறார்கள்.

1986-87 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் விற்பனை வரி விலக்கு 50ஆயிரத்திலிருந்து 75ஆயிரமாக உயர்த்தியதை அவர்கள் வரவேற்று இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பதிவுக்கட்டணம் 10 ரூபாய் என்று இருந்து 100 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. இதைக் குறைப்பதற்கு அரசு பரிசீலிக்கவேண்டும் என்று இன்றைக்கு அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை எந்த அளவிற்கு பரிசீலிக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் பார்க்கவேண்டும்.

அதேபோல் இன்றைக்கு ஆர்.சி. பதிவு செய்வதற்கு முன் பணம் 500 ரூபாய் டெபாசிட் கட்டவேண்டியிருக்கிறது. அந்த முன் பணம் 500 ரூபாய் கட்டுவது பெரிதல்ல. ஆனால் இந்த முன் பணம் 500 ரூபாய் கட்டி பதிவு செய்வதற்கு பல மாதங்கள் ஆகின்றன. ஏன் பல மாதங்கள் ஆகிறது என்று சொன்னால் அங்கே இருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கெல்லாம் சில சலுகைகள் அளிக்கவேண்டிய நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு அதிகாரிகள் இன்றைக்கு வற்புறுத்தப்படுகிறார்கள். எனவே ஒரு பதிவுக் கட்டணம் கட்டுவதற்காக 500 ரூபாய் செலவு என்று சொன்னால், அலுவலர்களுக்கும் தனியாக 500 ரூபாய் செலவு செய்யவேண்டிய ஒரு கட்டாயத்திற்கு ஆட்படுகிறார்கள். ஆகவே இந்த நிலைமைகளையெல்லாம் போக்கி, அதிகாரிகள் பதிவுக் கட்டணம் கட்டவந்தால் உடனடியாக அந்தப் பதிவுக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு, அனுமதியை சுலபமாக வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை அமைச்சர் அவர்களும் பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். அதைப்போல இன்றைக்கு இந்த வணிக வரித் துறைக்கு ஒரு ஆண்டுக்கு 1,000 கோடிக்கு மேல் வருமானம் பெறுகிறார்கள். ஆனால் அரசின் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொருளாதாரத்தைத் தரக்கூடிய துறைதான் வணிகவரித் துறை. இந்தத் துறை செம்மையாகவும், கராராகவும் இருந்தால்தான் இந்த வருமானம் முழுவதும் அரசாங்கத்துக்கு வந்து சேரும். ஆனால் இன்றைக்கு ஆயிரம் கோடி என்று சொன்னால் உண்மையிலேயே வருமான வரி அதிகாரிகள் பெரிய பெரிய

கடைகளுக்குச் செல்கிறபோது அந்தக் கடைகளுக்குச் சென்றவுடன் அந்தக் கடைக்கு அதிகாரி வருகிறார் என்று முன்னாடியே தெரிவிக்காமல், அதிகாரிகள் சென்றுவிட்டால் நிச்சயமாக தமிழகத்திலே ஆயிரம் கோடி அல்ல இன்னும் ஒரு 200, 300 கோடி இந்தத் துறைக்கு அதிகவருமானம் கிடைக்கும். ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது என்றால், அதிகாரிகள் அலுவலகத்தை விட்டு புறப்பட்டு விட்டால் அவர் போவதற்கு முன்பாகவே அவருடைய ப்யூன் ஒரு 4 மணி நேரத்துக்கு முன்பாகவே அந்தக் கடைகளுக்குச் சென்று அதிகாரி புறப்பட்டுவிட்டார், வந்துகொண்டிருக்கிறார் என்று சொல்லி விடுகிறார்கள். இதனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், பொய்யாக எழுதப்பட்ட கணக்கை மறைத்து விட்டு எதை அதிகாரிக்கு காட்டவேண்டுமோ அப்பேற்பட்ட கணக்கை இன்றைக்கு காண்பித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் இன்றைக்கு அரசுக்கு வரக்கூடிய பெரும்பாலான வருமானம் குறைந்து அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வருமானம் பெருகிக்கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேலைக்கு வரும்போது எவ்வளவு சொத்து இருந்தது, இன்றைக்கு அவர்களுடைய குடும்பச்சொத்து எவ்வளவு பெருகியிருக்கிறது என்பதையெல்லாம் சர்க்கார் கணக்கில் எடுக்கவேண்டும். காரணம் இன்றைக்கு ஒரு அதிகாரி ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார் என்று உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் ஒரு 10 ஆண்டுக் காலத்தில் 10 லட்சத்துக்கு அவர்கள் அதிபதிகளாக மாறிவிடுகிறார்கள். இப்படி ஏன் மாறுகிறார்கள், பெரிய பெரிய கடைகளிலே, 5 லட்ச ரூபாய் 10 லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் நடைபெறுகிறது. ஆனால் 2 லட்ச ரூபாய்க்குத்தான் கணக்கு எழுதப்படுகிறது. பெரிய கடைகளில் இன்றைக்கு 2 கணக்குகள் இருக்கின்றன. ஒரு கணக்கு கல்லாப் பெட்டியிலும், இன்னொரு கணக்கு, மேலே இருக்கக்கூடிய சரஸ்வதி படத்துக்குப் பின்னாலும் மறைக்கப்பட்டிருக்கிறது. இது அதிகாரிகளுக்கும் தெரியும்; அங்கிருக்கக்கூடிய வியாபாரிகளுக்கும் தெரியும். ஆனால் இந்தப் பிரச்னைக்கு இந்த அளவுக்கே முற்றுப்புள்ளி வைத்தால் தான் வணிகவரித் துறைக்கு நிச்சயமாக இன்னும் 300, 400 கோடி ரூபாய் அதிகமாக வருமானம் கிடைக்கும். அதனால் நான் சொல்வது, நான் வேண்டாவெறுப்போடு பேசவில்லை. கிராமங்களில் அல்லது நகரங்களில் இன்றைக்கு அனுபவபூர்வமாக நடைபெறுவதைத்தான் நான் இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நமது சர்க்கார் இவைகளை தீவிரமாக பரிசீலிக்க வேண்டும்.

குறிப்பாக பனியன்கள் விற்பனை இன்றைக்கு திருப்பூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திருப்பூர் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு ஊற்றுக்கண். ஆனால் திருப்பூரிலே எவ்வளவு வருமானம் வருகிறது, ஏன் வருமானம் குறைகிறது என்பதையெல்லாம் அரசாங்கம் எதிர்காலத்திலே பரிசீலனை செய்து இந்த வணிகவரித் துறையின் மூலமாக வரக்கூடிய வருமானம் இன்றைக்கு ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள். பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்டு சாதாரண மக்களு



டைய வாழ்க்கைத்தரம் உயர்வதற்காகத்தான் இந்த வணிகவரித் வழங்கப்பட்டு துறை வருமானம் பெறப்பட்டு அரசாங்கத்திற்கு அதன் மூலமாக தமிழ்நாட்டினுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல துறை, இந்த நல்ல துறை கொண்டுவந்த ஒருமுனை வரியை நான் வரவேற்று இன்னும் இருக்கக்கூடிய பலமுனை வரிகளையெல்லாம் ஒருமுனை வரியாக ஆக்கி இதன் மூலமாக சில வெல்ல வியாபாரிகள், நாட்டு வெல்லம் உற்பத்தி செய்யக்கூடிய வியாபாரிகள், சிறுசிறு தொழில் செய்யக்கூடிய வியாபாரிகள் எல் லாம் இன்றைக்கு பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவைகளெல்லாம் அகற்றப்பட்டு வியாபாரிகள் வியாபாரம் செய்யவேண்டும்; வியாபாரிகள் மூலமாக வரக்கூடிய வருமானம் அரசாங்கத்துக்குக் கிடைத்து மக்களுக்கு பயன் அளிக்கவேண்டும். இதற்கிடையில் பலமாக அமையக்கூடிய ஒரு சில அதிகாரிகள் செய்யக்கூடிய அந்தத் தவறுகள் எதிர்காலத்தில் சுத்தப்படுத்தப் பட்டு மேலும் பலப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டு வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மகத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனைவரி, ஏனைய வரிகள் தீர்வைகள்—நிர்வாகத்தினுடைய விவாதத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக இந்த விவாதத்தில் எதிர்க்கட்சி அணியினு டைய விவாதத்தை முடித்து வைக்கிறவகையில் சில கருத்துக்களை நான் கூறலாம் என்று நினைக்கிறேன்,

''வேலொடு நின்றான் இடுஎன்றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு''

என்று சொல்லுகிற வள்ளுவ பெருந்தகை ''ஒரு அரசு வசூலிக்கின்ற வரி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மிகுதியாக இருக்குமானால் அது நடு இரவிலே கோலோடு நின்று கொண்டு என்னிடத்திலே பொருளைத் தா என்று கேட்கின்ற ஒரு திருடனுக்குச் சமம் ஆகும்'' என்று கடுமையான வார்த்தைகளை வள்ளுவர் அவர்கள் உபயோகிக் கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால் சமீபத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுந்த ஒரு விவாத விளக்கத்தில் இந்தியாவிலேயே தமிழகத்தில் சேல்ஸ் டாக்ஸ் மிகவும் அதிகம் என்ற ஒரு கருத்தை புள்ளி விவரங்களோடும் ஆதாரங்களோடும் தெரிவித்து இருந்தார்கள். இவைகளை எல்லாம் எதற்கு சொல்லுகிறேன் என்று சொன்னால் இன்றைக்கு பொது மக்களுக்கு தங்களுடைய வாங்கும் சக்தி அதிகரித்த காரணத்தால் அவ்வாறு வாங்குகின்ற பொருட்களுக்கு அரசுக்கும் வரி செலுத்துகின்ற காரணத்தால் அரசாங்கத்தில் வரு கின்ற வருமானத்தின் மூலமாக இன்றைக்கு அரசு நல்ல பல திட்டங்களை செய்து கொண்டு இருக்கிறபோது வாங்குகின்ற வரி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாகச் சென்று விடுமானால் சொடுக் கின்ற மக்களுடைய சக்தி, கொடுக்கின்ற மக்கள் மனப்பான்மை

இவைகள் அரசுக்கு விரோதமாக திரும்பிவிடும் என்பதில் எந்த விதமான மாற்றுக் கருத்துக்கும் இடம் இருக்க முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வரி விதிப்பு பற்றி கௌடல்லியர் அர்த்த சாஸ்திரத்தில் சொல்லுகின்றபோது மிக அழகாக குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அரசாங்கம் வாங்குகின்ற வரி ஒரு தனி மனிதனுடைய வருமானத்திலே 6-ல் ஒரு பங்குக்கு மேலாக அது போகக்கூடாது என்றுமிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லாத காரணத்தால் அர்த்த சாஸ்திரத்தில் கௌடல்லியர் ஒன்றும் சொல்லவில்லை என்றாலும்கூட ஒரு சேல்ஸ் டாக்ஸ் என்பது 6-லிருந்து 8 சதவீதத்திற்கு மேலாக இருப்பது அவ்வளவு சரியான கருத்தாக எனக்கு புலப்படவில்லை.

மொலாசஸ் போன்ற ஒரு சில இனங்களுக்கு நீங்கள் 30 சதவீத வரி வாங்கிக்கொள்ளலாம். பெரும்பாலான கன்ஸ்யூமர் டுரபல்ஸ் கன்ஸ்யூமர்கள் தினந்தோறும் தங்கள் வாழ்க்கைக்கு உபயோகிக்கக் கூடிய பொருட்களுக்கு எல்லாம் 15 சதவீதம் என்றும் 20 சதவீதம் என்றும் வரி இருக்கிறது.

நான் இந்த பட்ஜெட்டில் சில இனங்களைப் பார்க்கும்போது பல விஷயங்களைச் சொல்லலாம் என்று இருந்தாலும்கூட காலத்தின் அருமையைக் கருதி ஒன்று இரண்டை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். முதல் ஐட்டம் ஆன டைப்ரைட்டர்களுக்கு 15 சதவீதம் வரி விதிக்கின்ற இந்த அரசு 30-வது ஐட்டத்தில் உள்ள டைமண்டு போன்ற கவர்ச்சி மிகுந்த, விலை மிகுந்த பொருட்களுக்கு 9 சதவீதம் வரி வாங்குகிறது. டைப்ரைட்டர்கள் போன்றவைகள் எல்லாம் அன்றாட வாழ்க்கையினுடைய அங்கமாக இருந்து வருகிறது. அரசு நிறுவனங்களில் மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்கள் மட்டும் அல்லாமல், தனி மனிதர்களுடைய வாழ்க்கையில் கூட அது சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. இன்றைக்கு வாழ்க்கையையே தங்கள் டைப்ரைட்டர்கள் மூலமாக நடத்துகின்ற பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இருக்கும்போது நீங்கள் அவற்றிற்கு இது போன்று காலத்தினுடைய மாறுபாட்டின் காரணமாக டைப்ரைட்டர்கள் எல்லாம் luxury யாக இருந்து necessity யாக வந்து விட்ட பிறகு கூட இன்றைக்கு அவற்றிற்கு 15 சதவீத வரி வசூலித்துக்கொண்டு இருக்கிறார்கள். டைப்ரைட்டர்கள் மட்டும் அல்லாமல் டைப்ரைட்டர் ரிப்பன் போன்ற அக்சசரிகளுக்கும் 15 சதவீதம் வரி வசூலித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதை அரசு உடனடியாக கவனித்து இந்த டாக்ஸ் ஸ்டரக்சரில் உள்ள ரேஷனலைசேஷனை செய்வதற்கு விரைவில் ஒரு கமிட்டியை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏன் என்று சொன்னால் இனம் 24-ல்

Milk foods (excluding milk but including milk powder) என்று சொல்லி அதற்கு நாம் 4 சதவீத வரியை வசூலித்துக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு சத்துணவு என்று தமிழகத்தில்



போட்டுக் கொண்டு இருக்கிறோம். குழந்தைகளுடைய
நல்வாழ்வை வளர்க்க வேண்டும் என்ற நடவடிக்கையில் ஈடுபட்டு
இருக்கும் காலத்தில் பல கோடிக் கணக்கான ரூபாயை குழந்தை
களுடைய நல் வாழ்வுக்காக நாம் இங்கே செலவழித்துக்கொண்டு
இருக்கிறோம். பல லட்சக்கணக்கான ரூபாயை இதற்காக செல
வழிக்கும் இந்த அரசு குழந்தையினுடைய பால் பொருட்களுக்கு
வசூலிக்கின்ற அந்த 4 சதவீத வரியை குறைத்துக் கொள்வதிலே
இந்த அரசுக்கு எதுவும் குறைந்துவிடும் என்று நான் நினைக்க
வில்லை. ஆகவே அந்த பால் பவுடர் போன்ற பொருட்களுக்கான
வரியை கண்டிப்பாக நாம் விலக்கலாம்.

அதேபோல் இன்றைக்கு தமிழகத்தில் ஒரு டிராக்டர் தொழிற்
சாலை ருக்கிறது. அது விவசாயிகளின் ஒரு கருவி ஆகும்.
இன்றைக்கு பத்திரிகையில் கூட ஒரு செய்தி வந்திருக்கிறது.
டிராக்டர் தொழிலில் ஒரு கடுமையான மூடக்கம் வந்ததன்
காரணமாக டிராக்டர் விற்காத காரணத்தால் டிராக்டர்
களுடைய விலை கூடி விட்ட காரணத்தால் அந்த தொழிற்சாலை
மூடக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு அகில இந்தியாவில் ஏற்பட்
டிருக்கிறது. அதற்கு நாம் 9 சதவீத வரியை 55—ஆவது என்
என்ற அளவில் நாம் இன்றைக்கு வசூலித்துக்கொண்டிருக்கிறோம்.
இதைக் குறைக்கலாம். இதுபோன்ற காலத்தினால் மாறுபடுகின்ற
நிகழ்ச்சிகளையும், காலத்தினால் வேறுபடுகின்ற நிகழ்ச்சிகளையும்
நாம் உடனுக்குடன் கண்டறிந்து, ஆராய்ந்து வேண்டுமானால்,
மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய நல்ல திட்டங்களாக மாற்றி,
அதன் மூலமாக வரி விதிப்புகளை நாம் மாற்ற வேண்டுமென்ற
ஆலோசனையை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு
அநேகமாக பல பொருள்களில் ஒரு முனை வரி என்று வந்து
விட்டது. ஒரு முனை வரி என்பது பாராட்டத்தக்க ஒரு
பொருள் தான். அதேபோல் இந்த பட்ஜெட்டிலே 10 பொருள்
களுக்கு இன்றைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்
பதை நான் வரவேற்று, பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நல்லதொரு கருத்தை
வெளியிட்டார்கள். இன்றைக்கு தமிழகத்தில் உற்பத்தி செய்யப்
படுகின்ற பொருள்கள் எல்லாம் வெளி மாநிலத்திலே சென்று
விற்கின்றபோது, வியாபாரிகள் அந்தப் பொருள்களுக்கு வரிகள்
கொடுக்காமல் இருப்பதற்கு என்ன எல்லாம் செய்யவேண்டு
மென்கின்ற அடிப்படையில் தங்களுடைய அகடவிகட சாமர்த்தி
யங்களை எல்லாம் காண்பித்து, அந்த வரிகளை ஏய்ப்பு செய்து
கொண்டிருக்கின்ற காரணத்தினால் தான் குஜராத் மாநிலத்திலே
அந்த மாநிலத்திலே இருந்த 'இண்டர் ப்ராஞ்ச் டிரான்ஸ்பருக்கு'க்
கூட வரி போடுகின்ற ஒரு கருத்தை எடுத்து, தமிழகத்திலே
அதை நாங்கள் அமல் செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்
கிறார்கள். தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான
வரிகளையும், தமிழக மக்களுக்கு சேரவேண்டிய நியாயமான
வருமானங்களையும் பெருக்குவதற்கு உடனடியாக அதை
கொள்கை அளவிலேயே அறிவித்து நின்று விடாமல், அந்தக்
கொள்கையை மிக விரைவிலேயே செயலாக்கவேண்டுமென்ற
ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று விற்பனை வரியினுடைய இயக்கங்களைப் பற்றி ஆலோசனைக் குழு என்று சொல்லி, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கமிட்டியிலே இருக்கக் கூடிய உறுப்பினர்கள் எல்லாம் யார் என்று நான் பார்க்கிறபோது, அதில் சட்டமன்ற உறுப்பினர்களோ, அல்லது மேலவை உறுப்பினர்களோ, ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. இதுபோன்று பொதுமக்களோடு தொடர்பு கொள்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும், மேலவை உறுப்பினர்களையும் கூட ஆலோசனைக் குழுவிலே போட்டால் தான் 'ஃபீட் பேக் ஆஃப் இன்பர்மேஷன்' என்ற வகையில், நாட்டில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கும். அதிகாரிகள் தருகின்ற தகவல்களை வைத்து நாம் ஆரம்பித்தால், நான் அதிகாரி சொல்லுகின்றவை தவறு என்ற கருத்தில் சொல்லாவிட்டாலும்கூட, கரெக்ட் ஃபீட் பேக் ஆஃப் இன்பர்மேஷன் என்ற கருத்திலே, முக்கியமாக அந்தக் குழுக்களிலே சட்டமன்ற உறுப்பினர்களையும், மேலவை உறுப்பினர்களையும் சேர்ப்பது சிறப்பாக இருக்கும் என்கின்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரி விதிப்புகளில் இன்றைக்கு பரிசீலிக்க எடுக்கப்படுகின்ற வரிகளில் பல வரிகளிலே ஒன்று தமிழ்நாடு விளம்பரச் சட்டம் என்ற சட்டம். இது தமிழக அரசாலே கொண்டுவரப் பட்டது. இந்தச் சட்டத்தின் மூலமாக தமிழக அரசுக்கு எவ்வளவு ரூபாய் வருகிறது என்று பார்த்தால் ரூ. 6 இலட்சம் தான் வருகிறது. அதாவது ஒரு நிறைவேற்ற முடியாத சட்டத்தைக் கொண்டு வந்து, அதன்மூலம் பலருக்கும் பல இன்னல்களை அங்கே ஏற்படுத்தி, அதைச் செயல்படுத்த விடாமல் செய்து, அதன்மூலமாக லஞ்சங்களும், நடைமுறைச் சிக்கல்களையும் தோற்றுவித்து, கொண்டுவருவதின் மூலம் தமிழக அரசுக்கு வருகிற மொத்த வருமானம் ரூ. 6 இலட்சம் தான்.

நான் சொல்வதெல்லாம், விளம்பரங்கள் இருந்தால் தான் வியாபாரம் பெருகும், வியாபாரம் இருந்தால் தான் பொருள்கள் பெருகும். பொருட்கள் பெருகினால் தான் இன்றைக்கு வணிக வரி கூடுதலாகும். அட்வர்ட்டைஸ்மெண்ட் டாக்ஸ் என்று போடுவதன் மூலமாக பல பத்திரிகைகளில் காண்பிக்கப்படுகின்றன, பத்திரிகைகளில் வருகின்ற விளம்பரங்கள். சினிமா தியேட்டர் ஸ்லைடுகள். அந்த அதிகாரிகள் எல்லாம் சென்று தியேட்டரில் ஸ்லைடுகள் செக் செய்ய என பாஸ் கேட்கிறார்களா, அல்லது தியேட்டரில் படம் பார்க்க பாஸ் கேட்கிறார்களா என்று சண்டைகள் எல்லாம் பெருகி வருகின்ற காரணத்தால், அதுபோன்ற சில்லறை விஷயங்களை எல்லாம் விட்டு விட்டு தங்கள் விளம்பரத்தின் மூலமாக வியாபாரம் பெருக, வியாபாரத்தின் மூலமாக வருமானம் பெருக, வருமானத்தின் மூலம் வணிக வரி பெருகுவதன் மூலம் இந்த அரசு தன்னுடைய வருமானத்தைப் பெருக்க வேண்டுமே தவிர, இதன் காரணமாக விளம்பர வரிச் சட்டத்தை செயலிலே, நடைமுறையிலே சிக்கல்களைத் தோற்றுவிக்காமல், இந்த வரிக்கு பூரணமாக விலக்கு அளித்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். வரியை எப்படி



விலக்குவது என்று நீங்கள் கேட்பீர்களேயானால், சமீபத்திலே மைய அரசிலே ஒரு எஸ்டேட் ட்யூட்டி என்ற ஒரு சட்டம் இருந்தது. இறந்தவர்களுக்காக போடப்படுகின்ற சட்டத்திலே பல சிக்கல்கள் இருந்ததன் காரணத்தால், ஒரு கொள்கை அடிப் படையில் ஒருவர் இறந்ததற்குப் பின்னர் வசூலிப்பது நியாயமாக இருக்காது என்ற நியாய உணர்வின் அடிப்படையிலே மத்திய அரசு அந்தவரியை நீக்குகின்ற சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது என்ற காரணத்தினாலே நீங்களும் அந்த அட்வர்டைஸ்மெண்ட் டாக்சை விலக்குவதன் காரணமாக அரசுக்கு நஷ்டம் வரப்போவதில்லை. இந்த அரசுக்கு அதன் மூலம் ஒரு நல்ல பெயர் கிடைக்கும் வாய்ப்பு இருக்குமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–40)

அது மட்டுமல்லாமல், அடிமட்டத்திலே, இன்றைக்கு சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மென்டிலே மிகப் பெரிய தவறுகளும், ஒழுங்கீனங் களும், இன்னும் கடுமையாகச் சொல்லவேண்டுமானால், ஊழல் களும் இருப்பது அரசுக்கும் நன்றாகத் தெரியும். அவைகளை ஒரு இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கை எடுத்து ஒழிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த சேல்ஸ் டாக்ஸ் என்பதிலே நீங்கள் 1 பர்சன்ட்டிலிருந்து ஆரம்பித்து 30 பர்சன்ட் வரைக்கும், பலவித மாக, 8 பர்சன்ட், 4 பர்சன்ட், 3½ பர்சன்ட் என்று ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு வரி விதித்து இருக்கிறீர்கள்.

இன்றைக்கு மத்திய அரசிலிருந்து போடப்பட்ட ஒரு சட்டத்தின் காரணமாக, விற்கப்படுகின்ற பொருட்களில் எல்லாம், அந்தப் பொருட்களினுடைய உயர்ந்த பட்ச விலையை எழுதிவிட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அதனால் தான் எந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டாலும், 'மேக்சிமம் ரீடெயில் பிரைஸ், நாட் டு எக்ஸீட்' என்றும் போட்டு இருக்கிறார்கள். நாம் என்ன சட்டம் போட்டாலும் அதில் ஒரு சந்தைக் கண்டுபிடித்து அதிலே இருந்து தப்பிக்கின்ற அளவுக்கு வியாபாரிகள் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்களுக்குத் துணை போகின்றவர்களும் ஒரு சிலர் இருக்கிறார்கள். எனவே தான் அதிலே 'லோக்கல் டாக்ஸஸ் எக்ஸ்ட்ரா' என்று போடுகிறார்கள். 'லோக்கல் டாக்ஸஸ் எக்ஸ்ட்ரா' என்று போடுகிற வார்த்தைக்கு என்ன பொருள் என்றே தெரியாது.

இறைவன் இருக்கின்றானா, இல்லையா என்ற கேள்விக்கு சமமான கேள்வியைப் போல், லோக்கல் டாக்ஸ் என்றால் யாருக்கும் தெரியாது. அது எவ்வளவு, எத்தனை சதவீதம் என்று தெரியாது. இந்தக் குறிப்பிட்ட பொருளுக்கு லோக்கல் டாக்ஸ் உண்டா என்று தெரிய வாய்ப்பு இல்லை.

அதனாலே ஏற்பட்ட நடைமுறைச் சிக்கலினைச் சாதகமாக தங்களுக்கு வைத்துக் கொண்டு சில வியாபாரிகள் லோக்கல் டாக்ஸ் என்ற பெயரிலே, பொருட்களிலே ஒரு கொள்ளை லாபம் அடித்து வந்தார்கள்.

மேக்ஸிமம் ரீடெயில் பிரைஸ் என்பதை மினிமம் ரீடெயில் பிரைஸ்—ஆக மாற்றி, அதற்கு மேல் லோக்கல் டாக்ஸஸ் எக்ஸ்ட்ரா என்று போட்டு இருக்கிறார்கள். அதாவது, ஒரு ரூபாய்க்கு சாமான் வாங்கினால் அதில் 25 பைசா லோக்கல் டாக்ஸ். ஆனால் சட்டத்திலே பார்த்தால் டாக்ஸே இருக்காது. ஆனால் அதுதான் நாட்டிலே இன்றைக்கு நிலவிக் கொண்டிருக் கிறது, நடந்து கொண்டிருக்கிறது. யார் சென்று பொருள் வாங்கினாலும் இந்த அவல நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு தான், 'பேக்கேஜ் கமாடிட்டீஸ் ஆர்டர்' என்பதிலே ஒரு திருத்தத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. லோக்கல் டாக்ஸஸ் எக்ஸ்ட்ரா என்றால் அது எவ்வளவு லோக்கல் டாக்ஸ் என்பதை எழுதி வைக்க வேண்டிய கடமையை, வலியுறுத்தி, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். உடனடி யாக விழித்துக் கொண்டது வியாபார உலகம். அது எங்களால் முடியாது. ஒவ்வொரு பொருளிலும் அதுமாதிரி விலையை எப்படி எழுதி வைக்க முடியும் என்று சொன்னார்கள்.

நான் கேட்டுக் கொள்வது, இன்றைக்கு கடைக்குச் சென்று ஒரு பொருளை எடுத்தால், அதில் கடைக்காரர் எழுதி இருப்பார்—அதில் 'க' என்றும், 'உ' என்றும் 'ச' என்றும் எழுதி வைத்து இருப்பார். வேறு ஒரு பொருளை எடுத்தால் அதில் வேறு ஒரு 'கோட்' இருக்கும். இப்படி பொருள்களின் விலை என்ன என்பதற்கு 'கோட்'—ஆக ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு மாதிரி எழுதி இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட லாபம் தனக்கு கிடைக்கவேண்டும் என்று அப்படி விலை எழுதி வைக்கிற ஒரு வியாபாரி, சட்டத்தின்படியாக அந்த 'டாக்ஸ்' எவ்வளவு என்று எழுதி வைக்க மறுக்கிறார். ஏனென்றால் டாக்சை வைத்து மக்களை ஏமாற்ற முடியாது என்று தெரிந்து, அவ்வாறு மறுக் கிறார்.

நான் அரசைக் கேட்டுக்கொள்வது, கண்டிப்பாக ஒவ்வொரு பொருளிலும் அதனுடைய லோக்கல் டாக்ஸஸ் எக்ஸ்ட்ரா என்று சொல்லும்போது சேல்ஸ் டாக்ஸ் எவ்வளவு என்பதை கண்டிப்பாக எழுதவேண்டும். அப்படி ஒவ்வொரு பொருளிலும் எழுதுவது தவறு, முடியாது என்று சொன்னால், விலைப் பட்டியலை வைப்பதைப் போன்று, ஒவ்வொரு கடையிலும், காஸ்மெடிக்ஸ் என்றும் ஒவ்வொரு பொருளுக்கும் என்னென்ன டாக்ஸ் என்று கண்டிப்பாக போர்டைத் தொங்கவிட வேண்டும் என்ற சட்டத்தை தீவிரமாக அமல்படுத்தாவிட்டால் என்போன்ற கன்ஸ்யூமர்களுக்கு, பொருள்களை வாங்குபவர்களுக்கு வியாபாரிகளிடமிருந்து பாதுகாப்பு கிடைக்காது என்ற கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறேன்.



அடுத்தபடியாக, சில சட்டப் பிரச்சினைகளை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு 'செக்ஷன்-31-லே', அப்பீல் போடுவதற்கான புரொவிஷன்கள் போடப்பட்டிருக்கின்றன. இது தொடர்பான விதி, பிரிவு 31-லே சொல்கிறபோது, சப்-செக்ஷன்-4-ல் 'Notwithstanding that an appeal has been preferred under sub-section (1), the tax shall be paid in accordance with the order of assessment against which the appeal has been preferred:

Provided that the Deputy Commissioner may in his discretion give such directions as he thinks fit in regard to the payment of the tax before the disposal of the appeal, if the appellant furnishes sufficient security to his satisfaction, in such form and in such manner as may be prescribed' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பீல் செய்யப்பட்ட நபர் வரியைக் கட்டவேண்டும் அல்லது அந்த வரிக்கு இணையான தொகை, 'சஃபிஷியன்ட் செக்யூரிட்டி' தரவேண்டும் என்று விதி 31-லே இன்றைக்கு ஃபார்ம்-19 என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் நடைமுறையிலே பார்த்தால், அந்த டெபுடி கமிஷனரிடம் போடப்படுகின்ற அப்பீல்கள் எல்லாம் கிட்டத்தட்ட 3 மாத காலத்திற்குள்ளாக முடிந்து விடுகின்றன. வரி செலுத்து கிறவர்களுடைய திறமையைப் பற்றி, யோக்யதையைப் பற்றி, ஃபைனான்ஷியல் ஸ்டேட்டஸைப் பற்றியும் துறை அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இதுபோன்ற Transfer of Property Act-இன் கீழ் அந்தச் சொத்துக்களையெல்லாம் சொத்து மூலதனமாகத் தருகின்றபொழுது பார்ம் 19-லே தரும் அந்த டிக்ளரேஷன்களெல்லாம் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் அந்த வழக்கு முடிந்ததற்குப் பிறகு, அந்தப் பதிவுகள் திரும்பத் தரப்படுவதில்லை. பிரிவு 31-லே என்ன சொல்கிறது என்றால், அந்த வழக்கு சாதகமாக முடிந்துவிட்டால் அவைகள் செல்லாததாகக் கருதலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். In the case of appeal decided in favour of the appellant, the appellant security bond shall be void and will have no effect என்று சட்டத்திலே சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் நாளைக்கு வில்லங்க சர்ட்டிபி கேட்டைப் பார்க்கின்றபொழுது, செக்யூரிட்டி கேட்கப்படுகிறது என்று தெரிகிறது. மூன்று மாத காலத்திற்கு ஒரு செக்யூரிட்டி தேவை இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அதுமட்டு மல்லாமல், சேல்ஸ் டாக்ஸ் பாக்கி வைத்திருக்கின்றவர்களின் சொத்துக்களை அட்டாச் செய்து, சப்ரிஜிஸ்தார் ஆபீசில் எழுதப் படுகிறது. பின்னர் அவர் பணத்தைச் செலுத்திய பிறகு அட்டாச்மெண்டைத் திரும்பப் பெற வேண்டுமென்ற எண்ணம் துறைக்கு இருப்பதில்லை. இதனால் பல நடைமுறைச் சிக்கல்கள் எழுகின்றன. அந்தச் சொத்துக்களை விற்கின்றபொழுது, வில்லங்க சர்ட்டிபிகேட்டில் சேல்ஸ் டாக்ஸ் பாக்கி இருக்கிறது என்று எழுதப்பட்டிருக்கும்; அவர்கள் பணத்தைச் செலுத்தி விட்டோம் என்று சொன்னால்கூட வில்லங்க சர்ட்டிபிகேட்டில்

அப்படிச் சொல்லப்படவில்லை என்று கூறப்படுகிறது. இந்த அரசு, விலங்கம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, பணத்தைச் செலுத்தி விட்டால் அந்த விலங்கத்தை கேன்சல் செய்ய வேண்டும். நான்-பேமெண்டிற்காகச் செய்யப்படும் அட்டாச்மெண்டை பணம் செலுத்திவிட்டால் கேன்சல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஓர்க்ஸ் காண்ட்ராக்டிற்கு வரி விதிக்கப்படுகிறது. சென்னையிலே ஓர்க்ஸ் காண்ட்ராக்ட் பற்றி சென்னை மெரீனா பீச்சில் உள்ள காந்தி சிலைக்குப் பக்கத்திலேதான் தொடங்கினார்கள். வரி செலுத்த வேண்டுமா என்று கேட்ட பொழுது ஓர்க்ஸ் காண்ட்ராக்ட்டுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை என்று சொன்னதற்குப் பிறகு, சட்டம் திருத்தப்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே மாற்றமும்கூட கொண்டு வரப் பட்டது. அந்த ஓர்க்ஸ் காண்ட்ராக்டிற்கு விதிக்கப்படுகின்ற வரியை எங்கு, எவ்வளவு கட்ட வேண்டும், ஏற்கனவே வாங்கி யிருக்கும் பொருளைக்கொண்டு வீடு கட்டினால், அப்படி வீடு கட்டிக் கொடுக்கின்ற காண்ட்ராக்டர் பணம் வாங்கும்பொழுது, இரும்புக்கு, எலக்ட்ரிகல் பொருட்களுக்கு என்று சேல்ஸ் டாக்ஸ் கட்டுகிறார். இவை எல்லாவற்றிற்கும் மொத்தமாக சேல்ஸ் டாக்ஸ் என்று ஃப்ளாட் ரேட்டாக ஒன்று அல்லது இரண்டு சதவீதம் என்று ஓர்க்ஸ் காண்ட்ராக்டர்ஸ்க்கு இருந்தால் அந்த நிலைமைகள் சீர்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேல்ஸ் டாக்ஸ் அப்பெலட் ட்ரிப்யூனல் மதுரை, சென்னை, கோயம்புத்தூரில் இருக்கின்றன. மதுரையிலே இருப்பதை திருநெல்வேலிக்கு கேம்ப் கோர்ட்டாக, அதைப்போன்று திருச்சிக்கு கேம்ப் கோர்ட்டாக மாதத்திற்கு இரண்டு மூன்று நாட்கள் அமைத்தால் வியாபாரிகளுக்கும் நன்மை; வழக்குகளும் வேகமாக முடிவதற்கு வாய்ப்புகள் ஏற்படும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேங்காய்க்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டு விட்டது. அதன் காரணமாக, 1967-68, 1968-69, 1969-70 ஆகிய மூன்று வருடங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு ஜீ.ஓ.வும் இஷ்யூ செய்யப்பட்டும்கூட, மதுரை மாவட்டத்திலே சில கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர்கள், கணக்கு வைத்திருக்காத வியாபாரிகளைக் கஷ்டப்படுத்துகிறார்கள்; வரியைச் செலுத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடத்திலே புகார் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே ஜீ.ஓ. வந்துவிட்ட பிறகு, வரி விலக்கு என்று அரசு அறிவித்து விட்ட பிறகு, வியாபாரிகளைக் கஷ்டப்படுத்துகின்ற காரியங்களை அதிகாரிகள் செய்து, அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இன்றைக்குப் பல உணவுப் பொருட்களுக்கு, மல்ட்டி பாயிண்ட் டாக்ஸை எடுத்துவிட்டு சிங்கிள் பாயிண்ட் டாக்ஸாக ஆக்கி இருப்பதன் காரணமாக வருமானம் கூடுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இருந்தாலும்கூட வியாபாரிகள் மத்தியிலிருந்து, இப்படி எட்டு சதவீதம் என்று போட்டிருப்பது மிகவும் கூடுதலாக இருக்கிறது, இதைக் குறைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் வந்திருக்கிறது. சென்ற தடவை பட்ஜெட்டில், எட்டு சதவீதம் என்று போட்டிருப்பது அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் கருத்து தெரிவித்த தற்குப் பிறகு அது குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று இந்த தடவையும் இந்த எட்டு சதவீத வரியைக் குறைத்து, நியாயமான முறையில், இரு சாராருக்கும் பாதகம் இல்லாமல் செய்தால் அது நாட்டுக்கும், அரசுக்கும் பயன்படும் என்று கூறி, வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் — நிர்வாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது 9 மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய அனுபவமிக்க, ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, முதற்கண் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு, 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தவுடன் மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல்வேறு கட்சித் தலைவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையிலே வணிகவரித் துறை சம்பந்தமாக கூறப்பட்டுள்ள சலுகைகளை வரவேற்று பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், மாறாக, அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் பற்றி விமர்சனம் செய்கின்ற நேரத்தில், பெருத்த ஏமாற்றம் என்று சொல்கின்ற வகையிலே, இந்த நிதிநிலை அறிக்கையில் வந்திருக்கிற வணிக வரித் துறையினுடைய முக்கியமான சலுகைகளை, வாங்கி உண்கின்ற, நுகர்வோர் பயன் அடைகின்ற வகையில், தொழில் நடத்துகின்ற தொழில் அதிபர்கள், தொழில்களைப் பெருக்க, இந்த நிதிநிலை அறிக்கையில் வழங்கியிருக்கிற அந்த நல்ல ஏற்பாடுகளைப் பாராட்டத் தவறி விட்டார்கள் என்பதனை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே அப்படிப் பாராட்டினாலும், பாராட்டத் தவறினாலும் தமிழகத்திலே இருக்கிற பல்வேறு வணிகச் சங்கங்கள், அல்லது சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் என்று சொல்கின்ற அமைப்புகள், இன்னும் பல்வேறு வணிக அமைப்புகள், இந்த அரசினுடைய நல்ல நடவடிக்கைளை, வணிக வரித் துறையில் கொண்டு வந்திருக்கிற பல்வேறு சலுகைகளை, மாற்றங்களைப் பாராட்டத் தவறவில்லை.

யென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில், பல்வேறு அமைப்புகள் தங்களுடைய பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்து, அரசுக்குப் பல்வேறு தந்திகள், கடிதங்கள், எழுதி இருக்கின்றன. அவற்றை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 20 வணிக சங்கங்கள், சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் என்று சொல்லக்கூடிய அமைப்புகள் அல்லது வணிகப் பெருங்குடி மக்கள், இந்த அரசினுடைய வணிக வரித் துறையில் செய்யப்பட்டிருக்கிற நல்ல காரியங்களை வரவேற்று, பாராட்டி அடியிற்கண்டவாறு தங்களுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

சென்னை நகை மற்றும் வைர வியாபாரிகள் சங்கம், சென்னை, தாய்மார்கள் அணியும் வெள்ளி மெட்டிக்கு வரி விலக்கு அளித்துள்ளதை பாராட்டி; தமிழ்நாடு கோழித் தீவன உற்பத்தியாளர் இணையம், நாமக்கல், கோழித் தீவனம் மீதான வரிச் சலுகையை அளித்ததைப் பாராட்டி; நிலக்கடலை எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம், ஈரோடு, சமையல் எண்ணெய்க்குப் பலமுனை வரி விதிப்பை மாற்றி, ஒருமுனை வரியாக மாற்றியிருப்பதைப் பாராட்டி; சென்னை எண்ணெய் மற்றும் எண்ணெய் வித்து விற்பனையாளர் சங்கம், சென்னை, இதே கருத்தைச் சொல்கிறது; திண்டுக்கல் சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ், திண்டுக்கல், 10 பொருள்களுக்கு வரி நீக்கத்தையும் பல பொருள்களுக்குப் பலமுனை வரியை நீக்கி, ஒரு முனை வரியாகக் கொண்டு வந்ததைப் பாராட்டியிருக்கிறார்கள், செயலாளர், வர்த்தகச் சங்கம், பாப்பநாடு, தஞ்சை மாவட்டம் வெல்லம் போன்ற பொருள்களுக்கு ஒரு முனை வரி விதிப்பதாகப் பாராட்டினார்கள். தமிழ்நாடு பருத்தி–பிண்ணாக்கு வியாபாரிகள் சங்கம், மதுரை, தாவர எண்ணெய்க்குப் பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியதைப் பாராட்டியிருக்கிறார்கள். நெல்லை வியாபாரிகள் சங்கம், திருநெல்வேலி, வெல்லம், சீரகம், சீயக்காய் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றிற்குப் பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியதைப் பாராட்டி, கடிதம் எழுதியிருக்கிறார்கள். திருத்துறைப்பூண்டி சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ், ஒருமுனை வரிவிதிப்பை டர்ன் ஓவர் ரூ. 75,000-ஆக உயர்த்தியதைப் பாராட்டியிருக்கிறார்கள். அரக்கோணம் நகர மளிகை வியாபாரிகளும் இதே கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். கிருட்டினகிரி நகர மளிகை–உணவு பொருள் வியாபாரிகள் சங்கம் பொதுவாக, வணிக வரித் துறையிலே கொண்டு வரப்பட்டிருக்கிற நல்ல நடவடிக்கையையும் நிதிநிலை அறிக்கையையும் பாராட்டி வரவேற்று இருக்கிறார்கள். அடையாறு வியாபாரிகள் சங்கம், சென்னை, மதுரை ஹார்ட்வேர்ஸ் அன்ட் டைல்ஸ் வியாபாரிகள் சங்கம், மதுரை, மளிகை வியாபாரிகள் சங்கம், பண்ருட்டி, புரசை வியாபாரிகள் சங்கம் சென்னை ஆகியோரும் இந்த அரசினுடைய நிர்வாக நடவடிக்கையை வரவேற்றுப் பாராட்டி கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள்.





திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவ ர்வர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யார், யார், எந்த எந்த நிறுவனங்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்ற பட்டியலைப் படித்தார்கள். அதைப்போன்று எந்த எந்த நிறுவனங்கள் எதிர்த்து, கண்டித்து கடிதம் எழுதியிருக்கின்றார்கள் என்பதையும் படித்தால் சுவையாக இருக்கும்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைக்கு நாங்கள் இன்னும் ஆளாகவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நான் இங்கே ஒரு கடிதத்தை மட்டும் படிக்க விரும்புகிறேன்.

To Hon. Thiru. V.R. Nedunchezhian. Minister for Finance, Government of Tamil Nadu.—Respected Sir—Sub: New Budget proposals for 1986–87 Regarding.

On behalf of the members of the Madras Jewellers and Diamond Merchants Association, I express our heart felt thanks to your Honourable Sir, for exempting the silver metti from the purview of the sales-tax. It is very noble gesture pleasing the sentiments of our womenfolk who deem it as an honour to wear Metti as a token of their married status. I am also thankful for raising the limit of turnover to Rs. 75,000 from Rs. 50,000 for registration. This proposal is very much laudable and helpful keeping in view of the escalating value of goods. I am also thankful to you Sir for your raising the exemption limit for levy of additional salestax for a turnover of Rs. 3.00 lakhs to Rs. 10.00 lakhs. It is very ideal in the present context and situation.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டு, கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர வர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் பல்வேறு சங்கங்களிலிருந்து பாராட்டி வந்த கடிதங்களைப் படித்தார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 'சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ்' ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் இருபது சங்கங்களுடைய பாராட்டை மட்டும்தான் படித்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. ?மலை) : வந்த கடிதங்களைப் படித்தார்கள். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப்போல இவற்றை மட்டும் படித்தார்கள்

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்கள் ஆயிரக் கணக்கான சங்கங்கள் இருக்கும்போது குறிப்பிட்ட சில சங்கங்களின் பாராட்டுக் கடிதங்களை மட்டும் படித்தேன் என்று சொன்னார்கள். நாட்டிலே நல்லவர்களுக்குத்தான் பாராட்ட மனம் இருக்கும். சில நல்ல காரியங்களைச் செய்யும்போது, நல்லவை என்று உணர்ந்தாலும் நல்ல இதயம் இல்லாதவர்கள் நல்லதைப் பாராட்டமாட்டார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த அடிப்படையிலே இதையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எப்போதுமே ஒரு அரசோ அல்லது பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கிற ஒரு தனிப்பட்ட மனிதனோ நல்ல காரியத்தைச் செய்கிறபோது அதைப் பாராட்ட ஒரு மனிதன் முன்வரும்போதுதான் அப்படி பாராட்டுகிறவனுடைய தன்மை சமுதாயத்தில் உயர்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையிலே, இன்றைக்கு நான் குறிப்பிட்ட இந்த சங்கங்கள் மட்டும் பாராட்டவில்லை; இந்துப் பத்திரிகையில் எடிட்டோரியலில் கூட பாராட்டி, 'ஸ்டிமுலேஷன்' என்று எழுதியிருக்கிறார்கள். இந்த அரசால் வழங்கப்பட்டிருக்கிற அத்தனை சலுகைகளும் இந்த நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு, வாணிப பெருக்கத்திற்கு 'ஸ்டிமுலேஷன்' என்று 'ராமென்ட்ஸ்' பண்ணி எழுதியிருக்கிறார்கள்.

இங்கே தாக்கல் செய்யப்பட்ட 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை இந்த நாட்டினுடைய பொருளாதார நிலை உயரவும், இந்த நாட்டினுடைய தொழில் வளம் பெருகவும், இந்த நாட்டினுடைய தொழில் உற்பத்தி பெருகவும், வணிகப் பெருமக்களுடைய வாணிபம் பெருகவும், அதன் மூலம் வருவாய் பெருகவும், அந்த வருவாய்ப் பெருக்கத்தின் காரணமாக வரி மூலம் வரவேண்டிய வருவாய் பெருகவும் வழிவகை செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

அந்த வகையிலே இங்கே நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் அரசு இன்று சமுதாயத்தில் இருக்கிற எல்லா மக்களுடைய அன்பையும், ஆதரவையும், அரவணைப்பையும் பெற்றுக்கொண்டு வருகிற ஒரு நிலையினை இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பாக வணிக வரித் துறையின் மூலமாக உணர்ந்து இருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தவுடன் எல்லோருமே ஆச்சரியப்பட்டார்கள். இது இந்த நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையா அல்லது 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துகொண்டிருக்கிற பாரி வள்ளல், கொடுத்துச் சிவந்த கரத்திற்கு உரியவரான மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் வாரி வழங்குகின்ற நிதிநிலை அறிக்கையா என்றெல்லாம் கூட எல்லோரும் பாராட்டினார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி எல்லோரும் பாராட்டினாலும் கூட இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இந்தத் துறையிலே இருக்கிற சில குறைபாடுகளையும் குற்றங்களையும் களைந்து இன்னும் இந்தத் துறை சிறப்பாகவும், செம்மையாகவும் நடைபெறவேண்டும் என்ற வகையில் நல்லபல ஆலோசனைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இங்கே பேசிய மாண்புமிகு மரியாதைக்குரிய காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் இந்த நாட்டிலே தடி எடுத்துக்கொண்டு வழிப்பறிக் கொள்ளை அடிப்பது போன்று வரி முறை இருக்கிறது என்று பேசினார்கள். இந்த ஆட்சி அப்படிப்பட்ட ஆட்சி அல்ல.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்பது திருக்குறள். பொருள் தரும் வழிகளை உண்டாக்கலும், வரும் பொருளைச் சேமித்தலும், பாதுகாத்தலும், அவற்றை ஒழுங்காக நாட்டிற்குத் தேவையான வகையில் செலவிட வல்லதே இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில்தான் ஏனைய மாநிலங்களை விட அதிகமான அளவுக்கு வரி விதிப்பு இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் சொன்னார்கள். இந்த நிலைமைக்கு ஆளாக்கியது அவர்கள் சார்ந்திருக்கின்ற இயக்கம், ஆளுகின்ற மத்திய அரசுதான் என்பதை அவர்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு அரசு வரி விதிக்கிறது என்று சொன்னால் அதன் நோக்கம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். இந்தத் தமிழக அரசு விற்பனை வரி விதிப்பதிலே நான்காவது இடத்திலே இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். மகாராஷ்டிரம் முதலிடத்திலேயும், குஜராத் இரண்டாவது இடத்திலேயும், பஞ்சாப் மூன்றாவது இடத்திலேயும், தமிழகம் நான்காவது இடத்திலேயும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில அரசுதான் மக்களுக்கு நேரடியாகக் காரியங்களைச் செய்ய முடியும். இன்று இருக்கிற அரசியல் அமைப்பு முறையின் மூலமாக நமக்கு இருக்கிற அதிகாரங்கள் குறைவு என்பதை நாம் நன்றாக அறிவோம். குறைவான அதிகாரத்தினை வைத்துக்

கொண்டு வரியினை விதித்து வருவாயைப் பெருக்கி, மக்களுக்குச் செய்யவேண்டிய நல்லபல பணிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் அரசு செய்யவேண்டி இருக்கிறது. அதற்காகத்தான் அந்த வரி விதிப்பு முறைகளைச் சீராக்கவும், வரிவிதிப்புகள் மாற்றியமைக்கவும் ஏற்பாடு செய்து உரிய வகையில் வருவாயைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன். ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு கிராமத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை என்று சொன்னால் அதற்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்குத்தான் இருக்கிறதே தவிர மத்திய அரசினிடத்திலே கேட்க மாட்டார்கள். அது பெரிய அரசு, இது சின்ன அரசு. இருந்தாலும் தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் அந்தப் பெரிய அரசைப் பார்த்து ஏன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்கவில்லை என்று கேட்பதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலே கேட்பதில்லை. மாறாகத் தமிழக சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைத்தான் கேட்கிறார்கள். இதனுடை பொருள் என்ன? இன்று மாநில அரசு மக்களுக்குப் பல காரியங்களை நேரடியாகச் செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் இன்று மாநில அரசும், மைய அரசும் வரி விதிப்புகளை ஏற்படுத்தி அதன் மூலமாக வரிகளைப் பெற்று, ஆக்கப் பணிகளை திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று மாநில அரசின் கீழ் இருக்கிற ஒரே வாய்ப்பு, வரி விதிப்புகளிலே, விற்பனை வரி ஒன்றுதான். அந்த விற்பனை வரித் துறையிலே போடுகின்ற வரிகளாலும், அதை வசூலிக்கின்ற முறைகளினாலும், நிர்வாகத் திறமை, நேர்மை போன்ற அணுகுமுறைகளினாலும் இன்று வருவாய்களை பெருக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

இன்று மைய அரசு கார்ப்பொரேஷன் வரி, சொத்து வரி, கொடை வரி, சுங்கத் தீர்வை போன்ற பல வரிகளை வசூலிக்கிறார்கள். அந்த அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவைகளிலே மாநில அரசுக்கு பங்கு கிடையாது. ஆனால் அதற்கு மாறாக வருமான வரி, இறப்பு வரி, யூனியன் கஸ்டம்ஸ் டாக்ஸ், சென்டிரல் எக்ஸைஸ் டாக்ஸ், யூனியன் எக்ஸைஸ் வரி போன்ற வரிகளை விதிக்கின்ற அதிகாரத்தை மத்திய அரசு பெற்றிருக்கிறது. இந்த வரிகளின் மூலமாக இந்த ஆண்டு மைய அரசுக்கு அதாவது 1986-87-லே 30,500 கோடி வருமானம் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். வருமான வரி, இறப்பு வரி, சென்டிரல் எக்ஸைஸ் டியூட்டி ஆகிய மூன்றின் மூலமாக 16,677 கோடி ரூபாய் மத்திய அரசுக்கு வருமானம் வந்து, அதிலே 8,820 கோடி மாநில அரசுகளுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே தமிழகத்தினுடைய பங்கு 1986.87-ல் 565 கோடி தான் என்பதை தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். 30,500 கோடி எங்கே, 565 கோடி எங்கே என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்க்க



வேண்டும். மாநில அரசுகள் நேரிடையாக மக்களுக்கு பதில் சொல்ல வேண்டும். நேரிடையாக காரியங்களைச் செய்ய வேண்டும். மைய அரசுக்கு அப்படி இல்லை. இந்த நிலையிலே தான் இன்று நம்முடைய மாநில அரசு நம்முடைய வணிக வரி சட்டங்களின் மூலமாக வருவாயைப் பெருக்க வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக—சில பேர்கள் சொல்வார்களே 'கொள்ளுக்கு நான், கடிவாளத்திற்கு நீ' என்று அது போல—மக்களிடத்திலே இது போன்ற சட்டங்களைப் போட்டு வரி வசூல் செய்வதால் கெட்ட பெயர் வருவது மாநில அரசுக்கு. ஆனால் மைய அரசு கோடி கோடியாக வருவாய்களை, கப்பல் கப்பலாக என்று கூட சொல்ல மாட்டேன். அதற்கும் மேலாக வரியை ஏற்றிக் கொண்டு செல்லுகிற மைய அரசு, வருவாய்களை பெற்றுக் கொண்டிருக்கிற மைய அரசு மக்களுடைய அதிருப்திக்கும், விமர்சனத்திற்கும் ஆளாகாமல் இருந்து கொண்டிருக்கிறது, என்பதை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும் என்ற போதிலும்

இவற்றை எல்லாம் நான் எதற்காக சொல்லுகிறேன் என்றால் அருமை சகோதரர் சித்தன் போன்றவர்கள் மன்னித்தருள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதையெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற வகையிலே, நாங்களும், நீங்களும், இங்கே உட்கார்ந்திருப்பவர்களும், எதிர் வரிசையில் இருப்பவர்களும், அத்தனை பேரும் சேர்ந்து இந்த மாநிலத்தினுடைய நலம் கருதி, வளர்ச்சி கருதி நாட்டு மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்த்தப் படவேண்டும் என்ற நோக்கம் கருதி, நாமெல்லாம் சேர்ந்து வருங் காலத்திலே குரல் கொடுக்க வேண்டும். கட்சிக்கு அப்பாற்பட்டு அதைச் செய்ய வேண்டும். தயவுசெய்து இதை அரசியல் என்று எண்ண வேண்டாம்.

இன்றைக்கு இந்திரா காங்கிரஸ்காரர்கள் எங்களுடைய தோழமை கட்சியினர். இன்றைக்குக்கூட இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய திரு. அந்தோணி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் தோழமைக் கட்சிகள் தாம். தோழமையாக இருந்தாலும் கூட சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சியாகத்தான் இருப்போம். குற்றம் குறைகளை எடுத்துச் சொல்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலேதான் சொல்லுகிறேன். இது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒரு பழமொழி சொல்லுவார்கள். குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியையும் பறித்தாற் போல என்று சொல்லு வார்கள். அது போல மைய அரசின் நடவடிக்கை இருந்து வருகிறது. எப்படி என்று கேட்டால் வருவாய் வாயில்கள் அதிகமாக உள்ள, நிதி ஆதாரங்களை வரிகளை விதிக்கின்ற உரிமைகளை எல்லாம் மைய அரசு தன்னிடத்தில் வைத்திருக்கிறது.

[திரு. தா. வீராசாமி] [1986 ஏப்ரல் 5

ஒருசில அதிகாரங்கள் மட்டும்-விற்பனை வரி போன்றவை-
நம்மிடம் இருக்கின்றன. அதையும் நம்மிடத்திலே இருந்து
பறித்துக்கொண்டு செல்வதற்காக மைய அரசு 1957 ஆம்
ஆண்டே 3 பொருள்களுக்கு ஷுகர், டெக்ஸ்டைல்ஸ்,
டொபாக்கோ போன்ற பொருள்களுக்கு மாநில அரசு விற்பனை
வரியைப் போடக் கூடாது என்று சொல்லி, அதை அடிஷனல்
எக்ஸைஸ் டியூட்டி என்ற முறையிலே கொண்டு வந்து, மைய
அரசின் அதிகாரத்தின் கீழ் எடுத்துச் சென்றுவிட்டது என்று
உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அந்த வகையிலே
மேலும் இருக்கின்ற 5 பொருள்களுக்கு, மைய அரசு அடிஷனல்
எக்ஸைஸ் டியூட்டி விதிப்பதற்காக, பல்வேறு காலக் கட்டங்
களில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. அதை
இந்த மாநிலம் வன்மையாக எதிர்த்து வந்திருக்கிறது.
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1983 ஆம் ஆண்டு
நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அதை மிகவும் கடுமையாக எதிர்த்
திருக்கிறார்கள். அவர்கள் மட்டும் எதிர்க்கவில்லை. காங்கிரஸ்
இயக்கத்தைச் சார்ந்த முதல்வர்கள் ஆளும் மாநில முதல்வர்
களும் இந்தக் கூற்றை எதிர்த்திருக்கிறார்கள் என்பதை
இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

மத்திய அரசு வனஸ்பதி, மருந்துப் பொருள்கள் மற்றும்
மருந்துகள், சிமெண்ட், காகிதம், மற்றும் காகித அட்டை,
பெட்ரோல் ஆகிய பொருள்கள் மீது விற்பனை வரிக்குப்
பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கும் முயற்சிக்கு இந்த
மாநில அரசு இவ்வினங்களுக்கு கூடுதலாக ஆயத்தீர்வை விதித்
தால், அதனால் ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கும் விற்பனை வரி
வருவாய் ரூபாய் 250 கோடி இழப்பு ஏற்படும் என்பதால்
கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். 2-11-1983 அன்று புதுடெல்லியில் மத்திய
நிதியமைச்சர் அவர்கள் கூட்டிய கருத்தரங்கில் கலந்துகொண்ட
மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்
மேற்கண்ட ஐந்து பொருள்கள் மீது விற்பனை வரிக்குப்
பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பதற்கு மிகவும் எதிர்ப்பைத்
தெரிவித்தார்கள். In the Chief Ministers' Conference at New
Delhi held on 2nd November, 1983 the Hon. Chief Minister
of Tamil Nadu categorically opposed the levy of Additional
Excise Duty in lieu of the Sales Tax on the above five commo-
dities.

அன்று சொன்ன கருத்துதான் இன்றுவரையில் இந்த அரசு
கொண்டிருக்கிறது என்பதையும், இந்த ஐந்து பொருள்களுக்கு
கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கிற முறையை மைய அரசு கொண்டு
வந்தால் இந்த அரசு கடுமையாக தன்னுடைய எதிர்ப்பைத்
தெரிவிக்கும் என்பதையும், அதற்குமேல் மற்ற மாநிலங்களுடைய
ஆதரவைத் திரட்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1986 ஏப்ரல் 5] [திரு. தா. வீராசாமி]

இன்னும் சொல்லப்போனால் ரெயில்வே என்று பெரிய
நிறுவனம் இன்றைக்கு இருந்து வருகிறது. ரெயில்வேயில்
முன்பெல்லாம் கட்டணத்தின் மீது விதிக்கப்படுகிற வரிக்கு
நமக்கெல்லாம் மாநிலங்களுக்கு பங்கு ஒதுக்கிக் கொடுக்கப்
பட்டது. 1-4-1964 முதல் அந்த வரியில் நமக்கு பங்கு
கொடுத்ததை ஒரு லட்சம் புரவிஷனாக கொடுக்க ஆரம்பித்
தார்கள். 1961 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரையில்
12 கோடி, 12½ கோடி வீதம் எல்லா மாநிலங்களுக்கும்
கொடுக்க ஒதுக்கீடு செய்தது. 1967 ஆம் ஆண்டிற்குப் பிறகு
அதை 16.25 கோடியாக நிதி ஒதுக்கீடு செய்து, அதே தொகை
தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. ஏழாவது நிதிநிலை
ஆணைக்குழு அறிக்கைப்படி, 1967-68-ல் ஒரு கிலோ மீட்டருக்கு
கிடைக்கும் சராசரி பிரயாணக் கட்டணம் ரூ. 2.01; ஆனால்
1976-77-ல் ரூ. 4.03 ஆக அது உயர்ந்திருக்கிறது. 1962 ஆம்
ஆண்டு ரூபாய் 137.73 கோடியாக இருந்த பிரயாணக் கட்ட
ணங்கள் மூலம் ரெயில்வேக்கு கிடைத்த வருவாய் 1976-77-ல்
ரூ. 1,025.30 கோடியாக உயர்ந்திருக்கிறது என்றும், அதே
கணக்கு பிரயாணக் கட்டணங்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளானது
தொடர்ந்து விதிக்கப்பட்டு 1976-77-ல் ரூ. 56.21 கோடியாகவும்
1977-78-ல் ரூ. 61.17 கோடியாகவும், 1978-79-ல் ரூ. 61.2
கோடியாகவும் வருவாய் கிடைத்திருக்குமென்று அறிக்கை
கூறுகிறது. எனவே இந்த வகையில், மாநில அரசு எல்லா
வகையிலும் புறக்கணிக்கப்படுகிறது.

நமது ரெயில்வே மூலமாக கட்டணத்தில் கிடைக்கிற பங்கு,
தமிழ்நாட்டிற்கு ரூபாய் 1,13 கோடியாக இருக்கிறது என்பதை
மெத்த வருத்தத்தோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
நிதிநிலை ஆய்வுக் குழு தன்னுடைய கருத்துக்களை கீழ்க்
கண்டவாறு தெரிவித்துள்ளது. இந்திய அரசியல் அமைப்புச்
சட்டத்தைத் தொகுத்தவர்கள்....

திரு. ஆர். வெங்கடரமணன்: மாற்றுத் தலைவர் அவர்களே,
தமிழகத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு வேண்டுமென்பதில்
யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இருந்தாலும்
அமைச் சொல்கிற முறையிலும், தமிழகம் பின்னுக்குத் தள்ளப்
படுகிறது என்றும் அமைச்சர்கள் சொல்கிற போது—சென்ற ஆண்டு
250 கோடியாக பற்றாக்குறை இருந்த பட்ஜெட் மத்திய அரசி
லிருந்து 150 கோடி ரூபாய் கூடுதலாக கிடைத்தும், வேறு வகை
யிலும் வந்ததன் காரணமாக அந்த 250 கோடி ரூபாய் என்பது 7
கோடியாகி இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாற்றுத் தலைவர்
அவர்களே, நான் சொல்வதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் குற்றச்சாட்டாக கருதக் கூடாது. இப்போது அவர்கள்
நடைமுறையில் மாநிலங்களுக்கு என்ன ஒதுக்கி வருகிறார்களோ
அதிலே தமிழக அரசுக்கு என்ன கிடைக்கிறது என்பதைத்தான்
நான் இங்கே சுட்டிக்காட்டினேன்.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். கூடுதல் ஆயத்தீர்வை பற்றி சொல்ல வேண்டும் என்றால், 1957-லே 3 பொருட்களை விற்பனை வரியிலிருந்து ஆயத் தீர்வைக்கு மாற்றிக் கொண்டார்கள். அதற்கு அவர்கள் 1972-73-லே 10.8 விழுக்காடுக்கு வரியை விதித்து உயர்த்தி இருக்க வேண்டும். ஆனால் நடப்பது இப்போது 1986. அப்படி இருக்கின்ற வரி வீதம் 7 விழுக்காடு என்பது நமக்கு நன்றாகத் தெரியும். 10.8 விழுக்காடு வரை அவர்கள் 1973-லே உயர்த்தி இருக்க வேண்டும். ஆனால் 1990-லே இந்த 10.8 விழுக்காடு வரி விதிப்பிற்கு வர இருக்கிறார்கள். ஆனால் அதற்கு வருவார்களோ, இல்லையோ என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த வேகத்திலே மத்திய அரசு இன்று சென்றுகொண்டு இருக்கிறது. எனவே தான் நான் ஒன்றை விளக்கமாகக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன். 1972-லே பிறந்த ஒரு பெண் குழந்தை 1990-லே என்ன வயதை எட்டியிருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். எனவே ஒரு பெண் குழந்தை இப்படி உருவத்தாலே மாற்றங்கள் பெறுகிற நிலைமை நாட்டிலே இருக்கிற நேரத்தில் வரி விதிப்பதிலே ஏன் இவ்வளவு வேகம் காட்டுகிறது மத்திய அரசு என்பதை நான் கேட்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். இதையெல்லாம் கருதித்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

1968-69 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் "விரிவுபடுத்தக் கூடிய வருவாய் வாய்ப்புகள் எல்லாம் மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டும், விரிவு படுத்த முடியாத எஞ்சிய வருவாய் வாய்ப்புகள் எல்லாம் மாநிலத்திற்கு உள்ளன என்றும், செலவு அதிகரித்துக்கொண்டே போகக்கூடிய இனங்களான கல்வி, பொதுச் சுகாதாரம் போன்றவை மாநில அரசுக்குக் கொடுக்கப்பட்டது என்றும்" தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இதைத்தான் நான் இந்த மன்றத்திலே அமரராக இருக்கிற அண்ணா அவர்களைப் பார்த்து சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். அண்ணா அவர்கள் ஒரு அரசியல் கட்சித் தலைவர், இந்த நாட்டினை ஆண்ட முதல்வர் அவர்கள், இதையே தான் ராஜமன்னார் குழுவும் சொல்லியிருக்கிறது, என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்கள் நீதி வழுவாத நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றத்திலே தலைமை நீதிபதியாக இருந்தவர், அவர்களும் அப்படித்தான் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த வகையில் இன்று மத்திய அரசு எல்லா வரி விதிப்பு அதிகாரங்களையும், வருவாயைப் பெருக்ககூடிய வருவாய் வாயில்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிற காரணத்தால் தான், நம்முடைய அருமை மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் சொன்னதைப் போல, பொது





மக்களுடைய அதிருப்திக்கு, பொதுமக்களுடைய கண்டனத்திற்கு தமிழக அரசு இப்படி எல்லாம் வரி வாங்குகிறார்களே என்று பொது மக்கள், சொல்கிற அளவிற்கு இன்று இந்த அரசு ஆளாக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படிப்பட்ட அவலமான சூழ்நிலை உருவாக்கப்பட்டாலும் கூட, இந்த அரசு நேர்மையாக, நாணயமாக, இதய சுத்தியோடு இந்த வணிகத் துறையில் இருக்கிற அதிகாரி பெருமக்களை நல்ல முறையில் முடுக்கிவிட்டு, எங்கெங்கு சிறு தவறுகள் நடந்தாலும்கூட, அவற்றை கண்டிக்கிற ஒரு பாங்கினைப் பெற்று இன்று வணிக வரித்துறையிலே வரியை வசூலித்து வருவாயைப் பெருக்குகின்ற ஒரு நிலைமை இருந்து வருகிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

இன்று தமிழ்நாட்டிலே பல்வேறு வணிக வரிச் சட்டங்கள் இருக்கின்றன. வரி விதிப்புச் சட்டங்களைப் பற்றிய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம், இதில் 1984–85 ஆம் ஆண்டில் வருமானம் 718.96 கோடி. 1985–86 ஆம் ஆண்டில் வருமானம் 824.3 கோடி. முந்தைய ஆண்டை விட இந்த ஆண்டு 15 சதவீதம் அதிகரித்துள்ளது. விற்பனை வரிச் சட்டத்தின் மூலமாக இந்த ஆண்டு எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதில் பலமுனை வரி விதிப்பில் இருந்து பல பொருட்கள் ஒருமுனை வரிக்குக் கொண்டு வரப்பட்டு உள்ளன. குறைபாடுகளைக் களைய அவ்வப்போது திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன. பல தொழிற்கூடங்களுக்கும் அநாதை இல்லங் களுக்கும், மருத்துவமனைகளுக்கும் வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளன. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் 14 தொழில் பொருள்களுக்கும், மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் 4 தொழில் பொருள்களுக்கும் இந்த ஆண்டில் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளன என்று இந்த நேரத்தில் நான் குறிப்பிடு கிறேன்.

மத்திய விற்பனை வரிச் சட்டம்:

இது மாநிலங்களிடையே நடைபெறுகின்ற வியாபாரத்தில் விற்பனை வரியில் விதிக்கப்படுகின்ற வரி. 1984–85 ஆம் ஆண்டு ரூ135.69 கோடி வருமானம். 1985–86 ஆம் ஆண்டு 150.67 கோடி வருமானம். முந்தைய ஆண்டை விட இந்த ஆண்டு 11 சதம் அதிகரித்துள்ளது. இது மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. வரி விதிக்க மட்டும் மாநில அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. ஆனால் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர மாநில அரசுக்கு

அதிகாரம் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே இன்று மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் மூலமாக வருவாய் வந்துகொண்டிருக்கிறது. இங்கே என்போர்ஸ்மெண்ட் விங்குகளைப் பற்றிச் சொன்னார்கள். அது செயலாக்கப் பிரிவு என்பது. சென்னை மற்றும் மதுரை என்று பிரிக்கப்பட்டு மாநிலம் முழுவதுக்கும் செயலாக்கம் கண்காணிக்கப் படுகிறது. இதன் நோக்கம் வணிகவரி வசூலை அதிகப்படுத்த வேண்டுமென்பது வணிகவரியை செலுத்துகின்ற கடமையை அவர்களுக்கு உணர்த்தவும், வரி வசூல் துறம்பட நடக்க வேண்டுமென்பதுதான் இதனுடைய நோக்கம். இதனுடைய பணி என்ன என்று கேட்போமேயானால் சாம்பாரிலே உப்பு எங்கே இருக்கிறது என்று தேடுவதைப்போல அமைந்துவிடும் என்கிற அந்தப் பழமொழியைச் சொல்லி இந்தச் செயலாக்கப் பிரிவு இந்த வணிகவரித்துறையின் மூலமாக வருமானத்தைப் பெருக்குவதற்கும், தவறுகளைக் கண்டுபிடிப்பதற்கும், நியாய உணர்விலே வரி செலுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தினை வணிகப் பெருமக்களுக்குப் புகட்டுவதற்கும், சொல்வதற்கும் இந்தச் செயலாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு சொன்னார்கள், இது சோதனைச் சாவடியா அல்லது வேதனைச் சாவடியா என்று. இல்லை, இல்லை. அவற்றையெல்லாம் மாற்றி சாதனைச் சாவடிகளாக மாற்றுவோம் என்று வாக்குறுதி கொடுத்தோம். அந்த வகையிலே இந்தச் சோதனைச் சாவடிகள், வேதனைச் சாவடிகள் எல்லாம் மாறி இப்போது சாதனைச் சாவடிகளாக ஆகியிருக்கின்றன என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

1984 ஆம் ஆண்டு வரையில் சோதனை செய்யப்பட்ட இனங்கள் 52,221. 1985-86-ல் 83,504. 1986-ல் 31,283 சோதனைச்சாவடி இனங்கள் அதிகரித்துள்ளன. சென்ற ஆண்டை விட 60 சத விழுக்காடு அதிகம் என்பதனை குறிப்பிடுகிறேன். அதனால் ஏற்பட்ட வருவாய் சென்ற ஆண்டு 15.15 கோடி. இந்த ஆண்டு 1985-86-ல் 22 71 கோடி. உயர்வு சென்ற ஆண்டை விட 7.56 கோடி. விழுக்காடு உயர்வு 50 என்பதனை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் இந்த செயலாக்கப் பிரிவு ஏதோ வழியிலே செல்கின்ற லாரிகளை மறித்து, அவைகளை நிறுத்தி அவர்களிடம் கையூட்டு பெறுவதற்காக அல்ல, அல்லது வணிகர்களை துன்புறுத்துவதற்காகவோ அல்ல. இது வரி ஏய்ப்புகளை, வணிகத் துறையிலே ஏற்படும் குற்றங்களை, குறைகளை களைவதற்காக ஏற்படுத்தப்பட்ட பிரிவு—செயலாக்கப் பிரிவு, செயல்படும் பிரிவு என்பதனை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





இங்கே பேசிய மாண்புமிகு இன்னொன்றையும் சொல்கிறேன். உறுப்பினர்கள் அதிகாரிகளுடைய குறைகளை சொன்னார்களே தவிர, வணிகர்களிடம் இருக்கின்ற குறைபாடுகளை, குற்றங்களைச் சொல்ல மறந்து விட்டார்களோ அல்லது அவர்களுக்குத் தெரியவில்லையோ என்று நான் கருதுகிறேன். அப்படித் தெரிந்திருந்தாலும்கூட சொல்வதற்கு மனம் இல்லையோ என்றும் கருதுகிறேன்.

சென்னைக்குப் பக்கத்திலே உள்ள புழலில் உள்ள சோதனைச் சாவடியில் அங்கே லாரிகள் செல்கின்ற நேரத்திலே அங்கே பணியாற்றவந்த உதவி வணிக வரி ஆணையர் அவர்களை, இரண்டு லாரிகளை நெருங்க ஓட்டி அவரை இடையிலே நசுக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையெல்லாம் எடுத்துவருகின்றார்கள். அப்படி அந்த லாரிகளை பிடிக்க முயன்ற போது, சோடா பாட்டில், திராவகம் போன்ற பொருட்களை பயன்படுத்தி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்லவர்கள் இன்று வணிகத் துறையிலே வணிகர்களாக இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் தயவுசெய்து எண்ணிப்பார்க்கவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதை எல்லாம் இந்த மன்றத்தில் சொல்லுவதற்குக் காரணம் இந்த மன்றத்தின் மூலமாக பத்திரிகைகளின் வாயிலாக நாட்டு மக்கள் அறிந்து கொள்ள வேண்டும், வணிகர்கள் திருந்த வேண்டும். அதிகாரிகள் தவறு செய்கிறவர்களும் திருந்தவேண்டும் என்பதற்காகத்தான் இங்கே இப்படி நான் விமர்சனம் செய்கிறேன் என்பதை அந்தப் பொருளோடு இங்கே குறிப்பிட கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே இந்த வணிக செயலாக்கப் பிரிவு வணிகர்கள் தவறு செய்யவில்லை. செயலாக்கப் பிரிவில் இருக்கின்ற வணிக அதிகாரிகள்தான் தவறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த வகையில் பல வணிகர்கள் செய்த குறைகளை கண்டுபிடித்ததை மட்டும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய பெயரை இங்கே சொல்லுவதால் அவர்களை நான் குற்றவாளிகளாக இழிவுபடுத்துவதற்காக சொல்லவில்லை. இருந்தாலும் அவர்கள் பெயரை சொன்னால் இந்த நாட்டு மக்கள் அறிந்து மற்றவர்கள் திருந்துவார்கள் என்பதற்காகத்தான் இதை நான் இங்கே சொல்லுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | Shimoga Steels Ltd., Madras. | 28.07 lakhs | revenue involved |
| 2. | Subash Metal Corporation, Madras | 3.50 lakhs | ,, |
| 3. | Gayathri Traders, Madras. | 3.00 lakhs | ,, |
| 4. | Majha Trading Co., Madras. | 2.45 lakhs | ,, |

சலுகை வரியின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட மூலப் பொருட்களுக்கு 2 சதவீத வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். இந்தச் சலுகையின் மூலம் தொழில் வளம் பெருகவும், அதேசமயம் விலைக் குறைப்பு நுகர்வோருக்குப் பயன்கிட்டும் வகையிலும் அமையும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில்தான் மூலப் பொருள்கள், ரா–மெட்டீரியல்ஸ், இப்படி ப்ராசசிங் மெட்டீரியல்ஸ், காம்பொனென்ட் பார்ட்ஸ், இவைகளுக்கு வரி குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதனை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து மின் பற்றாக்குறை. மின் வெட்டு வந்தால் எப்படியெல்லாம் அவதிப்படுகிறோம் என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையில், இன்றைக்கு ஏற்பட்ட, புதியதாகத் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியவில்லை. எனவே அவர்கள் சொந்தமாக ஜெனரேட்டர் வாங்கி வைத்து, அதன்மூலமாக மின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளவேண்டுமென்பதற்காக 12 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காட்டிற்கு, இன்றைக்கு ஜெனரேட்டருக்கு வரி குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அங்கு எலக்ட்ரானிக் பற்றிச் சொன்னார்கள். இதில் 10 சதவீதம் வெளி மாநிலத்திலிருந்து இம்போர்ட் செய்கின்ற அந்த எலக்ட்ரானிக் மின் அணுப் பொருட்களுக்கு 10 சதவீத வரியும், நம்முடைய நாட்டில் தயாரிக்கப்படுகின்ற, உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற மின்அணுப் பொருட்களுக்கு 6 சதவீதம் விதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். இது நியாயமற்றது, பாரபட்சமானது என்று எல்லாம் சொன்னார்கள். மின் அணுப் பொருட்கள் வெளி மாநிலத்திலிருந்து வந்தால்தான் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும் என்று மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் போன்றவர்கள் எல்லாம் பேசினார்கள். நான் இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிச் செய்வது முன் மாதிரி அல்ல. ஆந்திர மாநில அரசு இப்படிச் செய்திருந்தது, மகாராஷ்டிரா அரசு இப்படிச் செய்திருந்தது. இப்படி மாறுபட்ட வகையிலே விதித்திருக்கிறது. உள்நாட்டுப் பொருட்களுக்குக் குறைந்த வரியும், வெளிநாட்டிலிருந்து உள்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்குக் கூடுதல் வரியும் இப்படிப்பட்ட மாநில அரசுகள் விதித்திருக்கின்றன. இதனுடைய நோக்கம் என்னவென்று கேட்டால், நாம் எப்போதுமே வெளிநாட்டுப் பொருட்களை நம்பியிருக்கக்கூடாது. அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாட்டில் நாம் இருக்கிறோம். அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாட்டிலே பல்வேறு மாநிலங்கள் இருக்கின்றன. பல்வேறு மாநிலங்களில் பல்வேறு மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவை இருக்கின்றன. அந்தந்த மாநில அரசு அந்தந்த மாநிலத்தின் சுய தேவைகளைப் பூர்த்திசெய்து



கொள்ளவேண்டும். எப்போதும் அடுத்தவனை நம்பி வாழ்க்கூடாது. தன்னையே தனக்குதவி என்கின்ற வகையில் நம்முடைய நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கவேண்டும். அவை பெருக வேண்டும், வளர வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; அதன்மூலம் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும் என்ற அண்ணல் காந்தியடிகளுடைய வழியில் பேரறிஞர் அண்ணா வழிவந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் அந்த ஏற்பாட்டை செய்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல பேர் இங்கே பேசினார்கள், இங்கே நம்முடைய அருமைச் சகோதரர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. மலர் மன்னன் அவர்கள், நாங்கள் ஆட்சி செய்த காலத்திலே எடுத்த எடுப்பிலேயே ஒரேயடியாக 55 பொருட்களுக்கு பல முனை வரியிலிருந்து ஒரு முனை வரியாகக் கொண்டு வந்தோம் என்று கூறினார்கள். அப்போது இருந்த கால கட்டாயம், தேவை அப்படி.

அதற்குப் பிறகு நாங்கள் பார்த்துப் பார்த்துத்தான் செய்கிறோம். வல்லுநர் குழு கொடுத்த அறிக்கைக் கூட—அந்த அறிக்கையிலே கூறி இருப்பது என்ன என்று கேட்டால், ஒரு பொருளுக்கு பல முனை வரியிலிருந்து ஒரு முனை வரி ஆக்குகிற நேரத்தில் அந்தப் பொருள் உற்பத்தி செய்கின்ற இடம் என்ன என்பது தெளிவாகத் தெரியவேண்டும். அதற்கு மேலாக, அந்தப் பொருளை விநியோகம் செய்கின்ற நேரத்தில் எங்கு சேருகிறது, அதாவது அதனுடைய கடைசி பாயின்ட், இடம் தெளிவாகத் தெரியவேண்டும். அப்படி இருக்கிற நேரத்தில்தான் பல முனை வரியிலிருந்து ஒரு முனை வரியாக மாற்றம் செய்யவேண்டும், அப்போதுதான் வரி ஏய்ப்பை தடுக்கமுடியும். நம்முடைய நோக்கம் எல்லாம், வரி ஏய்ப்பைத் தடுப்பதுதான். பலமுனை வரியினை ஒரு முனை வரியாக ஆக்குவது கூடாது என்பது அல்ல நமது நோக்கம். பலமுனை வரியை ஒருமுனை வரியாக ஆக்குவதன் காரணமாக, வரி ஏய்ப்பு ஏற்பட்டு, வியாபாரிகள் அரசை ஏமாற்றக்கூடாது, அரசு அல்ல மக்களை என்கின்ற வகையிலே தான் பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரியாக ஆக்குகின்ற விதத்தில், பரீட்சார்த்தமாக சென்ற ஆண்டு 5 பொருட்களுக்கு அப்படி ஆக்கினோம். இந்த ஆண்டு பார்க்கும் போது வருவாய் பெருகியிருக்கிறது.

எந்தெந்த பாயின்ட் என்பதை எல்லாம், அதாவது, First Selling Point, First Purchasing Point, Last Selling Point மற்றும் last purchase point என்பதையெல்லாம், அதிலே அனுபவம் உள்ள அதிகாரி பெருமக்கள் கலந்து செய்யஇருக்கிறார்கள், இதிலே வரி

போடுகின்ற பாயின்ட், முனை இருக்கின்றதே, அவையெல்லாம் வரி ஏய்ப்பைத் தடுக்கவே செய்யப்படுகின்ற திட்டமே தவிர, வியாபாரிகளை துன்பத்திற்கோ, துயரத்திற்கோ, சிரமத்திற்கோ ஆட்படுத்தச் செய்யப்படுகின்ற காரியம் அல்ல.

இந்த அரசைப் பொறுத்தவரையில், எல்லாப் பொருள்களையும் ஒரு முனை வரி என்ற நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் உண்டு. மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களும், அதன்படிதான் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, 6 பொருட்களுக்கு பல முனை வரியிலிருந்து ஒரு முனை வரியாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தாவர எண்ணெயைப் பொறுத்தவரையில், 3 சதவிகிதம் பல முனை வரி, 4 சதவிகிதம் ஒருமுனை வரியாக மாற்றப்பட்டுள்ளது மிகவும் அநீதி என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொன்னதாகக் கருதுகிறேன். ஒரு, பல முனை வரி 5 விழுக்காடு அதிகமாக விதிக்கலாம். அந்தப் பலமுனை வரி என்பது 1,2,3 இடங்களிலே வரி வசூலிக்கப்படுகின்றது. அதாவது 3 பாயிண்ட்ஸ் அப்படி வசூலிக்கிற நிலையில் வரி ஏய்ப்புக்கும் இடமில்லை. 15 விழுக்காடாகவும் உயர்கிறது. ஒரு முனை வரி என்று சொன்னால், வரி ஏய்ப்பிற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. அதோடு அல்லாது, அது அதனுடன் முடிந்து விடுகிறது. அதிலே 'பில் டிரேடிங்' என்று சொல்கிற நிலைமையெல்லாம் உருவாகிறது. எனவே, ஒரு விழுக்காடு அதிகமாக இந்த அரசுக்கு வரி ஏய்ப்பு வரும். அப்படி பில் டிரேடிங் வரும் என்று தெரிந்து. வணிகர்கள் அப்படி எல்லாம் எத்தணிப்பதை எல்லாம் அறிந்து கொண்டு வணிகர் நலன் கருதியும், வாங்கி உண்பவர்களுடைய நலனைக் கருதியும் ஒரு விழுக்காடுதான் இப்போது போட்டு இருக்கிறோம்.

அதோடு அல்லாது, மத்திய விற்பனை வரி............

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, தாவர எண்ணெய்களைப் பொறுத்தவரையிலும் 3 சதவிகிதம் பலமுனை வரியாக இருந்தது, இனி 4 சதவிகித ஒருமுனை வரியாக மாற்றப்படும் என்றும், மேலும் மாநிலங்களிடையே நிகழ்கிற தாவர எண்ணெய் விற்பனையின் மீதான வரி 4 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதமாக குறைக்கப்படும் என்றும் நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதே அளவுக்கு புண்ணாக்குக்கும் குறைக்கவேண்டும் என்ற கோரிக்கை எல்லாத் தரப்பினரிடமிருந்தும் வைக்கப்படுகிற காரணத்தால், புண்ணாக்கிற்கும் அதே அளவுக்கு வரி விதிக்கும் அமைக்கப்படும் என்பதை இந்த வாய்ப்பிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



(பிற்பகல் 1-40)

ஆகவே, மூன்று சதவீதமாக இருந்த பலமுனை வரி இனி புண்ணாக்குக்கும் 4 சதவீத ஒரு முனை வரியாக மாற்றப்படும் என்றும், அதுபோன்று, தாவர எண்ணெய்களைப் பொறுத்த வரையில் மாநிலத்திற்கு மாநிலம் நிகழ்கிற 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக புண்ணாக்குக்கும் மாற்றப்படும். அது இன்றிலிருந்தே நடைமுறைக்கு வரும்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படும் கடலைக்கு முதல் கொள்முதல் நிலையிலும், வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படும் நிலக்கடலைக்கு, முதல் விற்பனை நிலையிலும் வரி விதிக்கக் கருதியுள்ளோம் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், வரி ஏய்ப்பைத் தடுக்கத்தானே தவிர வேறொன்றுமில்லை. அனுபவ ரீதியாக இவைகளெல்லாம் செய்யப்படுகின்றன.

பருத்தி நூலைப்பற்றிச் சொன்னார்கள். பருத்தி வகைகள் பனியன், உள்ளுடை போன்றவைகளுக்கு இரண்டு சதவிகிதம் என்றும், ஹாங் யார்ன் மீது 3 சதவிகிதம் என்றும் மற்ற நூல் வகைகளுக்கு 4 சதவிகிதம் என்றும் ஒரு குழப்பமான நிலை, எந்த நூலுக்கு எந்த வரி என்று நாம் புரிந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருந்ததன் காரணமாக மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள், வணிகப் பெருங்குடி மக்களெல்லாம் கோரிக்கை விடுத்ததன் காரணமாக, இப்போது அது 3 சதவிகித விற்பனை வரியாக விதிக்கக் கருதப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

துருப்பிடிக்கா எஃகுப் பொருள்கள்மீது தற்போது 10 சதவிகித விற்பனை வரி இருந்து வருகிறது. தற்பொழுதுள்ள நடைமுறையில் உள்ள வரி ஏய்ப்பு வழிவகைகளை அடைக்கும் வண்ணம் இதை இரண்டாகப் பிரித்து, முதல் விற்பனையின்போது 6 சதவிகித வரியாகவும், இறுதி விற்பனையின்போது 4 சதவிகித வரியாகவும் விதிக்கக் கருதப்பட்டுள்ளது. இது வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காகச் செய்யப்பட்டு உள்ளதே தவிர, இந்த வரி ஏய்ப்பு அதிகமாக நாட்டிலே எங்கே இருக்கிறது என்றால், ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பொருள்களிலே அதிகம் இருக்கிறது. இதைக் கண்டு பிடித்து வரியை வசூலிக்க முடியவில்லை. எங்கள் கிராமத்திலே ஒன்றைச் சொல்வார்கள். குளத்தில் மீன் பிடிக்கின்ற நேரத்தில் கெண்டை மீனை பிடிப்பதற்கு என்று பெரிய வலை இருக்கும். அந்த வலையைப் போட்டால் சிறிய மீன்கள் தப்பித்துக்கொள்ளும். ஆனால் சின்ன மீனைப் பிடிக்க வேண்டுமென்றால் கொட்டாரி வலை இருக்கும். அந்த வலையைப் போட்டால், பெரிய மீனும் மாட்டிக்கொள்ளும்; சின்ன மீனும் மாட்டிக்கொள்ளும். (குறுக்கீடு) எனவேதான் மீனைப் பற்றிச் சொல்கிறேன். இன்னும், சிறிது

நேரத்தில் சென்று வயிறு புடைக்க உண்ணலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக, தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்திலே இது முதல் முறையாக இரண்டு நிலைகளிலே வரி விதிக்கப்படும் ஒரு புது மாதிரி என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்பொழுது பத்து ரூபாய் என்று பதிவுக் கட்டணம் இருந்ததை 100 ரூபாய் என்று உயர்த்தக் கருதியுள்ளதை, பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் அதைக் குறைக்க வேண்டுமென்று கூறினார்கள். இதை இப்படி ஆக்கியிருப்பதன் நோக்கமே, பில் டிரேடிங்கில்—ஊரிலே ஆளே இருக்கமாட்டான், ஆனால் பதிவு செய்யப்பட்டிருக்கும்; யாரோ ஒருவனை நிறுத்தி இவன்தான் அவன் என்பார்கள்; ஆனால் அவன் அந்த ஆளாக இருக்க மாட்டான். பத்து ரூபாய் என்று இருந்ததால் அந்த பத்து ரூபாயைப் பற்றி அலட்சியமாக நினைத்து, பதிவு செய்கின்ற வணிகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால்தான் இந்த 10 ரூபாயை 100 ரூபாய் என்று ஆக்கினால் இப்படிப் பட்ட தப்புகள் குறையும் என்ற எண்ணத்தில் இதை அதிகமாக்கக் கருதப்பட்டுள்ளது. வியாபாரிகளின் பொருளாதாரத்தைக் கவனிக்கின்றபொழுது 10 ரூபாயிலிருந்து 100 ரூபாய் என்று ஆக்கியது ஒரு பெரிய தொகை அல்ல. அதுவும் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைக் கூறி எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் மன நிறைவு கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடகத்தில் கூட 250 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே பல ஆண்டுகளுக்குப் பிறகு 100 ரூபாய் என்றுதான் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சித்தன் போன்றவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். முன்பு 3 இலட்சத்திற்குத்தான் கூடுதல் விற்பனை வரி அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் இருந்தது; அதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் டாக்டர் நாவலர் அவர்களும் நிதி நிலை அறிக்கையிலே பத்து இலட்சம் ரூபாய் வரையிலே டர்ன் ஓவர் இருந்தால் அதற்கு வரி விலக்கு என்று சொன்னார்கள். 10 இலட்சத்துக்கு மேல் 40 இலட்சம் ரூபாய் வரையில் 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரியும், 40 இலட்சம் ரூபாய்க்கு மேல் உள்ளவர்களுக்கு 1.5 சதவிகித கூடுதல் விற்பனை வரியும் விதிக்கப்படும். நாங்கள் இப்படியெல்லாம் சலுகை கொடுத்திருக்கிறோம்.

இப்படி இந்தச் சலுகை, இந்திய உபகண்டத்திலேயிருக்கிற எந்த மாநிலத்திலும் இதுவரையிலே இல்லை. தமிழ்நாடுதான் முதன் முதலாக, இந்தச் சலுகையை இப்பொழுது அறிவித்திருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் நான் குறிப்பிட



விரும்புகிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் அதற்கும் மேல் போய், ரூ. 10 இலட்சம் கொடுப்பது, மைய அரசு வருமான வரியிலிருந்து கழித்து விட்டு, ரூ. 10 இலட்சத்துக்கு மேல் 1-லிருந்து ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே இதை நாம் கொண்டு வரவேண்டுமென்றால், வரி விகிதத்தை அதிகப்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கும். எனவேதான் அது தேவையில்லை என்பதைச் சொல்லி, இந்தத் தமிழக அரசு, இந்தியத் திருநாட்டிலே இருக்கிற ஏனைய அரசுகளுக்கு முன்னோடியாக, முதன்முதலாக இதைச் செய்திருக்கிறது. எனவே, 10,000-க்கு மேற்பட்ட வணிகப் பெருங்குடி மக்கள், வியாபாரிகள், இதனால் பயன் அடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன்.

இன்னொன்றும் இருக்கிறது. அதாவது சம்மரி அசெஸ்மென்ட் இருக்கிறது. அதாவது ரூ. 2 இலட்சம் வரை அப்படிச் செய்யலாம். 100 வியாபாரிகளுக்கு அப்படிப்பட்ட சலுகை கொடுத்து, 'அட் ராண்டம்' என்று சொல்லக்கூடிய அளவிலே ஒரு கணக்கைத் தணிக்கை செய்வதற்குப் பல்வேறு கடுமையான சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கடுமையான சட்டதிட்டங்களை நீக்கி, வியாபாரிகளை நம்பி, அந்த வழிவகை 47(10)-லே செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடுகிறேன். அந்த வகையிலே இப்பொழுது உருட்டப் பட்ட இரும்பு மற்றும் எஃகு ஆலைகளுக்கு விற்பனை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு இறுதிப்பொருள் உருக்குப் பொருட்களைத் தயாரிக்கும்போது பயன்படும் கழிம்புப் பொருளுக்கு 4% வரி விதிக்கப்படுகிறது. இனி, கழிம்பு இரும்புக்கு விற்பனை வரியிலிருந்து அறவே விலக்கு அளித்து, பினிஷ்ட் கூட்சுக்கு, அதாவது இறுதிப் பொருளுக்கு வரி விதிக்கின்ற நிலையை இன்று இந்த அரசு செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடுகிறேன்.

இங்கு பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் சோலைராசு போன்றவர்கள் இப்பொழுது இருக்கும் ஓட்டல் வரியைப் பற்றி சொன்னார்கள். இன்று ஓட்டல்களிலே அமைந்து இருக்கும் ஆடம்பர வசதிகளைப் பொறுத்து விதிக்கப்பட்டிருக்கிற வரி விதிப்பைச் சீர்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இப்பொழுதிருக்கிற நிலைமை ரூ. 20 முதல் ரூ. 50 வரை 5%; ரூ. 50-க்கு மேல் 10%. இது எப்படிச் சட்டத்திலே இருக்கிறது என்று கேட்டால், 'பெர் பெர்சன் பெர் டே' என்று இருப்பதன் காரணமாக அங்கே ரூ. 20 ஒரு ஆளுக்கு வரி உண்டு. எனவே, இதை ரூ. 19 என்று பிரித்து, இரண்டு பேருக்கு ரூ. 38 வாங்கிக் கொண்டு, வரியை ஏமாற்றுகின்ற நிலைமை இருக்கிற காரணத்தால், இப்பொழுது பெர் ரூம் பெர் டே என்ற முறையிலே ரூ. 50-லிருந்து ரூ. 100 வரை 10%; ரூ. 100 முதல் ரூ. 200 வரை—15%; ரூ. 200-க்கு மேல் 20% வரி விதிப்பு முறையைக் கொண்டு வர இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இது மாதிரியான மாற்றம் அண்டை மாநிலமான கர்நாடகத்திலே உள்ளது என்பதையும், கர்நாடகத்திலே ரூ. 50-லிருந்து ரூ. 150 வரை 10%; ரூ. 150-லிருந்து ரூ. 250வரை—15%; ரூ. 250-க்கு மேல் 20% வரி போடுகிற சட்டம் இருக்கிறது என்பதையும் அதைப் பின்பற்றி, தமிழக அரசு சட்டம் கொண்டு வருகிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே ஒர்க்ஸ் கான்ட்ராக்ட் பற்றிச் சொன்னார்கள். ஒர்க்ஸ் கான்ட்ராக்டைப் பொறுத்தவரை, இப்பொழுது அக்டோபர் 1984-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் வேலை ஒப்பந்தங்கள் மீது வரி விதிக்கப்பட்டது. செயலில் ஏற்படும் சில இடர்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு, மனித உழைப்பை மட்டுமே நம்பியிருக்கும் வேலைகளைப் பொறுத்த வேலைகளுக்கு மட்டும் சலுகை வரி விதங்களைத் தகுந்தவாறு திருத்தியமைக்கவும் கருதப்பட்டுள்ளது. ஒர்க்ஸ் கான்ட்ராக்ட் பற்றி பலபேர்கள் நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். எனவே, நீதிமன்ற வழக்குகள் முடிந்த பிறகு இதைப் பற்றி கலந்து ஆலோசித்து ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-50)

அதைப்போலவே பொருள்களை குத்தகைக்கு விடுதல் வாடகைக்கு விடுதல் முதலியவற்றின் மீதான விற்பனை வரியை சீராக்கவும், செம்மைப்படுத்தவும் உரிய பரிந்துரைகளைச் செய்வதற்காக அரசு இரண்டு குழுக்களை நியமித்தது. திரைப் படச் சுருள், நிழற்படக் கருவி, நிழற்படச் சாதனங்கள் போன்றவற்றை குத்தகைக்கு விடுதல் மீது வரி விதிக்கும் யோசனையை ஒரு குழு தெரிவிக்க வேண்டும். இன்னொரு குழு தளவாடங்கள், இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள், கட்டிடங்கள், கட்டுமானப் பொருள்கள் போன்றவற்றை குத்தகைக்கு விடுதல்மீது வரி விதிக்கும் யோசனையை தெரிவிக்க வேண்டும். அந்த யோசனைகள் பரிசீலிக்கப்பட்டு சட்டம் கொண்டுவரப்படும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட கருத்துக்களையும் பரிசீலனை செய்து நல்ல முறையில் சட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாற்றுத் தலைவரவர்களே, ஏற்கெனவே இது பலமுனை வரியாக இருந்தது ஒருமுனை வரியாக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறதே.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே பலமுனை வரி, ஒருமுனை வரி என்பதெல்லாம் வேடிக்கையான ஒன்று. எப்படி என்றால் ஒரு படத்தை ஒருவர், ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு லீசுக்கு விடுகிறார். அவர்



இன்னொருவருக்கு 1000 ரூபாய் அல்லது 2,000 ரூபாய்க்கு விடுகிறார். இப்படி எல்லாம் ஏகமாறிக்கொண்டே இருப்பதால்தான் அந்த அந்த இடத்திலே வரி வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. இதிலே ஒருமுனை வரி, பலமுனை வரி என்பது இலாப-நஷ்ட கணக்குக்காக அல்ல. ஒரு முறையான, சீரான முறையில் அமுல் படுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி கொண்டு வரப்படுகிறது.

பத்து சதவீதம் கேளிக்கை வரி விதிப்புபற்றி பலரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி வேண்டும்; நிதி ஆதாரம் பெருக வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் கேளிக்கை வரி 10 சதவீதமாக உயர்த்தப் பட்டிருக்கிறது. 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே தான், சினிமாத் தொழில் வளரவேண்டும், தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் நல்லமுறையில் வாழ வேண்டும்; அவர்களுடைய வேலைவாய்ப்பு பெருக வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இணக்க வரிமுறையை (காம்பவுண்டிங் டாக்ஸ்) கொண்டு வந்தார்கள். அதன் பிறகு சினிமாத் துறையைச் சேர்ந்த திரையரங்கு உரிமையாளர்களும், அரசும், அதிகாரிகளும் எல்லோரும் கலந்து பேசி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை வரியை உயர்த்த வேண்டுமென்று முடிவுசெய்த அந்த அடிப்படையில் தான் இப்போது 10 சதவீதம் உயர்த்தியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இது சம்பந்தமாக வருகின்ற 9ந் தேதி மாபெரும் 'பந்த்' ஒன்றை திரையரங்கு உரிமையாளர்கள் நடத்தவிருக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். அது இந்த அரசை எதிர்த்து அல்ல; இந்த வரி உயர்வை எதிர்த்து அல்ல. மத்திய அரசால் விதிக்கப்பட்டிருக்கிற 'ஃபிலிம் எக்ஸைஸ் டியூட்டி'யை எதிர்த்து 'பந்த்' நடத்தப் போகிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், சில வியாபாரிகள் பிற மாநிலங்களிலிருந்து இங்கே வந்து கிளை மாற்றம் அல்லது தரகர்கள் மூலம் கொண்டு செல்லும் இறுதி பொருள் தயாரிக்கப் பயன்படுத்தும் மூலப்பொருள்கள், செய் பொருள்கள் மற்றும் உபயோகப்படுத்தும் பிற பொருள்கள் ஆகியவற்றின்மீது 2 சதவீதம் கொள்முதல் வரி விதிக்க இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது. தற்போது குஜராத் மாநிலத்தில் 2 சதவீதம் கொள் முதல் வரி விதிக்கும் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்போல இந்த அரசும் செய்ய கருதியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இங்கே பேசும்போது இந்தத் துறையிலே போதிய அலுவலர்கள் இல்லை; அவர்களுக்கு டைப்ரைட்டர் போன்ற சாதனங்கள் இல்லை; அதனால் இந்தத் துறையிலே இருக்கிறவர்கள் சிரமப்படுகிறார்கள் என்று

சொன்னார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளை போக்குவதற்காகத்தான் 1986-87 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தில் பல்வேறு பணிகள் இந்தத்துறையில் செய்யப்படவிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் முக்கியமாக கீழ்க்கண்ட இடங்களில் கட்டிடப் பணிகள் நிறைவேற்றப்படவிருக்கின்றன:

நாகப்பட்டினத்தில் அலுவலகக் கட்டிடம் 4·2 இலட்சம் ரூபாயில்;

திருவாரூரில் அலுவலகக் கட்டிடம் 10·62 இலட்சம் ரூபாயில்;

வேலூரில் அலுவலகக் கட்டிடம் 6·90 இலட்சம் ரூபாயில்;

திருப்பூரில் அலுவலகக் கட்டிடம் 8·25 இலட்சம் ரூபாயில்;

உதகமண்டலத்தில் உதவி வணிக வரி ஆணையர் குடியிருப்பு 4·00 இலட்சம் ரூபாயில்;

சென்னை, கிரீம்ஸ் சாலையில் வணிகவரி அலுவலகக் கட்டிடம் 34·83 இலட்சம் ரூபாயில் கட்டப்படவிருக்கின்றன.

திட்டத்தில் சேராதவை: மதுரை வணிக வரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்; அதற்கு இந்த ஆண்டு செலவு 2·89 இலட்சம். தென்னாற்காடு வணிகவரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல் 2·96 இலட்சம். இங்கே அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டிவனம் தங்கமணி அவர்கள் திண்டிவனத்தைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி ஆணையாளர் அலுவலகத்தை அமைக்கவேண்டும் என்றுசொன்னார்கள். புள்ளிவிவரத்தின் அடிப்படையில் திண்டிவனத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அவ்வாறு அமைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

தென்னாற்காடு வணிக வரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்; அதற்கு 2.94 இலட்சம். வரிவிதிப்பு அதிகமாக உள்ள வட்டங்களை இரண்டாகப் பிரித்தலும் மற்றும் புதிய வட்டங்களை ஏற்படுத்துதலும், அதற்கு ஆகும் செலவு ரூ. 19·90 இலட்சம். வணிகவரி ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், சில பிரிவுகளுக்குக் கூடுதல் பணியாளர்கள் வேண்டும் என்ற செயற்குறிப்பு 3.58 இலட்சம். துறையின் தணிக்கைப் பிரிவுகளை வலுப்படுத்துதல்—5·75 இலட்சம். செயலாக்கப் பிரிவை இரண்டாகப் பிரித்து இரு துணை ஆணையாளர் மற்றும் புதிதாக இரண்டு பிரிவுகளை ஏற்படுத்தி ஒவ்வொரு உதவி ஆணையாளர் பதவி செயல்படுகிற வகையில் புதிதாக ஏற்படுத்துதல்; அதற்கு ஆகும் செலவு 11.63 இலட்சம். வணிகவரி அலுவலகங்களுக்கும், அதிகாரிகளின் வீடுகளுக்கும் தொலைபேசி வசதி செய்துகொடுத்தல் 0·86 இலட்சம். இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைத்தல் 3.92 இலட்சம், ஆக மொத்தச் செலவு இந்த ஆண்டு இந்தத் துறைக்



காக 1,21,57,000 ரூபாய் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றுக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். சிலவற்றுக்குப் பதில் சொல்லவில்லை பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரி, சில நிர்வாகச் சிக்கல்கள், வரிக் குறைப்பு, சிலவற்றுக்கு வரி போடுகிற முறை மாற்றங்கள் ஆகிய வற்றைப் பற்றி எல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னால் முடிந்தவரையில் நான் பதில் தந்திருக்கிறேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

வணிக நலக்குழு பற்றிக் கேட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சம்பந்தப்பட்ட வணிக வரித்துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மாநில அளவில் வணிகவரி ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும் அதிலே உறுப்பினராக இருந்திருக்கிறார் . . . . . (குறுக்கீடு) . . . . என்னிடம் நோட்டு இருக்கிறது. எனவே சட்டமன்ற உறுப்பினர்களில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் எல்லா தரப்பினரும் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். சேம்பர் ஆஃப் காமர்ஸ், சில வர்த்தகக் கழகங்கள், சில வர்த்தக சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் எல்லாம் உறுப்பினர்களாக இருந்து சட்டமன்ற உறுப்பினர்களும் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். அமைச்சர் பெருமக்களும் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் ஆகியவர்கள் எல்லாம் அதிலே இருந்து ஆலோசனை கூறக்கூடிய வகையில் ஒரு ஆலோசனைக் குழு இருக்கிறது. வணிக நலக் குழுவும் இருக்கிறது. அதுவும் அப்படித்தான் வணிகர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய எல்லோரும் இருக்கிறார்கள் என்று நான் சொல்லிக்கொண்டு கடந்த காலத்தில் இரண்டாண்டுக் காலமாக, நாட்டிலே இருக்கிற சூழ்நிலை காரணமாக, தேர்தல் முதலிய நிலைமைகள் ஏற்பட்டதன் காரணமாக அந்தக் குழுக்கள் எல்லாம் கூட்டப்படவில்லையோ என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் இந்த ஆண்டிலிருந்து சட்டசபை முடிவதற்குள்ளாகவே அப்படிப்பட்ட குழுக்கள் எல்லாம் கூடுகிற நிலையை உருவாக்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் காரியங்களைச் செய்திருக்கிறோம்.

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ரப்பர் லேட்டக்ஸ் பற்றி-உயர்நீதி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மன்றமோ உச்சநீதிமன்றமோ (சுப்ரீம் கோர்ட்) வரி விதிப்பு சம்பந்தமாக ஒரு முடிவு எடுத்தால் அதன் அடிப்படையில் சட்டத்தின் விதி முறைகளுக்கு உட்பட்டு 5 வருடத்திற்குள் வரி விதிப்பு மாற்றி அமைக்கப்படுகிறது.

வரி மறைப்போ, ஏய்ப்போ அல்லது துறைக்கு சாதகமான முடிவுகளின் அடிப்படையில் வரி விதிப்பு மாற்றம் செய்கிறபோது, சிறிய பெரிய வியாபாரிகள் என பாகுபாடு செய்ய முடியாது என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன ஆலோசனைகள்; உங்களால் குறிப்பிடப்பட்ட பல வியாபாரிகளின், வியாபாரப் பெருங்குடி மக்களின் சிரமங்கள், நீங்களே நேரில் அறிந்து சொல்லிய காரியங்களில் சொன்னவை எல்லாமும், சட்டமன்ற குறிப்பேட்டிலே பதிவாகியிருக்கின்றன. அவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு இந்த அரசு வருங்காலத்திலே செயல்படும் என்பதைத் கூறிக் கொள்கிறேன்.

இறுதியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்களுக்கு ஒன்றைச் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் வியாபாரிகள் இரண்டு கணக்குகளை வைத்திருக்கிறார்கள் என்றும் ஒரு கணக்கு கடையிலே இன்னொரு கணக்கு பங்களாவிலே என்றும் சொன்னார்கள். இரண்டு கணக்கு அல்ல எத்தனையோ கணக்குகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் மீறி சிலவகைகளை கைப்பற்றி, இன்று வரி வசூலிப்பதில் தீவிரம் காட்டி நல்ல முறையில் செய்து வருகிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். அதை எல்லாம் நீங்கள் பத்திரிகை வாயிலாகவும் வானொலி வாயிலாகவும் அறிந்திருப்பீர்கள். நாட்டு மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இரண்டைச் சொல்லுகிறேன்.

கரூரிலே கடலைப் பருப்பிலே வரி ஏய்ப்பு கண்டு பிடித்து கிட்டத்தட்ட 32 லட்சம் ரூபாய்க்கு உரிய டர்ன் ஓவர் ஏமாற்றப்பட்டிருப்பது அறிய முடிந்தது. அதேபோல கரூரிலே, யார்ன் நூலிலே கோடி கணக்கில் வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டது. இவைகளைப் பற்றி எல்லாம் பத்திரிக்கையிலேயும், வானொலியிலேயும் சொன்னார்கள். அதை அறிந்த வணிகப் பெருங்குடி மக்கள், வீட்டிலே கொண்டுபோய் வைத்திருந்த கணக்குகளை எங்கே தான் கொண்டு போய் மறைத்தார்களோ தெரியவில்லை, அதற்குப் பிறகு, ஒரு நிகழ்வினைக் கூட கண்டுபிடிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. இதை எதனால் சொல்லுகிறேன் என்றால் சில துறைகளில் விளம்பரம் கூடாது. சில துறைகளில் விளம்பரம் செய்தாக வேண்டும் என்ற நிலைமை ஏற்படும். அதிகமாக விளம்பரம் செய்தால் சில துறைகளுக்கு, வணிக வரி போன்ற துறைக்கு தீமை தான் ஏற்படும். யாருக்குத் தீமை என்று கேட்டால், நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு தீமை ஏற்படும். சமூக விரோதிகள் வளர்ந்து விடுவார்கள், தப்பித்து விடுவார்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அவைகளையெல்லாம் சொல்ல முடியவில்லை என்றாலும், நீங்கள் கூறிய கருத்துக்களை மனத்திலே கொண்டு வருங்காலத்தில் விளம்பரம் இல்லாத முறையில், அப்படிப்பட்ட சமூக விரோதிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க இந்த அரசு



முனைப்போடு செயல்படும் என்பதைக் கூறிக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்லிய கருத்துக்களுக்கு, வெட்டுப் பிரேரணைகளுக்கு என்னால் எனக்குத் தெரிந்தபதிலைச் சொல்லியிருக்கிறேன். மற்றவர்களுக்கு நான் பதில் சொல்லாவிட்டாலும் கூட, அவைகள் எல்லாம் அவைக்குறிப்பேட்டில் இருக்கின்றன. ஆகவே அவைகளைப் பொறுத்து வருங்காலத்திலே முறையாக நல்ல நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், பொ. உத்திராபதி, கு. ரமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,99,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (7-4-1986) திங்கள் கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·04 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

128-54—20

5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

(ஆ) அறிக்கைகள்; அறிவிப்புகள் ஏனைய தாள்கள் எதுவுமில்லை.

68. கோரிக்கை எண் 4-தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிபபு, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

69. இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) வேளாண்மைத் துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்),

70. வேளாண்மைத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது (எட்டாவதுக் சட்ட மன்றப் பேரவை) அறிக்கை (தமிழ்).

71. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (ஏழாவது பட்டியல்).



இணைப்பு.

(973-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 4.

தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டமும், ஏனைய வணிக வரிகளும் 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு உரிய வருவாயில் 66 சதவீதத்திற்கும் அதிகமான வருவாயைப் பெற்றுத் தந்தன. 1983-84-ல் வணிக வரிகள் வாயிலாக ரூ. 751.18 கோடி வருவாய் கிட்டியது. 1984-85-ல் ரூ. 905.32 கோடி கிட்டியது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் சுமார் 21 சதவீதம் கூடுதலாகும்.

2. வணிகவரித் துறை பின்வரும் வரிவிதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது:

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச்சட்டம்.

(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் இல்லங்களில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

(9) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச்சட்டம்.

[1986 ஏப்ரல் 5

3. கடந்த ஐந்தாண்டுகளில் வணிகவரித் துறை வசூல் செய்த வருவாயும் துறைக்கு ஏற்பட்ட செலவும் வருமாறு:

| ஆண்டு. (1) | | | வருவாய். (2) | செலவு. (3) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1980–81 | .. | .. | 491,63.93 | 669.00 |
| 1981–82 | .. | .. | 594,25.00 | 778.31 |
| 1982–83 | .. | .. | 696,04.09 | 942.59 |
| 1983–84 | .. | .. | 751,18.00 | 1,067.55 |
| 1984–85 | .. | .. | 905,32.00 | 1,230.66 |
| 1985–86 | .. | .. | 929,82.00 | 986.77 |
| | | | (1986 பிப்ரவரி வரை). | (1985 நவம்பர் வரை). |

1985-86 ஆம் நிதி ஆண்டில் 1986, பிப்ரவரி வரை ரூபாய் 929,82.00 இலட்சம் வசூலிக்கப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் இதே கால அளவில் வசூலான தொகை ரூபாய் 787,16.00 இலட்சமாகும். இத்தொகை சென்ற ஆண்டை விட ரூபாய் 142,66.00 இலட்சம் அதிகரித்துள்ளதாகக் காட்டுகிறது. அதாவது 18 சதவீதம் அதிகரித்துள்ளது.

4. வணிக வரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல்.

வணிக வரி அலுவலகங்கள்:

வணிக வரி அலுவலகங்களுக்கு வரும் வணிகப் பெருமக்களுக்கும், வணிகவரித் துறை பணியாளர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன், படிப்படியாக வணிகவரி அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. தற்போது, பின்வரும் இடங்களில் வணிகவரி அலுவலகங்கள் அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. 1. சென்னை-கிரீம்ஸ் சாலை, 2. காஞ்சிபுரம், 3, வேலூர், 4. கடலூர், 5. தஞ்சாவூர், 6. கும்பகோணம், 7. பட்டுக்கோட்டை, 8. கோயம்புத்தூர், 9. நீலகிரி, 10. ஈரோடு, 11. பொள்ளாச்சி, 12. திருப்பூர், 13. சேலம், 14. தர்மபுரி, 15. மதுரை, 16. திண்டுக்கல், 17. திருநெல்வேலி, 18. விருதுநகர், 19. தூத்துக்குடி, 20. கோவில்பட்டி, 21. நாகர்கோயில்.



1986 ஏப்ரல் 5]

திருச்சிராப்பள்ளியில் வணிகவரி அலுவலகக் கட்டிடமும் கும்பகோணத்திலுள்ள வணிகவரி அலுவலகக் கட்டிடத்தில் கூடுதல் மாடிகளும், எழும்பூர், நுங்கம்பாக்கம், மயிலாப்பூர் ஆகிய இடங்களிலுள்ள வருவாய்த்துறை அலுவலகக் கட்டிடத்தில் வணிகவரி அலுவலகத்திற்காக கூடுதல் மாடிகளும் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. பூவிருந்தவல்லியிலுள்ள கட்டிடத்தில் மின் பணி முடிவடைந்ததும் அலுவலகம் அங்கு தொடங்கப் பெறும்.

வணிகவரிச் சோதனைச் சாவடிகள்:

தமிழ்நாட்டில் வணிகவரித் துறை சம்பந்தமாக 63 சோதனைச் சாவடிகள் உள்ளன. அவற்றுள், பின்வரும் சோதனைச் சாவடிகள் தற்போது அரசுக் கட்டிடங்களில் செயல்படுகின்றன:—

(A) அரசுக் கட்டிடங்கள் (நிரந்தரமானவை).—

1. இரும்புலியூர்-தாம்பரம்
2. பூவிருந்தவல்லி
3. புழல்
4. இராணிப்பேட்டை
5. ஓசூர்
6. கே. ஜி. சாவடி
7. மீனாட்சிபுரம்
8. காட்பாடி
9. சின்னசேலம்
10. புளியறை
11. சண்ணூரப்பட்டி

(B) அரசுக் கட்டிடங்கள் (ஓரளவு நிரந்தரமானவை)—

1. தோப்பூர்
2. லண்டன் பேட்டை.

ஏனைய 50 சோதனைச் சாவடிகள், புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்ட சிற்றுக் கொட்டகைகளில் செயல்படுகின்றன.

சோதனைச் சாவடிகள் கட்டுமானப் பணிநிலை:

கடம்ப கோயிலிலும் பன்னாரியிலும் சோதனைச் சாவடிகள் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. களியக்காவிலையில் ரூ. 4 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டிடம் கட்டுவதற்கான செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

பெரிய சோதனைச் சாவடிகளின் இரு வழிச் சோதனைச் சாவடிகளை அமைத்தல்:

சோதனைச் சாவடி அமைந்துள்ள இடங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், விரைவு நடவடிக்கை மேற்கொள்ளவும் இருவழி வண்டிகளுக்கு தனித்தனியாகச் சோதனைச் சாவடிகள் அமைப்பதும் அவசியமென்று நீண்டகாலமாக உணரப் பட்டது. போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக இம் மாதிரியான இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்காக லாரி உரிமையாளர்களும் தொழிலாளர்களும் முறை யிட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலையில் 10 பெரிய சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளன. தொடக்கத்தில் பூவிருந்தவல்லியிலும், ஒசூரிலும் இம்மாதிரியான இருவழிச் சோதனைச் சாவடிகளை அமைப்பதற்கு 1986-87 ஆம் ஆண்டுக் கான பகுதி II திட்டத்தில் ரூ. 3.18 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

புதிதாக அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல் ஏற்கெனவேயுள்ள கட்டிடங்களில் கூடுதல் மாடிகள் கட்டுவதற்கு வகை செய்தல்;

சென்னை, கிரீம்ஸ் சாலை, நாகப்பட்டினம், வேலூர் ஆகிய இடங்களில் கூடுதல் அலுவலகக் கட்டிடங்களை கட்டுதல், திருப் பூரிலுள்ள வணிகவரி கட்டிடங்கள் திருவாரூரிலுள்ள வட்ட அலுவலகம் ஆகியவற்றில் கூடுதல் மாடிகள் கட்டுவதற்கும், நீலகிரியிலுள்ள குடியிருப்புகளுக்கு வசதிகள்செய்து தரவும், 1986-87 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் ரூ. 22.28 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. செய்தி தொடர்பு வசதிகள்:

தொலைபேசி வசதி இது வரையில் செய்து தரப்படாத வரி விதிப்பு வட்டங்களிலும் ஏனைய அதிகாரிகளுக்கும் தொலைபேசி களை அமைத்துத் தருவதற்காக 1986-87 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் ரூ. 6.76 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



6. வரி விதிப்பு வட்டங்களைப் பிரித்து மாற்றியமைத்தல் முதலியன:

மாவட்டங்களை மதுரை, தென் ஆற்காடு வணிகவரி கோயம்புத்தூரிலும் இரண்டாகப் பிரிக்கவும், திருச்சியிலும், அமைப்பதற்கும், புதிதாக இரண்டு செயலாக்கக் கோட்டங்களை இரண்டாகப் பணிச்சுமை மிகுந்த வரி விதிப்பு வட்டங்களை ஏற் பிரிக்கவும் (இவ்வாறு செய்வதால் புதிதாக 10 வட்டங்கள் கூடுதல் படுத்தப்படும்) வணிகவரி ஆணையாளர் அலுவலகத்தில் பிரிவிலுள்ள பணியாளர்கள் நியமிக்கப்படுவதுடன் தணிக்கைப் 1986-87 ஆம் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் ரூ. 46.61 இலட்சம் நிதி ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. கூடுதல் ஆயத்தீர்வை:

1957 ஆம் ஆண்டில் துணி, சர்க்கரை, புகையிலை மீது வரிக்குப் பதிலாக கூடுதல் இருந்து மத்திய அரசு விற்பனை இக்கூடுதல் ஆயத்தீர்வை ஆயத்தீர்வை விதித்து வருகிறது. மாநில அரசுக்குப் பங்கு யிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயில் விற்பனை வரி இடைப்பதால் இப்பொருட்கள் மீது மாநில அரசு மேற்படி விதிக்க முடியாது. கூடுதல் ஆயத்தீர்வைக்குட்பட்ட வாரியாக பொருட்களின் மதிப்பில் 10.8 சதவீதம் வீதம் நிர்ணயிக்கப்பட்டது. 1989-90 ஆம் ஆண்டுக்குள் எய்துவதற்கு நிலை ஆய்வுக் குழு புது டில்லியில் 30-9-1985 அன்று நடந்த எய்த முடியுமா கூட்டத்தின் போது இந்த இலக்கை விரைவில் முடிவு செய்யப் என்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வது என்று கூடுதல் ஆயத் பட்டது. சிலப்பொருட்களைப் பொறுத்தமட்டில் என்ற தனது தீர்வை விதிப்பதை நீட்டிக்க வேண்டும் தெரிவித்து விருப்பத்தை அவ்வப்போது மத்திய அரசு மருந்து வந்துள்ளது. வனஸ்பதி, மருந்து பொருட்கள் மற்றும் பெட்ரோலியம் கள், சிமிட்டி, காகிதம் மற்றும் காகித அட்டை, கூடுதல் ஆயத் பொருட்களின் மீது விற்பனை வரிக்குப் பதிலாக அறிக்கையை தீர்வை விதிப்பதற்கான செயற் குறிப்பு மீது தனது புதுடில்லியில் திரிபாதி குழு அனுப்பியது. 2-11-1983 அன்று முதலமைச்சர்கள் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் நடத்திய விற்பனை மாநாட்டில், மேற்சொன்ன 5 பொருட்களின் மீது கருத்துரு வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கும் கடுமை விற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலங்களிலிருந்தும் யாக எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஏனைய மாநில அரசு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இவை குறித்து வருவதற் களுக்கிடையே கருத்து ஒருமைப்பாட்டைக் கொண்டு என்று காகத் தொடர்ந்து முயற்சிகள் செய்யப்பட வேண்டும் முடிவு செய்யப்பட்டது.

8. சில கூடுதல் இனங்கள் மீது விற்பனை வரி விதித்தல்:

1982 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (46 வது திருத்தம்) சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் இசைவு 2-2-1983 அன்று பெறப்பட்டது. மாநிலங்களுக்கிடையே ஆன ஒப்படைச் சரக்கு

போக்குவரத்து, பணி ஒப்பந்தங்கள், தவணைக் கொள்முதல், பொருட்களைக் குத்தகைக்கு விடுதல், சட்டப்படிக்கு இணைக்கப் படாத சங்கங்களுக்குச் செய்யப்படும் விற்பனை, பணிவகைக்காக எனக் கருதப்படும் (உணவு மற்றும் பானங்கள்) விற்பனை ஆகியவற்றிற்கு வரி விதிக்க இச்சட்டம் வகை செய்கின்றது. மேற்சொன்ன இனங்கள், விற்பனை அல்லது கொள்முதல் மீது வரி விதிப்பதன் வரம்புக்கு அப்பாற்பட்டதாக இருந்து வந்தன. மாநிலங்களிடையே ஆன ஒப்படைச் சரக்கு போக்குவரத்து வரி, கணிசமான கூடுதல் வருவாய்க்கு வழி செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இச்சட்டம் இயற்றப்படுவது மத்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டு நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டும்.

இருத்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அனுமதிக்கப் பெற்ற ஏனைய பற்று வரவு மீதான வரிவிதிப்பைப் பொறுத்த வரையில் மாநில அரசு அவசியமான நடவடிக்கை எடுத்துள்ளது. பணி ஒப்பந்தங்கள், பொருட்களைக் குத்தகைக்கு விடுதல், தவணைக் கொள்முதல் போன்றவற்றிற்கு வரிவிதிக்க தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் (நான்காம் திருத்த) சட்டம் அதிகாரம் அளிக்கிறது. இச்சட்டம் 29-5-1984 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. பின்னர் பணி ஒப்பந்தங் களுக்கான விதிகள் வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் 1-10-1984 ஆம் நாளிட்ட 1103 ஆம் எண் அரசாணையில் திருத்தம் செய்யப்பட்டு 1-10-1984 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன. பணி ஒப்பந்தங்கள் மீது 1-10-1984 ஆம் நாளிலிருந்து விற்பனை வரி விதிக்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டது என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

பொருட்களைக் குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல் போன்ற வற்றின் மீது இச்சட்டத்தின் 3–ஏ புதிய பிரிவின் கீழ் வரி விதிப்பது பற்றிய பரிசீலித்து வரி விதத்தைப் பரிந்துரைக்க அமைக்கப்பட்ட குழுக்கள் பற்றிய குறிப்பு:

பொருட்களை குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல் முதலியவற்றின் மீது தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 ஏ பிரிவின் கீழ் வரி விதிப்பு பற்றி பரிசீலித்து வரி விதத்தைப் பரிந்துரைக்க 1984 ஆம் ஆண்டில் வணிகவரி அறநிலையத் துறையின் 26-9-1984 ஆம் நாளிட்ட 1078 ஆம் எண்ணுள்ள அரசாணையின் படி அரசு இரு குழுக்களை அமைத்தது. முதல் குழு திரைப்படக்கருவி நிழற்படச் சாதனங்கள் திரைப்படச்சுருள், குத்தகைக்கு விடுதல் மீது விதிக்கத்தக்க வரி விதம் பற்றி கருத்துத் தெரிவிக்க வேண்டும்.



குழுவின் அமைப்பு வருமாறு—

தலைவர் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்.

உறுப்பினர்கள் : அரசு ஆணையாளர்கள்--செயலாளர்கள், நிதித் துறை, சட்டத் துறை, உள் துறை தலைவர், தமிழ்நாடு திரைப்பட வெளி யிடுவோர் சங்கம், சென்னை.

சென்னை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப் பாளர்கள் பிரதிநிதி.

உறுப்பினர் செயலாளர் : வணிகவரி ஆணையாளர்.

மோட்டார் வண்டிகள், கட்டி தளவாடம், இயந்திரங்கள், டங்கள், கட்டுமானப் பொருள்கள் போன்றவற்றைக் குத்தகைக்கு விடுதல் மீது விதிக்கத்தக்க வரிவீதத்தை தெரிவிப்பதற்காக இரண்டாவது குழு அமைக்கப்பட்டது அதன் அமைப்பு வருமாறு.—

தலைவர் : வணிகவரி ஆணையாளர்.

உறுப்பினர்கள் :

அரசு ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்கள், நிதித் துறை, சட்டத் துறை, தொழில் துறை.

தி எக்விப்மென்ட் லீஸிங் கம்பெனி; சென்னை, திருவாளர்கள் பஸ்ட் லீஸிங் கம்பெனி, சென்னை.

இரு குழுக்களும் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியுள்ளன. அவைமீது அரசு ஆணைகளை வெளியிட்டுள்ளது.

9. வணிகத்துறைப் பணியாளர் பயிற்சி நிலையம், சென்னை.

வணிகவரித் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக, வணிகவரி ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் வணிக வரித் துறைப் பணியாளர் பயிற்சி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு வணிகவரிகள் துணை ஆணையாளர் பதவித் தரத்தின் இயக்குநர் ஒருவர் தலைவராக இருக்கிறார். இரு உதவி ஆணையாளர்கள் (வணிகவரிகள்), ஒரு வணிகவரி அதிகாரி, அலுவலகத்திற்கான பணியாளர்கள் கொண்ட பயிற்றுநர்ப் பிரிவு ஒன்றும் இந்நிறுவனத்தில் உள்ளது. இப்பயிற்சி நிறுவனம் சென்னை-6, கிரீம்ஸ் சாலையிலுள்ள (பேரறிஞர் அண்ணா பவள விழாக் கட்டடத்தில்) வணிகவரிகள் துறையின் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. வணிகவரிகள் துறையின் 17-11-1983 ஆம் நாளிட்ட 1334 ஆம் எண் அரசாணையின்படி, இந்நிறுவனம் ஒரு தனி அலுவலகமாகக் கருதப்படும். இந்நிறு வனத்தின் இயக்குநர் இதன் தலைவராவார். இவருக்குத் துறைத் தலைவர் என்கிற முறையில் துணை ஆணையாளரின் (வணிகவரி) அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தின் பின்வரும் செலவினங்களுக்காக ஆண்டு தோறும் தொடர் செலவினமாக ரூ. 1,20,000 (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம்) அரசு அனுமதி வழங்கியுள்ளது :

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| (i) சிற்றுண்டிகள் முதலியன | .. | .. | 40,000.00 |
| (ii) பயிற்சிக்கான பொருட்கள் | .. | .. | 20,000.00 |
| (iii) கௌரவ பயிற்றுநர்கள் | .. | .. | 15,000.00 |
| (iv) புத்தகங்கள் ... | .. | .. | 45,000.00 |
| மொத்தம் | | .. | 1,20,000.00 |

இந்த நிறுவனம் வணிக வரி அதிகாரிகளுக்கும் உதவி வணிக
வரி அதிகாரிகளுக்கும் ஆறு வாரப்பயிற்சியும், துணை வணிகவரி
அதிகாரிகளுக்கு மூன்று வாரப் பயிற்சியும் அளிக்கின்றது. ஒரே
சமயத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் 20 வணிகவரி அதிகாரி
அல்லது துணை வணிகவரி அதிகாரி அல்லது உதவி வணிகவரி
அதிகாரிகள் வீதம் இரண்டு தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்
படுகிறது. இத்துறையினால், நிருவகிக்கப்பட்டுவரும் சட்டங்களின்
அதாவது தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மத்திய
விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டம்,
தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், தமிழ்நாடு ஓட்டல்களிலுள்ள
ஆடம்பர வசதிகள் மீதான வரிச்சட்டம் ஆகியவைகளின் விதித்
துறைகள், அச்சட்டங்களின் கீழ் வரும் விதிகள் அகியவை பற்றி
யும் இச்சட்ட விதித்துறைகள் மீதான நீதிமன்றத் தீர்வுகளைச்
சுட்டிக்காட்டியும் பயிற்சி பெறுவோருக்கு விரிவான விளக்கம்
அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியின் நோக்கத்தை மனநிற்
கொண்டு, அதாவது இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளை
திறமையுடன் அதிகாரிகள் நிறைவேற்றும் வகையில், சட்டத்தின்
விதித்துறைகளிலுள்ள அன்றைய நாள் வரையிலான தகவல்களை
அதிகாரிகளுக்குத் தெரிவித்து, வரிமதிப்பீடு செய்வதில் சட்ட
பூர்வமான தவறுகள் ஏற்படுவதைத் தடுக்கிறது. வேறு விதமாகக்
கூறுவோமெனில் அவர்களது வரி மதிப்பீட்டுத் திறன், அய்வு
செய்யும் பணி, புலனாய்வு பணி, குறித்த இனங்களை துப்பறிதல்,
காணும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துகின்றது. இந்நிறுவ
னத்தின் பயிற்றுநர்ப் பிரிவு வழங்கும் விரிவுரைகள் தவிர வருவாய்
மீட்புச் சட்டம், நிலுவைத் தொகைகளாக வசூலிக்க இத்





சட்டத்தை இத்துறை பயன்படுத்தும் விதம், புள்ளிவிவரங்களை
கணக்கீட்டுப் பொறி மூலம் தொகுத்தல், சோதனைச் சாவடி
களின் செயல் முறை, ஆய்வுகள், சோதனையிடுதல், கைப்
பற்றுதல், குற்றங்கள், அபராதங்கள், வழக்குத் தொடர்தல்,
ஆகியவை பற்றி இத்துறையில் நன்கு பயிற்சி பெற்ற மற்றும்,
ஓய்வு பெற்ற கௌரவ விரிவுரையாளர்கள் மூலம் சிறப்பு விரிவுரை
வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

1-1-1985 முதல் 31-12-1985 ஆம் நாள் வரையிலான
கால அளவில் உதவி வணிகவரி அதிகாரிகளுக்கு (167 பயிற்சி
யாளர்) 9 வகுப்புகளும், வணிகவரி அதிகாரிகளுக்கு (13 பயிற்சி
யாளர்) ஒரு வகுப்பும், துணை வணிக வரி அதிகாரிகளுக்கு (183
பயிற்சியாளர்கள்) 10 வகுப்புகளும் பணியிடப் பயிற்சியை
இந்நிறுவனம் அளித்தது. பயிற்சி வகுப்புகளின் இறுதியில்
தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலும், மத்திய
விற்பனை வரிச் சட்டத்திலும், தேர்வுகள் நடத்தப்
படுவதுடன். இப்பயிற்சியாளர்களின் சாதனைத் திறன்
மதிப்பீடு செய்யப்பட்டு, பயிற்சி வகுப்புகள் முடிந்தவுடன்
வணிக வரி ஆணையாளருக்கு ஒவ்வொரு பயிற்சி வகுப்பு
பற்றிய சாதனைத் திறன் அறிக்கை அனுப்பப்படுகின்றது.
அனைத்து பயிற்சி வகுப்புகளிலுமே பயிற்சியாளர்களின் ஒட்டு
மொத்த சாதனைத் திறன் மனநிறைவு அளிப்பதாக உள்ளது.
இவ்வாறு இப்பயிற்சி நிறுவனம், அதன் நோக்கத்தைத்
தொடங்கிய நாளிலிருந்து எய்தி வருகிறது.

பொதுத் துறை நிறுவனங்களில் விற்பனை வரி குறித்த விவ
காரங்களை கவனிக்கும் அதிகாரிகள், விற்பனை வரிச் சட்ட
விதித் துறைகளை முறையாகப் புரிந்து கொண்டு நன்முறையில்
தமது கடமைகளைச் செய்ய அவர்களுக்கும் பயிற்சி அளிக்கும்
திட்டங்களை, இந்நிறுவனம் மேற்கொள்ள வேண்டுமென அரசு,
கட்டளை பிறப்பித்துள்ளது. இந்த ஆணைக்கிணங்க, கூட்டுறவுச் சங்
சங்கங்களின் பதிவாளர் அனுப்பிய பல்வேறு கூட்டுறவுச் சங்க
பணியாளர்களுக்கு 2-1-1986 முதல் 20-1-1986 ஆம் நாள்
வரையில், முதல் தொகுதிப் பணியாளர்களுக்கு வகுப்பு நடத்தப்
பட்டது: அதன் பின்னர் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுக்கு
ஒவ்வொரு தொகுதிக்கு 20 பயிற்சியாளர் வீதம் 10 பணி நாட்கள்
பயிற்சி வகுப்பு நடத்தப்படும். இக்கூட்டுறவு நிறுவனங்களுக்கான
பயிற்சி வகுப்பு முடிந்தவுடன் தொழில்-வணிக இயக்குநரின்
கட்டுப்பாட்டின் கீழ் வரும் தொழிற் பிரிவுகளுக்கு இப்பயிற்சி
வகுப்புகள் நடத்தப்படும்.

பிற மாநிலங்களில் வரி விதிப்புச் சட்டம், வரி அமைப்பு முறை
குறித்து ஆய்வு செய்து அவற்றிலுள்ள பயன்தரும் வழி முறை
களை நமது மாநிலச் சட்டத்திலும் பயன்படுத்துவதற்காக

அரசின் முதுநிலை அலுவலர்களை அரசு பிற மாநிலங்களுக்கு அனுப்பி வருகிறது. இப்பணி குறித்து மராட்டியம், கர்நாடகம் மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு அலுவலகப் பயணம் மேற் கொள்ளப்பட்டது.

மைய அரசின் புதுடில்லியில் உள்ள பொது நிதி கொள்கை குறித்த தேசிய நிறுவனத்திற்கு பயிற்சிக்காக ஒவ்வொரு வருடமும் வணிகவரி உதவி ஆணையர் பதவித் தரத்தில் ஒருவரை அனுப்பும் செயற்குறிப்பிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## 10. ஆலோசனைக் குழுக்கள்:

விற்பனை வரி நிர்வாகத்தில் கருத்துப் பரிமாற்றம், கருத்து உதவி பெறும் வகையில் பல்வேறு நிலைகளில் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்து வருகிறது. அவற்றின் பங்கு என்ன என்பது கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

### (i) மாவட்ட அளவிலான குழுக்கள்:

மாவட்ட அளவிலான குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கிறார். அரசுச் சார்பு உறுப்பினர்களுடன் வர்த்தக சபை, வணிகச் சங்கங்கள், கூட்டுறவு, உழவுத் தொழில் சார்பு அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அரசுச் சார்பற்ற உறுப்பினர் களாக அதில் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுக்கள் வர்த்தகத் துறைக்கே உரித்தான பிரச்சினைகளை விவாதிக்கின்றன. இக்குழுக்களின் முடிவுகளும், ஆலோசனைகளும், நிர்வாக மேம்பாடு கருதியும் வர்த்தக சமூகத்தை எதிர்நோக்கி யுள்ள பிரச்சனைகளை அணுகவும் கருத்தில் கொள்ளப் படுகின்றன. மூன்றாண்டு கால அளவிற்கு மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களை மாற்றியமைக்குமாறு வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 27-9-1984 ஆம் நாளிட்ட 1094 ஆம் எண் அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### (ii) மாநில அளவிலான ஆலோசனைக் குழு:

மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழு 1-10-1984 நாளிட்ட 1104 ஆம் எண் ஆணையில் 2 ஆண்டு காலத்திற்கு மீண்டும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் அமைப்பு முறை பின்வருமாறு:





| (1) | (2) |
| --- | --- |
| மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர். | தலைவர் |
| மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். | உறுப்பினர் |
| மாண்புமிகு ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர். | உறுப்பினர் |
| வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் அரசு இணை/துணைச் செயலாளர். | செயலாளர் |
| வணிகவரிகள் துறையின் அதிகாரிகள் | அழைப்புனர்கள் |
| வர்த்தக சபை, வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகள். | நியமன உறுப்பினர் |

### (iii) வணிகர்கள் நல ஆலோசனைக் குழு:

வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 6-11-1985 ஆம் நாளிட்ட 1030 ஆம் எண் அரசாணையின்படி வணிகர்கள் நல ஆலோசனைக் குழுவொன்று இரண்டாண்டுகளுக்கு அமைக்கப் பட்டது. வணிகவரிகள் துறை அமைச்சர் இதற்குத் தலைவ ராவார்; நிதி அமைச்சர், தொழில் அமைச்சர், ஊரகத் தொழில் அமைச்சர் ஆகியோர் இக்குழுவின் அலுவலர் முறை உறுப்பினர் களாவார். அத்துடன் அரசுச் சார்பற்ற 13 உறுப்பினர்களும் அரசு அதிகாரிகளான 3 உறுப்பினர்களும் இதில் இடம் பெற் றுள்ளனர். இக்குழு வியாபாரிகளின் பிரச்சனைகளையும் சிக்கல் களையும் அறிய முயற்சிக்கிறது; அவர்களின் சிக்கல்களைத் தீர்த்து பரிந்துரைகள் செய்வது குறித்து ஆலோசிக்கிறது.

### (iv) குறை தீர்க்கும் பிரிவு:

குறை தீர்க்கும்பிரிவு ஒன்று 1984 செப்டம்பரில் ஏற்படுத்தப் பட்டது. இணை ஆணையாளர்—1 இதன் தலைவராவார். துணை ஆணையாளர் (வரைவுப் பிரிவு), உதவி ஆணையாளர் (சட்டம்) ஆகியோர் இப்பிரிவின் உறுப்பினர்களாவர்; வணிக சமூகத்தினரின் குறைகளைக் கேட்டு, அவற்றை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற்கென்றே இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது;

1984:

| | |
| --- | --- |
| இந்த ஆண்டில் வரப்பெற்ற மனுக்கள் .. | 120 |
| நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டவை .. | 111 |

1985:

| | | |
|---|---|---|
| இந்த ஆண்டில் வரப்பெற்ற மனுக்கள் | .. | 365 |
| நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டவை | .. | 313 |

11. தகவல் தொகுப்புப் பிரிவு:

வணிகவரி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள தகவல் தொகுப்புப் பிரிவில் நான்கு பணிப்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன; வணிகவரி வழிமுறை பகுப்பாய்வாளர் இதன் தலைவராவார்; இவர் மக்கள் தொடர்பு அதிகாரி மற்றும் துணை ஆணையாளரின் (புள்ளி விவரம் ஆராய்ச்சி) கட்டுப்பாட்டில் செயல்படுபவராவார்.

இப்பணியின் முக்கியத்துவம் மற்றும் தன்மையினை கருத்திற்கொண்டு "பகுப்பாய்வாளர்" என்ற பதவியின் தரம் வணிகவரி அலுவலரின் தரத்திலிருந்து வணிகவரி உதவி ஆணையாளர் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

விற்பனை வரி தொடர்பான புள்ளிவிவரங்களை கணக்கிட்டு பொறி மூலம் தொகுப்பதே இப்பிரிவின் முக்கிய பணியாகும். பொருள்வாரியான மொத்த வியாபாரத் தொகை, விதிக்கப்பட்ட வரி முதலிய தகவல்கள் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரிவிதிப்பு அதிகாரிகளால் IP 1 படிவங்களிலும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் அளிக்கப்படும் விவரங்கள் IP 2 படிவங்களிலும் இவ்விரு சட்டங்களின் கீழ் வராத ஆண்டு விற்பனைத் தொகை விவரம் IP 3 படிவங்களில் சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான ஒவ்வொரு வணிகரின் வரிவிதிப்பு பதிவுருக்களின் அடிப்படையில், வரி விதிப்பு அதிகாரிகளால் கொடுக்கப்படுகின்றன. அத்துடன் ஒரு லட்சம் ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை உள்ள வியாபாரிகளிடமிருந்து ஒவ்வொரு ஆண்டின் அரையாண்டிற்காக பொருள்வாரியான தற்காலிக புள்ளிவிவரமும் வரி விவரமும் திரட்டப்பட்டு வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக தகவல் தொகுப்பு பிரிவில் வகைப்படுத்தப்படுகின்றன.

ஆய்வு ஆண்டில் 1983-84 வரி விதிப்பு ஆண்டுகள் தொடர்பான விவரங்களைத் தொகுக்கும் பணி தகவல் தொகுப்பு பிரிவில் பூர்த்தி செய்யப்பட்டது. 30-9-1985-உடன் முடிவடையும் அரையாண்டு தொடர்பான தற்காலிகக் கணக்குப் புள்ளி விவரங்கள் தற்போது இப்பிரிவில் சரிபார்க்கப்பட்டு அரசு தகவல் தொகுப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் 1984-85 ஆம் வரி மதிப்பீட்டு ஆண்டு தொடர்பான தகவல்கள் சரிபார்க்கப்பட்டு தகவல் தொகுப்பு பிரிவிற்கு அனுப்பப்படுகின்றன.



தமிழ்நாடு வணிக வரிகள் துறையில் தகவல் சேகரிப்பு ஏற்பாடு பற்றி புது டில்லியிலுள்ள தேசிய பொது நிதி கொள்கை ஆய்வு நிறுவனம் அளித்துள்ள அறிக்கை ஆய்வு செய்யப்பட்டது. முக்கிய வருவாய் தரும் பொருள்கள் தொடர்பான விபரங்கள் நடப்பு நிலவரப்படி கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் இம்முறையை மாதாந்திர விவரக் கணக்கு ஏற்பாடாக மாற்றுவது குறித்த செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

வணிகவரிகள் ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளவாறு, கர்நாடக மாநிலத்தில் உள்ள வணிகவரிகள் துறையில் கணக்கீட்டுப் பொறிமுலம் தகவல் கொடுக்கும் முறை ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இந்த கணக்கீட்டுப் பொறியியல் முறையினை பின்வருமாறு நீட்டிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.—

(i) வணிகர்களின் அகர வரிசைப் பட்டியை கணக்கீட்டுப் பொறிமூலம் தொகுத்தல்.

(ii) வணிகப் பொருட்கள் வாரியான வருவாய் விவரங்களைத் திங்கள் தோறும் கணக்கீட்டுப் பொறிமூலம் தொகுத்தல்.

(iii) ஒருமுறை வரிவிதிப்பிற்குரிய பொருட்களின் இரண்டாவது விற்பனைக்கு கேட்கப்பட்டுள்ள வரிவிலக்கினை ஒட்டு மொத்தமாகச் சரிபார்த்தல்.

(iv) சோதனைச் சாவடி புள்ளி விவரங்களை ஒட்டுமொத்தமாகச் சரிபார்த்தல்.

12. அமைப்பு—செயல்முறைப் பிரிவு:

இப்பிரிவில் வணிகவரி அதிகாரி ஒருவர், தட்டச்சர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இப்பிரிவின் செயல் நோக்கங்களில் குறிப்பிட்ட துறையின் தொடர்ந்தாற்போன்ற விஸ்தரிப்பின் காரணமாக மதிப்பீட்டு அலுவலகங்களில் மாறியுள்ள பணியின் அளவை வரையறுத்த முறையில் ஆய்வு செய்வது, தேவையான இடங்களில் கூடுதல் பணியாளர் நியமனத்திற்கு ஆலோசனைக் கூறுவது ஆகியவை இடம் பெற்றுள்ளன. இப்பிரிவு கீழ்க்காணும் பணியினங்களைக் கவனித்து வருகிறது:—

(i) தனிப்பட்ட தகவலாளர்களுக்கு வெகுமதிகள் வழங்குவது.

(ii) துறை அதிகாரிகளுக்கு முதலமைச்சரின் தகுதிச் சான்றிதழும், ரொக்கப் பரிசும் வழங்குதல்.

(iii) வருகைகள் (பிற மாநிலங்களிலிருந்து அரசு அதிகாரிகள் வருகை புரிதல்).

13. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்:

A. விதிகளில் திருத்தம் செய்தல்:

31 ஆம் எண் விதியின் ''XIXB'' படிவத்தில் ''வங்கி ஒன்றின் உத்தரவாதம்'' என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களுக்குப் பதிலாக ''XIXC'' படிவத்தில் ''வங்கி ஒன்றின் உத்தரவாதம்'' என்ற சொற்களையும் இலக்கங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

படிவம் XIX-ல் குறிப்பு (2) இல் வருகின்ற ''அல்லது வங்கி உத்தரவாதம்''. ''அல்லது நேர்வுக்கேற்ப வங்கி உத்தரவாதம்'' என்ற சொற்கள், விட்டு விடப்பட்டுள்ளன. படிவம் ''XIXB'' படிவம் ''XIXC'' ஆக மறு இலக்கமிடப்பட்டது. அவ்வாறு, மறு இலக்கமிடப்பட்ட படிவம் ''XIXC'' இல், குறிப்பு (2)-ன் இறுதியில் கீழ்க்காணும் சொற்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளன:—

''வரி விதிப்பு அதிகாரி முன் தாக்கல் செய்யப்பட வேண்டும்''.

விதி 50-ல் துணை விதியில் (b)-ல் ''வணிகவியலில், பட்டம் பெற்றுள்ள ஒருவர்'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் ''வணிகவியலில், நிறுவனச் செயலாளர் படிப்பில் பட்டம் பெற்றுள்ள ஒருவர்'' என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

24 (8ஏ) விதியில் ( ) பகுதிக்குப் பதிலாக, கீழ்க்காணும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது:—

''(a) (i), வரையறுத்த கால அளவிற்குள் விண்ணப்பம் செய்துள்ள (அவ்வணிகத்தை அல்லது அவ்வணிகத்தின் ஒரு பகுதியைத் தொடருகின்றவர் நீங்கலாக) ஒருவரின் நேர்வில் அவ்வணிகத்தை தொடங்கிய நாளிலிருந்து (ii) வரையறுத்த கால அளவிற்குப் பிறகு விண்ணப்பம் செய்து கொண்ட ஒருவர் நேர்வில் விண்ணப்பம் பதிவு அதிகாரிக்கு வரப்பெற்ற நாளிலிருந்து''.

24 (8A) விதியைச் சேர்ந்த (b)ப்பகுதிக்குப் பிறகு கீழ்க்காணும் பகுதிகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.—

''(c) கட்டாயப் பதிவுக்குட்பட்டவரும், அதற்கு வரையறுத்த கால அளவிற்குள் விண்ணப்பம் செய்து கொண்டுள்ள வருமான ஒருவர் நேர்வில் பதிவு செய்வதற்குட்பட்ட வணிகம் தொடங்கிய நாளிலிருந்தும் அவ்வாறு, வரையறுத்த கால அளவுக்குள் விண்ணப்பம் செய்து கொள்ளாத ஒருவர் நேர்வில் பதிவு அதிகாரிக்கு பதிவு கோரி விண்ணப்பம் வரப்பெற்ற நாளிலிருந்தும்.



(d) வணிகத்தைத் தொடக்கக் கருதியுள்ள ஒருவர் நேர்வில் விண்ணப்பம் பதிவு அதிகாரிக்கு வரப்பெற்ற நாளிலிருந்தும்.

மாத விவரக் கணக்கை அடுத்துவரும் மாதத்தின் 25 ஆம் தேதி சமர்ப்பிக்க வேண்டுமென்ற காலக்கெடுவினை 20 ஆம் தேதியாக மாற்றி விதி 18(2) திருத்தப்பட்டுள்ளது.

(B) வரித் தள்ளுபடி:

நிலக்கடலை உடைப்போரிடமிருந்து கொள்முதல் செய்த 1974-75, 1975-76, 1976-77 நிலக்கடலைப் பருப்பிற்கு, எண்ணெய் ஆலைக் மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்த காரர்கள்/வர்த்தகர்கள் மறுவரி விதிப்பின்பால் செய்தது. வேண்டிய வரி நிலுவையினை அரசு தள்ளுபடி கொள்முதல் செய்தவகையில் அவர்கள் நிலக்கடலையினை எதிர்த்து மேல்முறையீடு அபராதம் விதிக்கப்பட்டதை செய்திருந்தால் செய்திருக்கக்கூடாது. அங்ஙனம் மேல்முறையீடு ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்க அபராதத் தொகை விதிக்கப்பட்டது மறு வரி விதிப்பு வேண்டும், மற்றும் மேற்கண்ட ஆண்டுகளுக்கான கூடுதல் வரியைச் செய்யப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் இவ்வாறு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

நிலக்கடலை உடைப்பவரிடமிருந்து 1974-75 ஆம் ஆண்டிற் குரிய வரிக்குச் சமமான தொகைக்குக் கூடுதலாக உள்ள வசூலாக வேண்டிய அபராத மீதியை அரசு தள்ளுபடி செய்துள்ளது. அவர்கள் வரி வசூலிக்குங்கால் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் 22(2) பிரிவின்கீழ் ஆலைதாரர்கள் செலுத்தவேண்டிய வரிக்குச் சமமான தொகையளவு அபராதம் விதிக்கப்படத்தக்கவராவர். 1975-76 முதல் 1977-78 வரையிலான ஆண்டுகளுக்கு நிலக்கடலை உடைப்பவர்கள் வசூலித்த வரிக்குச் சமமான தொகைக்குக் கூடுதலாக உள்ள பிரிவு 22(2)-ன்படி செலுத்தவேண்டிய எஞ்சிய அபராதத் தொகையினை அரசு தள்ளுபடி செய்தது.

விசைத்தறிக் கைக்குட்டைகளுக்கும், விசை தைக்கப்பட்ட கைத்தறிக் கைக்குட்டைகளுக்கும் கூடுதல் வரியையும் யாலைத் தயாரிப்புக் கைக்குட்டைகளுக்கும் 24-7-1977 வரை மேல் வரியையும், 1-4-1974 முதல் நிபந்தனைகளுக்குட்பட்டு, அரசு யிலான கால அளவிற்கு, சில தள்ளுபடி செய்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியைச் சேர்ந்த கால்நடைத் தீவன வியாபாரியான திரு. ஜி. புருஷோத்தமன் என்பவரால், தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி, செலுத்தத்தக்க அபராதம் ரூ. 1,229.17-ஐ அரசு தள்ளுபடி செய்தது.

சென்னை-19, திருவாளர்கள் தண்டையார்பேட்டை, ''மார்
ஷலிங்யார்டு பணியாளர் கூட்டுறவுச் சிற்றுண்டிச்சாலை'',
1974-75 முதல் 1977-78 வரையிலான கால அளவிற்கு செலுத்தத்
தக்க, கூடுதல் வரியும் மேல்வரியும் உள்ளிட்ட வரி ரூ. 10,000ஐ
அரசு தள்ளுபடி செய்தது.

வேலூர் கோட்டத்தைச் சேர்ந்த நாட்டுச் செக்கு வணிகர்கள்
60 பேர் செலுத்தத்தக்க வரியான ரூ. 62,914-ஐ அரசு
தள்ளுபடி செய்தது.

வெடிகள், காப்பிட்ட வெடிமருந்து திரி (Safety fuses)
ஆகியவற்றின் விற்பனை தொடர்பாக 11-12-1980 வரை
யிலான கால அளவிற்குச் செலுத்தத்தக்க வரியான 63,773
ரூபாய் கூடுதல் வரியான 1,901 ரூபாய் மேல்வரியான 1,677
ரூபாய் ஆகியவற்றை, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, அரசு
தள்ளுபடி செய்தது.

(C) முதலாம் அட்டவணையில் திருத்தம்:

இனம் 1—''மின்னணுவியல் முறை நகல் பதிப்புச் சாதனம்
மற்றும் துணைச் சாதனங்கள்'' ஆகியவை, 1-1-1985 முதற்
கொண்டு இப்பதிவில் சேர்க்கப்பட்டுள்ளன.

இனம் 136—சம்பந்தப்பட்ட பதிவுக்குப் பதிலாக பின்வரும்
பதிவு அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 9 சதவீதமாக
இருந்த வரி வீதம், 1-1-1985 முதற்கொண்டு 10 சதவீதமாக
உயர்த்தப்பட்டுள்ளது. ''P.V.C. குழாய் வகைகள் அனைத்து
டியூப்களும், பொருத்து சாதனங்களும் (வளையக்கூடிய,
வளையாத ஆகிய இருவகைக் குழாய்களும்) ஹோஸ் குழாய்
களும், டியூப்களும் (ஒளி ஊடுருவும் தன்மையுடையது. ஒரளவு
ஒளி ஊடுருவும் தன்மையுடையது, ஒளி ஊடுருவாதது)''.

இனம் 69—தேங்காய் மீது வரிவிதிப்பு முனையானது
5-1-1985 முதற்கொண்டு இம்மாநிலத்தின் கடைசி கொள்முதல்
நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இனம் 162—தற்போதுள்ள பதிவில் 1-10-1985 முதற்
கொண்டு பின்வருவன சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

''அமிழ் அளவைகள், 'மெட்ரிக்' முகத்தல் அளவைகள்,
கூம்பு வடிவ அளவைகள், உருளை வடிவ அளவைகள், மீட்டர்
அளவை நாடாக்கள், 'ஸ்டீல்' கெச அளவைகள், சங்கிலி
அளவைகள்''.

இனம் 106—1-10-1985 முதற்கொண்டு, அடைப்புக்
குறிக்குள் வருகின்ற '67' என்கிற இலக்கத்திற்குப்



பதிலாக '159' என்கிற இலக்கம் அமைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இனம் 88.—1-10-1985 முதற்கொண்டு, இப்பதிவு கீழ்க்
காணும் முறையில் பிரித்துக் கொள்ளப்பட்டுள்ளது—

| | | |
|---|---|---|
| ''88 (a) ஓடுடன் கூடிய முந்திரி | முதல் கொள்முதல் முனையில். | 5 சதவீதம் |
| (b) செய்முறைப்படுத்தப்பட்ட பருப்பு உட்பட, முந்திரிப் பருப்பு. | முதல் விற்பனை முனையில். | 5 சதவீதம் |

இனம் 117:—இப்பதிவு பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:—

''117 ஆவது இனத்திலுள்ள மேற்சொன்ன விவர அட்ட
வணையில்—

(ii) துணை இனத்தில் 2(a) பத்தியில் மற்றும் 'மேற்
பூச்சிடப்பட்ட' என்கிற சொற்கள் விட்டுவிடப்பட வேண்டும்.

(b) ''கெட்டித்தாள் பாடம் செய்யப்பட்ட தாள்'' என்ற
சொற்களுக்குப் பதிலாக, கெட்டித்தாள் மற்றும் பாடம் செய்யப்
பட்ட தாள்'' என்றும் சொற்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

(c) வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் துணை
இனம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்; அதாவது (v) தாள்
மற்றும் அட்டை, வழவழப்பானவை, மேற்பூச்சிடப்பட்டவை
அல்லது ஏனைய பொருட்கள் இடையே சேர்க்கப்பட்டவை.

இனம் 10A—1-10-1985 முதற்கொண்டு புதிய இனம்
ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது:—

''10A—வீடியோ கேசட் பிளேயர்கள், ரிக்கார்டர்கள்,
வீடியோ கேசட் நாடாக்கள், வீடியோ கணக்கீட்டுப் பொறிகள்,
அதன் பாகங்கள் மற்றும் உதிரி பாகங்கள்''.

D. 17-பிரிவின்கீழ் வரி வீதத்தைக் குறைத்தல்:

இருப்பு ஒப்படை மாற்றமாகவோ அல்லது கிடங்கு சரக்கு
ஒப்படை மாற்றமாகவோ, ஏனைய மாநிலங்களுக்கு அனுப்பப்படு
வதற்காக அல்லது இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்வதற்
காக. டிரான்ஸ்பார்மர் எண்ணெய் மற்றும் டிரான்ஸ்பார்மர்
எண்ணெய் சல்போனேட்டை கொள்முதல் செய்வதற்கு அல்லது
உற்பத்தியில் பயன்படுத்துவதற்கு, சரக்கு ஒப்படை விற்பனைக்கு
பொருந்தாது என்கிற நிபந்தனைக்குட்பட்டு டிரான்ஸ்பார்மர்
எண்ணெய் எரிபொருள் இருப்புமீது வரிவீதம் 6 சதவீதமாக
குறைக்கப்பட்டுள்ளது. இந்த வரிக்குறைப்பு, 30-12-1984
முதல் 29-12-1985 வரையிலான கால அளவில் செயலில்
இருந்தது.

1-4-1984 முதல் 31-3-1985 வரையில் ஓராண்டுக் காலத்திற்கு HVI நூற்பு இயந்திர எண்ணெய் மீதான வரி விதத்தை அரசு 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைத்துள்ளது.

11-7-1985 முதல் 10-7-1986 வரையிலான கால அளவுக்கு சேலம் மாவட்ட மாவு மற்றும் சவ்வரிசி தயாரிப்பாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம்—மேற்கொள்கின்ற சவ்வரிசி மரவள்ளிக்கிழங்கு மாவு விற்பனை மீது 5 சதவீத பல்முனை விற்பனை வரியை நான்கு சதவீத பல்முனை விற்பனை வரியாக அரசு குறைத்துள்ளது.

19-3-1985 முதற்கொண்டு மேலும் இரண்டாண்டுகளுக்கு இராஜபாளையத்திலுள்ள மதராஸ் அட்டைத் தாள் தயாரிப்பு நிறுவனம் தயாரிக்கின்ற அனைத்து வகை அட்டைத் தாள்களின் விற்பனைமீது மேற்சொன்ன சட்டத்தின்கீழ, யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில், 10 சதவீத ஒருமுனை வரியை நான்கு சதவீத ஒருமுனை வரியாக அரசு குறைத்துள்ளது.

6-9-1977 முதற்கொண்டு முன் தேதியிட்டு குறைக்கப்பட்ட 4 சதவீத வரிச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ள இம்மாநிலத் திலுள்ள மின் நிறுவனங்களின் பட்டியலில் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தை அரசு சேர்த்துள்ளது.

6-9-1977 முதற்கொண்டு மின் சக்தி அனுப்புகைப் பணியில் ஈடுபட்டுள்ள மின் நிறுவனங்களை அப்பட்டியலின் கீழ்க்கொண்டு வரவும் அரசு விரிவாக விளக்கமளித்துள்ளது.

இரயில்வே உட்பட, மத்திய, மாநில அரசுத் துறைகளுக்கும் பெட்ரோல், டீசல், சிமிட்டி ஆகியவை நீங்கலாக, முதலாவது அட்டவணையின்கீழ் வருகின்ற பொருட்களின் விற்பனைமீது பொது விற்பனை வரிச் சட்டத்தின் 8 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள வரி வீதத்திற்குக் குறைக்கப்பட்ட வரி வீதத்தைக் கொண்டுவர அரசு 164(C)/81 ஆம் எண் அறிவிக்கையிலுள்ள வாசகத்தில் சில திருத்தங்களைச் செய்து உள்ளது.

9—11—1985 முதல் 8—11—1986 வரையில் குன்னூர், கோயம்புத்தூர் ஆகிய ஏலம் நடைபெறும் இடங்களில் தேயிலை விற்பனையின்மீது ஒருமுனை விற்பனை வரியை 4 சதவீதமாக அரசு குறைத்துள்ளது.

7A பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரி விதத்தை அதன் ஆய்வு வரம்பிலிருந்து நீக்குவதன் மூலம், சமையல் எண்ணெய், எண்ணெய் புண்ணாக்கு ஆகியவற்றின்மீது வரிவிதத்தைக் குறைத்து மூல அறிவிக்கைகளை அரசு திருத்தம் செய்துள்ளது.





25-12-1985 முதற்கொண்டு கையினால் செய்யப்பட்ட விளையாட்டுச் சாமான்கள் பொம்மைகள், பதுமைகள், தாள், துணி, மரம் அல்லது மண் அல்லது தகரத்தால் செய்யப்பட்ட ஏனைய கலைப் பொருட்களுக்கு 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் குறைக்கப்பட்ட விற்பனை வரியை அரசு நீட்டித்துள்ளது.

சென்னை மணலி இந்திய ஆர்கானிக் கெமிக்கல்ஸ் நிறுவனம் தயாரித்த பாலியஸ்டர் ஸ்டேபிள் பைபர் துணியின் விற்பனை மீது மேற்சொன்ன சட்டத்தின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத் தக்க வரியைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களின்கீழ் விற்பனை வரியை 2 சதவீதமாக அரசு குறைத்துள்ளது.

E. விலக்களிக்கும் அறிவிக்கைகளுக்கு திருத்தங்கள்:

அளிக்கப்பட்டுள்ள விலக்கு தேங்காய் வாங்குபவர்களுக்கு மட்டுமே (எண்ணெய் தயாரிப்பவர்கள் தவிர ஏனையோர்) கிடைக்க இயலும் வகையில் இந்த அறிவிக்கையின் செயல் வரம்பிலிருந்து எண்ணெய் தயாரிப்பவர்களை நீக்க அரசு அறிவிக்கையைத் திருத்தியுள்ளது.

காய்ந்த, உலர்ந்த காய்கறிகளுக்கு மட்டுமே விலக்களிக்கும் மூல அறிவிக்கையில் ''மற்றும்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''அல்லது'' என்ற சொல்லை அமைத்து, அரசு அந்த அறிவிக்கையைத் திருத்தியுள்ளது. இதனால், காய்ந்த காய்கறிகளுக்கு (பூண்டு போன்றவை) வரி விதிக்க இயலும். இந்த அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளான 18-12-1985 முதல் செயலுக்கு வந்தது.

F. வரி விலக்கு:

வாழ்த்து அட்டைகளின் விற்பனையைப் பொறுத்தமட்டில், சென்னை, திருவாளர்கள் ஸ்பேஸ்டைஸ் சொஸைட்டி ஆஃப் தமிழ்நாடு நிறுவனம், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப் படுகிறது.

தஞ்சாவூர் திருவாளர்கள் புனித சேவியர் தொழில் மையம் அதன் உற்பத்திப் பொருட்களின் விற்பனை குறித்து, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

மதுரை, நாராயணபுரம் கிராமம், ஸ்ரீஇராமகிருஷ்ணா நினைவு ஆராய்ச்சி நிலையம் மருத்துவமனைக்கு விற்பனை செய்யப்படும் மருந்துகள், மருந்துப் பொருட்கள், மருத்துவக் கருவிகள் ஆகியவற்றின் விற்பனை மீது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

[1986 ஏப்ரல் 5

தஞ்சாவூர், கும்பகோணம், சாக்கோட்டை, சேக்ரட்ஹார்ட் தொழு நோய் நிலையம் தயாரிக்கும் சலவை சோப்புக்குச் செலுத்தத்தக்க வரியிலிருந்து அந்நிலையத்திற்கு விலக்களிக்கப் படுகிறது.

செங்கற்பட்டு, ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷனுக்கும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பின்வரும் நான்கு நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படும் வெட்டு மரம், இரும்பு சாமான்கள், வர்ணங்கள், வார்னிஷ், கட்டிடப் பொருட்களுக்கு முதலில் பூசப் படும் வர்ணங்கள் (Primers) துப்புரவு சாதனங்கள், கல்நார், தகடுகள், மின் சாதனங்கள், எஃகு மேஜை நாற்காலி போன்ற சாமான்கள், மரமேஜை நாற்காலி போன்ற சாமான்கள் கல்நார் பொருட்கள், குளிர்பதனப் பெட்டிகள், சுடுநீர்க் கலன்கள், நீர் குளிர வைப்பான்கள், அலுவலகச் சாதனங்கள் ஆகியவை உட்பட கட்டிடப் பொருட்களின் விற்பனை குறித்து, யாதொரு வணிகர், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப் படுகிறது:—

(i) ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, செங்கற்பட்டு.

(ii) ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, செங்கற்பட்டு.

(iii) ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் தொடக்கப் பள்ளி, செங்கற்பட்டு.

(iv) ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் ஆங்கிலப்பள்ளி, செங் கற்பட்டு.

பூவிருந்தவல்லி, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டச் சங்கம், அதன் உற்பத்திப் பொருட்களின் விற்பனை குறித்து, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத் தக்க வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

சென்னை-30, திருவாளர்கள் ஜெர்மன் தொழுநோய் இடருதவி சங்கம், புது வாழ்வு நிதித் திட்டம், அதன் உற்பத்திப் பொருட்களின் விற்பனை குறித்து, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப் படுகிறது.

அமோனியம் குளோரைடு; உவர்க்காரம் (Soda Ash) ஆகிய வற்றைத் தயாரிப்பதற்காக தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்ட் பெர்டிலைசர்ஸ் நிறுவனத்திற்கு ஸ்பிக் (SPIC) விற்பனை செய்த அமோனியா வாயு விற்பனை மீது, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், ஸ்பிக் செலுத்தத்தக்க வரியி லிருந்து விலக்களிக்கப்படுகிறது.



1986 ஏப்ரல் 5]

14. வணிக வரிகள் நடைமுறை நூலுக்குத் திருத்தம்:

விற்பனை மூலம் வருவாய் பயன் தராத விற்பனை குறித்த வணிக நடவடிக்கையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையை வகுத்து, வணிக வரிகள் நடைமுறை நூலின் (தொகுதி 1) நிலையாணை 12 (2) திருத்தப்பட்டது.

15 தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்

(i) சில பேரூராட்சிகளை தேர்வு நிலை பேரூராட்சிகளாக நிலை உயர்த்தியதனால், தேர்வுநிலை பேரூராட்சிகளிலுள்ள திரையரங்குகளுக்குப் பொருந்தத்தக்க விதத்தில் வரி விதிக்கும் நோக்கத்திற்காக, இச்சட்டத்தில் விவர அட்டவணை 11-ல் தேவையான திருத்தம் செய்யப்பட்டது.

சில பேரூராட்சிகளை நிலை உயர்த்துவது தொடர்பாக, முந்தைய அறிவிக்கைக்குப் பதிலாக 1985 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டம் இயற்றப்பட்டது.

(ii) 1985 ஆம் ஆண்டு 35 ஆம் சட்டத்தின் மூலம், 3, 4-A, 4–C, 5-A, 5-B, 10–F ஆகிய பிரிவுகள் திருத்தப்பட்டுள்ளன. 7-A, 15-B ஆகிய புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

5-B பிரிவுக்கு செய்யப்பட்ட திருத்தத்திற்கு 26-12-1977-ல் இருந்தும், 7-C புதிய பிரிவுக்கு 1-4-1970-லிருந்தும் முன் தேதி யிட்டு, செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

(iii) கேளிக்கை வரி அதிகாரிகளை படிவம் II பதிவேடு களில், அவர்களுடைய கையொப்பத்தையும், கையொப்பமிடும் நாளையும் சேர்க்குமாறு கோரி, தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளைச் சேர்ந்த 30 (1) விதி திருத்தப் பட்டுள்ளது.

16. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்;

தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின் 9 (2) ஆம் விதியைத் திருத்தியமைப்பதன் மூலம், குதிரைப் பந்தய பணய ஒப்புநர் ஒவ்வொருவரும், படிவம் O, அல்லது படிவம் D-1ல் விவர அறிக்கையின் நகல் ஒன்றை 7 நாட்களுக்குள் உதவி ஆணையாளருக்கு அனுப்பி, அதற்காக செலுத்த வேண்டிய வரித் தொகையைக் கருவூலத்திலோ அல்லது ரொக்கமாகவோ அல்லது கேட்பு வரைவோலையாகவோ செலுத்த வேண்டும்.

17. புதிய சலுகைகள் :

1986-87 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி தொழில்கள் மற்றும் பொது மக்களுக்கு உதவும் வகையில் கீழ்க் கண்ட சலுகைகளை அரசு அளித்துள்ளது:—

துத்தநாகம் பூசிய இரும்புவாளிகள், வீடுகளில் பயன்படுத்தப் படும் கரி மற்றும் நிலக்கரி மரத்தவிடு, உமி போன்ற பொருட் களாலான எரி பொருட்கள் (Briquettes), பூரா சர்க்கரை மற்றும் கற்கண்டு, நுரை ரப்பரால் (Fo m rubber) தயாரிக்கப்படாத பஞ்சு, இலவம்பஞ்சு மெத்தைகள், தலையணைகள் மற்றும் இணைப்பு மெத்தைகள் (Quilt heads), மெழுகுவர்த்திகள், படச் சட்டங்கள் மற்றும் படங்கள், வெள்ளிமெட்டி (Metty), போட்டி விளையாட்டுப் பொருள்கள், அனைத்து இசைக்கருவிகள், விதைப்பதற்காக விற்கப்படும் சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகள் ஆகிய பொருள்களின் மீதான விற்பனை வரி அறவே நீக்கப்பட்டிருக்கின்றன.

கீழ்க்கண்ட இனங்களுக்கு வரி விதமானது கீழே குறிப் பிட்டுள்ளபடி குறைக்கப்படுகின்றது:—

| வரிசை எண். | பெயர். | | தற்போதைய வரி விதம். | குறைக்கப்பட்ட வரி விதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| 1. | மக்களின் உயிர்காக்கும் 41 வகையான மருந்துகள்:— | | 8 சத விதம். | 4 சத விதம் |
| | 1 Prothionamide .. | 2 Glybenc lamide | | |
| | 3 Chlorprop-amide | 4 Phentomin-Hol | | |
| | 5 Glipizide Hol .. | 6 Motfarmin-Hol | | |
| | 7 Tinidazole .. | 8 Diphenoxylate-Hol. | | |
| | 9 Loporamide | 10 Bhthaly Sulphathiazole | | |
| | 11 Sulbphageramidine | 12 Furazolidine | | |
| | 13 Succinyl Sulpathiazole. | 14 Delexamide Furale. | | |
| | 15 Pyrantel Pamoale | 16 Tetramisole-lovamizole. | | |
| | 17 Cophatoxin .. | 18 Cophaloridine | | |
| | 19 Framyeclin sulphate. .. | 20 Oxytetracycline | | |
| | 21 Gentamycin | 22 Griscofulvin | | |
| | 23 Neomycine .. | 24 Polyamyxin | | |



| வரிசை எண். | பெயர். | | தற்போதைய வரி விதம். | குறைக்கப்பட்ட வரி விதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| | 25 Tolnaftale .. | 26 Clotrimazole .. | | |
| | 27 Trimethoprion with sulphameth Oxazole. | 28 Micomazole | | |
| | 29 Salbutamol sulphate. | 30 Theophylline, Animophylline and their derivatives. | | |
| | 31 Terbulaline sulphate. | 32 Methyl Dopa | | |
| | 33 Propr..wlol ... | 34 Dipyridamol | | |
| | 35 Isocaribide dimitrate. | 36 Nikothamide and its salts. | | |
| | 37 VeraPanil Hol .. | 38 Mfedepine | | |
| | 39 Digoxin | 40 Rescripine. | | |
| | 41 Hydralazine | | | |
| 2. | குழந்தைகளுக்கு வழங்கும் பால் உணவுப் பொருள்கள் உட்பட அனைத்துப் பால் உணவுப் பொருள்கள். | | 10 சத வீதம். | 4 சத வீதம். |
| 3. | இழுவை வண்டிகள் (உந்துகலம்) இழுக்கும் வண்டி (Trailor) | | 15 சத வீதம். | 9 சத வீதம். |
| 4. | பரிசுச் சீட்டுகள் | | 20 சத வீதம். | 10 சத வீதம். |
| 5. | கோழித் தீவனம் | | 5 சத வீதம். | 2 சத வீதம். |
| 6. | மின்சக்தி உற்பத்தி செய்யும் பொறிகள் (Gener tors) | | 12 சத வீதம். | 8 சத வீதம். |
| 7. | நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப் படும் மின் அணுப் பொருள்கள் மற்றும் பாகங்கள். | | 10 சத வீதம். | 6 சத வீதம். |

நமது மாநிலத்திற்கு வெளியே தயாரிக்கப்பட்டு இங்கே வந்து விற்பனையாகும் மின்னணுச் சாதனங்கள் மீது ஒரே சீரான 10 சதவீத வரி விதிக்கப்படுகிறது.

கீழ்க்கண்ட வணிக வரி விதி முறைகளை நெறிப்படுத்தவும்,
வணிகவரித் துறையின் பிரச்சினைகளை சீராக்கவும், எளிமை
பயக்கும், சில நெறிமுறைப்படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்
பட்டுள்ளன:—

(1) வெல்லம், சீரகம் மற்றும் சீயக்காய் (Soap Nut)
ஆகியவற்றின் மீதான 5 சதவித பல முனை வரி 8 சதவீத ஒரு
முனை வரியாக மாற்றப்பட்டிருக்கின்றது.

(2) செயற்கைப் பசை (Synthetic Adhesives) மற்றும்
பாரபின் மெழுகு ஆகியவற்றின் மீதான 5 சதவீத பல முனை
வரி 8 சதவிகித ஒரு முனை வரியாக மாற்றப்பட்டிருக்கின்றது.

(3) தாவர எண்ணெய்களைப் பொறுத்தவரையில், 3
சதவிகித பலமுனை வரி 4 சதவிகித ஒரு முனை வரியாக மாற்றப்
பட்டிருக்கிறது. மேலும் மாநிலங்களுக்கிடையே நிகழ்கிற தாவர
எண்ணெய் விற்பனையின் மீதான வரி 4 சதவிகிதத்திலிருந்து 1
சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

(4) இம் மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படும் நிலக்
கடலைக்கு இதுவரையில் இருந்துவரும் முதல் விற்பனை மீதான
வரி என்பது, இனி முதல் கொள்முதல் மீதான வரியாக மாற்றி
அமைக்கப்பட்டிருக்கின்றது. வெளி மாநிலங்களிலிருந்து வரும்
நிலக்கடலையின் மீதான வரி முதல்முனை விற்பனை வரியாக
மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

(5) தற்போது பருத்தி நூலின் மீது பலவிதமான வரி
விதங்கள் இருக்கின்றன. பின்னப்பட்ட உள்ளுடைக்கு (Hosiery)
பயன்படுத்தப்படும் நூல் மீது 2 சதவீத வரியும், கைத்தறி
ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படும் நூல் (HankYarn)
மீது 3 சதவிகித வரியும், மற்ற நூல்வகைகள் மீது 4 சத
விகித வரியும் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்நூல் வகைகள்
அனைத்தையும் சமமாகக் கருதி அனைத்திற்கும் ஒரே சீராக
3 சதவிகித விற்பனை வரியாக விதிக்கப்பட்டிருக்கின்றது.

(6) கூ[illegible]ப்பு இரும்பிற்கு விற்பனை வரியிலிருந்து அறவே
விலக்களித்து இறுதிப் பொருள்கள் மீது மட்டும் வரி விதிக்கப்
பட்டிருக்கிறது.

பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்
பட்டிருக்கிறது:—

(1) துருப்பிடிக்கா எஃகுப் (Stainless Steel) பொருள்கள்
மீது தற்போது 10 சதவிகிதம் விற்பனை வரி இருந்து வருகிறது.
தற்பொழுது நடைமுறையில் உள்ள வரி ஏய்ப்பு வழி வகை
களை அடைக்கும் வண்ணம் இனி இவ்வரியை இரண்டாகப்
பிரித்து, முதல் விற்பனையின்போது 6 சதவிகித வரியாகவும்,
இறுதி விற்பனையின்போது 4 சதவிகித வரியாகவும் விதிக்க
கருதப்பட்டுள்ளது.



(2) விற்பனை வரி கட்டுவதற்காக பதிவு செய்வதற்கான
குறைந்த அளவு விற்பனை வரையறை தற்பொழுது ஆண்டு ஒன்
றுக்கு ரூ. 50,000 மதிப்புள்ள விற்பனையாகும். இனி இவ்வரை
யறை ஆண்டு ஒன்றுக்கு விற்பனை மதிப்பு ரூ. 75,000 என அதி
கரிக்கப்படும். ஆனால் பதிவுக் கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 10 என மிகக் குறைந்த அளவுடையதாக இருப்பதால் அதனை
இனி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 என்று உயர்த்தக் கருதப்பட்டுள்
ளது. கிளைகள் அல்லது கிடங்குகளுக்கான கட்டணம் ஆண்டு
ஒன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்திலிருந்து, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20
என்று உயர்த்தப்படும்.

(3) விலை உயர்வுப் போக்குகளைக் கருத்தில் கொண்டும்,
சிறிய அளவில் விற்பனை வரி செலுத்துவோர் மற்றும் குறிப்பாகத்
தொழில் முனைவோர் மூலதன முதலீட்டிற்கான நிதி ஆதாரங்
களைச் சீறிய முறையில் பயன்படுத்தவும் கூடுதல் விற்பனை
வரியின் சுமையிலிருந்து ரூ. 10 இலட்சத்திற்கு குறைவான ஆண்டு
விற்பனை உள்ள விற்பனை வரி செலுத்துவோர்க்கு இனி மொத்த
மாக விலக்கு அளிக்கப்படும். அதாவது இதுவரையில் ரூ. 3
இலட்சமாக இருந்த வரி விலக்கு வரையறை இனி ரூ. 10 இலட்சம்
வரி விலக்கு வரையறையாகும் என்று மாற்றி அமைக்கப்படும்.

(4) மேலே எடுத்துள்ள முடிவின் மூலம் ஏற்படும் இழப்பை
ஒருவகையில் ஈடுகட்ட, மிக அதிகமாக விற்பனை செய்யும் பெரும்
வணிகர்கள் செலுத்தும் கூடுதல் விற்பனை வரியில் சிறிதளவு
உயர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தற்
பொழுது ரூ. 10 இலட்சத்துக்கு மேல் ஆண்டு விற்பனை செய்யும்
வாணிகத்தின் மீது ஒரே சீராக 1.25 சதவிகித கூடுதல் விற்பனை
வரி விதிக்கப்படுகிறது. இனி 10 இலட்சத்திலிருந்து ரூ. 40
இலட்சம் வரையில் ஆண்டு விற்பனையின் மீது 1.25 சதவிகித
கூடுதல் விற்பனைவரியும், ரூ. 40 இலட்சத்திற்கு மேல் நடை
பெறும் ஆண்டு விற்பனையின் மீது 1.5 சதவிகித கூடுதல் விற்
பனை வரியும் விதிக்கப்படும்.

(5) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சத்திற்குக் குறைவாக
விற்பனை செய்பவர்களுக்கு சுருக்கமான வரி மதிப்பீடு செய்யும்
முறை இருந்து வருகிறது. இம்முறையில் பல கட்டுப்பாட்டு
வரையறைகள் உள்ளன. இவற்றால் வணிகர்களுக்குப் பெருத்த
இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று அவர்களால் முறையிடப்
பட்டது. இனி வணிகர்கள் மற்றும் விற்பனை வரி செலுத்து
பவர்கள் ஆகியோர் சுருக்கமான வரி மதிப்பீட்டு முறையை பயன்
படுத்த உதவி புரியும் வகையில், இந்தக் கட்டுப்பாடுகள் அனைத்
தும் அறவே நீக்கப்படும்.

(6) ஓட்டல், விடுதிகளில் அமைந்துள்ள ஆடம்பர வசது
களைப் பொறுத்து விதிக்கப்பட்டுள்ள வரி விகிதத்தை சீர்படுத்தக்
கருதப்பட்டுள்ளது.

(7) உள்ளாட்சி மன்றங்களின் நிருவாகம் செம்மையாக நடைபெற அவைகளின் நிதிச் சுயச்சார்பு நிலையை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. கேளிக்கை வரியின் மூலம் கிடைக்கும் வருமானம், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான நிதி ஆதாரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. இந்த அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்கும் வகையில், அனைத்து நகராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளில் தற்போது இருந்துவரும் கேளிக்கை வரி மீதான கூட்டுக் கட்டணம் தற்போதுள்ள கட்டணத்தின்மேல் 10 சதவிகிதம் அளவில் அதிகரிக்கப்படும்.

(8) தற்பொழுது உள்ள வணிகவரிச் சட்டத்தின் முதல் அட்டவணையின்கீழ் வரும் இறுதிப் பொருள்களைத் தயாரிக்கப் பயன்படும் அனைத்து உறுப்புப் பாகங்கள் மூலப் பொருள்கள் மற்றும் செய்முறைப் பொருள்கள் (Processing Material (சாராயக் கலவைச் சாலைகள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது தயாரிப்புக்கள் தவிர), ஆகியவற்றின் மீது தற்பொழுதுள்ள 10 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலாக உள்ள வரி விகிதங்கள் இனி 4 சதவிகித வரியாகச் சீராகத் திருத்தி அமைக்கப்படும்.

(9) 1984 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் முதல் தமிழ்நாட்டில் வேலை ஒப்பந்தங்கள் மீது வரி விதிக்கப்பட்டது. இதன் செயற்பாட்டில் ஏற்படும் சில இடர்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மனித உழைப்பு மட்டுமே நிறைந்த வேலைகளைப் பொறுத்து சலுகை காட்டவும், வரி விகிதங்களைத் தகுந்தவாறு சீர்திருத்தி அமைக்கவும் கருதப்பட்டுள்ளன.

18. வருவாய் வசூல்—

A. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி) சட்டம்—

1980–81 ஆம் ஆண்டிலிருந்து 1985–86 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு:—

| கால அளவு. (1) | | | மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1980–81 | .. | .. | 34,361.75 |
| 1981–82 | .. | .. | 44,937.50 |
| 1982–83 | ... | .. | 53,782 95 |



| கால அளவு (1) | | | மொத்த வருவாய் (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1983–84 | .. | .. | 58,840.00 |
| 1984–85 | .. | .. | 71,896.00 |
| 1985–86 (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்). | | | 74,115.00 |

1985–86 ஆம் ஆண்டில் (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாயை இதற்கு நிகரான முந்தைய ஆண்டான 1984-85 ஆம் ஆண்டு வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டில் அதிகரித்துள்ள தொகை ரூ. 11,825 இலட்சமாகும் (19 சதவீதமாகும்.)

B. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டம்:

1980–81 ஆம் ஆண்டிலிருந்து 1985-86 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு:—

| கால அளவு. (1) | | | மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1980–81 | .. | .. | 8,574.67 |
| 1981–82 | .. | .. | 9,554.98 |
| 1982–83 | .. | .. | 11.597.34 |
| 1983–84 | .. | .. | 11,822.00 |
| 1984–85 | .. | .. | 13,569.00 |
| 1985–86 (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்). | | | 13,395.00 |

1985—86 ஆம் ஆண்டில் (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச் சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாயை இதற்கு நிகரான கால அளவில் முந்தைய 1984–85 ஆம் ஆண்டு வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டில் அதிகரித்துள்ள தொகை ரூ. 1,536 இலட்சமாகும் (13 சதவீதமாகும்).

C. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டம் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச்சட்டம்

1980-81 ஆம் ஆண்டிலிருந்து 1985-86 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :-

| கால அளவு. (1) | | | | மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1980—81 | .. | .. | .. | 2,892.91 |
| 1981—82 | .. | .. | .. | 3,146.11 |
| 1982—83 | .. | .. | .. | 3,642.02 |
| 1983—84 | .. | .. | .. | 3,926.00 |
| 1984—85 | .. | .. | .. | 4,488.00 |
| 1985—86 | .. | .. | .. | 4,817.00 |

(1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்)

1985—86 ஆண்டில் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச்சட்டங்களின் கீழ் கிடைத்த வருவாயை முந்தைய 1984—85 ஆம் ஆண்டில் இதற்கு நிகரான கால அளவில் கிடைத்த வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டில் அதிகரித்துள்ள தொகை ரூ. 767 இலட்சமாகும் (19 சதவீதமாகும்). இணக்கவரி ஏற்பாட்டுத் திட்டம் மூன்று மாநகராட்சிகள், அதாவது சென்னை, மதுரை, கோயம்புத்தூர், மற்றும் 8 தனி நிலை நகராட்சிகள் அதாவது சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர் திருச்சி, தஞ்சாவூர், பொள்ளாச்சி, தூத்துக்குடி ஆகியவை நீங்கலாக அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்து செயலிலுள்ளது.

இவ்விரு சட்டங்களும், கேளிக்கைகள் மீது வரி விதிக்க வகை செய்கின்றன. தொகை செலுத்துவதன் பேரில், மக்கள் அனுமதிக்கப்படும் திரைப்படக் காட்சிகளுக்கும், குதிரைப்பந்தயங்களுக்கும் மட்டும் வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வரி மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகின்றது. அத்துடன் தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் கிடைக்கப் பெறும் அடிப்படை கேளிக்கை வரித் தொகையில் 90 சதவீதம் தொகையும், சம்பந்தப்பட்ட அந்தந்த





உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. வரி இணக்கம் செய்து கொள்ளும் திட்டம் செயலில் இருக்கின்ற பகுதிகளில் கிடைக்கும் வருவாய், இரண்டாம் மூன்றாம் நிலை நகராட்சி மன்றங்களைப் பொறுத்த மட்டில், அரசுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் இடையே 40:60 என்ற விதத்திலும் முதல்நிலை தேர்வு நிலை நகராட்சிகளைப் பொறுத்த மட்டில், அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இடையே 35:65 என்ற வீதத்திலும் ஒதுக்கப்படுகிறது.

D. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப்பந்தயங்கள் வரிச்சட்டம்

சென்னையிலும் (கிண்டி), உதகமண்டலத்திலும், குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. 1980-81 ஆம் ஆண்டிலிருந்து 1985—86 ஆம் ஆண்டுவரையிலான கால அளவில், மேற்சொன்ன சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு:—

| கால அளவு (1) | | | | மொத்த வருவாய் (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1980—81 | .. | .. | .. | 408.39 |
| 1981—82 | .. | .. | .. | 454.63 |
| 1982—83 | .. | .. | .. | 450.88 |
| 1983—84 | .. | .. | .. | 378.00 |
| 1984—85 | .. | .. | .. | 392.00 |
| 1985—86 (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்). | | | | 401.00 |

1985—86 ஆம் ஆண்டில் (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாயை இதற்கு நிகரான கால அளவில், முந்தைய 1984—85 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாயுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த ஆண்டில் அதிகரித்துள்ள தொகை ரூ. 51 இலட்சமாகும். (15 சதவீதமாகும்).

**E. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரிவிதிப்புச்சட்டம்**

1980–81 ஆண்டிலிருந்து 1985–86 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :

| காலஅளவு (1) | மொத்த வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1980—81 | 32.73 |
| 1981—82 | 107.31 |
| 1982—83 | 130.86 |
| 1983—84 | 150.00 |
| 1984—85 | 181.00 |
| 1985—86 (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்). | 218.00 |

1985–86 ஆம் ஆண்டில் (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாயை முந்தைய 1984–85 ஆம் ஆண்டின் இதற்கு நிகரான கால அளவில் கிடைத்த வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டில் அதிகரித்துள்ள தொகை ரூ. 86 இலட்சமாகும். (53 சதவீதமாகும்).

**F. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச்சட்டம்.**

இச்சட்டத்தின் கீழ், 1985–86 ஆம் ஆண்டில் (1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில்) கிடைத்த வருவாய் ரூ. 6 இலட்சமாகும். 1984–85ம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 5 இலட்சமாகும். இப்புதுச் சட்டம் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் தேதி முதல் செயலுக்கு வந்தது.

19. துறையில் பல மேம்பாடுகள் செய்யப்பட்டதாலும் வியாபாரம் செய்யும் பொதுமக்களுக்கு பல சலுகைகளும் வசதிகளும் அளிக்கப்பட்டதாலும், துறை அதிகாரிகளுக்கும் வரிவிதிக்கப் பட்டவர்களுக்குமிடையே சுமுகமான உறவு நிலவியது. இது அரசுக்கு ஆதாயம் கிடைக்கும் வகையிலும் பொதுமக்களுக்கும், வியாபாரம் செய்பவர்களுக்கும் அதிக இடர்பாடு இல்லாமலும், வணிக வரிகள் சட்டத்தை நிர்வகிப்பதற்குப் பெரிதும் உதவியதுக் துறைக்கும் பொதுமக்களுக்குமிடையே இது போன்ற சுமுகமான நல்லுறவும் நெருங்கிய ஒத்துழைப்பும் தொடர்ந்து நிலவும் என்று அரசு நம்புகிறது.